# ஆன்மீகமும் ஐஸ்வர்யமும்

**பாகம் - I**

**தமிழாக்கம் - M.மணிவேல்**

கடலூர் தியான மையம்
ஜோதி நகர்,
கடலூர் - 607 001.

பதிப்புரிமை : கர்மயோகி

முதற்பதிப்பு : மே 2007

ஒளிக்கோர்வை : அருணா கம்ப்யூட்டர்ஸ்,
2-பி, நேத்தாஜி ரோடு,
மஞ்சக்குப்பம்,
கடலூர் - 607 001.

அச்சிட்டோர் : அகரம்,
மனை எண் 1,
நிர்மலா நகர்,
தஞ்சாவூர்.

விலை : ரூ. 150/-

## ஆசிரியரின் நன்றி

இந்த புத்தகத்தில் உள்ள நூறு கட்டுரைகளும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்சில் ஏற்கனவே 2002, நவம்பர் 20 முதல், 2003 மார்ச்சு 18 வரையில் பிரசுரிக்கப்பட்டன. இந்தக் கட்டுரைகளின் தொகுப்புக்களை மறுபதிப்பு செய்ய அனுமதி வழங்கிய நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்சின் நிர்வாகப் பதிப்பாசிரியர் திரு.M.K.சோன்தாலியா அவர்களுக்கு என்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | நேரம் வந்துவிட்டது | 1 |
| 2. | ஆன்மாவிலிருந்து செயல்படுதல் | 4 |
| 3. | கிரைஸ்லர் (Chrysler) | 7 |
| 4. | மனித முயற்சி முடியுமிடமே இறைவன் செயல்படத் தொடங்கும் இடம் - பாகம்-I | 11 |
| 5. | மனித முயற்சி முடியுமிடமே இறைவன் செயல்படத் தொடங்கும் இடம் - பாகம்-II | 13 |
| 6. | மனித முயற்சி முடியுமிடமே இறைவன் செயல்படத் தொடங்கும் இடம் - பாகம்-III | 16 |
| 7. | இந்தியாவின் ஆன்மீக சூழல் - மேதை | 19 |
| 8. | இந்தியாவின் ஆன்மீக சூழல் - சக்தி | 22 |
| 9. | இந்தியாவின் ஆன்மீக சூழல் - பிரார்த்தனை | 25 |
| 10. | ஆன்மாவை அழைப்பது | 28 |
| 11. | மூன்று நாள் பிரார்த்தனை | 31 |
| 12. | சிறிய கம்பெனியில் விற்பனை | 34 |
| 13. | தெய்வத்தின் அருளைத் தாங்கி வருவது மழையின் ஸ்வரூபம் | 36 |
| 14. | அன்றாட வாழ்வில் ஆன்மீகம் என்பது என்ன? | 39 |
| 15. | உலக அறிவு | 43 |
| 16. | அனைத்து சக்தியும் ஆய பரம்பொருளும் சமய சடங்குகளின் சக்தியும் | 47 |
| 17. | ஒரு மரம் எழுப்பிய குரல் | 50 |
| 18. | சூட்சுமப் பார்வை | 53 |
| 19. | ஆன்மா என்பது முழுமையான உண்மை | 57 |
| 20. | ஆன்மாவும் சத்தியமும் | 60 |
| 21. | எரி நட்சத்திரம் | 63 |
| 22. | பேச்சு இழந்தபின் இழந்ததை நம்பிக்கை உயிர்ப்பித்தது | 66 |
| 23. | மௌன சக்தி, பாகம் - I | 69 |
| 24. | மௌன சக்தி, பாகம் - II | 72 |
| 25. | மௌன சக்தி, பாகம் - III | 74 |
| 26. | முடியாதது முடியும், பாகம் - I | 76 |
| 27. | முடியாதது முடியும், பாகம் - II | 78 |
| 28. | முடியாதது முடியும், பாகம் - III | 81 |
| 29. | முடியாதது முடியும், பாகம் - IV | 84 |


# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 30. | முடியாதது முடியும், பாகம் - V | 86 |
| 31. | ஆன்மா கெட்ட சகுனத்தையும் நல்ல சகுனமாக மாற்றும் | 88 |
| 32. | வாழ்வின் எதிரொலி - I | 90 |
| 33. | வாழ்வின் எதிரொலி - II | 93 |
| 34. | வாழ்வின் எதிரொலி - III | 95 |
| 35. | வாழ்வின் எதிரொலி - IV | 97 |
| 36. | கலிபோர்னியாவில் ரிஷிய சிருங்கர் | 99 |
| 37. | முன்கோபம் அல்லது எரிச்சல் ஆன்மீக செல்வவளத்தை தடுக்கும் | 101 |
| 38. | மலர்களின் ஆன்மீகச் சக்தி | 103 |
| 39. | தீயசக்திகள் | 105 |
| 40. | திருப்பு முனை | 107 |
| 41. | கர்மம் | 109 |
| 42. | ஆன்மாவை அழைக்கும் வழிகள் - I | 111 |
| 43. | ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - II | 113 |
| 44. | ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - III | 115 |
| 45. | ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - IV | 117 |
| 46. | ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - V | 119 |
| 47. | ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - VI | 121 |
| 48. | அற்புதங்கள் சர்வ சாதாரணமாக நடந்தன | 124 |
| 49. | சென்னை நகருக்கு தண்ணீர் என்பது ஒரு பிரச்சனை அல்ல | 127 |
| 50. | கவனம் ஆன்மீகமானது | 130 |
| 51. | கவனம் செலுத்துவதைவிட வழிபாடு மேலானது | 133 |
| 52. | நகரத்தின் தண்ணீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணுதல் | 136 |
| 53. | தமிழ் நாட்டில் வறட்சி | 138 |
| 54. | பணத்தை அதிகம் செலவழித்தால் பண வரவு பெருகும் | 140 |
| 55. | எப்பொழுதும் பெருகிக் கொண்டு வரும் வருமானம் | 143 |

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 56. | பணம் உழைத்து சம்பாதிப்பதற்கு பண்புகள் சக்தி முக்கியம் | 145 |
| 57. | பண்புகள் 100 மடங்கு சக்தி உடையவை | 147 |
| 58. | மேதை என்பது ஆன்மாவின் சக்தி | 150 |
| 59. | பக்தியுள்ளவர்கள், வைதீகமானவர்கள், நல்லவர்கள் ஏன் ஏழ்மையில் இருக்கிறார்கள்? | 152 |
| 60. | சோதிடம், எண்கணித சாஸ்திரம், சகுனம், வாஸ்த்து, நல்ல நேரம் | 155 |
| 61. | பாரம்பரியமும் ஆன்மீகமும் | 158 |
| 62. | அன்றாட வாழ்க்கையில் ஆன்மீகப் பரிசோதனை | 160 |
| 63. | கடலின் ஆன்மா | 163 |
| 64. | சிறப்பானதைத் தேடுவது | 165 |
| 65. | இந்தியாவில் எந்தத் தொழிலுக்கும் தோல்வி என்பதே இராது | 167 |
| 66. | சுபிட்சத்தின் இயக்கம் | 169 |
| 67. | நிம்மதியான தூக்கம் | 171 |
| 68. | எழுத்தர் பதவி உயர்வு | 173 |
| 69. | பரிதாபம், அனுதாபம், கருணை, அருள், பேரருள் | 175 |
| 70. | சிந்திக்காமல் புரிந்துகொள்வது | 177 |
| 71. | தனி மனிதனிடத்துள்ள உண்மை நிலை, இந்தியனை ஆன்மீகப் பெருமகனாக உயர்த்தும் | 179 |
| 72. | காலந்தவறாமை அபரிமிதமான சுபிட்சம் | 181 |
| 73. | மனச்சோர்வு | 183 |
| 74. | மௌனம் எதிரிகளையும் அவர்களது சதி திட்டங்களையும் முறியடிக்கும் | 185 |
| 75. | மனிதனின் பர்சனாலிட்டி | 187 |
| 76. | ஒரு பரிசோதனை - ஒரு உரையாடல் | 189 |
| 77. | ஒரு ஆராய்ச்சி - முழுமையான முன்னேற்பாடுகள் | 191 |
| 78. | ஒரு ஆராய்ச்சி - மௌனமான செயல்பாடு | 193 |
| 79. | ஒரு அடையாளமாக எடுத்துக் கொண்ட பரிசோதனையின் மூன்று நிலைகள் | 195 |
| 80. | ஆன்மாவுக்கு மாறுவதின் பல பரிமாணங்கள் | 197 |
| 81. | ஆன்மா நம் அழைப்புக்காகக் காத்திருக்கிறது - மனிதன் ஆன்மாவை அழைப்பானா? | 199 |


## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 82. | வாழ்வில் ஆன்மா செயல்படுவது | 201 |
| 83. | ஒருவருடைய ஆன்மாவில் நம்பிக்கை | 203 |
| 84. | பகுத்தறிவை விட ஆன்மா சக்தி வாய்ந்தது | 205 |
| 85. | உள்ளுரை நிறைவு | 207 |
| 86. | பாராட்டும் குணம் | 209 |
| 87. | இசைக்கச்சேரியில் உச்ச கட்டம் | 211 |
| 88. | பரீட்சை ஜுரம் | 213 |
| 89. | சமர்ப்பணம் ஆன்மாவை அழைத்தலாகும் | 215 |
| 90. | நன்றியறிதல் | 217 |
| 91. | "நான்" யார்? | 219 |
| 92. | விற்பனையாகாத சரக்கு | 221 |
| 93. | அகமும் புறமும் | 223 |
| 94. | அபிப்பிராயங்களும் மனப்போக்கும் | 225 |
| 95. | கடன் சுமை | 227 |
| 96. | மனம், இதயம் மற்றும் ஆன்மா | 229 |
| 97. | சூறாவளி | 231 |
| 98. | இரயிலில் கொள்ளை | 233 |
| 99. | கனவுகள் | 235 |
| 100. | சட்டமும் நீதியும் | 237 |
| | அனுபந்தம் - I | 239 |
| | அனுபந்தம் - II | 243 |

# மொழி பெயர்ப்பாளரின் நன்றியுரை

திரு. கர்மயோகி அவர்களின் SPIRITUALITY & PROSPERITY PART-I என்ற ஆங்கில படைப்பை தமிழாக்கம் செய்து வெளியிடுவதற்கு எனக்கு அனுமதி அளித்ததிற்கு என்னுடைய நன்றியறிதலை முதலில் அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இம்மொழிப்பெயர்ப்பை புத்தகமாக வெளியிடுவதற்கு வெளியிட முன்வந்த கடலூர் தியான மையத்திற்கும், இம்மொழி பெயர்ப்பை ஆங்கில மூலத்திற்கு ஏற்றபடி திருத்தம் செய்து கொடுத்த திரு. N.அசோகன் அவர்களுக்கும், தமிழாக்கத்தின் தரத்தை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில் தன்னுடைய தமிழாக்கப் பிரதிகளை படிப்பதற்கு எனக்கு வழங்கிய ராணிப்பேட்டை தியான மைய பொறுப்பாளர் திரு. S.லஷ்மிநாராயணன் அவர்களுக்கும் மற்றும் பல வகையில் உதவிய சக அன்னை அன்பர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னால் முடிந்தளவிற்கு இம்மொழி பெயர்ப்பினை எனக்குத் தெரிந்தளவிற்கு செய்துள்ளேன். அதையும் மீறி மூலத்தின் கருத்துச் சிறப்பு சில இடங்களில் சரியாக வெளிப்படவில்லை என்று வாசகர்களுக்கு மனதில் பட்டால் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் மற்றும் ஸ்ரீ அன்னை அவர்களுக்கு இப்படி எழுத்து மூலமாக, இச்சிறு சேவையை செய்ய முடிந்ததிற்கு என் நன்றியறிதலை அவர்கள் பொற்பாதங்களில் சமர்ப்பணம் செய்கின்றேன்.

**M. மணிவேல்**

# ஆன்மீகமும் ஐஸ்வர்யமும்

## பாகம் - I

**முன்னுரை:**

## வாழ்வில் ஆன்மா என்பது என்ன?

ஆன்மா ஆண்டவனை அடைவது மோட்சம். ஆன்மீகம் என்பது மோட்சம் சம்மந்தப்பட்டது, அது வளமான வாழ்வு அல்ல. நமது மரபு வழி வந்த இந்துவுக்கோ அல்லது இந்தியனுக்கோ ஆன்மீகம் வாழ்வில் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்ற புதிய கருத்து நூதனமானதொன்றாகும். குடும்ப வாழ்வில் உள்ளவர்கள், சந்நியாசம் விரும்பத்தக்கது அல்ல என்று கருதி, ஆன்மீகம், யோகம் முதலியவற்றில் நாட்டம் செலுத்தாமல் இருப்பதில் கவனமாக இருக்கிறார்கள். இது மிகவும் துல்லியமாகப் புறக்கணிக்கப்படுகிறது. அவர்கள் குழந்தைகளுக்கும் அவ்வாறே கற்பிக்கப்படுகின்றது. அதில் அவர்கள் நிலை சரியானதே.

ஒரு குடும்பம் 1934ல் ஏழு கிராமங்களில் 1000 ஏக்கர் நிலங்கள் வைத்திருந்தது. அந்தக் குடும்பத்தில் இருந்த ஆறு சகோதரர்களும் அந்தக் கிராமத்தின் வீதிகள் அனைத்தையும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து அனுபவித்து வந்தார்கள். திடீரென்று ஒரு நாள் அவர்கள் வீட்டிற்கு, காவி உடை அணிந்த சந்நியாசி ஒருவர் வந்தார். வீட்டில் உள்ளவர்கள் சந்நியாசியின் வருகையால் மகிழ்ச்சி அடைந்தவர்களாய், அவரை பக்தியுடன் வணங்கினார்கள். அவர் அன்றிரவு அவர்கள் வீட்டில் தங்குவதற்கு விருப்பம் இருப்பதைத் தெரிவித்தார். ஒவ்வொருவரும் மின்சாரம் தாக்கியதுபோல் உணர்ந்தார்கள்.

சகோதரர்கள் ஒவ்வொருவரும், அந்த சந்நியாசியை தங்களில் யாராவது ஒருவர் அழைத்திருந்ததாக எண்ணினார்கள். அவர்கள் தங்களுக்குள்ள அன்பின் கட்டுப்பாட்டின் காரணமாக, பேசாமல் இருந்து விட்டார்கள். அவர்களை, திகைப்புக்குள் ஆழ்த்தும் வகையில் அந்த சாமியார், அன்று இரவு அங்கேயே தங்கிவிட்டார். அப்படியே 30 நாட்கள் அங்கே தங்கிவிட்டார். அந்த சந்நியாசியை யாரும் அழைக்கவில்லை என்ற உண்மையை, பிறகு தெரிந்து கொண்டார்கள். சாமியார் வீட்டை விட்டுப் போய்விட்டார். ஒரு சந்நியாசி, ஒரு வீட்டில், ஒரு இரவு தங்கினால் அந்தக் குடும்பம் சீரழிந்துவிடும் என்பது நம்முடைய உண்மையான நம்பிக்கை. அந்தக் குடும்பம் விரைவிலேயே எல்லாச் சொத்துக்களையும் இழந்துவிட்டது. நம்முடைய மரபுவழி நம்பிக்கை உண்மையென உறுதியாகிறது.

மனிதனுக்கு உடல், பிராணன், மனம், ஆன்மா என கரணங்கள் உண்டு. இதில் நான்கு கரணங்களில் ஒன்றான, ஜீவன் தவத்தின் மூலமாக உடலிலிருந்து விடுபட்டு மோட்சத்தை நாடுகிறது. எனவே வாழ்வை விலக்கும் ஆன்மீகத்தை குடும்பஸ்தர்கள் வெறுக்கிறார்கள்.

உபநிஷதங்கள் "சர்வம் பிரம்மம்" என்று அறிவிக்கின்றன. எனவே, நமது உடல், உயிர், மனம், ஆன்மா எல்லாமே பிரம்மம். நமது ஆன்மா ஜீவாத்மா என்று அறியப்பட்ட சாட்சி புருஷன். இதற்கு நம்முடைய ஜீவனின் மற்ற பகுதிகளில் பிரதிநிதிகள் உள்ளன. இப்படி நமது மனம், உயிர், உடல் யாவும் ஆன்மாவை புருஷனாக உடையவை. அவை மனோன்மய புருஷா, பிராணமய புருஷா, அன்னமய புருஷா என்று அழைக்கப்படுகின்றன. இவைகளும் கூட ஜீவாத்மாவின் குணங்களை கொண்டுள்ளன.

அவை எல்லாம் வேறுபாடு இல்லாத மாறாத தன்மை உடையனவாகும். பிரகிருதிக்கும் ஆன்மா உள்ளது. இந்த ஆன்மா வளரும் தன்மை உடையது. அதற்கு சைத்திய புருஷன் என்று பெயர். அது பிரகிருதியின் அனுபவங்களின் சாரத்தை எடுத்துச் செல்கிறது. அதற்கும் நமது பகுதிகளில் பிரதிநிதிகளுண்டு. அவை மனோன்மய சைத்திய புருஷன், பிராணமய சைத்திய புருஷன், உடலின் சைத்திய புருஷன் என அழைக்கப்படுகின்றன.

நம்முடைய மரபு சைத்திய புருஷனைப் பற்றி அறியும். ஆனால் அது வளரும் ஆன்மா என்று நமது மரபு அறிந்து கொள்ளவில்லை. நான் இங்கே குறிப்பிடுவது, வளரும் சைத்தியப் புருஷனைப் பற்றித்தான். நான் வேண்டுவது யாதெனில், இந்த வளர்ச்சி அடையும் சைத்திய புருஷனை வெளிக்குக் கொணர வேண்டுமென்பதே. உடலைவிட மனம் சக்தி வாய்ந்தது. மனத்தைவிட ஆன்மா அதிக சக்தி வாய்ந்தது. இந்த உதார குணம் படைத்த நன்மை தரும் ஆன்மாதான், மனம் அல்லது உயிர் அல்லது உடல் இவற்றை மிக்க வளமையாக்குகிறது.

இந்த சைத்திய புருஷன் பரிணாம வளர்ச்சியுடையது என்ற புதிய தத்துவம், பகவான் ஸ்ரீ அரவிந்தரால், தன் யோகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த நூறு கட்டுரைகளின் கடைசிப் பகுதியில் இணைக்கப்பட்டுள்ள அனுபந்தத்தில் "ஆன்மாவை எப்படி பிரார்த்தனை மூலம் அழைக்கலாம்" என்று விவரிக்கப்பட்டுள்ளது. அந்த ஆன்மாதான்,

(1) கர்மத்தை கரைக்கிறது.
(2) ஒருவருடைய ஆழ்மனத்தில் எழுப்பப்படும் குரலுக்கு உடனடியாக பதில் கொடுக்கிறது.
(3) அன்றாட பிரச்சனைகளில் தீர்வு காண்கிறது, மற்றும்,
(4) உள்ளே உறையும் முழுமையான இந்த ஆன்மாதான் உலகில், வாழ்வை அற்புதமாக்குகிறது.

ஆன்மாவின் பலதரப்பட்ட அம்சங்களை, அன்னை அன்பர்களின் அனுபவத்தின் உதாரணங்களுடன், நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்சில் எழுதி வருகிறேன். கர்மாவின் சுவடு பற்றிய முழு விவரமோ அல்லது காலந்தவறாமை குறித்தோ அதில் விவரிக்க முற்படவில்லை. நீண்டதொரு விளக்கங்கள் தேவைப்படுகின்ற அனேக கேள்விகளை எழுப்பி, வாசகர்கள் எனக்கு எழுதுகிறார்கள். அவர்களுக்கு நான் மூலமான நூல்களைக் குறிப்பிட்டு என் பதிலில் மூலங்களின் சாரத்தை சுருக்கமாக வழங்குகிறேன்.

அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளை ஆன்மீக சக்தியால் எப்படி தீர்த்துக் கொள்ள முடியும் என்பதை மட்டும், எக்ஸ்பிரஸ் பத்திரிகை கட்டுரைகளில் வெளியிடுகிறேன். பிரார்த்தனையால் (invocation), ஆன்மா கொண்டு வரும் வாய்ப்புகளைப் பற்றி சிறிதளவே வாசகர்களுக்கு கூறுகிறேன். இந்த புத்தகத்தில் வரும் கட்டுரைகளில், மூலத்தில் பிரசுரிக்கப்படாத வாசகங்களில் சிறு மாறுதல்கள் இருந்தாலும் அதன் உட்பொருளில் முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிடத்தக்க மாற்றம் இல்லை.

பாண்டிச்சேரி
20-03-2003

**– கர்மயோகி**

# 1. நேரம் வந்துவிட்டது

மனிதர்கள், ஒரு தேசத்தை உயர்த்துவதற்கு, அல்லது குடும்பத்தின் நிலையை உயர்த்துவதற்கு, அல்லது நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் கம்பெனியை லாபகரமாக மாற்றுவதற்கு நீண்ட நேரம் உழைக்கிறார்கள். அவர்கள் பல முறை வெற்றி காண்கிறார்கள். வெற்றி கிடைக்காதபோது “நேரம் இன்னும் வரவில்லை” என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், மனிதன் நேரத்தை (TIME) வரவழைத்துக் கொள்ள முடியும் என்பது ஆன்மீகத்தின் உண்மை. அப்படிப்பட்ட நேரம் இப்பொழுது உலகத்திற்கு வந்துவிட்டது. இந்தக் கருத்து, மனிதனுக்கு நன்றாகத் தெரியும் என்று சொல்வதற்கில்லை. இருப்பினும், அதை விளக்குவது ஒன்றும் கடினமானது அல்ல. நம்மைச் சுற்றிலும், உலக அளவிலும் அநேக நிகழ்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமாக இருக்கின்றன. அதை சுருக்கமாகச் சொன்னால்,

1) மனிதன் மனத்தின் மூலம் செயல்படுவதால், நேரம் வரும் வரை காத்திருக்கின்றான்.

2) ஆனால், ஆன்மா மூலம் செயல்பட்டால், மனிதனால் நேரத்தைக் கொண்டு வர முடியும்.

யாராவது ஒருவர் கேட்கலாம். “சரி நான் அது போன்ற சூழ்நிலையில் உள்ளேன். நான் முழுவதுமாக நம்பிக்கை இழந்தவனாக இருக்கிறேன். இந்த வார்த்தைகள் சிறிது நம்பிக்கையூட்டுவதாக இருக்கின்றன. நீங்கள் இதை புரியும் படியாகக் கூற முடியுமா? என்னுடைய சூழ்நிலையிலிருந்து மீண்டு வெளிவர, நான் நடைமுறையில் என்ன செய்ய வேண்டும் என்று அறிய, உண்மையில் விரும்புகிறேன்”. அதற்கு என்னுடைய உடனடியான பதில் இது தான். “நீங்கள் இந்தக் கருத்தை புரிந்து கொண்டு, அதன் பின்னால் உள்ள சத்தியத்தின் (TRUTH) மீது நம்பிக்கை கொண்டால், உங்களது நம்பிக்கையின்மை, உடனடியாக குறைந்து, தொடர்ந்து முன்னேற்றம் வருவதை காண்பீர்கள்”.

இதற்கு வெளிப்படையான உண்மையான உதாரணம் தேவைப்படுகிறது. சாதகமான பலன் கிடைக்கக் கூடிய வாய்ப்பை ஒரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம். ஒருவருடைய அனுபவத்தில் உண்மையில் பலன் கிடைக்கப் பெற்றதை ஒரு முறை பார்த்தபின், சிறிய நம்பிக்கை அதிகரிக்க ஆரம்பிக்கும். நிகழ்ச்சிகள் மேலும் மேலும் முன்னேற்றம் அடைய ஆரம்பிக்கும். பலன் எப்படி ஏற்பட்டது என்ற நடைமுறையைப் பற்றிய விளக்கமானது மிகவும் உதவிகரமாக இருக்கும். அது மனத்தை தெளிவாக்கும். மேலும் மற்றொன்று தேவை. அது, ஒளிமயமான அறிவை இதுவரை கிடைக்காத பலன்களாக மாற்றக் கூடிய தன்னையே செயல்படத் தூண்டுகின்ற உள்ளெழுச்சியாகும் (inspiration).





இன்னும் அதிகமானவை உள்ளன. மனம் தன் சொந்த நிலையிலேயே, மற்ற நிலையைக் காட்டிலும் ஒரு உதாரணம் காண விரும்புகிறது. அப்படி ஒரு (one) கருத்தானது நூற்றுக்கணக்கான நிலைகளில் விவரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் இணையற்றதாக (unique), நடைமுறை அறிவுக்கு (intellect) தெளிவாக விளங்கக் கூடியதாக உள்ளது. மற்றும் எண்ணற்ற கருத்துக்களும் உள்ளன. ஆன்மீகமும் ஐஸ்வரியமும் என்ற கருத்தில் **ஆன்மீகம்தான் ஐஸ்வரியம்** என்பது கடைசியில் புரிந்து கொள்ளப்படும்.

# 2. ஆன்மாவிலிருந்து செயல்படுதல்

ஆன்மாவிலிருந்து செயல்படுவதற்கு அறிவிலிருந்தோ உணர்வு அடிப்படையிலான மனோபாவங்களிலிருந்தோ, உடலளவிலான பழக்கங்களிலிருந்தோ செயல்படாமலிருப்பது அவசியம். இதர பகுதிகளில் செயல்படாமல் இருப்பது அவசியம் என்றாலும் ஆன்மாவை செயலில் ஈடுபடுத்துவதற்கு அது போதுமானதாகாது. அதற்கு உள்ளிருந்து வரும் உற்சாகமோ (Inspiration) அல்லது வெளியிலிருந்து வரும் நிர்பந்தமோ தேவைப்படுகிறது. இதில் ஏதாவது ஒன்று அல்லது இரண்டுமே இருந்தாலும் ஆன்மா உடனடியாக செயல்படுகிறது. உடனடியாகவும் பலன் கிடைக்கிறது. குறைந்த பட்சமாக விரும்பும் புதிய பலன்கள் சுற்றுப்புற சூழலில் கிடைக்க ஆரம்பிக்கின்றன.

டாம் கூத் (Gooth) என்பவர் ஒரு அமெரிக்கர். அவர் உலகத்தை சுற்றி பயணம் செய்பவர். அவர் மூன்றாவது உலக நாடுகளிலுள்ள ஏழைகளுக்காக உள்ள பொருளாதார திட்டங்களில் அக்கறை கொண்டவர். அவர் தொழில் நுட்பம் கண்டு பிடிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். பரவலாக ஊடுருவியுள்ள ஏழ்மையை போக்குவதற்கு அவருடைய தொழில் நுட்பம் எல்லோரையும் சென்ற அடைய வேண்டுமென்பது அவரது நோக்கம். அவர் சைக்கிள் ரிக்ஷாவில் மோட்டாரை பொறுத்துவதில் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார். அதில் அதிக நேரம் கொல்கத்தாவில் செலவழித்தார். ஆனால் இது மட்டும் அவருடைய முக்கியமான குறிக்கோள் அல்ல. அவர் சென்ற நாடுகளில் ஆன்மீகத்திற்கு பேர்போன எல்லா இடங்களையும் சுற்றிப்பார்த்தார். பலவித யோகங்களைப் பற்றி தெரிந்து கொண்டார்.





ஒரு முறை மெக்சிக்கோவில் வோல்க்ஸ் வேகன் (VOLKS WAGEN) ஓட்டிக்கொண்டு பிரயாணம் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் பிற்பகலில் ஒரு ஓட்டலில் மதிய உணவுக்குப் பிறகு ஒரு மணி நேரங்கழித்து, அவருடைய பாஸ்போர்ட் மற்றும் பணம் வைத்திருக்கும் பர்ஸ் அடங்கிய தோள்பை இருக்க வேண்டிய இடத்தில் இல்லாததைக் கண்டார். வண்டியை நிறுத்தி தேடிப்பார்த்தார். ஓட்டலுக்கு திரும்பிச் சென்று, மீண்டும் திரும்பி வந்து அவர் எங்கெல்லாம் ஓய்வு எடுத்து இருந்தாரோ அந்த இடங்களில் எல்லாம் தேடிப் பார்த்தார். ஆனால் பலன் இல்லை. அது உண்மையில் எல்லா நம்பிக்கையும் இழந்த நேரம். அவருக்கிருந்த அறிவுத்திறனெல்லாம் தீர்ந்து விட்டிருந்தன. அத்தகைய சூழ்நிலைக்குரிய, தான் கேள்விப்பட்ட அத்தனை வழிமுறைகளையும் நினைவுபடுத்திப்பார்த்தார். ஆனால் எதுவும் கை கொடுக்கவில்லை. திடீரென்று அவருக்கு அன்னை சொன்னது மனதில் பட்டது. அது ‘‘கடுமையான நம்பிக்கையற்ற நேரம்தான் என்னை அழைப்பதற்கு உகந்த நேரம்’’. அந்த நினைவு வந்ததும், அவர் புல்தரையில் பத்மாசனம் போட்டு உட்கார்ந்து அன்னையை அழைத்தார். அவருடைய இதயத்திலிருந்த பாரம் குறைந்து விட்டது. மீண்டும் பிரயாணத்தைத் தொடங்க நினைத்தார். வண்டியை ஓட்ட ஆரம்பிக்கும் முன் அருகிலிருந்த ஒரு புதரின் மேல் அவருடைய பை இருப்பதைக் கண்டார். மனத்தின் உள்ளிருந்து கேள்விகள் எழுப்பப்படவில்லை. மாறாக உண்மையான நன்றி

உணர்ச்சி ததும்பியது. அவர் உடல் புல்லரித்தது. ஆன்மா எப்பொழுதும் பொய்ப்பதில்லை. அதற்கு தவறோ அல்லது தோல்வியோ தெரியாது. அது யாரையும் தெரிந்து வைத்திருக்கவில்லை. இருப்பினும், அது எப்படி வருகிறது என்பது குறித்து ஒரு விளக்கம் வரவேற்கப்படுகிறது.





# 3. கிரைஸ்லர் (Chrysler)

1979ல் அமெரிக்காவில் மோட்டார் கார் வாகனங்கள் உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் கிரைஸ்லர் (Chrysler) கம்பெனி இருந்தது. இக்கம்பெனி 1700 மில்லியன் டாலர் கடன் வாங்கியிருந்தது. அச்சமயம் தொழில்ரீதியாக அதையொரு சாதனை என்று சொல்லலாம். 400 வங்கிகளில் கடன் பெற்றிருந்தது. கம்பெனியில் சரியான நிர்வாகத் திறமை இல்லாததால் வெகுவிரைவில் கம்பெனி சரியத் தொடங்கியது. நஷ்டத்தில் போய்க் கொண்டிருந்தது. பாங்க்கில் நாளடைவில் கையிருப்புத் தொகை குறைந்து, 1 மில்லியன் டாலர் பணம் கையிருப்பாக இருந்தது. அன்றாட நிர்வாகச் செலவு மட்டும் 80 மில்லியன் டாலர். மதிப்பீடு செய்பவர்கள், பொருளாதார நிபுணர்கள், தொழில் நுட்ப வல்லுனர்கள், பத்திரிகைகள், ஸ்டாக் மார்க்கெட்டு எல்லோரும் ஏகமனதாக கம்பெனி வெகுவிரைவில் வீழ்ச்சி அடைந்து விடும் என்றும், கம்பெனியை வீழ்ச்சியிலிருந்து மீட்க முடியாதென்றும் தெரிவித்தார்கள். ஒருத்தர் கூட சாதகமான நம்பிக்கை தெரிவிக்கவில்லை. அந்த நேரத்தில் அயகோக்கா (IACOCCA) என்பவர் மாதச் சம்பளம் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் டாலருக்கு ஒப்புக் கொண்டு சேர்மன் (Chairman) பதவியை ஏற்றுக் கொண்டார். பதவி ஏற்ற நாளன்றே கம்பெனியின் மோசமான நிலையை உணர்ந்தார். இது முன்கூட்டியே தெரிந்திருந்தால் காண்ட்ராக்ட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்க மாட்டேன் என்றார்.

தொழிலாளர்கள் வேலை செய்யவில்லை. சீப்ஃ பைனான்ஸ் ஆபீஸரால் (C.F.O.) நிதி நிலையைப் பற்றிப் பேச முடியவில்லை. வேலை நிறுத்தம் பெருகியது. கம்பெனிக்குள்ளே சூதாட்டம், கொலை, பாலியல் தொழில் போன்ற வேலைகள் முறைகேடாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. இருப்பினும் சேர்மன் (Chairman) மனம் தளரவில்லை. சவாலை ஏற்றுக் கொண்டார். கம்பெனி நல்ல நிலைக்கு திரும்பும் வரையில் ஆண்டுதோறும் 2 டாலர் மட்டுமே சம்பளமாக பெற்றுக் கொள்ளப் போவதாக அறிவித்தார். பாங்க்குகளை பொறுத்துக் கொள்ளும்படிக் கேட்டுக் கொண்டார். கம்பெனி நிர்வாகத்திற்குக் கீழ்ப்படியாதத் தொழிலாளர்களின் சம்பளத்தைக் குறைத்தார். 35 வைஸ் பிரசிடெண்டுகளில் 34 பேரை டிஸ்மிஸ் செய்தார். புதிய மாடல் கார் (K-Car) செய்வதற்கு திட்டம் வகுத்தார். ஆட்டோமொபைல் மார்க்கெட்டில் வழக்கத்தை மாற்றி பணம் திரும்பப்பெறும் புதிய திட்டத்தைப் புகுத்தி, உத்திரவாதம் கொடுத்தார். அவரே T.V. மூலம் கார்களை விற்பனை செய்தார். கடின உழைப்பாலும் விடா முயற்சியாலும் மூன்று வருடங்களில் கடன்பட்ட தொகையை விட இரண்டு மடங்கு அதிகம் சம்பாதித்தார். பத்து வருட அரசாங்க உத்திரவாதத்தை மூன்றே வருடங்களில் முடிவிற்கு கொண்டு வந்தார். சம்பளம், போனஸ், ஸ்டாக்ஸ் முதலானவைகள் மூலமாக சொந்த வருமானமாக 20 மில்லியன் டாலர் எடுத்துச் சென்றார்.





*பொறுப்புடன் கடமை உணர்ச்சியுடன், நம்பிக்கையிழந்த இக்கட்டான நிலைமையை ஏற்றுக் கொள்வது ஆன்மீகம்.*

தைரியம், தியாகம், உறுதி, எல்லாம் ஆன்மீகத்திற்கு இணையானதே. ஸ்தாபனத்தின் ஆன்மா அங்குள்ளவர்கள் எழுப்பும் அழைப்பை கவனத்துடன் கேட்கிறது. சில வருடங்களுக்கு முன்னால் எது முடியாது என்று தோன்றியதோ அதை ஆன்மா பூர்த்தி செய்கிறது. அயகோக்கா (IACOCCA) பிஸிக்கலாக ஆன்மாவை எழுப்பினார். டாம் கூத் (TOM GOOTH) ஆன்மாவை அழைத்து பலன் கண்டார்.

1. பழைய முறைகளை பின்பற்றக் கூடாது. நம்பவும் கூடாது.
2. மனதுக்கு எட்டாததும் கண்ணுக்குப் புலப்படாததுமான ஆன்மா மீது முழு நம்பிக்கை தேவை.
3. இதுவரையிலும் அடையாத ஒரு மனசாந்தியை அடைவது ஆன்மாவை அழைப்பதற்கு முக்கியமான சாதனமாகும்.

**மனிதன் களங்கமற்ற பரிசுத்தமான மனதுடன் ஆன்மீகத்தில் நம்பிக்கை வைத்தால், ஆனந்தமான உற்சாகத்துடன் ஆன்மாவை அழைக்க முடியும். அது அயகோக்கா (IACOCCA) பட்ட இரண்டு கஷ்டங்கள் ((1) கடினமாக உழைத்தது, (2) தன் சம்பளத்தையே குறைத்துக் கொண்டது), போலல்லாமல், ஆன்மாவால் பலன் அடையலாம்.**

வாழ்வு என்பது வெற்றியும் தோல்வியும் கொண்டது. உறுதியான வெற்றி ஆன்மாவின் தனிப்பட்ட உரிமை. அது உண்மை, நம்பிக்கை என்று பொருள்படும்.





# 4. மனித முயற்சி முடியுமிடமே இறைவன் செயல்படத் தொடங்கும் இடம்

## பாகம் - I

ஆத்மா தன் பிரச்சனைகளை மறந்தவுடன் அவை மறைந்து போவதைக் கண்டு அது எத்தகைய விசித்திரமானது என்று ஆச்சர்யப்படுகிறது. கடவுள் அந்த கபடமற்ற ஆத்மாவைப் பார்த்து சிரித்தார் என்று பகவான் ஸ்ரீ அரவிந்தர் தன்னுடைய நீதி உரைகள் சுருக்கத்தில் (Aphorisms) கூறுகிறார். ஆன்மீக உண்மை என்னவென்றால் மனிதன் தன் துன்பங்களையே நினைத்துக் கொண்டிருப்பதால் அவை வலுப்பெறுகின்றன. இந்த உண்மை நமது அன்றாட வாழ்க்கைக்கு ஏதேனும் ஒரு வகையில் உபயோகமுள்ளதாக இருக்குமா? அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அதிகமாக இல்லாவிட்டாலும் அவை வழக்கத்தில் இல்லாதது இல்லை. டாக்டர் கைவிட்ட பொழுதும் மனிதன் தீராத வியாதியிலிருந்து குணம் அடைகிறான். அந்த சமயத்தில் அது வியப்பைத் தருகிறது. ஆனால் வியப்பை வெளிப்படுத்துவதைத் தாண்டி நாம் அதை புரிந்து கொள்ள முன்வருவதில்லை. அது எப்படி நடந்தது என்று கண்டறிய மனம் தீவிர முயற்சி எடுப்பதில்லை. நமக்கு நமது மனமே முடிவானது. நாம் நம்முள் இருக்கும் ஆன்மாவைக் கருதுவது இல்லை.

ஒரு வக்கீல் தான் புதியதாக வாங்கிய காரை கிருஷ்ணா நதிக்கரை ஓரம் ஓட்டிக் கொண்டு போனார். எதிர்பாராதவிதமாக கார் தவறி ஆற்று வெள்ளத்தில் விழுந்துவிட்டது. எப்படியோ தப்பித்து காரின் கதவைத் திறந்து நீந்தி கரைக்கு வந்து சேர்ந்தார். மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டார். ஓரிரண்டு நாட்களில் அவர் தன் சுய உணர்வைப் பெற்றார்.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் யாவரும் அவரது தைரியத்தைப் பாராட்டினார்கள். அவர் எப்படி அந்தத் துணிச்சலான காரியத்தைச் செய்தார் என்று அறிய மிகுந்த ஆவலாக இருந்தார்கள். அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவர் சொன்ன பதிலானது, “எனக்கு ஒன்றும் தெரியாது. ஆற்றில் விழுந்ததுதான் தெரியும். இப்பொழுது ஆஸ்பத்திரியில் நான் இங்கு இருப்பதை அறிகிறேன்” என்றார். என்ன நடந்தது எனில், உடலுக்கென்றிருக்கும் ஆன்மா மனம் தன்னை காப்பாற்றாது என்று விழித்துக் கொள்கிறது. ஒரு அபார (Herculean) சக்தியை விடுவித்து அதிமானிட அறிவை வெளிப்படுத்தி உடல் தன்னைக் காப்பாற்றிக்கொள்கிறது.

மனிதன் நம்பிக்கை இழந்த நேரத்தில் வேறு வழி இல்லை என்ற எல்லைக்கு தள்ளப்பட்ட நிலையில், இறைவன் செயலில் இறங்கிக் காப்பாற்றுகிறார் என்பதற்கு இதுவொரு வெளிப்பாடு. நம்முடைய தீர்க்க முடியாத பிரச்சனைகள் உள்ளே இருக்கும் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்க்கப்படுவதற்கு இது போன்று பல வழிமுறைகளை நாம் உருவாக்கிக் கொள்ளலாம். தீர்க்க முடியாத பிரச்சனைகளை தானே தீர்த்துக் கொள்ள முடியும் என்று மனிதன் தான் நம்புவதை கைவிட்டுவிட வேண்டும் என்பது இந்த அடிப்படை கொள்கையின் வழிமுறையாகும்.





# 5. மனித முயற்சி முடியுமிடமே இறைவன் செயல்படத் தொடங்கும் இடம்

## பாகம் - II

ஒரு அரசாங்க உத்தியோகஸ்தர் பாண்டிச்சேரிக்கு ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 21ந் தேதி தவறாமல் வந்து கொண்டிருந்தார். அவர் மிகுந்த பக்தியுடன் அங்கு நடைபெறும் தெய்வீக வழிபாட்டில் கலந்து கொண்டுவந்தார். பிறந்த நாட்களில் தெய்வ அனுக்கிரகம் பெற, ஒவ்வொருவரும் தன் வாழ்நாளில் அப்படிப்பட்ட வழிபாட்டில் கலந்து கொள்வதை சிறப்பாகக் கருதுகிறார்கள். ஆன்மா, பிறந்த நாளன்று அடுத்த உயர்நிலையில் புதுப்பிறவி எடுக்கிறது என்று நம்பப்படுகிறது. 30 வருடங்களுக்கு முன்னால் இன்று கிடைக்கும் வசதிகள் போல், பஸ் வசதிகள் அன்று இல்லை. அதிகாரி பிப்ரவரி 21ந் தேதி பாண்டிச்சேரிக்கு வருவதற்கு ஆபிசில் 3 நாட்கள் லீவு எடுக்க வேண்டும். அவர் ஒரு கெஜட் பதிவு பெற்ற அதிகாரியாக இருந்த போதிலும் அவருடைய மேலதிகாரி ஆபிசில் இருந்ததால் லீவு எடுப்பதில் சிக்கல் இருந்தது. அவர் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 21ந் தேதி பாண்டிச்சேரிக்கு பக்தியுடன் வந்து கொண்டிருந்தார்.

அவருடைய பிறந்த நாள் பிப்ரவரி 19ந் தேதி. அவர் பாண்டிச்சேரியில் 19ந் தேதி இருக்க வேண்டுமானால், பிப்ரவரி 21 விசேஷ நாளன்றும் சேர்த்து தங்குவதற்கு குறைந்தது 5 நாட்கள் லீவு எடுக்க வேண்டும். இவரது நிலைமையை அறியாத ஒருவர், அவரிடம் பிறந்த நாளன்று பாண்டிச்சேரிக்கு போவது குறித்து நினைவுபடுத்தினார். அதிகாரி தான் போக முடியாத சூழ்நிலையை வைத்து எப்படி போக முடியும் என்று சொன்னார்.

மார்ச் மாத இறுதியில் அதிகாரிக்கு நடக்கக் கூடாதது ஒன்று நடந்து விட்டது. அவர் ஒரு நிரந்தர கெஜட் பதிவு பெற்ற அதிகாரியாக இருந்தும், அவரை திடீரென்று வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். அது அந்த டிபார்ட்மெண்டில் இதுவரையில் கேள்விப்பட்டிராத நடந்திராத ஒரு சம்பவம். அதன் பிறகு 110 நாட்கள் கழித்து அவர் மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். வேலையில் இல்லாத நாட்களில், அவர் அடுத்த பிறந்த நாளன்று பாண்டிச்சேரிக்கு போக வேண்டுமென்று தீர்மானித்தார். அவருக்கிருந்த அறிவு திறனெல்லாம் தீர்ந்துவிட்டிருந்தன. அதன் பிறகு அவர் பாண்டிச்சேரிக்கு வந்தார். அங்கு முன்பு இவரிடம் பிறந்த நாளன்று பாண்டிச்சேரிக்கு போவதைப் பற்றி நினைவுப்படுத்திய அந்த நபரைச் சந்தித்தார். அந்த நபர் சொன்னார், "உங்கள் நிலைமையில் பாண்டிச்சேரிக்கு பிப்ரவரி 19, 21 தேதிகளில் வரமுடியாது என்பதை நான் நன்கு அறிவேன். நாம் மனத்தால் செயல்பட்டால் முடியாதது உண்மைதான். ஆனால் ஆன்மாவுக்கு கஷ்டமில்லை. மனித முயற்சி முடியுமிடந்தான் இறைவன் செயல்படத் தொடங்குமிடமென்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார். அவர் சொன்ன கருத்துக்களை அதிகாரி நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டார். ஒவ்வொரு முறையும் மனம் கேள்வியை எழுப்பிய வண்ணமாக இருந்தது. அந்த நினைவு வரும் பொழுதெல்லாம் அதை ஒதுக்கிவிட்டு மௌனத்தைக் கடைப்பிடித்தார். மனம் அடங்கி ஆழ்ந்த அமைதியில் லயிப்பதை உணர்ந்தார். அந்த வருடம் பிப்ரவரியில் எலக்ஷன் வந்தது. அவருடைய ஆபீசில் இருந்த அத்தனை கெஜட் பதிவுபெற்ற அதிகாரிகளையும் இவரைத்தவிர எலக்ஷன் பணியில் போட்டுவிட்டார்கள். இவரை மட்டும் அதிசயிக்கத் தக்க வகையில் எலக்ஷன்





பணியில் போடாமல் விட்டுவிட்டார்கள். அன்றைய தினத்தை அரசாங்கம் விடுமுறை நாளாக அறிவித்தது. இந்த அதிகாரி தன்னுடைய பிறந்த நாளன்று பாண்டிச்சேரிக்கு வந்து பிப்ரவரி 21ந் தேதி வரை அங்கேயே தங்கினார். அந்த நாளிலிருந்து ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 19, 21 தேதிகளில் பாண்டிச்சேரிக்கு வந்து தியான வழிபாட்டில் கலந்து கொண்டார்.

# 6. மனித முயற்சி முடியுமிடமே இறைவன் செயல்படத் தொடங்குமிடம்

## பாகம் - III

மனித முயற்சி தீருமிடத்தில் இறைவன் செயல்படத் தொடங்குகிறான் என்பதை விளக்கும் நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் அநேகமுள்ளன. நடப்பதை நாமிந்த கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை. பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள ஆன்மீக சக்தியை பயன்படுத்துவது ஒரு முறை என்று நாம் கருதுவதில்லை. ஒரு பிரச்சனை ஏற்பட்டால் நம்முடைய முயற்சியால் தீர்த்துக் கொள்ள முடியும் என்று நம் மனம் எண்ணுவதை நம்புகிறோம். அதிலிருந்து மீள்வதற்கு நாம் எடுக்கும் முயற்சி நல்லதுதான். ஆனால் நமது முயற்சியால் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்ற எண்ணத்தை விலக்கிக் கொள்வது மிகவும் நல்லது. இத்திசையில் நம் சிந்தனையை செலுத்துவதில்லை என்பதோடின்றி, இதுவொரு சரியான அணுகுமுறை என்பதை நாம் ஏற்பதுமில்லை.

சாதாரணமாக நாம் நம் வேலையில் நம்மால் முடிந்த அளவிற்கு முயற்சி எடுக்கிறோம். அதில் வெற்றி பெற்றால் நம்மை நாமே பாராட்டிக் கொள்கின்றோம். நம் திறமை மீதுள்ள நம்பிக்கையை மேலும் வலுப்படுத்திக் கொள்கிறோம். நமக்கு தோல்வி ஏற்படும் பொழுது நம்முடைய முயற்சிகளை மேற்கொண்டு தொடர வழி ஒன்றும் தெரியாமல் திகைக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவது கண்கூடு. நாம் நம்முடைய பிரயத்தனத்தைக் கைவிட்ட பின்பு நமது முயற்சிகளில் தோல்வி கண்ட பொழுதும் சிறிது காலத்திற்குள் தானாகவே வெற்றி கிடைத்த செய்தி வருகிறது. பொதுவாக இதுபோன்ற செய்திகள் வருவது அபூர்வம்;





என்றாலும் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பது உண்மை.

1. நம்முடைய சாதனை நம்முடைய முயற்சியினால் நடக்கவில்லை என்றும் அது நம் முயற்சியை மீறி நடந்துள்ளது என்பதையும் உணர்கிறோம்.
2. நமக்குத் தெரியாத மற்றும் நாம் நினைத்துப் பார்க்காத வழியில் பூர்த்தியாவதை உணர்கிறோம்.
3. பொதுவாக இப்படி பூர்த்தியாகின்றவைகள் அதிகப் பலனைக் கொண்டு வருகின்றன.

ஒருவர் தனக்குத் தெரிந்த வழியில் செயல்படுவது நல்லது, மற்றும் சரியானதும் கூட. வேலையை முழுமையாகக் கற்றுக் கொள்ளும் வரையிலும்தான் இது உண்மையாகும். அதன் பிறகு வேலையை அதன் முறையில் தானாக நடைபெறுமாறு எந்தவிதமான குறுக்கீடுமில்லாமல் விட்டுவிட வேண்டும். அப்பொழுதுதான் வேலை தன்னை முழுமையாகப் பூர்த்தி செய்து கொள்ளும். மனத்தின் தலையீடு ஒரு தடையாக அமையும். தன்னால் இவ்வேலை முடியாதென்று விட்டுவிடும் பொழுது மனிதன் மேற்கண்ட முறையை எதிராக பின்பற்றுகிறான் என்றாகும்.

ஒருவர் ஒரு பெரிய பிராஜெக்ட்டை எடுத்து நடத்தி எட்டு வருடங்கள் உழைத்தபின் கிடைத்த வெற்றியைக் கண்டு சந்தோஷப்பட்டார். அந்த பிராஜெக்ட் மிகப் பெரியதாக இருந்ததால் அதுவே அவருடைய கடைசி முயற்சி என்று எண்ணினார். இச்சமயத்தில்தான் நம் முயற்சி முடியுமிடத்தில்

இறைவன் செயல்படத் தொடங்குவான் என்ற உண்மையை அறிந்தார். எதிர்பாராத வகையில், அவர் நடத்தி வந்த பிராஜெக்ட்டைப் போல் இரண்டு மடங்கு பெரிய பிராஜெக்ட் ஒன்று தானாக வந்தது. இப்பொழுது அவர் புது முயற்சியே எடுக்க வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தார். ஆனால் அந்த பிராஜெக்ட் அதன் வேலையைத் தானாகவே எழுபது நாட்களில் அதனுடைய வேகத்தில் பூர்த்தி செய்து கொண்டது. மனிதனுடைய முயற்சி இல்லாமலேயே வேலை தானாகவே தன்னை பூர்த்தி செய்து கொள்கிறது என்பதை, இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**"நிறுவனத்திற்கு ஜீவனுண்டு".**





# 7. இந்தியாவின் ஆன்மீக சூழல் - மேதை

நல்ல குடும்பம் தலைமுறை தலைமுறையாக புண்ணியம் செய்து வந்ததால் புத்தர், இயேசு, கிருஷ்ணர் போன்ற பெரிய ஆத்மாக்கள் வரை இந்த பூமியில் அவதரித்தார்கள் என்று கருதப்படுகிறது. நம் இந்திய நாடு செய்த தவப்பயனால் காந்தி, நேரு, தாகூர் போன்றவர்கள் கூட இப்படிப் புண்ணியம் செய்த குடும்பத்தில் தோன்றினார்கள் என்பது உண்மை. மற்றுமொரு உண்மை என்னவென்றால், பெரிய அவதாரங்கள் மற்றும் அதற்கடுத்த விபூதிகள் என்று அழைக்கப்படுபவர்கள் பிறந்த குடும்பங்கள் பெரும்பாலும் மறக்கப்பட்டு மறைந்துவிட்டன. ஒவ்வொரு நாட்டிற்கும் அதற்கென்ற தனிப்பட்ட கலாச்சாரமும் பாரம்பரியமும் உண்டு. அப்பாரம்பரியம் அந்நாட்டு மண்ணில்கூட பரவியிருக்கும். ஒரு அமெரிக்கர் இந்தியாவிற்கு விமானத்தில் வந்து கொண்டிருந்த பொழுது விமானம் இந்திய விண்வெளியில் நுழைவதாக விமானி அறிவித்த நேரம் தனக்குள் ஒரு எல்லையற்ற அமைதி நுழைவதைக் கண்டார்.

**"இந்தியா உலகின் குருவாகும் ஆத்மீகப் பெருமையுள்ள புண்ணிய பூமி"**

ஸ்ரீ அரவிந்தரின் தகப்பனார் தன் குழந்தைகள் ஆங்கிலேயர்கள் போல் வளர வேண்டுமென எண்ணி, டார்ஜிலிங் நகரிலுள்ள ஓர் ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்தார். ஸ்ரீ அரவிந்தர் அப்பள்ளியில் சேர்ந்தவுடன் ஒரு கரிய இருள் தன்னுள் புகுந்து நிலைத்து விட்டதை உணர்ந்தார். பிறகு

ஸ்ரீ அரவிந்தரை இங்கிலாந்திற்குக் கொண்டுபோய் பள்ளியில் அவருடைய தகப்பனார் சேர்த்தார். கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையில் படிப்பை முடித்து தன்னுடைய 21வது வயதில் ஸ்ரீ அரவிந்தர் இந்தியா திரும்பினார். அவர் இந்தியாவுக்குத் திரும்பி தாய் நாட்டின் மண்ணில் காலடி வைத்தவுடன், ஒரு பேரமைதி படர்ந்து வந்து தன்னுள் புகுந்து ஜீவனின் ஆழத்தைத் தொட்டு, இறுதிக் காலம் வரை இப்படி நீடித்து நிலைத்து விட்டதை உணர்ந்தார்.

ஐரோப்பியர் மனத்தினால் செயல்படக்கூடியவர்கள். அங்கே எண்ணற்ற விஞ்ஞானிகள் தோன்றினார்கள். ஒவ்வொரு அமெரிக்கரும் வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுது இயந்திர சாதனத்தை எப்படி திறம்பட இயங்க வைக்கலாம் என்று சிந்திக்கிறார். அமெரிக்கர்கள் காரியங்களை முறைப்படுத்தி திறமையாகச் செயலாற்றும் திறனுள்ளவர்கள். அத்தகைய செயலாற்றும் திறமை பெற்றுள்ளதால் எடிசன் (Edison), போர்ட் (Ford), போன்றவர்கள் அங்கே தோன்றினார்கள். இந்தியாவின் ஆன்மீக சூழல் ரிஷிகளை தோற்றுவித்தது. அமெரிக்காவின் அறிவு ரீதியான சூழல் ரிஷிகளை தோற்றுவிக்கவில்லை. அம்மாதிரியே இந்தியாவும் ஐரோப்பாவைப்போல் விஞ்ஞானிகளை தோற்றுவிக்கவில்லை. ஆன்மாவிற்குள் அறிவு அடக்கம் என்பதால் இங்கே சீனிவாச ராமானுஜம் போன்ற மேதை தோன்றுகிறார். இப்பொழுது கணித வல்லுனர்கள் எல்லோரும் சீனிவாச ராமானுஜத்தை 20ம் நூற்றாண்டின் தலைசிறந்த கணித மேதை என்று போற்றுகிறார்கள்.





**நான் இரண்டு கேள்விகளை எழுப்புகிறேன்.**

1. இங்குள்ள ஆன்மீக சூழலை செல்வமயமான சூழலாக மாற்றக்கூடிய மனோபாவத்தை நாம் வளர்த்துக் கொள்ள முடியுமா?
2. இந்நாட்டு ஆன்மீக சூழலில் மேதைகள் மறைந்துள்ளார்களா? விழிப்புணர்வு வந்தால் அவர்கள் தலையெடுக்க உதவுமா?

# 8. இந்தியாவின் ஆன்மீக சூழல் - சக்தி

ஒரு ஏழை ஆப்பிரிக்கரைப் பற்றி ஒரு கதை உண்டு. 19ம் நூற்றாண்டில் தங்கம் பெருமளவில் பூமியில் கிடைக்கிறதென்று கேள்விப்பட்டு அதிக ஆவலுடன் தன்னுடைய நிலத்தையும் குடியிருக்கும் வீட்டையும் விற்றுவிட்டு தென் அமெரிக்காவுக்குப் போய் குடியேறிவிட்டார். இந்த நிலத்தை வாங்கியவருக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. அவர் வாங்கிய நிலத்தில் பூமிக்குக் கீழ் வைரச் சுரங்கம் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். இந்தியா ஆன்மீகப் பொக்கிஷம் உடையது. ரிஷிகள் கடவுளை சச்சிதானந்தம் என்றுக் கண்டார்கள். சென்ற நூற்றாண்டில், விஞ்ஞானிகள் எனர்ஜிதான் எல்லாவற்றிற்கும் அடிப்படை என்று கண்டுபிடித்ததை ரிஷிகள் ஆதியில் உபநிஷத்துக் காலத்திலேயே கண்டுபிடித்து விட்டார்கள். அதற்கு மேலும் தேடுதலில் ஆன்மாவின் உள்ளே சென்று சக்தி சத் புருஷனிடமிருந்து வெளிவருகிறதென்று கண்டார்கள். அதுவும் முடிவானதல்ல. முடிவற்ற அனந்தம் பிரம்மம் என்றும், அது காலத்தைக் கடந்தது என்றும், சத் புருஷன் அதிலிருந்து வெளிப்படுகிறான் என்றும் கண்டுகொண்டார்கள். அப்படியானால், இந்தியா ஏன் ஏழ்மையில், அதன் வாழ்வு வெறுமையுடன் சாரமற்றதாக இருக்கிறது என்ற கேள்வி எழுகிறது. இயற்கை இறைவனின் ஆட்சியை புவிக்குக் கொண்டு வருவதற்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு முன்கட்டமாக வாழ்வின் பல்வேறு அம்சங்களை உலகின் பல்வேறு பாகங்களில் பல்வேறு சமயங்களில் வளர்த்துக் கொண்டு வந்துள்ளது.





இந்தியா அடிமை நாடாக இருந்த பொழுது, அதன் ஆன்மாவும் மனமும் உறக்க நிலையில் செயலற்றுப்போய் இருந்தன. இப்பொழுது ஒரு சுதந்திரமான நாடாக இருந்த போதிலும், சுதந்திரமாக சிந்திக்கும் திறனை இழந்துவிட்டது. அதன் வாழ்வு தாழ்ந்த நிலையில் இருள் சூழ்ந்ததாக ஏழ்மையுடன் இருந்து வருகிறது. பாரதமாதாவை அன்னிய ஆட்சியின் பிடியிலிருந்து தளையை அறுத்தெறிந்து அடிமைத் தனத்திலிருந்து மீட்டதற்கு, பட்ட கஷ்டங்கள் எவ்வளவு முக்கியமாக இருந்ததுவோ, அதே போன்று இப்பொழுதும் இந்தியாவை ஏழ்மையிலிருந்து மீட்பதற்கு உயர்ந்த இலட்சியங்களைக் கொண்ட செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியமாகும். இந்திய நாடு ஒரு காலத்தில் பெருமையுடன் தலை நிமிர்ந்து நின்றபோது செல்வம் மிகுந்த நாடாகவும், மக்கள் தெய்வ பக்தி, அன்பு, நேர்மை, உண்மை மிக்கவர்களாகவும் இருந்தார்கள்.

மேற்கத்திய நாடு மனத்தின் திறனால் ஐஸ்வரியம் அடைந்தது. அங்கு மனிதன் உழைப்பாலும், விஞ்ஞானத்தாலும், படிப்பாலும், முயற்சியாலும், முன்னுக்கு வருகிறான். உண்மையில் மனத்தின் திறனைவிட ஆத்மாவின் திறன் அளவு கடந்ததாக இருக்க வேண்டும். இது உண்மையானால் நாம் எப்படி இதை சாதிக்கலாம்? இவ்வியக்கத்திற்கு யார் தலைமை தாங்குவது? அது அரசாங்கமா, அல்லது ஸ்தாபனமா, அல்லது தனிப்பட்ட மனிதனா? ஆன்மீக சக்தியை பயன்படுத்தும் பழக்கம் இந்தியாவில் பரவலாக உண்டு. ஆனால் இந்நாட்டு மக்கள் தமக்குள் இருக்கும் சக்தியை அறியாதவர்களாக உள்ளார்கள். இந்திய மக்களிடமுள்ள இயற்கையான மனோசக்தியை வெளியில் கொண்டுவர, தேசம் அவர்களை விழிப்புறச் செய்ய

வேண்டும். ஸ்தாபனங்களின் மூலமாக இத்தகைய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். மனித வாழ்வின் சாரத்தில் எங்கு அத்தகைய சக்திகள் எட்டிப் பார்க்கின்றனவோ அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை காண நாம் விழைவோமாக.





# 9. இந்தியாவின் ஆன்மீக சூழல் - பிரார்த்தனை

நாம் அன்றாடம் பிரார்த்தனை செய்வது வழக்கம். பக்தியும், நம்பிக்கையும் நமது வழிபாட்டின் அடிப்படை. பரீட்சைக்கு போகுமுன், பள்ளிச் சிறுவன் பக்தியுடன் கடவுளை தொழுதுவிட்டுப் போகிறான். திருடன் தான் திருடப் போகுமுன் தெய்வத்தை வணங்குகிறான். கடவுளுக்கு நல்லது கெட்டது என்ற பாகுபாடு இல்லை. தன்னுடைய விருப்பம்போல் வேண்டிய நன்மைகளை எல்லாம் பெறுவதற்கு தெய்வ வழிபாடு சுலபமானது என்று கீதை கூறுகிறது. சாவித்திரியில் பகவான், “இறைவனை அழைத்து பிரார்த்தனை செய்தால் மனிதனின் வாழ்வில் அன்றாடம் அற்புதங்கள் நடைபெறுவதைக் காண்கிறோம்” என்றார். உண்மையான பிரார்த்தனை எல்லாம் தவறாமல் பலிக்கின்றன. ஆபத்துக் காலத்தில் மனிதன் எழுப்பும் குரல் அலறலாகி தெய்வத்தின் காதில் விழுந்து, அற்புதம் என அறியும் வகையில் தெய்வம் அவனைக் காப்பாற்றுகிறது. டாக்டர் கைவிட்டபின், நமக்கு டாக்டர் மீதும் மருந்து எல்லாவற்றிலும், நம்பிக்கைப் போனபின் இறைவன் மீது நம்பிக்கை வந்து பிரார்த்தனை செய்தால் நோய் மின்னல் வேகத்தில் குணம் அடைகிறது. தொழிலில் உற்பத்திப் பொருட்களுக்கு மார்க்கெட்டில் சரிவு ஏற்படும் நேரத்திலும், பிரார்த்தனையால் அற்புதங்கள் நடக்கின்றன. விபத்துக்கள் ஏற்படும் நேரங்களில் கூட தெய்வம் அற்புதமாகக் காப்பாற்றுகிறது. நமது பிரார்த்தனையை இறைவன் கருணையுடன் பூர்த்தி செய்தார் என்று உள்ளம் நெகிழ்ந்து நினைக்கிறோம். நம் இதயத்தில் உள்ளே இருக்கும் ஆன்மாவே இந்த இறைவனாகும்.

கிராமப்புற தனியார் நிறுவனம் (project) ஒன்றில் ஒரு பொறுப்புள்ள மானேஜரை வைத்துக் கொண்டு அதன் தலைவர் நிர்வகித்து வந்தார். அந்த மானேஜர் எல்லா பொறுப்புகளையும் சேவையாக ஏற்றுக் கொண்டவர். அவருக்கு பலனை விட பொறுப்பும் கடமையும்தான் முக்கியம். அந்த பிராஜெக்ட்டில் வேலை செய்யும் அத்தனை ஊழியர்களும் சம்பளத்துக்காக உழைக்கும் மனப்பான்மை இல்லாமல் சேவை மனத்தோடு வேலை செய்தார்கள். திடீரென்று ஒரு நாள் புயல் வீசி அந்த பிராஜெக்டை அடியோடு நாசமாக்கி விட்டது. எல்லா ஷெட்டுகளும் நொறுங்கிவிட்டன. அங்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கு புயலால் ஆபத்து வந்தது. 80 பேர்களின் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்பட்டது. அனைவரும் சேர்ந்து செய்த பிரார்த்தனையால் ஆபத்து விலகியது. பிராஜெக்ட்டின் தலைவரும், மானேஜரும் புயல் ஓய்ந்தவுடன் சம்பவ இடத்திற்கு வந்தனர். தலைவர் தன்னுடைய கனவு நிர்மூலமாகிவிட்டதே என்று பதறினார். அவர் நஷ்டத்தை மட்டும் கருதினார். மனிதாபிமானமோ, கடமை உணர்ச்சியோ, பொறுப்போ அவரிடம் சிறிதும் காணப்படவில்லை. மானேஜர் அங்கு வேலை செய்தவர்களின் பரிதாபமான நிலையைக் கண்டு மிகவும் வருந்தினார். அவர்கள் மீது இரக்கங்கொண்டு அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் வழங்க வேண்டுமென்று விரும்பினார். அதற்கு குறைந்தது ரூ.5,000/- தேவைப்பட்டது. முதலாளியோ தன்னுடைய 2 லட்சம் முதலீடு நஷ்டமாகி விட்டதை மட்டும் கருதினார். ரூ.5,000/- என்பது அவர் 1972ல் அங்கே அந்த பிராஜெக்ட்டுக்காக 10 ஏக்கர் நிலங்களை வாங்கிய தொகைக்கு சமமானதே என்று நினைத்தார். மானேஜர், கையில் பணம் இல்லாதவர். இது போன்ற நேரத்தில் இதற்கு முன் ஆன்மாவை அழைத்துத் தீர்வு கண்டவர். இப்பொழுது





இந்த இக்கட்டான நிலையில் செய்வதொன்றும் அறியாது திகைத்தார். சரணாகதி ஒன்று தான் இதற்குத் தீர்வு என்று நினைத்து அதைக் கடைப்பிடித்தார். பிறகு அவர் பணம் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டு ஒரு தீர்மானத்தோடு சமாதிக்குச் சென்றார். சமாதிக்கு போகும் போது சமர்ப்பணம் செய்து கொண்டே போனார். அப்பொழுது அவர் மனதில் ஒரு எண்ணம் தோன்றிற்று. திரும்பி வரும் பொழுது எதிரே முதன் முறையாக யாராவது தெரிந்தவர் ஒருவர் வந்தால், அவரிடம் ரூ.5,000/- கேட்கப் போவதாக தீர்மானித்தார். அவர் சமாதிக்குள் நுழையும் பொழுது முன்பின் தெரியாத பெரியவர் ஒருவர் இவரை வழிமறத்து உள்ளே போக விடாமல் தடுத்துத் தன் வீட்டிற்கு வரும்படி அழைத்தார். மானேஜர், எவ்வளவோ மறுத்தும் அந்த பெரியவர் விடவில்லை. பிறகு மானேஜர் அந்த பெரியவரிடமே ரூ.5,000/- கடனாகக் கேட்டார். பெரியவர் இவரது நிலையைக் கேட்டறிந்ததும் ரூ.5,000/- அன்பளிப்பாகக் கொடுத்தார். தூய்மையான நல்ல உள்ளத்திலிருந்து செய்யும் உண்மையான பிரார்த்தனைக்கு ஒரு முறை கூட காரியம் தவறாது.

# 10. ஆன்மாவை அழைப்பது

ஆன்மாவை அழைத்தால் அது அற்புதமாக செயல்படுகிறது. அது எப்படி நடக்கிறது? நமது மரபு இதைப் பல வழிகளில் பின்பற்றுகிறது. அதில் ஜபம் செய்வது பிரபலமானது. மந்திரங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. அதை முறைப்படி ஜபிக்க வேண்டுமென்பது வழக்கம். ஜபம் வாயால் எழுப்பும் ஒலி வடிவம். "ஓம்" என்ற சக்தி வாய்ந்த மந்திரத்தை சரியாக உச்சரிக்க வேண்டுமென்பது மரபு. இது சப்த பிரம்மம் என்று அழைக்கப்படுகிறது. மாற்றமில்லாத பிரம்மம் படைப்பில் மாற்றமுள்ள பிரம்மமாகிறது. ஒவ்வொரு பிரிவினரும் மந்திரம் ஜபிப்பதில் வெவ்வேறு விதமான முறையைப் பின்பற்றி வருகின்றனர். ஒரு வகையினர் மந்திரத்தை 1½ கோடி தடவை உச்சரிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். "ஓம்" மந்திரத்தை முறைப்படி சரியாக உச்சரித்தால், தெய்வ லோகத்திற்கு அப்பாலுள்ள அகண்ட பிரம்மத்தை உணர முடியும்.

நான் எழுதுவது எல்லாம் நேர்மையுடன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் அளவுகடந்த ஐஸ்வர்யத்தை எப்படி அடைவது என்பது பற்றியது. வளமை வாய்ப்புகள் மூலம் வருவது. ஆனால் மனிதனோ பிரச்சனைகளின் பிடியில் இருக்கிறான்.

"நான் ஆபீசில் வேலை செய்யும் சாதாரண குடும்பஸ்தன். எனக்கு மந்திரத்தை லட்சம் முறை சொல்வது கஷ்டமான காரியம். குடும்பத்தில் இருந்து கொண்டு, இப்படி அதிக நேரம் மந்திரம் சொல்வது கடினம். நான், என் வாழ்வில் உண்மையைக் கடைபிடித்து வாழ்ந்து வருகின்றேன். என்னுடைய பிரச்சனையிலிருந்து மீள்வதற்கு ஆன்மாவை





அழைப்பதற்கு ஏதாவது வழி சொல்லுங்கள்" என்று ஒருவர் கேட்கலாம். பிரச்சனைக்கு காரணம் எண்ணம் தான். எண்ணம் என்பது மனம். மனத்திற்கு பின்னால் உள்ளது ஆன்மா. பிரச்சனையை நினைவுபடுத்தும் எண்ணத்தை விலக்கி, நினைவை ஆன்மாவுக்கு சமர்ப்பணம் செய்தால் பிரச்சனை விலகும். பிரச்சனையைத் தீர்க்கும் திறன் ஆன்மாவுக்கு உண்டு. சமர்ப்பணம் என்பது மனிதன் தன்னை விலக்கி, அந்த இடத்தில் இறைவனை பிரதிஷ்டை செய்வதாகும். ஒவ்வொரு செயலிலும் இத்தகைய சமர்ப்பணத்தைக் கொண்டு வரலாம். இதையே ஆன்மாவை அழைப்பது என்று சொல்லுகிறோம். நமக்கு இதுதான் ''ஆன்மாவை அழைப்பது'' என்ற முறையாகும்.

முன்னுக்கு வந்து கொண்டிருந்த ஒரு குடும்பத்தில் ஒருவர் குடிப்பழக்கம் கொண்டிருந்தார். அவர் ஒரு நாள் குடித்துவிட்டு ரோட்டில் விழுந்து கிடந்தார். அவருடைய சகோதரருக்கு, இந்த குடிகார சகோதரரைப் பற்றி மிகவும் கவலையாக இருந்தது. இவரை எப்படி திருத்துவது என்று தெரியாமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். பிறகு ஒரு தீர்மானத்திற்கு வந்தார். அந்த குடிகார சகோதரரைப் பற்றிய நினைவு வரும் பொழுதெல்லாம் அந்த எண்ணத்தை மனத்திலிருந்து விலக்கி, ஆன்மாவில் சமர்ப்பணம் செய்ய தீர்மானித்து, அந்த முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அது அவ்வளவு சுலபமான காரியமாக இல்லை. என்றாலும் விடாமுயற்சியால் அவர் ஆன்மாவை தீவிரமாக அழைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இப்படி செய்த நான்காம் நாள் அவருக்கு வெற்றி கிட்டியது. குடிப்பழக்கத்திற்கு மையமாக இருந்த கிளப்பில் இரண்டு கோஷ்டிகள் ஏற்பட்டு இந்த குடிகார சகோதரரை

விரட்டிவிட்டார்கள். அவர் குடிப்பழக்கத்தை விட்டுவிட்டு, இதுவரையில் குடும்பத்தை மறந்து, மனைவியை கவனிக்காது இருந்த நிலைமாறி, குடும்பத்தில் தானும் ஒருவராக வேலையை கவனிக்க குடும்பத்தில் வந்து சேர்ந்தார். அன்றிலிருந்து குடிப்பதற்கு கிளப்புக்கு போவதை நிறுத்திக்கொண்டார். குடும்பத்தில் ஒருவர் ஆன்மாவை அழைத்ததினால் இந்தக் குடும்பத்திற்கு பலன் கிடைத்தது.





# 11. மூன்று நாள் பிரார்த்தனை

ஆன்மாவை அழைப்பதில் பல முறைகள் கையாளப்படுகின்றன. ஆன்மீக விஷங்களில் அதிக பரிச்சயம் இல்லாதவருக்கு பிரார்த்தனை உகந்ததாகும். அதுவும் மூன்று நாட்கள் பிரார்த்தனையை மேற்கொள்வது பொருத்தமான-தாகும். பிரச்சனைகள், தீருவதற்கும் வாய்ப்பை உற்பத்தி செய்து கொள்வதற்கும் இந்த மூன்று நாட்கள் பிரார்த்தனை ஏற்றதாகும்.

பிரச்சனைகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு. சில பிரச்சனைகள் தொந்தரவு உடையனவாகவும், மற்றும் சில அச்சமூட்டுவதாகவும் இருக்கின்றன. வீட்டை விட்டு ஓடிப்போன பையன், நீண்ட நாள் திரும்பி வராத கடன், மின் இணைப்பு புதியதாக கொடுப்பதில் காலதாமதம் ஆவது, போன்றவைகள் வீட்டுப் பிரச்சனைகளாகும். ஒருவர் உத்தியோகத்தில், கஷ்டப்பட்டு உண்மையாக உழைத்தவராக இருந்தபோதிலும், அவர் புறக்கணிக்கப்பட்டு வேறு ஒருவருக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டு, இவருக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய உத்தியோக உயர்வு தடைபட்டுப் போனது, அவருடைய வாழ்வில் கடுமை நிறைந்த பிரச்சனையாகும். ஒரு முறை ஆன்மாவை அழைத்தால் இப்படிப்பட்ட பிரச்சனைகள் தீருவதுண்டு. அப்படியானால் 72 மணி நேரம் அல்லது 12 மணி நேரம் தினமும் தொடர்ந்து உட்கார்ந்து ஏன் பிரார்த்தனை செய்ய வேண்டும்? ஏனென்றால் பாமர மனிதனுக்கு தியானம் இயல்பாக அமைவதில்லை. மனதை ஒரு நிலைப்படுத்தி ஆன்மாவை எழுப்புவதற்கு எளிய மனிதனுக்கு போதிய சக்தியும் திறனும் இல்லை. 3 நாள் உட்கார்ந்து தியானம் செய்வதுதான் அவருக்கு பொருத்தமானது. இயல்பானதும்கூட.

உடல் அமைதியாகி மனதில் ஆழ்ந்த மௌனம் ஆட்கொள்ளும் பொழுது ஆன்மா ஒரு முறையோ அல்லது சிற்சில நேரங்களிலோ வெளிப்படும். ஒருவர் 3 நாள் உட்கார்ந்து பிரார்த்தனை செய்ய, நேரத்தைத் தேர்ந்தெடுக்கலாம். ஒரு நாளில் உணவு இடைவெளி நீங்கலாக காலை 7 மணி முதல் இரவு 7 மணிவரை, 12 மணி நேரம் பிரார்த்தனை தொடரலாம். மனதில் ஓடும் நினைவுகளை அகற்றி பிரார்த்தனையை ஆரம்பிக்க முடிவு செய்தால், 3 நாள் இடைவிடாமல் 72 மணி நேரமும் அதன் நினைவாகவே இருந்தால் பிரச்சனை முழுவதும் பிடிபட்டு, புறநிலை மாறி புதிய சூழ்நிலைகள் ஏற்பட்டு, நிகழ்ச்சிகள் விரைந்து செயல்பட்டு தீர்வு ஏற்படுவதைக் காணலாம். பிரார்த்தனையை எளிய முறையில் சொல்லலாம். “ஓடிப்போன பையன் திரும்பி வர வேண்டும்” என்று சுலபமாகச் சொல்லலாம். தாய் மொழியில் மௌனமாக இப்படி திரும்ப திரும்பச் சொல்லிக்கொண்டே இருக்கலாம்.

3 நாள் இடைவிடாமல் பிரார்த்தனை செய்து தீராத பிரச்சனை ஒன்றை இதுவரை கேள்விப்பட்டது இல்லை. இந்த முறையைக் கடைப்பிடித்து வந்ததில் பலன் அடையாதவர் எவரும் இல்லை. பெரும்பாலும் இப்படி 3 நாள் பிரார்த்தனை முடியும் முன்பாகவே, அவர் ஆர்வத்தால் ஆரம்பித்த அழைப்பு, எதிர்பாராத வகையில் நல்ல சில பலன்களையும் தருவதுண்டு. அப்படி, இடையிலேயே ஒருவருடைய பிரார்த்தனை நிறைவேறிவிட்டால் 3 நாள் பிரார்த்தனையை ஒரு சடங்காக செய்து, அதை பூர்த்தி செய்ய வேண்டுமா? என ஒருவர் நினைக்கலாம். அப்பொழுது அந்த பிரார்த்தனையை தொடர தேவை இல்லை. இன்னும் ஒரு விசேஷம் என்னவென்றால், சிலருடைய குறிப்பாக மூன்று அல்லது நான்கு பேர்களின்





அனுபவத்தில் கண்ட உண்மை என்னவென்றால் 3 நாள் பிரார்த்தனையில் உட்காரும் முன்பே அபூர்வமாக பலன் கிடைத்து விட்டது என்ற செய்தியாகும்.

உண்மையான அழைப்பின் குரலைக் கேட்டவுடன் ஆன்மா உடனே மேலே எழுகிறது. ஆன்மாவின் மீது தீவிர நம்பிக்கை வைத்து பிரார்த்தனை செய்தால் அதிக நாட்கள் உட்கார்ந்து பிரார்த்தனை செய்யும் வரை ஆன்மா பார்த்துக் கொண்டிருப்பது இல்லை. உடனடியாக பக்தனுக்குப் பலன் கிடைத்து விடுகிறது.

## 12. சிறிய கம்பெனியில் விற்பனை

வருடத்தில் 58 லட்சம் ரூபாய் வியாபாரம் நடக்கும் ஒரு கம்பெனியை நடத்தி வரும் நிர்வாகி ஒருவர் கம்பெனியை தரமான உயர்நிலைக்குக் கொண்டுவர கடுமையாக உழைத்து வந்தார். அவர் சுறுசுறுப்பும் ஊக்கமும் உடைய தொழில் நிறுவனர். கம்பெனியின் வளர்ச்சிக்கு எவ்விதமான வழி உகந்ததோ அதை தவறாமல் பின்பற்ற விரும்பினார். அவருடைய நண்பர்கள், ஆன்மா மீது நினைவை செலுத்தி பிரார்த்தனை செய்தால், ஆன்மா, வாழ்வில் ஐஸ்வரியம் கொண்டு வரும் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டார். இதற்கு முன்பு இப்படியொரு முறையைப் பற்றி அவர் கேள்விப்பட்டதில்லை. ஆனால் அதை எப்படிப் பின்பற்றுவது என்று தெரிந்தால் அதை ஏற்று செயல்பட விருப்பங்கொண்டார்.

மனதாலும் உடல் உழைப்பாலும் பெறும் பலனைவிட நாம் நினைத்ததை ஆன்மா மூலம் சாதிக்க முடியும் என்று ஆன்மாவை முழுமையாக நம்புவதே சிறந்த வழிமுறையாகும். ஆன்மீக முறைகளை நம்புகின்றவர்கள் உற்பத்தி சம்பந்தப்பட்ட எல்லா இடங்களிலும் இம்முறைகளை அமுல்படுத்துவதற்கு வழிவகைகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு ஆன்மீக முறைக்கும் பின்னால் விரிவான விளக்கங்கள் உள்ளன. இந்தக் கம்பெனியின் உரிமையாளருக்கு இவ்வான்மீக முறைகள் உண்மையானவையாகவும் அறிவிற்கு உகந்தவையாகவும் இருப்பதாக மனதில்பட்டதால் இவை எல்லாவற்றையும் பின்பற்ற முடிவு செய்தார். இந்த முறையைக் கையாண்டு, விற்பனையை 580 லட்சத்திற்கு உயர்த்த விரும்பி





இருக்கலாம். ஆனால் அது அவருக்கு பேராசை என்று தோன்றிற்று. எனவே தற்போதைய விற்பனையை இரண்டு வருடங்களில் இரண்டு மடங்காக அதிகரிக்க எண்ணினார். அதனுடைய பலன் ஒரு வருடத்திற்குள் அல்லது ஒன்றரை ஆண்டுக்குள்ளாக கிடைக்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினார்.

தன் இலட்சியத்தை ஆன்மாவிடம் சமர்ப்பணம் செய்து, டிசம்பர் மாதம் இறுதியில் ஒரு புதிய முயற்சியில் இறங்கினார். பொங்கல் தினத்தன்று எதிர்பாராதவிதமாக 90 லட்சத்திற்கு ஆர்டர் வந்தது. 20 மாதங்களில் தொடர்ந்து ஆர்டர்கள் வந்து குவிந்த வண்ணமாக இருந்தன. அது 9 கோடியை எட்டியது. இப்பொழுது வந்து குவிந்துள்ள ஆர்டர்களுக்கு ஏற்றபடி உற்பத்தியை அதிகரிப்பதே அவருடைய வேலை என்றாகிவிட்டது.

ஆன்மாவுக்கு சிறிய கம்பெனி பெரிய கம்பெனி என்ற பாகுபாடு கிடையாது. 40 கோடி வியாபாரம் உள்ள கம்பெனியிலும், 260 கோடி வியாபாரம் நடக்கும் கம்பெனியிலும் இதைக் காண முடிகிறது. ஆத்மாவின் அபரிமிதமான சக்தி கம்பெனிக்குள் வருவதை எக்காரணம் கொண்டும் தடை செய்யாத வரையிலும், அதனுடைய விரிவுபடுத்தும் அம்சம் குறையில்லாமல் செயல்படும்.

# 13. தெய்வத்தின் அருளைத் தாங்கி வருவது மழையின் ஸ்வரூபம்

நாம் கேட்காமலே இறைவன் அருள் இறங்கி வருகிறது. அருள் மழையாக இறங்குகிறது. மழை இன்றி எந்த ஜீவராசியும் உயிர் வாழ முடியாது. மழை நமக்கு பெரும் சேதத்தையும் ஆபத்தையும் கூட கொண்டு வருகிறது. நம் ஏற்புத்திறனைவிட அதிகமான அளவிற்கு மழை பெய்யும் பொழுது சேதம் விளைவிக்கிறது. நாம் அருளை நிபந்தனையற்ற உண்மையான நன்றி உணர்வோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். மழை பெய்யும் பொழுது நம் வேலைக்கு இடையூறு ஏற்படுவதால், நாம் மழையை நிந்திக்கிறோம். ஆண்டவனின் அருள் தண்ணீர் ரூபத்தில் மழையாக வருகிறது என்ற விழிப்புணர்வுடன் மக்கள் இருந்தால் மழை பொய்க்காது. இந்த ஆண்டு (2003) தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் மழையின் சராசரி அளவு குறைந்துவிட்டது. இந்தக் குறையை பருவகாலம் முடிவதற்குள் நிறைவு செய்து கொள்ள முடியுமா?

இவ்வாண்டு (2003) தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டது. இது முடிந்து போன விஷயம். தமிழ்நாடு, தனக்குரிய அளவிற்கு மழையை இந்த ஆண்டில் நிறைவு செய்து கொள்ள முடியுமா? இந்தியாவின் பிற பகுதிகள் மழையை குறைவாக பெற்றதை இந்தியா ஈடு செய்து கொள்ள முடியுமா? இரண்டுமே உடனடியாக நிகழக்கூடிய சாத்தியமாகும். மழை அல்லது தண்ணீரின் ஆன்மாவை அழைத்தால் தவறாமல் மழையைக் கொண்டு வரலாம். அதை யார் செய்வது? அதை எப்படி செய்வது?





ஆன்மாவை அழைக்கும் பொறுப்பை யாராவது ஏற்று அழைத்தால் அவரது உணர்ச்சிக்கு ஏற்ற வகையில் பதில் தருவது போல், மழை, நாடு, நகரம், ஊர் எல்லா இடத்திலும் பெய்யும்.

மழைக்காகப் பிரார்த்தனை செய்வது சுலபமான வழி. இதைவிட செயல் திறன் வாய்ந்தது என்னவென்றால் நாம் தண்ணீரை கவனத்துடன் உபயோகிப்பதில், பக்தி பூர்வமாக அக்கரை காட்டுவதாகும். தண்ணீரை எந்த விதமான முறையில் சேமித்து வைப்பதும் நாம் அதற்கு தெய்வீக கவனம் செலுத்துவதாகும். மழை வரும் பொழுது அதை நாம் வெறுக்காமல் இருப்பது நம்மிடம் இருக்க வேண்டிய முக்கிய கட்டுப்பாடாகும்.

பல வருடங்களுக்கு முன்பு ஒரு ஆன்மீகவாதி கர்நாடகத்தில் உள்ள ஒரு வறண்ட அணைக்கு தன்னுடன் பக்தர்களை அழைத்துக் கொண்டு போய் அங்கே உட்கார்ந்து பிரார்த்தனை செய்தார். நாத்திகர்கள் இது மூட நம்பிக்கை என்று ஆட்சேபித்து ஆர்பாட்டம் செய்தார்கள். அடுத்த மாதமே மழை வந்து அணை நிரம்பியது. நாத்திகர்கள் ஒரு பெரிய நம்பிக்கை வைத்திருப்பதாக சொல்லப்படுகிறது. அவர்களுடைய அந்த நம்பிக்கை மனித சமுதாயத்தின் நம்பிக்கைக்கு, மதிப்பு கொடுக்கிறது என்று சொல்லலாம். அப்படிப்பட்ட நோக்கம்கூட சொர்க்கத்திற்கு வழிவிடும். பிரைடல் கிரீபர் (Bridal Creeper) என்ற மலருண்டு. அந்த மலரின் ஆன்மீக முக்கியத்துவம் தண்ணீர் என்பதாகும். இந்த மலரை கடவுளுக்கு சமர்ப்பித்தால் மழையைக் கொண்டு வரும் சக்தி கொண்டது. இதுவொரு கொடியில் மணி வடிவில் வெள்ளை நிறத்தில் கொத்துக் கொத்தாக கீழிறங்கும் மலர்களைக் கொண்டது.

தண்ணீரை சேகரித்தல் மற்றும் தண்ணீருக்கு கவனம் செலுத்த வேண்டிய முறைகள்:

1. தண்ணீர் தாராளமாக அபரிமிதமான அளவில் கிடைக்கும் பொழுதும் அதை மிகச் சிக்கனமாக உபயோகிக்க வேண்டும்.
2. தண்ணீருக்கும் ஜீவன் உண்டு என்ற உணர்வு வேண்டும்.
3. மழை நீரை, ஏரி, குளம், குட்டை போன்ற நீர் நிலைகளில் நிரப்பிக் கொள்ள வேண்டும்.
4. நிலங்களில் தண்ணீர் கசிந்து வீணாகாமல் பயன்படுத்தும் பொழுது தண்ணீரின் உபயோகம் அதிகரிக்கிறது. இதற்கேற்ற முறைகளை பயன்படுத்த வேண்டும்.





# 14. அன்றாட வாழ்வில் ஆன்மீகம் என்பது என்ன?

ஆன்மீகம் தபஸ்விக்கும், வாழ்வு குடும்பத்தில் உள்ளவருக்கும் உரியது என்பது மரபு. நம்முடைய மரபு மதரீதியானது. முடி ஆட்சியில் அரசாளும் உரிமை அரச குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டது போல், ஒருவர், தான் ஆன்மாவில் அறிந்து ஸ்தாபித்ததை பல்லாயிரக் கணக்கானவர்கள் ஏற்றுக் கொள்வது மதமாகும். ஜனநாயகத்தில் ஒவ்வொருவருக்கும் ஆட்சிக்கு வரும் உரிமை இருப்பதுபோல ஒவ்வொருவரும் தன்னான்மாவை உணரும் உரிமையை கொடுப்பது ஆன்மீகம். மத வழிபாட்டை நடத்திக் கொண்டு தன்னைக் கடவுளின் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டு அதிகாரத்தனமாகவும் மக்கள் மத்தியில் நடுவராக இருப்பது போல் செயல்பட்டுக்கொண்டிருந்த பாதிரியாரை நீக்கவும், தனி மனிதனின் ஆன்மீக சுதந்திரத்திற்காகவும் வாதாடியவர் மார்ட்டின் லூதர். நம்மில் ஒவ்வொருவரும் துறவியாக முடியுமா? விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளை ஒவ்வொருவரும் அனுபவிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பம் இன்று வழி செய்துள்ளது. அம்மாதிரியே ஆன்மீகத்தின் பலன்களை அனைவரும் பெறும்படி செய்து கொள்ளலாம்.

சாதாரணமாக எந்த இடத்திலும் பொய்யும் மெய்யும் கலந்துதான் இருக்கும். அதில் மெய்யை தேர்ந்தெடுத்தல் ஆன்மீகமாகும். எந்த ஒரு வேலையும் உணர்ச்சித் துடிப்போடு ஆர்வத்துடன் செய்து, அதை ஒரு நேர்த்தியான வேலையாக முடிக்கலாம். அல்லது வேலையை சோம்பலுடன் சிரத்தை இல்லாமலும் செய்து முடிக்கலாம். இப்படிப்பட்ட வேலை

நேர்த்தியாக இருக்காது. முந்தையது ஆன்மீகம். அடுத்தது ஆன்மீகம் அல்ல. ஆன்மீகம், வாழ:வில் நேர்மை, விசுவாசம், ஒழுக்கம், நேர்த்தி, உண்மை, கடின உழைப்பு, சுறுசுறுப்பு என்ற பண்புகளாக வருகிறது. உழைப்பை வேலையில் அர்ப்பணித்தல், படிப்பில் புத்திசாலித்தனம், உண்மையான நட்பு, குடும்பத்தில் பொறுப்புடன் வேலையை கவனித்தல், பொருட்களை கவனத்துடன் கையாளுதல், மக்களிடத்தில் விழிப்புடனிருத்தல், போன்றவைகளால், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுதல், சுயமரியாதை, தனித்தன்மையை உயர்த்திக் கொள்ளுதல், போன்றத் திறமைகள் மனிதனுக்கு வருகிறது. அப்படிப்பட்டவர்கள் ஆன்மாவை அழைத்தால் ஆன்மா உடனடியாக செயல்படுகிறது.

ஆபிசில் முழு ஈடுபாடுடன் வேலை செய்பவர்கள் சக ஊழியர்களின் பொறாமைக்கு வெகுவாக ஆளாகிறார்கள். பக்தி என்பது ஆன்மீகம். ஆன்மீகத்தில் ஈடுபாடு உடையவர்கள் தங்கள் வாழ்வில் மற்றவர்களால் ஏற்படும் தொந்தரவுக்கு ஆளாகுவது அரிது. அவர்கள் அதிர்ஷ்டம் மிக்கவர்களாக இருக்கும் போதுதான் அவர்களது அதிர்ஷ்டத்தை தடுக்கும் வகையில் சக ஊழியர்கள் அவர்களுக்கு அதிக தொந்தரவு கொடுக்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட நிலையில் தொந்தரவுக்கு ஆளானவர்கள் ஆன்மாவை அழைத்தால் ஆன்மா உடனே செயல்படுகிறது. தொந்தரவு விலகுகிறது. இடர்பாடுகளைக் கடந்து வருவதால், அவர்கள் விதிவிலக்கின்றி தற்பொழுதுள்ள பதவியிலிருந்து மேல் பதவிக்கு உயர்த்தப்படுகிறார்கள். இவர்கள் இடையூறுகள் வாய்ப்புக்களாக மாறுவதைப் பார்க்கின்றார்கள்.





ஒரு காலத்தில் நம் வாழ்வில் எல்லோரும் அவர்கள் வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் ஆன்மீக நியதியின்படி அமைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு மதமும் கிருஸ்துவ மதமாயினும் அல்லது இஸ்லாமியமாயினும் சரி, தன் மதத்தின் அடிப்படைக் கொள்கையின்படி ஒரு கலாச்சாரத்தை ஏற்படுத்துவதில் ஈடுபடுகிறது. இந்தியாவின் சமய வாழ்வானது, சங்கரர், இராமானுஜர் போன்ற ஆன்மீகவாதிகளுக்கு கிடைத்த சித்திகளை அடிப்படையாகக் கொண்டது. இந்த மதங்களின் அடிப்படையான கருத்து கர்மம் என்பதாகும். நம்முடைய வாழ்க்கை முழுவதையும் உள்ளே இருக்கும் ஆன்மாவைப் பின்பற்றும் வழியில் அமைத்துக் கொள்வது ஆன்மீக வாழ்வாகும். குருவின் சித்தியை பின்பற்றும் வகையில் ஆன்மீக வாழ்வை அமைத்துக் கொள்ள முடியாது. நம் சொந்த முயற்சியால் ஆன்மாவை அழைப்பதின் மூலமாகவே ஆன்மீக வாழ்வை அடைய முடியும்.

நூறு வருடங்களுக்கு முன்பு இருந்ததைவிட இப்பொழுது உலகம் ஆன்மீகத்தை அதிகமாக ஏற்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். ஒவ்வொரு மனிதனுக்கும் ஊனமாக இருந்தாலும் கூட இன்று சமூகம் அவருக்கு வழங்கும் மரியாதை அவருடைய ஆன்மாவிற்கு வழங்கப்படுவதாகும். உடலைவிட மனிதனை ஆன்மா என்று அறிந்து கொள்வதால், சமூகமும் அரசாங்கமும் பலவீனமானவர்களின் வாழ்க்கையின் தரத்தைக் கூட உயர்த்துகிறது.

சமுதாயத்தில் தொன்று தொட்டு ஒரு பழக்கம் உண்டு. எந்தக் காரியமும் நடைபெறும் பொழுதும் இது முடியுமா? முடியாதா? என்று கேள்வியை எழுப்புவது அதன் பழக்கம்.

நாம் அப்படிக் கேள்வி எழுப்ப அவசியம் இல்லை. வாழ்வில் வெளிப்படும் ஆன்மா அறிவை விட சக்தி வாய்ந்தது என்றுத் தெரியும் பொழுது மனிதனால் சும்மா இருக்க முடியாது.

கடந்த முன்னூறு ஆண்டுகளில் வாழ்க்கை பல வழிகளில் வசதி, மகிழ்ச்சி, பாதுகாப்பு, போன்ற பல சௌகரியங்கள் பெற்று முன்னேறியுள்ளதை நாம் பார்க்கிறோம். அடுத்த முப்பது வருடங்களில் மனிதனின் வாழ்வில் புதிய சக்தி இறங்கி செயல்பட்டு, நினைக்கமுடியாத அளவிற்கு இன்னும் பல வழிகளில் அனேக சௌகரியங்கள் அடைவதற்கு மனிதன் பலப் படிகள் முன்னேறுவான் என்பது திண்ணம்.

- ♣ இந்தியா ஆன்மீகமும் ரிஷிகளும் வாழ்ந்த நாடு.
- ♣ வாழ்வில் சுபிட்சத்தைப் பெற இந்தியா எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது.
- ♣ ஆன்மீகத்தை மத சம்மந்தமான சடங்குகளில் எந்த அளவில் ஈடுபடுத்தப்படாமல் இருக்கின்றோமோ, அந்த அளவிற்கு மனிதன் சுபிட்சத்தைப் பெற்றுக் கொள்வான்.
- ♣ ஆன்மாவின் இருப்பிடம் உள்ளே உள்ளது. அது வெளியில் தெரியும் தோற்றமல்ல.





# 15. உலக அறிவு

உலக வங்கியின் முன்னாள் தலைவர் ராபர்ட் மக்நமாரா (Robert McNamara) ஒரு முறை ஹார்லன் கிளிவ்லேண்ட் (Harlan Cleveland) என்பவருடைய புத்தகத்தைப் படித்து விமர்சனம் செய்த பொழுது, உலகில் சிந்தனையாளர் இல்லை என்று குறை கூறிய பிரான்ஸ் நாட்டு பிரதமர், இந்த ஆசிரியரைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தார். பேராசிரியர் ஹார்லன் கிளிவ்லேண்ட் (Harlan Cleveland) 12 புத்தகங்களின் ஆசிரியர். அவர் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்புக்கான (NATO) அமெரிக்கத் தூதராக இருந்தவர். அவர் உலக உயர்க்கல்வி, கலை மற்றும் அறிவியல் கழகத்தின் தலைவராகவும், புகழ்பெற்ற கல்வியாளராகவும், சிறந்த நிர்வாகத் திறமை பெற்றவராகவும் விளங்கினார். இந்த பேராசிரியர் தான் எழுதிய ஒரு சிறு புத்தகத்தில் "**வாழ்வில் ஏழு வகை மோதல்கள்**" என்பதைப் பற்றி எழுதியதில், வாழ்வின் முக்கிய இரகசியங்களை ஐந்து வழிமுறைகளில் சுருக்கமாக விளக்கியுள்ளார். அதில் அவர், பயந்தவர்களுக்கு வாழ்வு இல்லை என்று கூறுகிறார். மேலும், வல்லுனர்களின் கருத்து முரண்பாடாக இருப்பினும் திட்டங்கள் நிறைவேறிவிடும் என்று உறுதியாகக் கூறுகிறார். வாழ்க்கையில் நம் பார்வைக்குத் தெரிந்ததைவிட நிறைய விஷயங்கள் உள்ளன என்கிறார். உண்மையில் வாழ்க்கையில் சாதித்தவர்கள் அனைவரும் அறிந்ததுபோல இப்புத்தகம் வாழ்க்கையின் சாராம்சத்தை உள்ளடக்கியதாகும்.

அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் 2000 வருடங்கள் சரித்திரத்தை இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளில் சுருக்கிக் கொண்ட அனுபவத்தைப் பெற்ற நாடு. அவ்வகையில்

அந்நாடு சமூகரீதியாக அளவுகடந்த கிரியேட்டிவ் எனர்ஜியை வெளிப்படுத்தியதோடன்றி செயல்திறன் மிக்க ஸ்தாபனங்களை உருவாக்கி கொள்வதிலும் பெயர் பெற்றுள்ளது. ஹார்லன் (Harlan) அவர்களுடைய கருத்துக்கள் யாவும் அமெரிக்காவின் நீண்ட கால உழைப்பின் சாரமாக பெற்ற அறிவாகும். இவ்வாறு மனிதன் உடலுழைப்பு என்ற தாழ்ந்த நிலையில் துவங்கி வாழ்க்கையின் ரகசியங்களை உணரும் நிலைக்கு வந்துள்ளான். எல்லா நாடுகளும் இப்படி வாழ்க்கைப் பற்றிய உண்மைகளை தெரிந்து வைத்திருக்கின்றன. ஆனால் அதே ஆரம்ப நிலையிலிருந்து வாழ்வைப் புரிந்து கொண்டுள்ளன என்று சொல்ல முடியாது.

இந்தியர்கள் நீண்ட காலத்திற்கு முன்பாகவே தங்களுடைய ஆத்மாவின் மூலம் ஆன்மீகத்தை உணர்ந்திருந்தார்கள். அவர்களுடைய பண்பாடும் சமூக அமைப்புகளும் திறமையுள்ளனவைகளாகவும் சக்தியுள்ளவை-களாகவும் இருந்தன. பழங்காலத்தில் இந்தியர்கள் சுபிட்சத்துடன் இருந்ததற்கு அதுவேதான் காரணம். உள்ளே இருக்கும் ஆன்மீகத்தின் அனுபவத்திலிருந்து சுபிட்சம் வந்தது. இன்று கூட நாம் கிராமம் அல்லது நகரங்களில் கூட சாதனை படைத்த வய முதிர்ந்தோர்களிடம் ஆன்மீக அறிவு இருப்பதைக் காணலாம். அமெரிக்காவின் வாழ்க்கை முறையைப் பற்றி மிகத் துல்லியமாக வெளிப்படுத்திய ஹார்லன் கிளிவ்லேண்ட் (Harlan Cleveland) அவர்களின், அறிவு பூர்வமான கருத்துக்கள், இந்தியாவில் பரவலாகவுள்ள எல்லா கிராமங்களிலும் காணப்படுகின்றன. இவர்கள் சொந்தமாக ஏற்பாடு செய்யும் எந்த வேலையும் குறையில்லாமல் இருக்கிறது. இவர்கள் அரசாங்கம் இறக்குமதி செய்துள்ள மற்ற ஸிஸ்டங்களின்படி செயல்பட முயற்சி செய்யும் பொழுது





செயல்திறன் குன்றிப் போகிறார்கள். இவ்வுண்மை யாருக்கும் தெரியாமலிருப்பது பரிதாபத்திற்குரிய விஷயமாகும். இன்னும் வருத்தப்பட வேண்டியது யாதெனில், இந்நாட்டின் பாரம்பரிய அறிவை பரம்பரைச் சொத்தாக பெற்றவர்கள் கூட அதைக் கருதுவதில்லை. ஏனெனில் இன்று வாழ்க்கை நகரத்தை நோக்கியிருக்கிறது.

ஒரு வகையில், ஐஸ்வரியத்தை அதிக அளவில் உடனடியாக பெறுவதற்கு உயர்ந்த கருவியாக இதை நாம் ஆன்மீகச் செல்வம் என்று அழைக்கலாம்.

இந்தியா விழித்தெழும் பட்சத்தில் அன்னிய நிர்வாக அமைப்பை சீர்தூக்கிப்பார்த்து அதை கைவிட்டு புதுமையை புகுத்தி புதியன படைத்தலாலும், உள்ளடங்கிய ஆற்றலை முழுமையாக வெளிக்குக் கொண்டு வருவதாலும் இந்த நாடு இடைநிலையைக் கடந்து உடனடியாக அதிக வருவாய் உடைய நாடுகளுடன், சேர்ந்து கொள்ள முடியும். இதை செயல்படுத்துவது திட்டமிடுவோரின் செயலாகும்.

இங்கு நான் எல்லோருக்கும், குறிப்பாக வாழ்வில் அடி எடுத்து வைக்கும் இளைஞர்களுக்கு எழுதுவது யாதெனில், அவர்கள் அவர்களுடைய மதிப்பு மிக்க பாரம்பரிய ஆன்மீகத்திற்கு ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டும் என்பதே - இதை நம்புவதற்கு நிரூபணம் வேண்டுமென்றால் சமூகத்தில், சமீபத்தில் சாதனை படைத்தவர் ஒருவரைப் பற்றி நினைத்துப் பார்க்கலாம். அப்பொழுது அங்கே மேனேஜ்மெண்ட் (Management) மேலோங்கியிருப்பதைக் காணலாம். இவர்கள் எல்லோரும் தம்முடைய இயற்கையான ஆன்மீகச் செயல்திறனை பயன்படுத்துகின்றவர்களாவார்கள். இருந்தாலும் இப்பலம் எங்கிருந்து வருகிறது என்பதை இவர்களில் ஒரு சிலரே அறிவார்கள்.

(1) ஒரு தொழிற்சாலையில் ஏற்படும் ஒரு பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக நான் ஆன்மாவை அழைக்க வேண்டுமென்று சொல்லுவதின் பொருள் என்னவென்றால், ஆன்மாவானது ஒரு இழை அளவில் வெளிப்பட்டு க்ஷண நேரத்தில் அற்புதத்தை நிகழ்த்துகிறது.

(2) பிரச்சனையென்று ஒன்று வந்து, அதை ஆன்மாவை அழைத்துத் தீர்வு காண்பதில், யாரேனும் ஒருவர் வெற்றி காண்கிறார் என்றால், மேற்கண்ட ஆன்மீக அறிவை பெற்றார் என்றால் மேலும் செயல்திறன் மிக்கவராக விளங்குவார்.





# 16. அனைத்து சக்தியும் ஆய பரம்பொருளும் சமய சடங்குகளின் சக்தியும்

துரைசாமி அய்யர் பெரும் நாட்டுப்பற்று உடையவராகத் திகழ்ந்தவர். அவர் தன் வக்கீல் தொழிலை துறந்துவிட்டு ஸ்ரீ அரவிந்தர் அடிகளில் அடைக்கலமாக வந்து சேர்ந்து அங்கேயே தங்கிவிட்டார். துரைசாமி அய்யர் ஒரு சமயம் தன் மகனுக்கு உபநயனம் செய்ய விரும்பிய பொழுது, ''ஸ்ரீ அரவிந்தர் காயத்திரி மந்திரம்'' ஸ்ரீ அரவிந்தரால் இயற்றப்பட்டது. அந்த மந்திரம் ஸ்ரீ அரவிந்தரின் சிஷ்யர்களுக்கும் பரிச்சயமாகிவிட்டது. 90 வயது தாண்டிய துரைசாமி அய்யரின் வீட்டை, ஒரு அமெரிக்கர் கடந்து போய்க் கொண்டிருந்த பொழுது, சாஸ்திரிகள் மந்திரம் ஓதிக் கொண்டிருந்த ஒலியைக் கேட்டார். அமெரிக்கர் இதைப் பற்றி விசாரித்த பொழுது அருகில் இருந்தவர், ஒருவர் மரணத்தருவாயில் இருக்கும் பொழுது வேதமந்திரங்கள் ஓதினால் அந்த ஆத்மா மோட்சத்திற்கு போக உதவும் என்று பதில் சொன்னார். கொஞ்ச நாள் கழித்து அந்த அமெரிக்கர் துரைசாமி அய்யர் கடற்கரையில் ஒரு இளம் பெண்ணின் கையைப் பிடித்துக் கொண்டு மிகவும் மெதுவாக நடந்து போவதைப் பார்த்தார். அந்த பெண் அவருக்கு பக்தியுடன் சேவை செய்து வந்தவள். வேத மந்திரம் ஓதுவதால் உயிர் போவதைத் தடுத்து மேலும் சிறிது காலத்திற்கு வாழ்வு நீடிக்கிறது.

ஒரு வைதீகப் பிராமணருடைய பண்ணை நிலத்தில், வைக்கோற் குவியல் தீப்பிடித்துக் கொண்ட பொழுது காற்று, அருகில் இருந்த வைக்கோற்போர் பக்கமாக பலமாக வீசிக்கொண்டிருந்தது. அந்த பிராமணர் ஒரு மந்திரத்தைச் சொல்ல ஆரம்பித்தவுடன் காற்று அதன் வேகத்தை வேறு திசையில் மாற்றிக் கொண்டது.

ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் மனிதன் தெரிந்து வைத்துள்ள மந்திரம் உண்டு. அப்படி 14,600 மந்திரங்கள் உள்ளன என்று சொல்லப்படுகிறது. பாம்புக்கடி போன்றதிலிருந்து தொலைந்து போன பொருளைக் கண்டுபிடிப்பது வரைக்கும் ஒவ்வொன்றிற்கும் ஒரு மந்திரத்தை, மரபு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறது. மந்திரத்தை உச்சரிக்க வேண்டிய முறையில் சரியாக உச்சரித்தால், அது சக்தி வாய்ந்ததாகவும் உடனடியாக பலன் அளிக்கவல்லதாகவும் இருக்கிறது. ஸ்ரீ இராமானுஜரின் குரு, ஒரு பெண்ணுக்கு கெட்ட ஆவி பிடித்திருந்ததை விரட்ட முடியாத பொழுது, ஸ்ரீ இராமானுஜர் தன் மந்திர சக்தியால் அப்பேயை விரட்டினார். யார் ஒருவர் பரிசுத்தராக இருந்து மந்திரத்தைச் சொல்லுகிறாரோ அவரிடமிருந்து மந்திர சக்தி வெளிப்படுகிறது.

மந்திரங்கள் மட்டும் சக்தி வாய்ந்தவை என்று அல்லாமல், சமயச் சடங்குகளிலும் அத்தகைய சக்தி முழுமையாக உள்ளது. ஒவ்வொரு மதமும் அத்தகைய கருத்துக்களை உச்சரிக்கும் சொற்கள் பெற்றுள்ளது.

ஒரு மனிதன், ஆபிசில் தற்கொலை செய்து கொண்டான். அந்த ஆபிஸ் பேய் நடமாட்டமுள்ள இடமாக ஆகிவிட்டது. சடங்குகள் செய்யும் அர்ச்சகர் வரவழைக்கப்பட்டு அங்கே சமய சடங்குகள் செய்த உடன் பேய் விலகிவிட்டது. அதன் பிறகு பேயின் நடமாட்டம் அங்கு இல்லை. ''இப்படிப்பட்ட மந்திரங்களால் நமக்கு என்ன பயன்'' என்று வேலைக்கு ஆவலுடன் காத்திருக்கும் இளைஞர் ஒருவர் கேட்கலாம். ''எனக்கு அந்த மந்திரம், வேலையில் சேருவதற்கு அட்மிஷன் வாங்கித் தருமா?'' என்று வேறொருவரும் சேர்ந்து கொண்டு கேட்கலாம்.





தற்கால நவீன இளைஞர்களின் பிரச்சனைகள் தீர்க்கக்கூடிய மந்திரங்கள் இருக்கின்றனவா, அல்லது சில பழைய மந்திரங்கள் அத்தகைய பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உதவுமா என்பது அல்ல என்னுடைய முக்கிய கருத்து. மந்திரம் என்பது என்ன? என்னுடைய பிரச்சனைகள் மற்றும் வாழ்வை சந்திப்பதற்கு அந்த சக்தியை நான் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம்?

ஆன்மாவை உணர்ந்தவரின் ஜீவனின் ஆழத்திலிருந்து எழும் வார்த்தைகள்தான் மந்திரம். யார் ஒருவர் தன்னுடைய ஆத்மாவை நம்புகிறாரோ அவர் நினைத்ததை பெறுவதற்கு அவர் அந்த மந்திரத்தை உபயோகிக்கலாம். நான் ஆன்மீகத்தைப் பற்றி பேசிக் கொண்டுவருவது எல்லாம் ஒருவருடைய அழைப்புக்கு ஆன்மா பலன் தரக்கூடியது பற்றித்தான். மற்றொருவர் எழுதி வைத்த மந்திரத்தை உபயோகிப்பது மதம் சம்மந்தமானது. தன்னுடைய ஆத்மாவைக் காண்பதே ஆன்மீகம்.

ஒரு இளம்பெண் தியான மையத்திற்கு பலருடன் வந்தாள். அவள் தியானத்தில் தன்னை மறந்ததால் உடன் வந்தவர்கள் தன்னைத் தனியே விட்டுவிட்டு போனதைக் கவனிக்கவில்லை. அந்த இரவு நேரத்தில் வீட்டுக்குப் போக வேண்டுமென்று நினைத்த பொழுது, தான் தனியே விடப்பட்ட நிலையில் பீதி அடைந்தாள். தன் ஆன்மாவை தீவிரமாக அழைத்தாள். தன்னை இழந்த நிலையில், கண்முன் ஒரு ஒளி தோன்றியது. பீதி மறைந்தது. அவள் தெருவில் நடந்து சென்ற பொழுது, பந்து போன்ற உருண்டையான வெள்ளொளியானது தங்கமயமான ஒளியாக நகர்ந்தது. அவள் வீடு போகும்வரை பாதுகாப்பாக உடன் வந்தது. அவள் வீட்டை அடைந்ததும், அந்த ஒளி மறைந்துவிட்டது.

# 17. ஒரு மரம் எழுப்பிய குரல்

சர்வம் பிரம்மம் என்பது பழைய கொள்கை. அது உண்மையானால் தீமை கூட பிரம்மம். ஏன் தீமை இருக்கிறது என்ற கேள்விக்கு பதில் இல்லை. அந்தக் கேள்விக்கு தத்துவரீதியாக விடை காண்பதும் வாழ்வில் அவ்விளக்கத்தை வெற்றிகரமாக வெளிப்படுத்துவதும் வாழ்க்கையின் அடுத்த புதிய கட்டத்திற்குப் போவதற்குச் சமமாகும். நாம் பிரம்மமானால் ஜடப்பொருளும் பிரம்மமாகும். பரம்பொருள் எல்லா ஜடப்பொருள்களிலும் விழிப்புற்ற ஜீவனாக மறைந்துள்ளது என்று உபநிஷதங்கள் கூறுகின்றன. ஜடமான கல்லில் பிரம்மத்தைக் காண்பதற்கு முன்னால் தாவரங்களில் பிரம்மத்தைக் காணலாம்.

ஆன்மீக ஞானம் உடையவர்கள், அடுத்து என்ன செய்ய வேண்டுமென்பதை, உள் இருக்கும் ஆன்மாவால் உணர்வார்கள். சிலர் ஆன்மாவின் குரலையே கேட்கிறார்கள். குழந்தைகள் தெய்வாம்சத்துடன் இருக்கிறார்கள். அவர்கள் யாதொரு கட்டுப்பாடின்றி உள்ளத்தில் தோன்றியதை மலர்ச்சியோடு சுதந்திரமாகப் பேசுவதை, ஆன்மீக ஞானம் பெற்றவர்கள், தமக்கு உள்ளே கேட்பதையே குழந்தைகள் பேசுவதாக அறிகிறார்கள்.

நாம் மரத்தை மரமாகக் கருதினால் அது மரமாகும். அதை பிரம்மமாகக் கருதாவிட்டால் அது பிரம்மமாகாது. மரத்தை பிரம்மமாகக் காண முடியுமா? சுத்தம் செய்யப்படாத, வெட்டி எடுக்கப்பட்ட உலோக தாதுப் பொருளை, தங்கமாக எடுப்பதற்கு வழிமுறை உண்டு. அதை பிரித்தெடுத்தல் என்று கூறுகிறோம். ஒவ்வொரு உயிருள்ளவற்றிலும், ஜடத்திலும் பிரம்மத்தைக் காண்பதற்கு வழிமுறை உண்டு. எதையும் பிரம்மமாகக்





கருதினால் அதில் நாம் பிரம்மத்தைக் காணலாம். சில சந்தர்ப்பங்களில் பிரம்மம் உள்ளிருந்து தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

முந்திரி, காட்டில் விளையும் பயிராக இருந்தது. இன்னும் பல இடங்களில் அதே நிலைதான் நீடிக்கிறது. முந்திரி, தரிசு நிலத்தில் பயிரிடப்படுகிறது. அது விவசாய நிலத்தில் பயிரிடப்படுவதில்லை. முந்திரி தோட்டங்களில், பொதுவாக மகசூல் எடுக்கும் காலம் தவிர, மற்ற நாட்களில் அதில் சரியாக கவனம் செலுத்தப்படுவதில்லை. முந்திரிக்கு சிறப்புக் கவனம் செலுத்தினால், அது அதிக லாபம் ஈட்டும் என்று ஒருவர் தன்னுடைய தீவிர ஆராய்ச்சியில் கண்டுபிடித்தார். முந்திரிக்கு உழவு செய்து, எருவிட்டு, நீர்ப்பாய்ச்சுவது விவசாய சரித்திரத்தில் கேள்விப்படாதது. மரங்களுக்குக்கூட இத்தகையச் சிறப்பு கவனம் செலுத்துவது கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாதது. மனோதத்துவ ரீதியாகக்கூட "கவனிப்பால் வெற்றி காண்பதைப் போல், வேறு எதிலும் காண முடியாது'' என்று உறுதிப்படக் கூறலாம். காட்டில் வேலை செய்பவர்கள் இதை உணர்ந்திருக்கிறார்கள். காட்டில் வாழ்க்கை நடத்தும் காட்டுவாசியின் வாழ்வு, அவன் நட்டு வளர்த்த மரங்களுடன் பின்னிப் பிணைந்திருக்கும். அவன் மரணத்தை அவன் வாழ்வில் நெருங்கிய தொடர்புடைய சில மரங்கள் அறிவிக்கும்.

1960ல் கேப்பர் குவாரி மலையின் மீது முந்திரித் தோட்டங்கள் அப்படிப்பட்ட சிறப்புக் கவனம் பெற்றன. காட்டில் வேலை செய்தவர் உழவும், நீரும், எருவும், உரமும் இட்டார். ஒரு நாள் அந்தத் தோட்டத்தின் மானேஜர் மரங்களின் நடுவே நடந்து போய்க் கொண்டிருந்த பொழுது, அவர் பெயரைச் சொல்லிக் கூப்பிடும் குரல் கேட்டது. அந்தக் குரல் தெளிவாக இருந்தது. எவரும் இல்லாததால் அவர் திடுக்கிட்டார். ஆனால்

அதை பொருட்படுத்தாமல் மேலே நடக்கலானார். மீண்டும் குரல் கேட்டது. அவர் சற்று நின்று பார்த்து குரல் வந்த திசையை நோக்கி நடந்தார். அங்கு எல்லா மரங்களுக்கும் உரம் இட்டு விட்டு, ஒரு மரத்தை மட்டும் உரமிடாமல் விட்டுவிட்டு போய்விட்டிருந்தார்கள். தன்னை மறந்து விட்டார்கள் என்பதை, மரம் குரலை எழுப்பி அழைத்ததாக உணர்ந்தார். அவர் அந்த மரத்திற்கு உடனடியாக உரம் இட ஏற்பாடு செய்தார்.

வேலையில் கவனம் செலுத்துவது ஆன்மீகம். தாவரங்களுக்கு கவனம் செலுத்துவதால் அவை தெய்வீகத்தை வெளிப்படுத்துகின்றன. தன்னுள் உள்ள பிரம்மத்தைக் கருதினால் பிரம்மம் வெளிப்படுகிறது. பொருள்களின் மீது தீவிர அக்கரை செலுத்தினால் அவை தன்னுள் உள்ள பிரம்மத்தை வெளிப்படுத்துகின்றன.





# 18. சூட்சுமப் பார்வை

ஆன்மா சூட்சும உலகில் உள்ளது. நாம் ஜடமான உலகில் இருக்கிறோம். நாம் சூட்சும உலகில் உள்ளே சென்று ஆன்மாவை அழைக்கும் பொழுது, ஆன்மா அதன் இடத்திலிருந்து இறங்கி வந்து ஜட உலகில் வெளிப்பட்டு செயல்பட்டு மறைந்து விடுகிறது. நாம் ஐம்புலன்களறிவுகள் பெற்றிருப்பதுபோல், ஆன்மாவுக்கும் பார்வை, கேட்டல், நுகர்தல், போன்ற சூட்சும அறிவு உண்டு.

இரண்டு நபர்கள், வீட்டில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த பொழுது, ஒருவர் தன்னுடைய நண்பர் ஒருவர் மதுரையிலிருந்து வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பஸ்சின் சப்தம் ரோடுக்கு ஒரு மைலுக்கு அப்பால் கேட்டது. அவர்கள் பஸ் நிற்கும் சப்தத்தைக் கேட்டார்கள். அடுத்தவருடைய நண்பர் மதுரையிலிருந்து வந்து, பஸ்சைவிட்டு ரோடில் இறங்கினார் என்று ஒருவர் மற்றவரிடம் சொன்னார். இதைக் கேட்டவர் ஒரு இன்ஜினியர். அவர் இதுபோன்ற விஷயங்களில் நம்பிக்கையில்லாதவர். அவர் அந்த நண்பரின் அசைக்க முடியாத மூட நம்பிக்கையை எள்ளி நகையாடி, வேடிக்கையாக வாய்விட்டு சிரித்தார். அடுத்த 15 நிமிடங்களில் மதுரை நண்பர் வந்துவிட்டார். இந்த விநோதத்தை கண்ட இன்ஜினியர் ஆர்வத்துடன் "நீங்கள் இதை எப்படி அறிந்து இப்பொழுது கூறினீர்கள்" என்று கேட்டார். அதற்கு அவர், அந்த நண்பர் பஸ்சை விட்டு இறங்கியதை சூட்சுமப் பார்வையால் பார்த்தேன் என்றார். இது, குறிப்பாக கிராமத்தில் அறியாதது அல்ல.

பரிட்சைக்கு இரவெல்லாம் கண்விழித்து படித்த மாணவன் களைத்துப் போய்விட்டான். அவன் பரிட்சை ஹாலில் தூங்கிவிடுவான் என்று பயந்து விட்டான். அப்படி அவன் தூங்கவில்லை. ஆனால் அவனுக்கு ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஒவ்வொரு கேள்விக்கும் பதில் எழுதும் பொழுது அவன் அகக் கண்முன்னால் புத்தகத்தின் பக்கம் திறந்து தெரிந்தது. அதை புத்தகத்திலிருந்தவாறே எழுதிவிட்டான். சூட்சுமம் வெளியில் தெரியாது. சூட்சுமம் அதிகரிக்கும் அளவிற்கு அந்நிலைக்கு சக்தி கூறுகிறது என்பது ஆன்மீக உண்மை. ஸ்விஸ்நாட்டு (Swiss) உலோகத் தொழிற்கலையியல் நிபுணர் (Metallurgist) அதிக உறுதி வாய்ந்த உலோகங்களைப் பற்றி கூறியது நமக்கு ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது. "உலோகப் பொருள் எவ்வளவு நுண்ணியதாக உள்ளதோ அவ்வளவுக்கும் அது எளிதில் உடையாதவாறு அதிக கெட்டியானது" என்றார். அவருடைய கருத்துப்படி கனமில்லாதது சூட்சுமம்.

ஒருபெண் தன்னுடைய சிறிய அறையில் ஆழ்ந்த தியானத்தில் இருந்தாள். அந்த அறை சிறியதானாலும் மாசற்ற தூய்மையுடையதாக விளங்கிற்று. அவள் அகர்பத்தி வாங்குவதற்குக் கூட சக்தியற்றவளாக ஏழ்மையில் இருந்தாள். ஒரு நண்பர் அந்த பெண்மணியின் வீட்டிற்கு வந்த பொழுது அந்த அறையில் நறுமணம் கமழ்ந்திருந்ததைப் பற்றிச் சொன்னார். இறைவனின் தூய்மையான சாந்நித்யம், அங்கே வத்தியின் சூட்சுமமான வாசனையைக் கொண்டுவந்தது.

மேற்க்கண்ட நிகழ்ச்சிகள் கேள்விப்படாதவையல்ல. அவை கேட்பதற்கு ஆச்சரியமாக இருக்கும். அது நம் வாழ்வில், வேலையில் என்ன பலன் கொடுக்கும்? சுவாமி விவேகானந்தர்,





பாரத மாதாவின் குழந்தைகள் அவள் காலடியில் இருந்த படிந்த நிலையில் இருந்ததைப் பார்த்தார். அவருடைய ஆன்மீக சக்தி, அந்த இருளை விலக்கி பரிசுத்தமானதாகவும் ஒளிபொருந்தியதுமாகவும் மாற்றியது. சில நேரங்களில் நாம் எந்த பக்கத்தைப் பார்க்க விரும்புகின்றோமோ அந்தப் பக்கத்தை புத்தகத்தில் திறப்போம். இது சூட்சும சக்திகள் நிலவுகின்றன என்பதைக் காட்டும் அறிகுறி. அங்கு சூட்சும சக்தி இருப்பதானால் அதை வளர்த்துக் கொள்ளலாம். அப்படி இல்லாவிடில் அதை வளர்த்துக்கொள்ள முனையலாம். மனம், ஒருவன் செய்யும் தவறுகளை உணர்ந்து திருத்திக் கொள்ளவும், அதிலிருந்து பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளவும் பலமுறை கடினமாக முயற்சிக்கிறது. சூட்சும அறிவு தவறுகளையும் உடலுழைப்பையும் தவிர்க்கிறது. எந்த வேலையையும் உள்ளே இருக்கும் ஆன்மாவுக்கு இடையறாது சமர்ப்பணம் செய்யும் பொழுது ஆன்மா பல வழிகளில் செயல்படுவது போல், சூட்சும அறிவின் மூலமாகவும் செயல்படுகிறது. சூட்சும அறிவில் கவனத்தை செலுத்தி அதை வளர்த்துக் கொள்ள முடியும். கலைஞர்கள், இயந்திரத் தொழிலாளர்கள், இசைப்பாடகர்கள், சமையல்காரர்கள், விற்பனையாளர்கள் சூட்சும அறிவில் கவனம் செலுத்தி, அதை வளர்த்துக் கொள்ள முடியும் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். சூட்சுமம் என்பது ஆன்மீகம். உயர்ந்த குறிப்பிடத்தக்க சூட்சுமப் பார்வையைப் பற்றி நான் அறிந்தது என்னவென்றால், அன்னை பக்தர் ஒருவர், நவம்பர் 17, 1973ல் கண்ட சூட்சுமப் பார்வை பற்றியதாகும். அவர் பாண்டிச்சேரியிலிருந்து 10 மைலுக்கு அப்பாலுள்ள ஒரு ஊரில் தன்னுடைய வீட்டிலிருந்து வெளியே வந்த பொழுது, வானத்தில் ஒரு பெரிய பந்து போன்ற ஒரு ஒளியைக் கண்டார். அது உடனடியாக உடைந்து லட்சக்கணக்கான துகள்களாகச்

சிதறி, ஒவ்வொரு துகளும் ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திற்குள் சென்று புகுந்தது. அந்த அன்பர், அவர் அக்காட்சியில் கண்ட அதே நேரத்தில், தெய்வீக அன்னை சமாதி அடைந்தார் என்ற செய்தியை அடுத்தநாள் காலையில் ரேடியோவில் கேட்டார். மற்றொரு நிகழ்ச்சியில், பக்தர்களும் மற்றவர்களும் கூட ஸ்ரீரமண மகரிஷி சித்தி அடைந்த பொழுது, வானத்தில் பெரிய ஒளி ஒன்று போய்க் கொண்டிருந்ததைக் கண்டார்கள். ஆந்திராவில்கூட மக்கள் அதைப் பார்த்தார்கள். சூட்சுமப் புலனறிவுகள் ஆன்மீகமாதலால், அவற்றை நம் வாழ்வில் வளம் சேர்க்க, மேன்மேலும் வளர்த்துக் கொள்ளலாம். எல்லா சூட்சுமமும் நிச்சயமாக ஆன்மீகமில்லை. ஆன்மீகமல்லாத உணர்வு மையத்தினுடைய சூட்சுமம் என்பது நன்கு அறியப்பட்டதாகும்.





# 19. ஆன்மா என்பது முழுமையான உண்மை

மேதாவித்தனம் என்பது ஒரு சதவீதம் உள்ளெழுச்சியும் மீதம் 99 சதவீதம் உழைப்பும் கலந்தது என்று சொல்லப்படுகிறது. இதற்குப் பின்னால் எல்லா நெறிமுறைகளுக்கும் பொருந்தும்படியான ஒரு மறைமுக உண்மை ஒரு நிகழ்ச்சி அல்லது மனிதனுக்கு பின்னாலிருக்கும் அடிப்படை உண்மைதான் அதனுடைய ஆன்மீக சாரமாகும். வாழ்வில் ஆயிரமாயிரம் சக்தியின் வெளிப்பாடுகள் உள்ளன. அவற்றை நம் வாழ்வு சந்திக்க வைக்கிறது. ஒவ்வொரு வினாடியும் உண்மையை அதற்குண்டான பாணியில் வெளிப்படுத்துகிறது. எந்த ஒரு பேரம் பேசுதலிலும் அந்த நேரம் நமக்கு சாதகமாகவுள்ளதை நாம் பயன்படுத்தக் கூடாது. அதே சமயம் நம்மிடமிருக்கும் பிடியையும் விட்டுத்தர முன்வரவேண்டும். அந்த மரபு, வேதகாலத்து ரிஷி சத்தியகாமாவின் வழியாக, நாம் பரம்பரையாகப் பெற்ற மரபாகும். சத்தியகாமா தன் குருவிடத்தில், தன்னுடைய தாய் பல வீடுகளில் பணிப் பெண்ணாக இருந்ததால் தன்னுடைய தகப்பனார் யார் என்று தாய்க்குத் தெரியவில்லை என்று உண்மையைக் கூறினார்.

வெற்றிகரமாக தொழில் நடத்திக் கொண்டிருந்த ஒரு சிறு தொழிலதிபர், ஆன்மா மீது நாட்டங்கொண்டவராய், ஆன்மா மீதான எண்ணத்தில் அடிக்கடி ஆர்வம் மேலிட்டவராய் இருந்தார். ஒருமுறை அவருடைய நிறுவனத்தில் மூன்று பிரிவுகளில் திடீரென்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அவருடைய தொழில் அனுபவத்தில் முதன் முறையாக ஏற்பட்ட வேலை நிறுத்தமானதால், அதிர்ச்சி அடைந்தார். அதிலிருந்து அவர் மீள்வதற்கு சில நாட்கள் பிடித்தன. ஆன்மா பற்றிய நினைவு அவர் மனத்தில்

தோன்றியது. ஆனால் மேற்கொண்டு எப்படி செயல்பட வேண்டுமென்று தெரியவில்லை. தன்னைப் போன்ற தொழிலதிபர்களில் ஒருவருடன், இதைப்பற்றி உரையாடிக் கொண்டிருந்தபொழுது அந்த நண்பர் அவரிடம், மையத்திற்கு தந்தி அனுப்பலாம் என்பதை நினைவுபடுத்தினார். தந்தி அனுப்பியதில் அவர் மனதிற்கு அது நிம்மதியைக் கொண்டு வந்தது.

வேலை நிறுத்தம் பிரச்சனையில் தீர்வு காண்பது, பிரதான வேலையாக இருந்தது. இந்த இக்கட்டான நிலையில் அவர் மனதில், ஆன்மாவின் நினைவு வந்தால், அவ்வாறே ஆன்மாவை அழைப்பது தகுதியான வழி என்று எண்ணி, அதன்படி நடக்க மனதில் உறுதி கொண்டார். அப்பொழுது அவருக்கு ஒரு செய்தி வந்தது. வேலை நிறுத்தத்தின் தலைவன் கைக்கடிகாரம் திருடியதற்காக சிறையில் அடைக்கப்பட்டான் என்றும், ஸ்தாபனத்தின் தலைவர் அவனுக்கு ஜாமீன் கொடுத்தால் அது போலீஸ் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்படும் என்று செய்தி வந்தது. ஆபிசில் இருந்த அனைவரும் இதுதான் நல்ல சந்தர்ப்பம், இதை பயன்படுத்தி அவனை, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுமாறு வற்புறுத்தலாம் என்று கூறினார்கள். ஸ்தாபனத் தலைவர் அதற்கு மறுத்துவிட்டார். மற்றவருடைய பலவீனத்தை பயன்படுத்தி ஆதாயம் அடையக்கூடாது என்று, சிறையில் இருந்தவனுக்கு நிபந்தனையற்ற ஜாமீன் கொடுத்தார். அவருடைய குடும்பத்தினரும் நண்பர்களும், அவர் ஏதோ மாயத் தோற்றத்தின் அடிப்படையில், மிகவும் விவேகமற்ற முறையில் நடந்து கொண்டார் என்று நினைத்தார்கள்.





வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தலைவன், அடுத்த நாள் தன்னுடன் வேலை பார்க்கும் பத்து தொழிலாளர்களை அழைத்துக் கொண்டு வந்தான். அவர்கள் எல்லோரும் வேலையை ராஜினாமா செய்வதாகவும், கம்பெனியை விட்டுப் போய்விடுவதாகவும் கூறினார்கள். அவர்கள், அவர்களுடைய ராஜினாமா கடிதங்களையும் அது சம்மந்தமான எல்லா கடிதங்களையும் தயார் செய்யும்படிக் கேட்டுக் கொண்டார்கள். அன்று மாலையில் அவர்கள் எல்லோரும் ராஜினாமா கடிதங்களில் கையெழுத்து போட்டு விட்டார்கள். அத்துடன் வேலை நிறுத்தம் பிரச்சனையும் முடிவுற்றது.

# 20. ஆன்மாவும் சத்தியமும்

ஆன்மாவுக்கு அடிப்படையில் 12 அம்சங்கள் உள்ளன. அவற்றில் சத்தியம் என்பது ஒன்று. மற்ற அம்சங்கள் ஐக்கியம், நன்மை, ஞானம், தெய்வீக அன்பு மற்றும் இதரவைகளாகும். இதில் ஏதாவது ஒரு அம்சம், நம் வாழ்வில் ஆன்மாவுக்கும் மற்றும் அதனுடைய சக்தியைப் பெறுவதற்கும் வழிகோலுகிறது. இதில் சத்தியம் அதிக சக்தி வாய்ந்தது. வேலை நிறுத்தம், சச்சரவுக்குரிய சூழல் போன்றவைகளில் சாதாரணமாக மனித சுபாவம், மற்றவருடைய பலவீனத்தைத் தனக்கு முழுமையாக சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது. இப்படி செய்வது நம் வலிமைக்கு உண்டான பலனைத்தருகிறது. சிறு தொழிலதிபர் ஒருவரால் எப்படி, ஆன்மாவை அழைத்து, வேலை நிறுத்தத் தலைவர்களிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது? அந்த தலைவர்கள் முதலாளியைப் போல் தாங்களும் ஆன்மாவை அழைக்கும் முறையைப் பின்பற்றி இருந்திருக்கும் பட்சத்தில், முதலாளியின் போக்கும் அவர்களுக்கு சாதகமான முறையில் மாற்றமடைந்திருக்கும்.

ஒரு தொழிற்சாலையில் 50 பேர்கள் வேலை செய்து கொண்டிருந்த பிரிவை நீக்கிவிட்டார்கள். அந்தப் பிரிவில் வேலை செய்து கொண்டிருந்த அத்தனை பேரும் ஒருவரைத் தவிர கம்பெனியின் உண்மையான நிலையை உணர்ந்து ஏற்றுக் கொண்டார்கள். ஒருவர் மட்டும் தன் உள்ளே இருக்கும் ஆன்மாவின் உதவியை நாடினார். அவர் ஒரு தொழில் நுட்ப வல்லுனராக இருந்ததால், அவரைமட்டும் எடுத்துக் கொண்டு, புதியதாக ஏற்படுத்திய பிரிவின் தலைமைப் பதவிக்கு அமர்த்திக் கொண்டார்கள். உள்ளே இருக்கும் ஆன்மா





உண்மையானது. அதனுடைய சக்திகள் தடுக்க முடியாதது. மனித சுபாவம் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொள்ளும் தன்மையுடையது. போர்க்களத்தில் நிராயுதபாணியாக நின்ற இராவணனை அன்று, வீடு திரும்பிப் போய் மறுநாள் வரும்படி கூறிய இராமனுடைய செயல் தற்காலிக ஆதாயத்தை பயன்படுத்தாத ஆன்மீக தாராளத்தைக் காட்டுகிறது. அது ஆன்மாவின் சக்தியை வெளிப்படுத்தி சூழ்நிலையை மனநிலை ரீதியாக மாற்றுகிறது.

**ஆன்மா விரைந்து செயல்படும் அறிகுறிகள் இவை:**

1. நாம் பிறருடைய கண்ணோட்டத்தில் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்,
2. நாம் பிறரால் புண்பட்ட பொழுதும் எதிர் செயல் இன்றி செயல்படும் பொழுது,
3. நம்முடைய சொந்த நலனைவிட பெரிய லட்சியத்தை கருதும் பொழுது,
4. நாம் மனத்தின் உள்ளே சென்று அமைதி, அல்லது மௌனம் அல்லது சாந்தியை விழையும் பொழுது,
5. அறிவீனமான ஒருவர் நமக்குத் தீங்கு இழைத்த பொழுதும் அவர் மீது கருணை காட்டுவது,
6. நம்முடைய சொந்த நலனுக்காக ஒரு வார்த்தை பொய் சொல்ல மறுப்பது,
7. தன்னுடைய கட்சியின் ஆதாயத்தைவிட, நம் ஸ்தாபனத்தின் உயர்ந்த நன்மையைக் கருதி ஸ்தாபனத்தின் பக்கம் நிற்பது,
8. நாம் மனித நிலைப்பாட்டிலிருந்து விலகி உயர்ந்த ஜீவியமடங்கிய இறை இலட்சியத்தை ஆதரிக்கும் நேரங்களில் ஆன்மா விரைந்து செயல்படுவது கண்கூடு.

ஆன்மாவின் 12 அம்சங்கள். *(1)* அனந்தம், *(2)* நித்தியத்துவம், *(3)* மௌனம், *(4)* சாந்தி, *(5)* ஐக்கியம், *(6)* சத்தியம், *(7)* ஞானம், *(8)* சக்தி, *(9)* தெய்வீக அன்பு *(10)* அழகு, *(11)* சந்தோஷம், *(12)* தூய்மை. இதில் ஏதாவது ஒன்றின் மீது ஓரளவு உயர்ந்த நம்பிக்கை வைத்து, நாம் ஆன்மாவை அழைப்பது, கடவுளுக்கு விடுக்கும் அழைப்பாகும்.

வாழ்வில் அளவு கடந்து இலஞ்சம் பரவியிருந்தாலும் ஆன்மா மீது நம்பிக்கை வைப்பவருக்கு நாலுபேர் போல் நடக்கும் அவசியத்தை ஆன்மா ஒருபோதும் தராது.





# 21. எரி நட்சத்திரம்

எரி நட்சத்திரம் என்று நாம் சொல்வது சில சமயம் வானில் தோன்றி சில வினாடிகளில் மறைந்து விடும். ஐரோப்பாவில் எரி நட்சத்திரம் விழுவது நல்ல சகுனம் என்ற ஒரு நம்பிக்கை நிலவி வருகிறது. எரி நட்சத்திரத்தைப் பார்க்கும் ஒருவர், அது மறைவதற்குள் மனத்தில் ஒரு விருப்பத்தைக் கொண்டு வந்து தெளிவாக உணர்ந்தால், அந்த விருப்பம் ஒரு வருட காலத்திற்குள் நிறைவேறும் என்று, ஒரு பரவலான நம்பிக்கை உண்டு. ஒருவர் தம் மனத்தில் உள்ள கருத்தை அந்த சில வினாடிகளில் தெளிவாக நினைவில் கொண்டுவர வேண்டுமெனில், அந்த விருப்பமானது ஜீவியத்தில் எப்பொழுதும் நினைவில் இருக்க வேண்டும். அப்படி அந்த நினைவு ஜீவியத்தில் இருப்பதால், அது உரிய நேரத்தில் தெளிவாகத் தோன்றி அவ்விருப்பம் நிறைவேறியது என்று, நாம் பொதுவாக அறிந்துள்ளோம். இந்த அனுபவ அறிவும் அதற்குப் பின்னால் உள்ள ஆன்மீக உண்மையும் வாழ்வின் பிரச்சனையை தீர்க்கும் ஒரு வழி என்று, உணர்ந்து அந்த முறையை ஆன்மாவை அழைப்பதில் ஈடுபடுத்தினால், வாழ்வின் பிரச்சனைகள் நிச்சயமாகத் தீர்க்கப்படும். எந்த ஒரு பிரச்சனையையும் தீர்த்துக் கொள்வதில் ஒருவர் முயற்சி செய்யும் பொழுது, அப்பிரச்சனையை ஜீவியத்தின் மேல்நிலைக்கு கொண்டுவர முயற்சிக்கலாம். ஆன்மாவை மணிக்கு ஒரு முறை அதே குறிப்பிட்ட நேரத்தில் நினைவு கூர்ந்தால், பிரச்சனை விலகும். அப்படி செய்வதற்கு அந்த நினைவு எந்த நேரமும் மனதில் இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

ஒரு காசநோயாளி வசதி படைத்தவராக இருந்தார். என்றாலும், அவர் உத்தியோகம் வகித்து வந்தார். அவர் நோய் வாய்ப்பட்டிருந்ததால் திருமணம் ஆகாமல் இருந்தார். அவருடைய வியாதியின் கொடுமை, மாதம் ஒருமுறை வாந்தி எடுக்கும் நிலைக்குக் கொண்டு போயிற்று. நீடித்த சிகிச்சை பெற்ற காரணத்தினால், மாதம் ஒருமுறை வாந்தி எடுப்பது குறைந்து, அந்த மோசமான நிலையின் கால இடைவெளி அதிகரித்தது. நோய் குணமாவதற்கு வழிபாடு ஸ்தலத்தில் தஞ்சம் அடைந்தார். அதில் அவருக்கு ஓரளவுக்கு பரிகாரம் கிடைத்தாலும், நோய் பூரணமாக குணமடையவில்லை. அவரால் அதிகபட்சம் 30 அல்லது 50 கெஜ தூரம் தான் நடக்க முடிந்தது. அவருக்கு, ஓடுபவர்கள் அரிய காட்சியாக தெரிந்தார்கள்.

நோய் நிரந்தர குணம் அடைய அவருடைய ஆன்மாவை அழைப்பதில் தான் தீர்வு உள்ளது என்று, அவருக்கு ஒருவர் யோசனை கூறினார். ஆன்மாவை அழைக்கும் முறையை சொல்பவரைக் காண ஒரு மைல் தூரத்திற்கு, ரிக்ஷாவில் ஏறிச்சென்று பார்த்தார். அந்த புதிய முறையைப் பற்றி அவர் கேட்டுக்கொண்டிருந்த பொழுது, அவருக்கு புதிய தெம்பு வந்ததை உணர்ந்தார். நோயாளி, ஆன்மாவை அழைத்து பிரச்சினையை மணிக்கு ஒரு முறை நினைவிற்குக் கொண்டு வந்து உள் இருக்கும் ஆன்மாவை அழைக்கும் முறையை ஏற்றுக் கொண்டார். அவர் அறையிலிருந்து வெளியில் வந்ததும், தன்னால் நடக்க முடியும் என்ற உணர்வு பெற்றார். ரிக்ஷாவை நோக்கி நடக்கலானார். இந்த புதிய முறையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பாகவே, ரிக்ஷாவைப் பின் தொடர்ந்து, ஒரு மைலுக்கும் அதிக தூரத்திலுள்ள, அவருடைய இருப்பிடத்திற்கு நடந்தே திரும்பிச் சென்றார்.





அவர் சரியாக ஒவ்வொரு மணி நேர இடைவெளியில், ஆன்மாவை 24 மணி நேரமும் தவறாமல் அழைத்த பிறகு, இந்த ஒரு அபூர்வ அருஞ்செயலினால் உடனடியாக ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பற்றி, தெரிவிப்பதற்காக, மறுநாள் அவ்வளவு தூரமும் நடந்தே சென்றார். மதக் கோட்பாடு மரபுப்படி, இயல்பாக படிந்துள்ள சுபாவம் மாற்ற முடியாதது என்று சொல்லப்படுகிறது. ஒரு மரபு, யோகப் பயிற்சியின் மூலம் 35 வருடங்களில் சுபாவத்தை மாற்ற முடியும் என்று கூறுகிறது. பிரெஞ்ச்சு பெண் ஓவியக் கலைஞர் ஒருவர், தன்னுடைய ஓவிய அறையிலிருந்து வெளியில் வரும் பொழுது எரி நட்சத்திரத்தைப் பார்த்தார். பார்த்த மாத்திரத்தில் தன் சுபாவம் முழுவதும் மாற வேண்டுமென்ற தன் மனதிலுள்ள கருத்தை, அந்த சில வினாடிகளில் தெளிவாகக் கொண்டு வந்து நினைத்தார். அப்படியே ஒரு வருடத்தில் அவருடைய சுபாவம் மாறிவிட்டது.

# 22. பேச்சு இழந்தபின் இழந்ததை நம்பிக்கை உயிர்ப்பித்தது

உடல்நலக் கோளாறினால் பேசும் உறுப்பு பாதிக்கப்படும்பொழுது பேச்சு வருவதில்லை. உடற்கோளாறினால் புலன்கள் பாதிக்கப்பட்டு பேச்சு இழப்பு ஏற்படும்பொழுது மருத்துவ சிகிச்சை பலனளிக்கும். மனநிலை பாதிப்பால் ஏற்படும் பேச்சு இழப்புக்கு உடல் மருத்துவ சிகிச்சை பலனளிக்காது. அது மேலும் கடினமாக்குகிறது. இதற்கு மனோதத்துவ முறையில் சிகிச்சை அளித்தால்தான் குணமடைய முடியும். ஆன்மாவை அழைக்கும் பொழுது உடலாகிய ஜீவனின் எந்தப் பகுதியிலும் விழிப்பு இருந்தால் ஆன்மா செயல்படுகிறது.

19 வயது சிறுவன் பேச்சு இழந்துவிட்டான். அவன் எப்பொழுதும் அதிகமாக பேசாதவனாக இருந்ததால் வீட்டில் உள்ளவர்கள், அந்த சிறுவன் பேச்சு இழந்ததை சில நாட்கள் கவனிக்கவில்லை. அவனுக்கு பேச்சு திரும்பிவிடும் என்ற நம்பிக்கையில் அவனை மருத்துவமனையில் சேர்த்தார்கள். பையனின் குடும்பத்தினர் இந்த நோய்க்கு சிகிச்சை கிடையாது என்று, பிறகு மெல்ல தெரிந்து கொண்டார்கள். அவர்களுக்கு ஒரே ஒரு ஆறுதல் என்னவென்றால், கடவுளுக்கு பிரார்த்தனை செய்வதுதான். வீட்டிலுள்ள பெரும்பாலோரும் பிரார்த்தனை செய்தார்கள். பையனுடைய நிலையில் எந்த மாற்றமும் இல்லை. பிரார்த்தனையிலிருந்து, உள்ளேயும் மனதில் அமைதியும் கிடைக்கவில்லை.

சிறுவனுடைய சகோதரர் பஸ்சில் பிரயாணம் செய்த பொழுது தனக்கு பழக்கமான ஒருவரைச் சந்தித்தார்.





அவரிடமிருந்து ஆன்மாவை அழைப்பது பற்றிய செய்தியை கேள்விப்பட்டார். பையன் பேசமுடியாவிட்டாலும் காது கேட்க முடிந்ததால், அவர் தான் கேள்விப்பட்ட விஷயத்தை பையனிடம் தெரிவித்தார். பையனுடைய சகோதரரும் கூட ஆன்மாவை அழைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இது ஒரு புதுமாதிரியான முயற்சியாக இருந்ததால் யாராலும் இதை சரியான முறையில் பின்பற்ற முடியவில்லை. முதல்நாள் பலரும் தெளிவற்ற முறையில் முயற்சித்தப் பிறகு, பத்து நாட்கள் அனுபவித்த துன்பத்திற்குப் பிறகு, சிறுவன் ஒருவார்த்தை பேசினான்.

இது அவர்களுக்கு பெருமளவில் உற்சாகமாக இருந்தது. ஒவ்வொருவரும் தங்களுடைய முயற்சிகளை அதிகப் படுத்தினார்கள். அது முழு திருப்தி அளிக்காவிட்டாலும், செய்யக்கூடிய சாத்தியமான முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டார்கள். ஆன்மாவை அழைப்பது ஆன்மீகமுறை. அதற்கு மரபு பலவிதமான ஆன்மீக வழிமுறைகளைக் கொண்டுள்ளது. இதில் முக்கியமாக புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், ஆன்மா இருக்கிறது என்பதையும், அதற்கு சக்தி உள்ளது என்றும் அதை செயல்பட வைக்க ஆன்மாவை மன உறுதியுடன் அழைக்க வேண்டுமென்றும் புரிந்து கொள்ள வேண்டும். அறிவு தன்னுடைய இயலாமையை உணர்ந்து அமைதியடையும் பொழுது ஆன்மா செயல்படத் தூண்டப்படுகிறது. அது சில வினாடிகள் மேலே வெளிப்படுகிறது. ஒரு பிரச்சனையை தீர்த்துக் கொள்ள இது போதுமானது. யோக வாழ்க்கைக்கு, ஆன்மா எப்பொழுதும் மேல் மனத்தில் இருக்க வேண்டியது அவசியமாகுகிறது. வீட்டில் உள்ள அனைவரும் விடா முயற்சியுடன் படிப்படியான முறையில் கடின முயற்சிகளை மேற்கொண்ட பிறகு, மறுநாள் பையனுக்கு முழுபேச்சும் திரும்பிற்று.

நம்பிக்கை என்பது ஆன்மாவின் அறிவாக வர்ணிக்கப்படுகிறது. மனிதனின் அறிவிற்கு போதிய ஞானமில்லை என்றாலும், ஆன்மாவிற்கு அந்த ஞானமுண்டு என்று நம்மறிவிற்கு தெரியும் பொழுது வேலை கூடிவரும் என்று புரிந்து கொள்கிறது. ஆன்மாவின் ஞானம் நம்மறிவிற்கும் வந்தால் நம்மறிவே மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறுகிறது. பூரண யோகத்தில் நம்முடைய உணர்விலிருந்து பிறக்கும் சக்தி ‘‘பிராணன்’’ என்று அறியப்படுகிறது. ஒருவருடைய உணர்வு ஆன்மீக அறிவை பெறும் பொழுது, அவர் வாழ்வில் தோல்விகளைக் காணாத வெற்றிகளை உடையவராகவும், அதிர்ஷ்டக்காரராகவும் இருக்கிறார்.





# 23. மௌன சக்தி, பாகம் - I

அமெரிக்கன் மேனேஜ்மெண்ட் அசோசியேஷன் துணைத்தலைவருக்கு (Vice President of the American Management Association) தன்னுடைய ஆறாம் வயதில் புத்தகம் எழுத வேண்டுமென்ற எழுந்த பேரார்வம் அவரது 55வது வயதில் பூர்த்தியாயிற்று. புத்தகம் எழுதுவதற்கு ஏராளமான விபரங்கள் தேவைப்பட்டதால் சியர்ஸ் அண்டு கம்பெனிக்கு நேரில் சென்றார். அந்த கம்பெனியில் எல்லா நிலையில் உள்ளவர்களிடமும் தலைவரிலிருந்து ஆரம்பித்து கடைசி சிப்பந்திவரை ஒரு 12 பேரை நேரில் விசாரணை செய்ய வேண்டுமென்பது இவரது திட்டம். எழுத்தாளர்களின் அத்தகைய முயற்சிகள் கம்பெனிக்கு எரிச்சல் ஊட்டுவதாகும். ஏன் கம்பெனி தமக்கு நேரில் விசாரிக்க அனுமதி வழங்க வேண்டுமென்பதற்கான அனேக கருத்துக்களைத் தயார் செய்து கொண்டார். ஆசிரியர், தம் புத்தகத்தைப் பற்றியும், அதனால் இந்தக் கம்பெனிக்கு என்ன பலன் இருக்கும் என்றும் விளக்க எண்ணினார். அவர் வைத்திருந்த விளக்கங்களுள், (1) சியர்ஸ் கம்பெனி சுடர்விட்டு பிரகாசிக்கும் கலங்கரை விளக்கமாக திகழ்கிறது என்று புத்தகத்தில் அறிமுகப்படுத்தி எழுதப்படும், (2) அவருடைய ஆராய்ச்சி அந்த நிறுவனத்தின் ஆற்றலை தெரியப்படுத்தும் வகையில் அமையும், (3) நிர்வாகம் அதனுடைய வேலையின் திறனை எப்படி அதிகப்படுத்துவது என்று தெரிந்து கொள்ளும் வகையில் அவர் புத்தகம் உதவும் என்பது, (4) கம்பெனியின் நிர்வாக இயக்குனர்கள் கம்பெனியின் வளர்ச்சிக்கு புதிய கருத்துக்கள் தெரிந்து கொள்வதற்கும், மற்றும் இதர ஆறு கருத்துக்களைப் பற்றியும்

தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாகும் என்பது. ஆசிரியர் ஒவ்வொரு கருத்துக்கும் தகுந்த காரணங்களுடன் திட்டவட்டமான விளக்கங்களுடன் விவாதிப்பதற்கு, தம்முள் பொதிந்து கிடக்கும் கருத்துக்களை மனதில் பதிய வைத்துக் கொண்டார்.

ஆசிரியர், கம்பெனியின் மக்கள் தொடர்பு அதிகாரியை (PRO) நேரில் போய் பார்த்த பொழுது, அவர் அமைதியுடன் காணப்பட்டார். ஆசிரியருக்கும் அக்கம்பெனியின் 30,000 கோடி டாலர் வியாபாரத்தை நினைத்து பார்த்த பொழுது உற்சாகம் குறைந்தது. தன்னைப் போன்று எண்ணற்ற நபர்களை (PRO) சந்தித்திருப்பார் என்றெண்ணினார். அந்த அதிகாரி இவருடைய கருத்தைக் கேட்க மறுத்தாலும் அதிலும் நியாயம் இருப்பதாக ஆசிரியர் கருதினார். மக்கள் தொடர்பு அதிகாரியின் (PRO) சலனமற்ற முகத்தோற்றத்திலிருந்து எந்த அனுகூலமான நம்பிக்கையும் தோன்றவில்லை. ஆசிரியர் முற்றிலும் நம்பிக்கையிழந்த நிலையில் இருந்தார்.

மௌனத்தின் சக்தி பெரியது என்ற கருத்து நினைவுக்கு வந்ததும், மனம் மௌனத்தில் ஆழ்ந்தது. நம் மனதில் எழும் எண்ணம் நம்முடையது அல்ல. எண்ணங்கள் உலகில் உலவுகின்றன. அவை ஒருவர் மனதில் புகுந்து வெளிப்படுகின்றன என்ற உண்மையினை ஆசிரியர் தெரிந்து கொண்டிருந்தார். ஒருவர் தம் மனதில் தோன்றிய எண்ணத்தை வெளியிட மறுத்தால் அந்த எண்ணம் மற்றொருவர் மூலம் வெளிப்படுகிறது. ஆசிரியருக்கு எந்தவிதமான சிரமமும் இன்றி மௌனம் குடி கொண்டது. அங்கிருந்த சூழ்நிலை அவருக்கு சாதகமாக இல்லாமல் இருந்ததால் அவர் ஏற்கனவே மௌனமாகிவிட்டிருந்தார். மக்கள் தொடர்பு அதிகாரியின் (PRO) முன்னிலையில் அவர் இருந்த இரண்டு நிமிடங்களும்





பொறுத்துக் கொள்ள முடியாததாக இருந்தது. இருந்த போதிலும் அவருடைய அரை நூற்றாண்டு குறிக்கோள் நிறைவு பெறும் தருவாயில் இருந்ததால், அவர் எப்படி கோழைத்தனமாக தன் இலட்சியத்திருந்து பின்வாங்க முடியும்? எப்படி இருந்த போதிலும் அவர் மனத்திலிருந்த அனைத்துமே மௌனத்தில் நிலை பெற்றுவிட்டது.

ஆசிரியர் தன்னுடைய மனத்திலிருந்த அரிய கருத்துக்களை விளக்கிச் சொல்வதற்கு, அந்த அதிகாரியை சம்மதிக்க வைக்க தைரியமிழந்தவராக இருந்தார். அதற்கு பதிலாக ஆன்மீகத் தத்துவமான மௌனத்தின் சக்தியை தொடர்ந்து நாடுவதற்கு அவர் மனம் உறுதி பூண்டது. கடைசி நிலைமைக்கு தள்ளப்பட்ட மனிதர்களுக்குக் கூட அவர்கள் மனதில் உள்ளதை நிறைவேற்றித் தருவது மௌன சக்தி. இங்கே இந்தத் தத்துவம் என்னவென்றால் மனம் மௌனமாகிவிட்டாலோ அல்லது மனத்தை மௌனத்திற்குள் செலுத்தினாலோ ஆன்மா விழித்துக் கொள்கிறது. கேட்காமல் இருப்பது ஓர் உயர்ந்த னமத்திண்மையைக் காட்டுவதால் அப்படிப்பட்டவருக்கு வாழ்வு வேண்டியதை அபரிமிதமாக வழங்குகிறது. ஒரு மனிதன் உணர்வுபூர்வமாக தன்மனத்தில் தோன்றிய எண்ணத்தை வெளியிட மறுத்தால், அந்த எண்ணம் வேறொருவர் மூலம் அவருடைய நலனுக்காக அவருக்கு சந்தோஷம் தரும் வகையில் வெளிப்படுகிறது. ஆசிரியர் மௌன சக்தியைப் பற்றிய பல உதாரணங்களை தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார். மௌன சக்தியை பழக்கத்தில் கொண்டு வருபவருக்கு, அது நன்மைகள் தருகிறது என்பதை ஆசிரியர் தன் சொந்த அனுபவத்தில் கடைப்பிடித்து வெற்றிகண்டார்.

# 24. மௌன சக்தி, பாகம் - II

அமெரிக்கன் மேனேஜ்மெண்ட் நிர்வாக இயக்குனர், சியர்ஸ் மக்கள் தொடர்பு அதிகாரி (PRO) முன்பாக உட்கார்ந்திருந்த பொழுது மௌன சக்தியின் வலிமையை அறிந்து கொள்வதில் முன் அனுபவங்கள் பெற்றிருந்தார்.

ஒருமுறை தன்னுடைய செயல் முறைகளை விளக்கும் நிகழ்ச்சிக்கு, ஒரு சிறந்த பேச்சாளரை அமர்த்திக் கொள்ள விரும்பினார். அந்த பேச்சாளர் தன்னுடைய ஸ்தாபனத்தில் புகழ் பெற்றவராக இருந்த பொழுதும், உள்ளூருக்குரிய சில காரணங்களால் மதிப்பு இழந்தவராக இருந்தார். எனவே, கடும் எதிர்ப்புக்கு ஆளாகி இருந்த அவரை பேச அழைக்க இயலாது என்பதை உணர்ந்தார். அவரது பெயரை மற்றொருவரால் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் முன்மொழியப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது அவர் நினைவில் தெளிவாகத் தோன்றிற்று. எனினும் சியர்ஸ் ஒரு சாதாரண சந்தர்ப்பமாக இல்லை. அங்கு மௌன சக்தியை கொண்டு வருவதற்கு அவசியம் இல்லாமல் இருந்தது. அவர் மனத்திற்குள் எல்லாம் மௌனமாக இருந்தது.

அவர், மக்கள் தொடர்பு அதிகாரி (PRO) பேசுவதற்கு பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அவருடைய கவனமெல்லாம், அதிகாரி என்ன பேசப்போகிறார் என்பதில் இருந்தது. அதிகாரி (PRO) பேசும் பொழுது "கண்டிப்பாக இந்த நேர்முக விசாரணைகளுக்குப் பிறகு (interviews) 'சியர்ஸ் பிரகாசமான முன்னோடி' என்று எழுதப்படும்'' என்று பேசியதை கேட்டதும், வைஸ் பிரசிடெண்ட்டு ஆச்சரியத்தால் ஒரு வினாடி அப்படியே ஸ்தம்பித்து சிலையாகி விட்டார். அவர் பேசிய வார்த்தைகள்





யாவும், அவரால் பல மணி நேரங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டவைகளாகும். பிறகு அவர், மௌனத்திலிருந்து வெளிப்பட்ட, மௌன சக்தி செயல்பட்டது என்று எண்ணினார். இப்பொழுது அவர் மனதில் ஏதோ ஒரு உணர்வு தூண்டிற்று. சியர்ஸ் பற்றி எப்படி விமரிசையாக எழுதப்படும் என்பதை விளக்குவதைக் காட்டிலும் மற்றொரு கருத்தைத் தெளிவாக எடுத்துக் கூற விருப்பங்கொண்டார். அப்பொழுது அங்கு மௌனம் இல்லை. எல்லாமே உற்சாகமுடையதாக இருந்தது. இப்பொழுது மௌன சக்தியை நினைவில் நிறுத்துவதே கடினமாக இருந்தது. அப்பொழுது அதிகாரி (PRO) "உங்களுடைய ஆராய்ச்சி எங்களது வலிமையைப் பற்றி தெளிவுப்படுத்துகிறது" என்று பேசியதை ஆசிரியர் கேட்டார். இது நம்ப முடியாததாக இருந்தாலும் கேட்பதற்கு இனிமையாக இருந்தது. உள்ளே அவரது கருத்து முந்திக் கொள்ளும் போராட்டமும் மேலிட்டது. தம் கருத்துகளைப் புறக்கணித்ததும் மௌன சக்தியின் வலிமை கூடிற்று. அந்த அதிகாரி (PRO) ஆசிரியரின் எல்லாக் கருத்துக்களையும் உண்மையுடன் ஏற்று தொகுத்துக் கூறியதுடன், அவர் கோரியபடி நேர்முக விசாரணை (interview) தொடங்க அத்தனை பேர்களிடமும் விபரங்கள் கேட்டறிந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்வதாகக் கூறி முடித்தார். வைஸ் பிரசிடெண்ட்டு அவருடைய புத்தகத்தை "தி வைட்டல் டிஃபரன்ஸ்" (THE VITAL DIFFERENCE) என்ற புத்தகத்தை வெளியிட்டார். அது அவருக்குக் கிடைத்த வெற்றி. அந்த புத்தகம் பிரெஞ்ச், ஜபானீஸ், டேனிஷ், ஸ்பேனிஷ், மற்றும் ஜெர்மன், மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

# 25. மௌன சக்தி, பாகம் - III

மௌன சக்தி, பற்பல வழிகளில் அனைத்து நேரத்திலும் செயல்படுகிறது.

(1) நாம் அதைத் தெரிந்தே பழக்கத்தில் கொண்டு வரும் பொழுது.

(2) நம் எண்ணங்களை வெளியிடுவதை சூழ்நிலைகள் தடுக்கும் பொழுது.

(3) மற்றவர் பேசும் பொழுது அவர் பேசி முடிக்கும் வரை பொறுமையுடன் காத்திருக்கும் பொழுது, நாம் தெரிவிக்க விரும்பிய கருத்துக்களை, மௌன சக்தி அவர் வாயால் வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

(4) மரியாதை நிமித்தமாகவோ அல்லது நாகரீகமாகவோ, நாம் பெரும்பாலும் பேசுவதிலிருந்து விலகி நிற்கும் பொழுது, பின்னர் மௌன சக்தியின் வெளிப்பாட்டைக் காண்கிறோம்.

(5) நமக்கு நியாயமாக கிடைக்க வேண்டியதைக் கௌரவம் பார்ப்பதால் கேட்டுப் பெறக்கூடாது என்று தீர்மானிக்கின்றோம். அங்கு நாம் பேச வேண்டுமென்று நினைப்பதை மற்றவர் அவராகவே முன் வந்து பேச முற்படுகிறார்.





குறைந்தபட்சமாக ஒரு சிறு தொழிலதிபர் இந்த முறையை திறமையுடன் பின்பற்றியதன் விளைவாக, தன்னுடைய கம்பெனியை இந்தியாவில் பல மாநிலங்களிலும், தன் வாழ்நாளிலேயே விரிவுபடுத்தி வெற்றி கண்டார்.

ஒரு சமஸ்கிருத கவிஞர் ஸ்ரீ ரமண மகரிஷியின் சீடர். அவர் உமா சஹஸ்ரம் பற்றி ஆயிரம் கவிதைகள் எழுத விருப்பம் கொண்டார். குருவின் ஆசிர்வாதத்துடன் அவர்முன் உட்கார்ந்து எழுதினார். எழுதி முடிந்ததும் இவ்வளவு நேரமும் மௌனமாக உட்கார்ந்த மகரிஷி, சீடரிடம் ‘‘நான் சொன்னவற்றையெல்லாம் எழுதிவிட்டாயா?’’ என்று கேட்டார். குருவின் மௌன சக்தி சீடரின் எண்ணத்தில் கவிதையை உருவாக்கியது.

# 26. முடியாதது முடியும்,

## பாகம் - I

முடியாதது என்பது மனிதர்களுக்கு முடியாதவையாகவே இருக்கிறது. இதில் விதிவிலக்கானவர்களுக்கு முடியாதது முடியும். யார் ஒருவர் ஆன்மாவை உண்மையாக நாடிச் செல்கிறாரோ, அவர் அபூர்வமாக விதிவிலக்கானவராக கருதப்படுகிறார். ஒரு ஏழ்மை கடைநிலை ஊழியர் ஓய்வு பெற்றபின், ஒரு வருடம் கழித்து உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பிராண வாயு மூலம் அவர் உயிரை நீட்டித்து வைத்திருந்தார்கள். அவருக்கு இது மூன்றாவது முறையாக வந்த இருதய நோயானதால், அவர் பிழைத்துவிடுவார் என்று கருதுவதற்கு முடியவில்லை. அவருக்கும் தான் பிழைக்கமாட்டோம் என்ற எண்ணம்தான் இருந்தது. ஒருவருக்கு சந்தர்ப்ப சூழ்நிலை கை கொடுக்காத நிலையில், முடியாது என்ற நிலை இருந்தாலும், மற்றொருவருக்கு ஒருவரின் உதவியால் சாதகமான சூழ்நிலையில் முடியாததும் முடியும் என்பது சாத்தியமாகிறது.

கிராமத்து ஏர் கலப்பையினால் நிலத்தை 6” அங்குலம் ஆழத்திற்கு மேல் உழ முடியாது. ஆனால் டிராக்டரால் முடியும். ஒரு சக்தி மிகுந்த டிராக்டரினால் மூன்று அடி ஆழத்துக்கு மேல் உழ முடியும். கருவி மாறும் பொழுது, பலனும் மாறுகிறது. கை கால்களாலும் உடலாலும் உழைக்கும் மனிதனுக்கு சட்டத்தைப் பற்றியோ அல்லது மருந்து பற்றியோ புரிந்து கொள்ள இயலாது. ஆனால் கல்வி அறிவு பெற்ற மனிதன் புரிந்து கொள்வான். அறிவு உடலுழைப்பை விட உயர்ந்தது. உடலால் உழைப்பவனால் முடியாதது, அறிவால் உழைப்பவனுக்கு முடியும். மற்ற எல்லாவற்றையும் விட மேலான





அதிக சக்தி வாய்ந்த ஆன்மாவினால், மனத்தால் ஆன மனிதனால் முடியாதது முடியும்.

நம்முள் ஒவ்வொருவரிடமும் ஆன்மா உள்ளது. நமது மரபு நமக்கு கடவுள் வழிபாட்டைத்தவிர, அன்றாட வாழ்வில் ஆன்மாமீது நம்பிக்கை வைக்க வேண்டும் என்று கற்பிக்கவில்லை. கடவுள் வழிபாடு அபூர்வமாக சில ஆபத்தான கட்டத்தில் ஆன்மாவைத் தொடும். உள்ளே இருக்கும் ஆன்மாவை நம்புவதானது, அதுவே ஆன்மாவை அழைப்பதற்கு முதற்படி. மனம் ஆன்மாவின் பக்கம் திரும்பும் பொழுது, ஒருவர் அபரிமிதமான சக்தியையும், அகவெழுச்சியின் உற்சாகத்தையும் உணர முடியும். அன்றாட நடவடிக்கைகளில் ஆன்மாவின் அசாதாரணமான சக்தியை காண்பது நமக்கு சாத்தியமாகும்.

# 27. முடியாதது முடியும் - பாகம் - II

45 வயதிலும் என்றுமே வேலை கிடைக்காதவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். அல்லது ஒரு பெண்ணுக்கு 38 வயது ஆகியும் திருமணம் ஆகாமல் நின்றுபோய் விட்டிருக்கலாம். 60 மாணவர்கள் பயிலும் ஒரு வகுப்பில் எப்பொழுதும் 40வது ரேங்க் மாணவராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் போல் மாணவர்கள் இன்றும் இருக்கிறார்கள். நல்ல உத்தியோகம், தம் அந்தஸ்துக்கு ஏற்ற சம்மந்தம் அல்லது முதல் ரேங்க் கிடைப்பது போன்றவை நடக்காத ஒன்றாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் முடியாதது முடியும் என்று தீர்மானித்து அந்த எண்ணத்தை ஆழ்மனத்தில் கொண்டு வந்து ஆன்மாவை அழைக்க முயற்சி செய்யலாம். அது வெற்றி பெறுமா பெறாதா என்ற கேள்விக்கு இடமில்லை. ஆனால் அத்தகைய ஆராய்ச்சியை இரண்டாவது முறையாக சோதித்துப் பார்க்கக்கூடாது. கிருஷ்ண பரமாத்மா, தான் உண்மையில் கடவுள் அவதாரமா என்று சோதிக்க விரும்பி ஒரு மலையை அசைத்து நகர்த்தினார். முதல் சோதனையில் வெற்றி கண்டபோது ஒருவர் அந்தத் திறனை வேறு எந்தவிதமான சோதனை செய்யாமல் நிரந்தர சக்தியாகப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட கடைநிலை ஊழியர் உயிர் பிழைத்தெழுந்தார். அவருடைய வீடு கட்டிக் கொள்ள வேண்டுமென்ற நீண்டகால ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டார். அதன்பிறகு 25 வருடங்கள் உயிரோடு இருந்தார். ஆன்மாவில் நம்பிக்கை வைத்திருப்பவர்களுக்கு இதுபோன்ற





உதாரணம் தேவை இல்லை. ஆன்மாவை அழைப்பதற்கு எந்த ஒரு உதாரணமும் ஆன்மாவை அழைக்கத் தூண்டும் வகையில் இருக்க வேண்டும். ஆன்மாவை செயல்படுத்த அதை எப்படி அழைப்பது?

1. ஆன்மாவில் பூரண நம்பிக்கை வைப்பதுதான் முக்கியமான முதல் தகுதி.
2. நாம் நம் மனம் போன வழியில் வழக்கமாக செயல்பட்டு வரும் பழக்கங்கள் மீது நம்பிக்கை வைக்கக்கூடாது.
3. ஆன்மாவின் மேல் நாம் தற்போது இடையறாத நினைவை தீவிரப்படுத்த வேண்டும்.
4. பலனைப்பற்றி நினைக்காமலும் எதிர்பார்ப்புகளை அதிகமாக வளர்த்துக் கொள்ளாமல் இருப்பதாலும் ஆன்மாவை அழைக்கும் தகுதியைப் பெறலாம்.

பழமையும், புதுமையும் கலந்து போயிருக்கும் இக்காலத்தில் இரண்டிலும் எதை எந்த அளவில் ஏற்றுக் கொண்டால் நமக்கு நல்லது என்பதில், இப்படியும் அப்படியுமாக பலபேர் பலமுடிவு எடுக்கிறார்கள். இதில் பழமையை விலக்கிவிட்டு புதுமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். புதுமையை ஏற்றுக் கொண்டு புதிய முறையை தீவிரமாக கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்க வேண்டும். ஆன்மாவை அழைப்பது என்ற புதுமையான முறையை ஏற்றுக் கொள்ளும் பொழுது, இதுவரையில் நம்மிடம் இருந்து வந்த எரிச்சலும் கவலையும் நீங்கி உள்ளே ஆன்மாவில் அமைதி ஏற்பட்டு உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்கும். அது ஆன்மீக மலர்ச்சியாகவும், ஆன்மீக சந்தோஷமாகவும் மலரும். அது, நம்முடைய அழைப்பின்

குரலை ஆன்மா ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்துவதற்கான அறிகுறி. அது உன் வாழ்வின் தன்மையை மாற்றும். மனதில் அமைதி ஏற்படும்பொழுது இதுகாறும் வெளிப்புறச் சூழலில் ஊறிப்போய் உள்ள உயர்வு மனப்பான்மை, மற்றும் தாழ்ந்த பண்புகள் போன்ற சுபாவங்கள் மாறி, மனதிற்கு இதமானதும் இனிமையானதுமான நல்லனவைகளை மட்டும் நாடும் சுபாவமாக மாறும். புறநிகழ்ச்சிகள் உள்ளுணர்வை பிரதிபலிப்பதால் அகவுணர்ச்சியின் மாற்றமே புறநிகழ்ச்சிகளின் மாற்றம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நாம் அதை புரிந்து கொண்டு பாராட்ட வேண்டுமேயன்றி அதையே முடிவு என்று ஏற்றுக் கொள்ளலாகாது. ஏனென்றால் அப்படி ஏற்கும் பொழுது அந்நிலையிலேயே அவர் தங்கி விடுவார். அப்படிப்பட்ட மாறுபட்ட நடத்தையை வசதிபடைத்த அண்டை மனிதரிடமும் அல்லது அகந்தையான மேலதிகாரியிடமும் காணலாம்.





# 28. முடியாதது முடியும்,

## பாகம் - III

கல்வித்துறையில் குமாஸ்தாவாக இருந்த ஒருவருக்கு ஒரு அசாதாரணமான சூழ்நிலை ஏற்பட்டு, மேலதிகாரிகளின் சிறப்பு கவனிப்பைப் பெற்றார். ஒருசமயம் தற்செயலாய் தன்னுடைய சக ஊழிய நண்பர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டு அவரை சந்தித்த பொழுது, அந்த நண்பர் மன அமைதிக்கு ஆன்மாவின் உதவியை நாடுகிறார் என்றும், அவர் வழக்கத்திற்கு மாறாக ஏதோ ஒரு அபூர்வமான செயலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் என்பதை அறிந்து கொண்டார். அவருடைய நண்பர் ஆன்மாவை அழைப்பதில் உண்மையான ஆர்வத்துடன் செயல்படுகிறார் என்று அறிந்து, தானும் அந்த புனிதமான நம்பிக்கையில் பங்கு கொண்டு அந்த முறையை ஆர்வத்துடன் பின்பற்றலானார். அம்முறையை பின்பற்றியதும் அவர் ஆழ்மனத்தில் ஆன்மா மலர்ந்ததைக் கண்டார். அடுத்த நாள் ஆபிசில், தான் இதுவரையில் கண்டிராத அளவில் எதிர்பாராத அன்பான வரவேற்பினைப் பெற்றார். அவரை அனைவரும், தொடர்ந்து அன்பாக உபசரித்தார்கள். அவருடைய மேலதிகாரி, ஆபிசில் ஏதோ புதுமை நடந்து கொண்டிருக்கிறது என்று தெரிந்து, அவரை அழைத்து வரும்படி சொல்லி அனுப்பினார். ஓய்வு பெறும் தருவாயில் இருந்த அந்த அதிகாரி எப்பொழுதும் கவலை தோய்ந்தவராக, அதிகம் பேசாதவராக இருப்பார். ஆனால் அன்று அவர் முகப்பொலிவுடன் தன் சக அதிகாரிகள் நடந்து கொண்டது போன்று, கனிவாகப் பேசி உபசரித்தார். குமாஸ்தாவுக்கோ சொர்க்கமே மேலிருந்து கீழே இறங்கி வந்ததைப் போன்று தோன்றிற்று. ஒரு வாரத்திற்குள் அவரை ஒவ்வொருவரும் தெய்வீக தன்மையுடையவர் என்று அழைக்கலாயினர். அந்த

அன்பருக்கு, தம் நிலையை விட ஓர்நிலை அதிக மரியாதை வந்தது. அதே கட்டிடத்தில் இயங்கி வந்த, அந்தத் துறையின் நிர்வாகப் பகுதியின் தலைமை அதிகாரியிடமிருந்து அந்த குமாஸ்தாவை அனுப்பி வைக்குமாறு செய்தி வந்தது. அவருக்கு அங்கேயும் அதே மாதிரியான உயரிய வரவேற்பு காத்திருந்தது. அந்தத் தலைமை அதிகாரி, “உங்களுக்கு நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் சற்று வந்து இங்கே எங்களுடன் கொஞ்ச நேரம் இருந்து விட்டுப் போங்கள்’’, என்று சொன்னார். இதைக் கேட்ட குமாஸ்தாவுக்கு, இந்த வார்த்தைகள் உயர் அதிகாரியின் வாயிலிருந்து வந்தவையா என்று நம்ப முடியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒருவர் மனநிலையை தடுமாறாமல் வைத்திருப்பது கடினம். வருவது எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அதுவே இறுதியானது என்று எண்ணாமல் இருக்க வேண்டும். முடிவில் ஆன்மா அற்புதமாக வெளிப்பட்டு செயல்படும். 40வது ரேங்க்கில் இருந்த மாணவனால் முதலாமிடத்திற்கும் வர முடியும். அப்படி ஒரு மாணவன் முதலிடத்திற்கு வந்தான்.

உள்ளே நம்மனம் உறுதியில்லாத நிலையில் இருந்தால், நாம் ஆன்மீகத்தில் இன்னமும் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. எப்போது நமக்கு மனத்தின் உள்ளே பலனை அடைய வேண்டுமென்ற உந்துதல் இல்லையோ, அப்போது நாம் குறிக்கோளை அடைந்து விட்டோம் என்றாகும். நாம் எவ்வளவு காலம் நம் மனதை ஆன்மாவில் நிலைப்படுத்தி ஆன்மாவை அழைப்பதிலேயே நம் கவனத்தை செலுத்துகிறோமோ, அப்பொழுது மனத்தில் அலைபாயும் எண்ணங்கள் எழ வாய்ப்பில்லை. ஒருங்கிணைந்த நமது சக்தி முழுவதும் ஆன்மாவிலேயே இருக்கும்.





ஒருவர் ரூ.500/- சம்பளம் வேலை நீடித்து இருக்காது என்ற அவலநிலையில் இருந்த பொழுது, இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகளுக்குள் ரூ.1200/- சம்பளம் வேலை கிடைக்கும் என்று தன் உள் உணர்வில் கண்டார். ஒன்றரை ஆண்டுகள் முடிந்த பொழுது அவர் அமெரிக்காவில் மாதம் 4000 டாலர் சம்பளத்தில் வேலையில் இருந்தார்.

# 29. முடியாதது முடியும்,

## பாகம் - IV

இந்தியா, ரிஷிகள் வாழ்ந்த பூமி. அவர்களுடைய ஜோதி நம் உடலில் உள்ளது என்று ஸ்ரீ அன்னை கூறுகிறார். ரிஷிகள் தங்கள் தவத்தால் பெற்ற ஒளியை, தூய்மையும் உண்மையும், நமது வாழ்வின் மேல்மட்டத்திற்கு தவத்தின் மூலம் கொண்டுவரும். அந்த ஒளி நம்முடைய லௌகீக வாழ்க்கைக்கோ அல்லது உத்தியோக வாழ்க்கைக்கோ நேரடியான பலனைக் கொண்டு வரும் என்பதல்ல. உண்மையை ஏற்றுக் கொண்டவரின் வாழ்வில், அந்த ஒளி நிச்சயமாக சாதகமான பலனைத்தரவல்லது. அந்த ஆன்மா என்பது, நமது தினசரி வாழ்விலோ பிரகிருதி என்ற இயற்கையிலோ எழும் சக்தி என்று இங்கு விவரிக்கப்படுகிறது.

- ✡ இந்த ஆன்மா வாழ்வை புறக்கணிப்பது அல்ல. மாறாக, வாழ்வில் ஆன்மா செயல்பட விரும்புகிறது.
- ✡ கோயில் வழிபாடோ, மத சடங்கு அல்லது பூஜையை வீட்டில் நடத்துவதாலோ, அல்லது வேறு எந்த முறையினாலோ, ஆன்மாவை அழைக்கவல்லது அல்ல.
- ✡ ஆன்மா வெளிப்படும்பொழுது ''முடியாதது முடியும்'' என்ற சொற்கள் ஒவ்வொருவருடைய உதட்டிலும் முணுமுணுத்துக் கொண்டே இருக்கும்.





- ✡ ஆன்மீகம் இந்தியாவின் பாரம்பரியத்தில் உள்ளது. என்னைப் பொறுத்தவரை இப்பாரம்பரியத்தில்தான் இந்நாட்டு மக்களின் ஐஸ்வர்யம் அடங்கியுள்ளது. இந்நாட்டு மக்களின் உடம்பில் இருளிற்கு பதிலாக ரிஷிகளின் ஒளி தங்கியுள்ளது.

உங்கள் வாழ்க்கையில் கடந்த கால நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்தால் ஏதாவது ஒரு இடத்தில் அத்தகைய தகுதியைக் காண்பீர்கள். இப்பொழுது அந்த புது விவேகம் உங்கள் மனதில் வெகுவாக நிலைத்து நிற்பதைக் காண்பீர்கள். **நமது வாழ்வின் பலனைப் பார்க்கும் போது, அந்தப் பலன் எப்படி வந்தது என்றோ அல்லது அந்த நிகழ்சினையைப் பற்றியோ மறந்துவிடுகிறோம்**.

ஆன்மாவை அழைத்து நாம் வாழ்வில் நிகழ்த்தும் அற்புதங்கள் தானாகவும் நடைபெறுவது உண்டு. அப்படிப்பட்ட சம்பவங்கள் பின்னணியில் நடந்திருக்கும் பொழுது சாதாரணமாக பேச்சுவாக்கில் சில சமயங்களில் சிலர் இப்படி கூறுவதுண்டு. ''எப்படியோ ஏதோ ஒன்று நடந்து ஐ.ஏ.எஸ். கிடைத்தது. இல்லாவிடில் எங்கோ ஒரு மூலையில் ஒன்றுமில்லாதவனாக இருந்திருப்பேன்'' என்று சொல்வதை கேட்கிறோம். அதிர்ஷ்டம் ஒருவரை அடைவதும், துரதிர்ஷ்டம் ஒருவரிடமிருந்து விலகுவதும் வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளாகும். உன்னுடைய வாழ்விலும் அப்படிப்பட்ட முக்கிய சம்பவம் இடம்பெற்ற இடம் உண்டு. ஆனால் அதை நாம் சந்தோஷமாக மறந்து விடுகிறோம்.

# 30. முடியாதது முடியும்,

## பாகம் - V

அதிர்ஷ்டம் ஒருவரை தேடுவதும் அல்லது துர்அதிர்ஷ்டம் ஒருவரை தாக்காமல் விலகுவதும் ஒவ்வொருவருடைய வாழ்விலும் நடைபெறும் நிகழ்ச்சிகளாகும்.

- ✡ தனது 35வது வயது வரை அரிசியும், மோரும் தவிர மற்ற எதையும் ஜீரணிக்க இயலாதவர் ஒருவர் எம்.ஏ. (இலக்கியம்) படிப்பில் சேர்ந்தபோது எதையும் ஜீரணிக்க முடிந்ததைக் கண்டார். ஆனால் அதை அவர் உணரவில்லை.
- ✡ தொடர்ந்து சில மாதங்கள் இடைவெளியில் வலிப்பு நோயினால் அவதிப்பட்ட ஒருவருக்கு புதிய நண்பரின் அறிமுகம் ஏற்பட்டபின் அந்த நோயின் கடுமை கொஞ்சங் கொஞ்சமாக குறைந்து அதிலிருந்து முற்றிலும் விடுபட்டார். ஆனால் அவரும் அதை கவனிக்கத் தவறிவிட்டார்.
- ✡ சிறு தொகை கூட கடன் பெறமுடியாத நிலையில் இருந்தவர்களுக்கு பொது திட்டத்தினால், வீடு தேடி வந்து ஆயிரக்கணக்கான ரூபாய் கடனாக வழங்கப்பட்டது. பத்திரிக்கையாளர் இதைப்பற்றி தெரிந்து கொள்ள முயற்சி செய்த பொழுது, அந்த முன்னேற்றத்தின் விபரங்களை மட்டும் அவர்கள் தெரிவித்ததைக் கேட்டறிந்தார். ஆனால் அது எவ்வாறு நிகழ்ந்தது என்று தெரியாது என்று கூறினார்கள். அதைப் பற்றி குறிப்பாகக் கேட்டபோதும், இது தங்கள் நினைவில் இல்லை என்று தெரிவித்தார்கள்.





ஆன்மா எப்படி முடியாததை முடித்துத் தருகிறது என்பதை தெரிந்து கொண்டு அதைத் தன் வாழ்வில் நிரந்தரமாக்கிக் கொள்ள விரும்புகின்றவர் தன் கடந்த கால வாழ்வை ஆராய்ச்சி செய்து இப்படிப்பட்ட நிகழ்வுகளை கண்டுபிடிப்பது நல்ல துவக்க முயற்சியாகும். அப்படிப்பட்ட முயற்சி ஆன்மீக நன்றியறிதலாகும்.

வாழ்வில் செயல்படும் ஆன்மா எப்படி நமக்கு தகுதிக்கு மீறிய பேற்றை கொண்டு வந்தது. எப்படி தவிர்க்க முடியாத துரதிர்ஷ்டத்திலிருந்து நம்மைக் காப்பாற்றியது ஆகியவற்றை உணர்வது ஆன்மீக நன்றியறிதலாகும். நன்றியறிதல் ஆன்மாவின் குணமாகும். இக்குணம் நமக்கு ஆன்மீக ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பல வாய்ப்புக்களை உண்டு பண்ணி தரக்கூடியது.

நமக்கு நன்றியறிதல் உள்ளதற்கு சிறந்த அடையாளம் ஆழத்திலிருந்து சந்தோஷம் வருவதுதான். பாமர மனிதன் அரசாங்கத்திடமிருந்தும் சமூகத்திலிருந்தும் பெறும் பலன்களை அறியாதவனாக இருப்பது போல் நாமும் ஆன்மா நமக்கு கேட்காமலே கொடுக்கும் எல்லா பலன்களுக்கும் நாமும் நன்றியுள்ளவர்களாக இருப்பதில்லை.

# 31. ஆன்மா கெட்ட சகுனத்தையும், நல்ல சகுனமாக மாற்றும்

ஆன்ம விழிப்புள்ளவர்கள், நடப்பவைகள் எல்லாம் அவர்களுக்கு நல்லவைகளாகத் தோன்றுவதால் சகுனங்களை புறக்கணிக்கிறார்கள். எப்பொழுதும் அவர்கள் நல்ல சகுனங்களையே காண்கிறார்கள். சகுனத்தை முக்கியமாகக் கருதி, அதன் மீது நம்பிக்கைக் கொண்டுள்ளவர்கள் பலருண்டு. நம் பரம்பரையில் அவர்களைக் காண்பதுண்டு. வாழ்க்கையை ஒரு ஜீவனாக பாவித்து அது நம்மோடு ஒரு சிம்பல் மொழியில் பேசக்கூடியது என்பதை உணர்பவருக்கு அவர் காண்பது மற்றும் கேட்பது எல்லாம் அவருக்கு சகுனங்களாக அமையும்.

நீ வீட்டை விட்டு கிளம்பும்போது தெருவில் யாராவது ஒருவர் மற்றவரிடம் பேசும்போது "இன்று உனக்கு அதிர்ஷ்டம்" என்ற சொல் காதில் விழும் பொழுது அது உனக்கு நல்ல சகுனமாகும். ஒருவர் கெட்ட சகுனத்தைக் கண்டால் அவர் என்ன செய்வார்? சகுனத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் கெட்ட சகுனத்தைக் கண்டால் வீட்டை விட்டு புறப்பட மாட்டார்கள். ஆன்மாவில் நம்பிக்கையுள்ளவர்கள் ஒரு நிமிடம் தாமதித்து ஆன்மாவை அழைத்துவிட்டு புறப்பட்டுச் செல்வார். அப்பொழுது சூழ்நிலை மாறி உடனே நல்ல சகுனம் தோன்றும். மேல் நிலைக்கு வரும் ஆன்மா கெட்ட சகுனத்தை நல்ல சகுனமாக மாற்றும் சக்தியுடையது.





முக்கியமான வேலை நிமித்தமாக ஒருவர் ஓரிடத்திற்கு போகும் போது பஸ்சை பிடிக்க வேகமாக ஓடினார். அதற்குள் பஸ் கிளம்பி விட்டதைக் கண்டார். அவர் அடுத்த பஸ்சில் போக முடியும் என்றாலும் இந்த பஸ்சை தவறவிட்டதை அவர் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. பஸ், பேருந்து நிலையத்தின் வெளிப்புற நுழைவு வாயிலை அடைந்தது. அவர் உடனே தனக்குள் சென்று தன்னுடைய ஆன்மீக ஆதாரத்தை தேடினார். மனதில் ஒரு தெளிவு தென்பட்டது. உடனே சூழ்நிலை மாறியது. பஸ்சும் நுழைவாயிலில் நிறுத்தப்பட்டது. கண்டக்டர் இந்த பிரயாணியை அழைத்து, பஸ்சில் பிரயாணிகளின் எண்ணிக்கையில் தவறு நிகழ்ந்துவிட்டதாகவும், இன்னும் சில இடங்கள் காலியாக உள்ளனவென்றும் பஸ்சில் ஏறும்படி கூறினார். இதே போன்று மற்றொரு பயணிக்கும் பஸ்சை தவறவிட்ட அனுபவம் ஏற்பட்டு, அவர் போகும் ஊருக்கு டாக்சி கிடைத்து, பஸ் டிக்கெட் எவ்வளவோ அதே கட்டணத்திற்கு பயணம் செய்யும் வாய்ப்புப் பெற்றார். இது எதை குறிப்பிடுகிறது என்றால் உள்ளே இருக்கும் ஆன்மா செயல்படத் தொடங்கியவுடன் புறச்சூழ்நிலையில் மாற்றம் நிகழ்கிறது.

பலனின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது. இதில் முக்கியம் என்னவென்றால் உள் வேலையின் முயற்சியினால் சகுனத்தின் தன்மையை மாற்றமுடியும். ஆன்மாவை நெருங்க முடிந்தவருக்கு அது அவரை வேறு நிலைக்கு கொண்டு செல்லும்.

# 32. வாழ்வின் எதிரொலி - I

திருடர்கள் வங்கியில் பாதுகாப்பு அறையில் பணப் பெட்டியை உடைக்க முயன்றால் அங்கிருக்கும் அபாய அறிவிப்பு மணி ஒலிக்கும். அது பாங்க் பணத்தை பத்திரமாக பாதுகாத்துக் கொள்ள ஏற்படுத்திக் கொண்ட இயந்திர சாதனம். அதனால் வங்கியில் கொள்ளை தவிர்க்கப்படும். முரடன் ஒருவன் ஒரு பயந்த சக ஊழியரை துன்புறுத்தினால் மற்றவர்கள் அவனைக் காப்பாற்ற உதவிக்கு ஓடி வருகிறார்கள். அது சமூகத்தின் நல்லெண்ணத்தையும் நாகரீகத்தையும் எதிரொலிக்கின்றது. திரௌபதிக்கு மானபங்கக் கொடுமை இழைக்கப்பட்டபோது ஆன்மாவை அழைத்த உடன் கிருஷ்ண பரமாத்மா உதவிக்கு ஓடி வந்து காப்பாற்றுகிறார். இது இறைவனின் மறுமொழியாகும்.

ஒரு அமெரிக்க வர்த்தகர் இந்திய உரத் தொழிற்சாலைக்கு 70 கோடி பணம் ஒரு வங்கியில் கடனாகப் பெற்றுத்தர உறுதி அளித்தபின், பாங்க் ஆப் அமெரிக்காவின் அதிகாரிகளை (Bank of America) போய்ப் பார்த்தார். அந்த நாட்களில் அது புது மாதிரியான யோசனையாக இருந்தாலும் தன்னால் எத்தனை வங்கிகளை அணுக முடியுமோ அத்தனை வங்கிகளை அணுகுவதற்குத் தீர்மானித்தார். பாங்க் ஆப் அமெரிக்காவோ தாங்கள் இரண்டு நாட்களுக்கு முன்புதான் தென்கிழக்கு ஆசியாவிற்கான உரப்பிரிவை ஏற்படுத்தி-விட்டதாக தெரிவித்துவிட்டார்கள்.

சில வருஷங்களாக சந்திக்காத நண்பரை ஒரு முக்கியமான காரியம் நிமித்தமாக, பார்க்க விரும்பி வீட்டை





விட்டுக் கிளம்பிய போது அந்த நண்பர் நமக்கு ஆச்சரியம் தரும் வகையில் நமது வீட்டிற்குள் நுழைவதைக் காண்கிறோம். வாழ்வில் அது போன்ற அநேக அதிசயத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறுவதுண்டு. இலக்கியத்திலும் இது போன்ற நிகழ்ச்சிகள் மிகுந்து காணப்படுகின்றன. ஒரு நாட்டின் சரித்திரத்திலும் இது போன்றவைகள் காணப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சியை நாம் நினைக்க முடியாத நிலையில் நமக்கு தேவைப்படும் உதவி கிடைப்பதை வாழ்வின் எதிரொலி என்று கூறுகிறேன். "இறைவனுக்கு நன்றி" நீ வந்துவிட்டாய் என்று நாம் ஆச்சரியத்தால் மகிழ்ச்சியில் கூறுகிறோம். நமக்கு அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது என்று நினைக்கிறோம். நாம் நினைப்பது சரி.

ஆனால் இது வாழ்வின் தான்தோன்றித்தனமில்லை. அப்படிப்பட்ட நிகழ்வுகளுக்குப் பின்னால் ஒரு சட்டம் உண்டு. அம்மாதிரியான அரை டஜன் நிகழ்ச்சிகளின் விவரங்களை விரிவாக பார்க்கும் போது அவைகள் அதற்குரிய சட்டத்தைப் பின்பற்றுவது தெரியும். இந்த சட்டம் தெரிந்த ஒருவர் இந்த நிகழ்ச்சிகள் எவ்வாறு வருகின்றன என்று பகுத்துணர்வார்.

ஒருவர் சமூக வாழ்வுக்கு அடிமையாகாமல் ஆன்மாவை அழைக்கும் திறனுக்கு உயர்ந்தால், அவர் சமூக சராசரி வாழ்வைக் காட்டிலும் உயர்ந்து, வாழ்வின் மறுமொழியை பெறமுடியும். வாழ்வின் எதிரொலி என்பது தெரிந்த ஒரு விஷயந்தான். வாழ்வின் எதிரொலியை ஏற்படுத்தும் திறமை எல்லோருக்கும் தெரிந்ததில்லை. இருந்தாலும் வாழ்வில் அசாதாரணமாக இம்மாதிரி சம்பவங்கள் நடைபெறுகின்றன. மிகப்பெரிய தைரியசாலிகள் "நான் என்றுமே

கைவிடப்பட்டதில்லை’’ என்று கூறுவார்கள். எல்லாம் நன்மையில் முடியும் என்று நம்புகின்றவர்கள், தங்களுடைய கூடிவராத திட்டங்கள் கூடிவரும்பொழுது ‘‘இப்படி கூடி வருமென்று எனக்கு தெரியும்’’ என்று சொல்வார்கள். ஆன்மாவை நம்புகின்றவர்களுக்கு எதுவும் கூடிவரும்.





# 33. வாழ்வின் எதிரொலி - II

புவிஈர்ப்பு சக்தியில் உலகில் உள்ள மூலப்பொருள்கள் சமநிலைப்படுத்தப்படுவது போல், சம்பவங்கள், மனிதர்கள், அசைவுகள், அனைத்தும் மனிதர்களின் உணர்ச்சிப் பெருக்கால் சமநிலையில் உள்ளன. நம்நாட்டில் இந்த உண்மை அதிக அளவில் உணரப்பட்ட போதிலும், மக்கள் வாழ்க்கைக்கு ஒரு நீதிநெறி கற்பித்து தங்களுக்கு நியாயம் கிடைக்கும் பொழுது நீதியை காண்கிறார்கள். இது உண்மையென்றாலும் இதில் ஓரளவுக்குத்தான் உண்மையுள்ளது. ஏனெனில் வாழ்க்கை ஒழுக்கத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. நேர்மையற்ற மனிதன், வாழ்வில் வெற்றி பெறுவதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். இந்த சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்டவருடைய வெற்றிக்கு, பணபலம் அல்லது சமூக செல்வாக்குதான் காரணம் என்று நாம் கூறுகிறோம். இது உண்மையென்றாலும், இதிலும் ஓரளவுக்குத்தான் உண்மையுள்ளது. இதில் முழு உண்மை என்னவென்றால், வாழ்வில் உள்ள உணர்ச்சிகளின் சமநிலையாகும். தத்துவார்த்தமாகக் கூட பார்க்க வேண்டுமானால், இது வாழ்வில் உள்ள சக்தியின் சமநிலையாகும். இதை நம் உணர்ச்சிகளால் புரிந்து கொள்வது சுலபம்.

எட்டு டன்கள் எடையுள்ள ஒரு இயந்திரத்தை ஒரு சிறிய துறைமுகத்தில் கப்பலிலிருந்து இறக்கி வைக்க வேண்டியிருந்தது. அந்தத் துறைமுகத்தில் அதிகபட்சமாக 4 டன்கள் இறக்கி வைக்கக்கூடிய கிரேன்கள்தான் இருந்தன. அவர்கள் இயந்திரத்தை இறக்குவதற்கு, 4 டன் திறனுள்ள

இரண்டு கிரேன்களை ஈடுபடுத்தினார்கள். கிரேன்கள் வேலை செய்ய ஆரம்பித்தன. ஆனால் கிரேன்கள் பாரத்தை தூக்கி பாதி உயரம் உயர்த்தியதும் வேலை செய்யவில்லை. இயந்திரத்தின் உரிமையாளர்கள் கப்பல் துறைமுக மேடையில் நின்றவாறே, தங்கள் கண்முன்னாலேயே அவர்களது பொருள் கடலில் மூழ்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் தாங்கள் வழிபடும் இறைவனை தங்கள் ஜீவனின் ஆழத்திலிருந்து அழைக்க ஆரம்பித்தார்கள். அந்த கிரேன்கள் முறிந்து விட்டது போன்ற சத்தத்தை எழுப்பி மீண்டும் வேலையை செய்ய ஆரம்பித்து, இயந்திரத்தை மேடையில் பத்திரமாக இறக்கிவிட்டன. அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி நூற்றுக்கணக்கானவர்களிடம், பல வருடங்களாக கூறி வந்தார்கள். இந்த அதிசயிக்கத்தக்க சம்பவத்தைப் பார்த்த கப்பல் தலைவன், இது எப்படி நடந்தது என்று ஆச்சரியத்துடன் கேட்டான். அதற்கு அவர்கள் தங்கள் பிரார்த்தனை பலித்தது என்று கூறினார்கள்.

அவர்கள் அதிக விலையுயர்ந்த இயந்திரத்தை இறக்குவதில் வழக்கமில்லாத முறையைக் கையாண்டது விவேகமற்ற செயலாகும். உள் மனதில் எழுந்த தீவிரமான உணர்ச்சிகள், விவேகமற்ற செயலை முறியடித்துவிட்டன. உணர்ச்சிகளின் சமநிலை, அல்லது சக்தி திரும்பக் கிடைக்கப்பெற்றவுடன், வாழ்வின் எதிரொலி சட்டத்தின்படி, வாழ்வு காரியத்தைப் பூர்த்தி செய்து கொள்கிறது. இவ்வாறு வாழ்க்கையில் அநேக வழிகளில் வாழ்வின் எதிரொலி நடைபெறுகிறது.





# 34. வாழ்வின் எதிரொலி - III

ஜேன் ஆஸ்டின் எழுதிய Pride and Prejudice (கர்வமும் தவறான அபிப்பிராயமும்) நாவலில், டார்சி என்ற கதாநாயகன் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த கர்வமிக்க செல்வந்தன். கதாநாயகி எலிசபத் சுமாரான செல்வந்தரின் மகள். தனக்கென வரதட்சணை கொடுக்க இயலாதவள். ஒரு நடன நிகழ்ச்சியில் எலிசபத்தைப் பற்றி, அவள் அழகற்றவள் என்றும் ஆனாலும் சுமாரானவள் என்றும் அவள் காதில் விழும்படி டார்சி கூறினான். இதைக் கேட்டதும் அவள் மனம் புண்பட்டு, மிகவும் பாதிப்புக்கு உள்ளானாள். விரைவிலேயே டார்சிக்கு அவள் மீது அளவு கடந்த ஆசை எழுந்ததை உணர்ந்தான். மற்றொரு நடன நிகழ்ச்சியில், டார்சி அவனை தன்னுடன் நடனம் ஆட அழைத்த போது எலிசபத் மறுத்து விட்டாள். மூன்றாவது முறையாக ஒரு சந்தர்ப்பத்தில் டார்சி எலிசபத்தை தன்னுடன் நடனம் ஆட அழைத்தபோது, தன்னையறியாமலே நிதானம் இல்லாத நிலையில் ஏற்றுக்கொள்கிறாள். நடனம் முழுவதிலும் அவனை வேண்டுமென்றே கோபமூட்டி வம்புக்கு இழுக்கிறாள். டார்சி, அவளுடைய தமக்கை ஜேனின் திருமணத்தை தந்திரமாக தடுத்ததை அறிந்த எலிசபத் அவனை வெறுக்கிறாள்.

டார்சி எலிசபத்தை அவனது அத்தை வீட்டில் சந்தித்த பொழுது தன்னை மணக்கும்படி கோரிக்கை விடுத்தான். அக்கோரிக்கையை அவள் மனம் புண்படும்படியான விதத்தில் பேசி வைத்தான். அவள் அவனை கடுமையாகத் திட்டிவிட்டு, அவன் கொடுமையான குற்றத்தைப் புரிந்தவன் என்று அவன்மீது குற்றம் சுமத்தினாள். ஆனால் டார்சி, தான் நடந்து கொண்டது சரி என்று தன்னை நியாயப்படுத்தி, விளக்கமான

ஒரு கடிதம் எழுதினான். அதன்பிறகு நீண்ட மனப்போராட்டத்திற்குப் பின், எலிசபத் தன் மனம் புண்பட்டிருந்த நிலையிலும் தன்னுடைய தமக்கைக்கு அவன் தீங்கு இழைக்கவில்லை என்று அறிந்து, டார்சி மீது தவறு இல்லையென்று உணர்ந்து கொண்டாள்.

சில மாதங்கள் கழித்து டார்சியின் எஸ்டேட் இருக்கும் பெம்பர்லிக்கு எலிசபத்தின் அத்தை சுற்றுலா பயணமாக அழைத்துப் போனாள். எலிசபத் டார்சியை பார்ப்பதற்கு அச்சங்கொண்டவளாக இருந்த போதிலும், அவன் அங்கு இல்லை என்று தெரிந்து பெம்பர்லிக்குப் போக சம்மதித்தாள். அவள் அந்த அழகிய மாளிகையில் இருந்தபொழுது, தனக்கு கர்வியாக தெரிந்த டார்சி உண்மையிலேயே இதமாக பழகக்கூடியவன் என்று தெரிந்து கொண்டாள். தான் விரும்பியிருந்திருந்தால் அந்த அரண்மனைக்கு தலைவியாக இருந்திருக்கலாம் என்று நினைத்தாள்.

டார்சியின் உயர்ந்த பண்புகளைப் பற்றி மற்றவர்கள் வாயிலாகக் கேட்டபொழுது அவளுக்க அவன் மீது இருந்த வெறுப்பு மாறிவிட்டது. எலிசபத் அந்த மாளிகையை விட்டு புறப்பட்டு வெளியே சென்ற பொழுது பயணத்தை ஒருநாள் முன்னதாகவே முடித்துக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த டார்சியை, நேருக்கு நேர் சந்திக்கும்படி நேர்ந்தது. அதுவே அவர்களது திருமணத்திற்கு திருப்புமுனையாக அமைந்துவிட்டது. பெம்பர்லியில் எலிசபத்துக்கு, உணர்ச்சிகளில் ஏற்பட்ட மனமாற்றம் முழுமையானது. அந்த மனமாற்றமே நிலைமையை சமநிலைக்குக் கொண்டுவந்து, இரண்டுநாள் கழித்து வரவேண்டிய டார்சியை ஒருநாள் முன்னதாகவே வரவழைத்தது. இது வாழ்வின் எதிரொலியின் முறையாகும்.





# 35. வாழ்வின் எதிரொலி - IV

ஒரு அமெரிக்கன் பல்கலைக்கழகத்தில் பயிலும் ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளில், ஒரு அழகிய பணக்கார பொறியியல் மாணவன், அங்குள்ள பல அழகிய பெண்களின் மனதைக் கவர்ந்தவனாக இருந்தான். ஆனால் அவன் மனமோ, வசீகரிக்கத்தக்க, தன் அழகில் மற்றவர்களை விஞ்சுகிற ஒரு பெண்ணின் மீது லயித்திருந்தது. அந்த பெண்ணை அடைய, விருப்பங்கொண்டிருந்த அனேக மாணவர்களில் இவனும் ஒருவனாக இருந்தான். அவளை காதலிப்பவர்கள் அவரவர்களின் அந்தஸ்தில் உயர்ந்த நிலையில் இருந்தவர்களாக இருந்ததால் அவள் ஒரு முடிவிற்கு வருவது சுலபமாக இல்லை. இந்த மாணவன் அவளிடம் தன்னுடைய காதலைப்பற்றி துணிவுடன் பலமுறை தன் ஆவலை வெளிப்படுத்தினான். அவளுக்கு யார் மீதும் விருப்பு வெறுப்பு இல்லையென்றாலும், இந்த விஷயத்தில் முடிவு எடுப்பதில் மிகவும் கஷ்டப்பட்டாள்.

இந்த நிலையற்ற குழப்பமான நிலை அவனுக்கு வேதனையாக இருந்தது. ஒரு நாள் அவன், வகுப்பில் அந்த பெண்ணிடம் சொல்லிக் கொள்ளாமல் நேரே வீட்டிற்கு வந்தான். அவன் உற்சாகமின்றி சோர்ந்து போய்விட்டிருந்தான். யார் அவளை தனக்கு உரியவளாக ஆக்குவார்கள்? உலகில் எந்த சக்தி, அல்லது இறைவனோ அந்த பெண் தன்மீது விருப்பங்கொள்ள செய்ய வல்லமை படைத்தது? என்று, பலவாறாக சிந்தித்தவனாக இருந்த போது, திடீரென்று அவன் மனதில் இறைவன்மீது நம்பிக்கை எழுந்து பக்தியுடன் தீவிர

தியானத்தில் ஆழ்ந்தான். மனிதனின் விதியை நிர்ணயிப்பது உண்மையில் இறைவன் என்றால் அந்த அழகியை தன்னுடன் இணைய வைப்பதற்கு கண்டிப்பாக அந்த சக்தி தனக்கு உதவ வேண்டுமல்லவா என்று பலவாறாக எண்ணினான்.

அவன் பிரார்த்தனையை முடித்தவுடனே, தொலைபேசியின் மணி ஒலித்தது. அவள் அவனுடைய காதலை ஏற்றுக் கொண்டு மணப்பதற்கு சம்மதம் என்று செய்தி வந்தது. விரைவில் அவர்களுடைய திருமணம் நடந்தேறியது.

- ✡ உணர்ச்சிகள் சமநிலைக்கு திரும்பி வரும்போது வாழ்க்கை அற்புதமான நன்மை பயக்கக்கூடிய செயல் மூலம் தன் பதிலை வழங்குகிறது.
- ✡ ஏன் அந்த செயல் நன்மையுடையதாக இருக்க வேண்டும்?
- ✡ அது ஏன் செயற்கரிய செயலாக இருக்க வேண்டும்?
- ✡ அது எப்படி உடனே நிகழ்கிறது?

இப்படிப்பட்ட கேள்விகளுக்கு வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளின் உதாரணங்கள் மூலம் பதில் காணமுடியும். வாழ்வு அதன் சட்டப்படி எதிர்மறையான பலனைக்கூட கொண்டுவரக் கூடியது. வாழ்வின் எதிரொலியை கொண்டு வரும் சக்தியை பெற ஆர்வமுள்ளவர்களுக்கு வாழ்க்கையின் நெகட்டிவ் நியதிகள் உதவாமலிருக்கலாம். ஆனால் நடுநிலையில் செயல்படும் ஆராய்ச்சியாளருக்கு அதுவும் உதவும்.





# 36. கலிபோர்னியாவில் ரிஷிய சிருங்கர்

பாப் மெக்ஃபார்லேன் (Bob-Macfarlane) என்பவர் நியுயார்க்கைச் சேர்ந்தவர். அவர் புதுவைக்கு வரும் பொழுதெல்லாம் நல்ல மழை பெய்ததால் ரிஷ்யசிருங்கர் என்ற பெயரை ஈட்டிக் கொண்டார். ஒரு வகையில் அது அவருக்கு எரிச்சல் ஊட்டியது. இப்பொழுது அவர் கலிபோர்னியாவில் வசிக்கிறார். அங்கு மழை அக்டோபர் முதல் பிப்ரவரி வரையில் தொடர்ந்து மழை பெய்யும்.

இந்த ஆண்டு (2003) அக்டோபர், நவம்பர் மாதங்களில் மழையில்லாமல் வறண்டு விட்டது. மழைக்காக பிரார்த்தனை செய்யும் பொழுதெல்லாம் அது பொய்த்ததில்லை என்பது பாப்பின் (Bob) அனுபவம். ஒருமுறை கலிபோர்னியாவில் செய்த பிரார்த்தனையால் பாண்டிச்சேரியில் கடும் கோடை காலத்தில் மழை பெய்தது.

இப்பொழுது வருணபகவான் அவரது பிரார்த்தனைக்கு செவிசாய்க்கவில்லை என்பதைக் கண்டார். அடுத்து என்ன செய்வது? அவர் போகுமிடமெல்லாம் மழைக்காக செய்யும் பிரார்த்தனை தவறுவது இல்லை என்பதால், அவர் அதற்காக எந்தவித கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளும் அவசியம் ஏற்படவில்லை. இப்பொழுது அத்தகைய தருணம் வந்துவிட்டது. தண்ணீருக்கு தனிக்கவனம் செலுத்துவது, வானுலகிலிருந்து மழையை அன்புடன் அழைப்பதாகும் என்பதை உணர்ந்தார்.

- ✡ தண்ணீர் அபரிமிதமாக கிடைக்கும் போதும் அதை மிகச் சிக்கனமாக உபயோகிக்க ஆரம்பித்தார்.

- ✡ அவர் தண்ணீரையும் மற்றும் அதைத் தான் உபயோகித்ததையும் பற்றி, பழைய சம்பவங்களை ஆர்வமாக நினைவு கூர்ந்தார்.

- ✡ தண்ணீர், மழை இவற்றின் ஆன்மாவுடன் ஆத்மார்த்தமாக தொடர்பு கொண்டார்.

வானுலகம் இவரது அழைப்பை ஏற்றது. பத்து அங்குல மழையை பொழிந்து தள்ளியது. ஒரு நாளுக்குப் பின் மேலும் ஐந்து அங்குல மழை பெய்தது. அவர் அந்த மலைத் தொடர்களில் ஒரு பக்கத்தில் வசித்து வருகிறார். மலைத் தொடர்களின் அடுத்த பக்கத்திலும் சூறாவளிக்காற்று வீசி 24 அங்குல மழை பெய்தது.

- ✡ மற்ற எதுவும் வெற்றி பெறாத போது தண்ணீருக்கு கவனிப்பு கொடுப்பது வெற்றி கொடுக்கும்.

- ✡ கவனிப்பு என்பது அன்பின் பிஸிக்கல் வெளிப்பாடாகும். அன்பு ஆன்மாவின் குணம்.

- ✡ தண்ணீர் போன்ற ஜடப் பொருள்கள் கூட கவனிப்பிற்கு பதில் தரும். ஏனெனில் கவனிப்பு அதற்குள்ளிருக்கும் ஆன்மாவை எழுப்புகிறது.

- ✡ ஆன்மா ஆன்மாவை நாடும் பொழுது தெய்வீக பலன்கள் எழுகின்றன.





# 37. முன்கோபம் அல்லது எரிச்சல் ஆன்மீக செல்வவளத்தை தடுக்கும்

1950ல் ஒரு ஆன்மீக பிரம்மச்சாரி ஒழுக்கநெறி தவறாத சமயநெறிவாழ்வில் வாழ்ந்து வந்தார். அவர் பூமிக்கடியில் நீர் ஆதார ஊற்று கண்டறியும் தொழிலை ஏற்று வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்தார். அவருக்கு ஒருவேளை எளிய உணவும் இரண்டு செட் துணிமணிகளும் கிடைக்குமளவிற்கு அத்தொழில் அவருக்கு வருமானம் வழங்கியது. அவர் பலராலும் மரியாதைக்குரியவராக கௌரவிக்கப்பட்டார். தன்னுடைய வாழ்வின் நெறிமுறைகளுக்கு புறம்பாக இல்லாமல் அவர் வசதியான வாழ்வை நாடினார். ஆன்மீக சுபிட்சம் அல்லது சுபிட்சமான ஆன்மீகம் அவர் மனதைக் கவர்ந்தது. அவர் இந்த வாழ்வில் உள்ள பல்வேறு கொள்கை, அபிப்பிராயங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தார். அவை முறையே, சேவை, ஞான விளக்கம், தியானம், பிரார்த்தனை, தீட்சை பெறுதல், மனத்தளவில் தூய்மை பெறுதல், சமர்ப்பணம், சரணாகதி, ஜீவியத்தை உயர்த்த முற்படுதல், தூய்மையான நல்லெண்ணம், இவைகளில் தீட்சை பெறுதல் என்ற கொள்கை அவரது பரம்பரைக்கு ஏற்றதாயிருந்ததால் அதைத் தேர்ந்தெடுத்தார். அது அவருக்கு அவ்வாறே ஏற்பாடாயிற்று.

பரம்பரைக் கொள்கையில் அநேக விதமான வழிமுறைகள் உண்டு என்பதை அவர் அறிவார். இங்கே அத்தகைய வழிமுறைகள் இல்லை என்றும், மலர்கள் மட்டும் சமர்ப்பிக்கப்படுவது உண்டு என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கு

அவர், தான் காணிக்கை செலுத்தப்போவதில்லை என்றும் தனக்கு பொருள் லாபம் வேண்டாம் என்றும் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். மலர்களை சமர்ப்பிப்பதை மட்டும் விரும்பினார். மலர் காணிக்கை செலுத்தி ஆத்ம விளக்கம் பெற்றார். அவர் புதிய ஆன்மீகப் பிறவி எடுத்தது போன்று உணர்ந்தார். அவருடைய பிரம்மச்சரிய தேஜஸ் மேலும் கூடி சுடரொளியாய் பிரகாசம் அடைந்தது. ஆன்மீக சுபிட்சத்தின் பலனாக, அவருக்கு அரசாங்கத்திலிருந்து மாநில வாட்டர் டிவைனர் (State Water Diviner) பதவி உத்திரவு கிடைத்தது. அவருடைய கடந்த கால முப்பது வருட தொழிலில் கிடைத்த வேலையின் அளவிற்கு பனிரெண்டு மாதங்களிலேயே அந்த அளவில் தொழில் கிடைத்தது. அவர் ஆன்மாவின் பலனை வேலையின் பெருக்கமாக அனுபவித்தார். ஆனால் அவருக்குக் கிடைத்த வருவாய் விரைவில் சிறுகச் சிறுக சுருங்க ஆரம்பித்தது. இது ஏன் இப்படி வந்தது என்று அவர் கேள்வியை எழுப்பியபோது, அது அவர் வேண்டுமென்றே விரும்பி ஏற்றுக் கொண்டதன் விளைவாகும் என்று தெரிவிக்கப்பட்டது. அதாவது அவர் ஏற்கனவே தனக்கு பணம் வேண்டாமென்று, மலர் காணிக்கை மட்டும் செலுத்த விழைந்ததற்கு இணங்க, பண வருவாய் குறைந்தது. இதை உணர்ந்த அவர் தன்னுடைய பிடிவாதத்தின் விளைவு இவ்வளவு பெரியதாக வருவதைக் கண்டு அடங்கிப்போனார். தான் ஆணவமாக தர மறுத்த காணிக்கையை தர முன்வந்தார். உடனே தடைபட்டு போயிருந்த எல்லா வருவாயும், தேக்க நிலையிலிருந்த நிலைமை மாறி விரைவாக பணவரவு வரத்தொடங்கியது.





# 38. மலர்களின் ஆன்மீகச் சக்தி

நம்முடைய இறைவழிபாட்டில் மலர்கள் முக்கிய இடம் பெறுகின்றன. அவைகள் மென்மையாகவும் சூட்சுமமாகவும் இருப்பதால் ஆன்மீகச் சக்தியை பெற்றுக் கொள்ளும் தன்மையுடையதாக உள்ளன. தெய்வீக அன்னை சுமார் 800 மலர்களுக்கு ஆன்மீக பெயர்கள் சூட்டி அவற்றின் தன்மையை விரிவாக விவரித்துள்ளார்கள்.

மலர்கள் நம் மனதை ஒருமுகப்படுத்தும் திறனை அதிகரிக்கவல்லது. அப்படி மனதை எளிதில் ஒருமுகப்படுத்த இயலாதவர்கள் மலர்களின் உதவியை நாடலாம். ஒருவர் தன் மாமனாரின் உதவியுடன் தொடங்கிய ஆறு தொழில்களும் நஷ்டமடைந்தன. இவர் நாகலிங்கப்பூ செல்வவளம் தரும் என்று கேள்விப்பட்டார். இந்த மலர் சிவனுக்கு உகந்தவை என்பதால் நாகலிங்கப்பூ பொதுவாக சிவன் கோயில்களில் காணப்படுகிறது. இந்த திவாலான மனிதர் நாகலிங்கப்பூவை இறைவனுக்கு சார்த்தி வழிபட்ட பிறகு ஒரு வேலை கிடைத்தது. மறுநாளே இவரது சம்பளம் இரண்டு மடங்காக உயர்ந்தது. அவர் இந்த மலரை அதிகமாக சேகரித்து இறைவனுக்கு சமர்ப்பித்ததால் இரண்டு வருடங்களில் அவரது வருமானம் அவரது ஊதியத்தைப் போல் 16 மடங்காக உயர்ந்தது. சிவந்த நாகலிங்கப்பூ தன்னலமான சுபிட்சம் தரும் பூ என்றும், வெள்ளை நாகலிங்கப்பூ தன்னலமற்ற சுபிட்சம் தரும் பூ என்றும் அழைக்கப்படுகிறது. மல்லிகை தூய்மையையும், ரோஸ் சரணாகதியையும், பருத்தி ரோஜா தெய்வ அருளையும், காகிதப்பூ பாதுகாப்பையும் தரவல்லது.

ஆன்மாவை அழைப்பவர்களுள் பாதுகாப்பு மலர் பிரபலமடைந்துள்ளது. மக்கள் வெளியூர்களுக்குச் செல்லும்போது விபத்துக்குள்ளாகாமல் இருக்க இந்த மலரை எடுத்துக் கொண்டு போகிறார்கள். இப்படிப்பட்ட மலர்களின் தன்மையைப் பற்றி பல நிகழ்ச்சிகள் உள்ளன. ஒரு பெண்மணி நாகலிங்கப்பூவைப் பற்றி தெரிந்து, தன் குறைந்த வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள அந்த மலரை வைத்து வழிபட்டுவந்தார். ஆனால் அதனால் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை என்று மிகவும் விரக்தி அடைந்தார். அதற்குக் காரணம் வீட்டின் அசுத்தம் சுபிட்சத்தைக் கொண்டு வருவதைத் தடுத்தது. வீட்டை சுத்தம் செய்ய முயன்றவுடனே, அவருடைய வருமானம் திடீரென்று அதிகரிக்கத் தொடங்கியது. ஒரு வருடத்தில் வீடு வாங்கும் அளவிற்கு வருமானம் உயர்ந்து வீடு வாங்கினார். ஒரு குறிப்பிட்ட மலர் கிடைக்கவில்லையென்றால், அந்த மலரை மானசீகமாக நினைத்து, சமர்ப்பித்து வழிபட்டு வந்தால், அதே பலனை அடைய முடியும். மனச்சோர்வு என்பது எல்லோருக்கும் பொதுவானது. சாமந்திப்பூ உடலுக்கு சக்தியைக் கொடுக்கவல்லது. இந்த மலரை கையில் எடுத்து வைத்துக் கொண்டு பிரார்த்தனை செய்தால் சக்தி தன் உள்ளே இறங்குவதை உணரலாம்.





# 39. தீயசக்திகள்

பொறாமை குணம் தன்னுடைய எதிரிகளின் பேரில் சூன்யம் வைக்கத்தூண்டும். பாதிக்கப்பட்டவர் வேறு மந்திரவாதியை அணுகி பரிகாரம் தேடுவார். ஆன்மாவை அழைப்பவர்களுக்கு இத்தகைய பாதிப்பு ஏற்படாது. வக்கிர குணம் படைத்தவர்களின் இழி செயலால், மத நடவடிக்கை நடைபெறும் இடம் துர்நடத்தையுள்ள இடமாக மாறிவிடுகிறது. மதவழிபாட்டில் வெளிப்படும் சக்தி, அதிக தீய சக்திகளை உண்டாக்கும். மேலை நாடுகளில் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் மருத்துவ சிகிச்சையை நாடுகிறார்கள். சிலர் இந்த முறைக்கு இசைகிறார்கள், மற்றும் பலர் அவ்வாறு விரும்புவது இல்லை.

ஒரு பி.எச்.டி. *(Ph.D.)* பட்டம் பெற்றவர் இத்தகைய ஒரு சிறிய உபத்திரவத்திற்கு ஆளானார். இரவில் தூக்கத்திலிருந்து எழுந்து உட்கார்ந்து குரைக்க ஆரம்பித்தார். மறுநாள் காலை அவர் மனைவி இதைப்பற்றி கூறியதை அவரால் நம்ப முடியவில்லை. ஏழ்மை மிகுந்த கிராமத்திலிருந்து வந்த இவர், உயர் கல்வி பெற்றவராக இருந்த போதும், அசுத்தமான கெட்ட பழக்கங்களை விட்டுவிட முடியவில்லை. அவரது துணிமணிகள் அழுக்கடைந்ததாகவும், வீடு நன்றாகக் கழுவி கூட்டிப் பெருக்கப்படாமலும், படுக்கை விரிப்புகள் துவைக்காமல் அழுக்குடனும், அந்த வீடு அசுத்தம் நிறைந்ததாக இருந்தது. அவருடைய மனைவி அவரை இந்த விசித்திரமான குணத்திலிருந்து மீட்க விரும்பினாள். அது அவருக்குத் தெரியாது. அவர் ஆன்மாவை அழைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் பலன் இல்லை. அவருக்கு இதில் நம்பிக்கையிருந்ததால் தொடர்ந்து முயற்சித்தார்.

ஆனால் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை. அவர் ஒருவரிடம் சரியான அறிவுரையைக் கேட்டறிந்தபின், சுத்தத்தைப் பற்றிய முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டார். அவர்கள் வீட்டில் தரையைக் கழுவி சுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். கூரையில் ஒட்டடை அடித்து சுத்தப்படுத்தினார்கள். படுக்கை விரிப்புகளை துவைத்தார்கள். தலையணை உறைகளை மாற்றினார்கள். அவர் படுக்கப் போகுமுன் அகர்பத்தி ஏற்றப்பட்டது. இரவில் படுக்கப் போகுமுன் குளிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். அவர் தீய சக்திகள் விலகும்வரை இந்தப் பழக்கத்தை தொடர்ந்து மேற்கொள்ள தீர்மானித்தார். வீடு சுத்தம் அடைந்த முதல் நாளன்றே தீயசக்தி விலகிற்று.

மந்திரவாதிகள் தீய சக்திகளை விரட்டுபவர்கள். சில நேரங்களில் பாதிக்கப்பட்டவரின் ஆன்மா மிகவும் சக்தி வாய்ந்ததாக செயல்பட்டு, தீயசக்தியை செயலிழக்கச் செய்கிறது. பாதிக்கப்பட்டவர் தீய சக்திகளில் நம்பிக்கையில்லாதவராக இருந்தால், மந்திரவாதியின் மந்திரசக்தி அவரைக் கட்டுப்படுத்தாது. ஆன்மாவை அழைத்தால் எப்பொழுதும் தவறுவது இல்லை. வழக்கமாக ஆன்மாவை அழைக்கும் போது முதல் தருணத்திலேயே தீய சக்தி, பாதிக்கப்பட்டவரை விட்டு விலகிப் போய் விடுகிறது.





# 40. திருப்பு முனை

மனிதன் தன் திறமைகள் மீது முழு நம்பிக்கை வைத்துள்ளான். அந்த திறமைகள் உபயோகமற்றவைகள் என்று தெரிந்து கொள்ளும் வரையில் அந்த நம்பிக்கையை விடமாட்டான். வியாபாரத்தில் இனிமேல் மீள முடியாது என்ற கட்டம் உண்டு. இதை உணராமல் மீள முடியாத கட்டத்தை தாண்டிப் போகும் வரை விழிப்புணர்வு வராதவர் கஷ்டத்தில் மூழ்க நேரிடும். ஒவ்வொரு பகுதியிலும் அப்படிப்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்பதை நாம் அறிவோம். விளையாட்டுப் போட்டியில், எந்த பாயிண்டை இழக்கக் கூடாது என்பதை ஒரு விளையாட்டு வீரர் நன்கு அறிவார். அத்தகைய நிலையில் ஒரு அகில உலக விளையாட்டுப் போட்டியில் ஒரு வீரர் சில நிமிடங்கள் நின்று மனதை ஒருமுகப்படுத்தி பந்து போட ஆரம்பித்தார். அதன்பின் அவர் தொடர்ந்து பாயிண்டுகளை பெற்று, போட்டியில் வெற்றி கண்டார். அந்த வெற்றி அவரது நாடு அதுவரையில் ஜெயிக்காத ஒரு வெற்றியாகும்.

ஆட்டம் முடிந்ததும் பத்திரிக்கையாளர்கள் அவரது வெற்றியின் ரகசியத்தை அறிய அவரை சூழ்ந்து கொண்டார்கள். அவர் தான் ஆட்டம் தொடங்குவதற்குமுன் தெய்வீக அன்னையை பிரார்த்தனை செய்ததாகக் கூறினார். தெய்வீக அன்னை, லோகமாதா என்ற ஆன்மாவை அழைத்தால் தோல்வி என்பதையேக் காணமுடியாது என்பதை அறிந்தவர்களுக்கு இந்த உண்மை புரியும்.

மனிதன் மனத்தால் செயல்படுகிறான். வழக்கமாக ஒருவர் மனத்தின் அடியில் உள்ள உணர்ச்சிகளால் செயல்படுகிறார்.

உணர்ச்சிகள் சக்தி வாய்ந்தவை. ஆனால் மனம் அப்படிப்பட்டது அல்ல. அது நல்லது, கெட்டது என்ற பாகுபாட்டை சிந்தித்து செயல்படக்கூடியது. யோகத்தில் மனதைக் கடந்த நிலைகள் ஆன்மீக மனநிலைகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை நான்காகும். சிவன், விஷ்ணு, வினாயகர், இந்திரன், இலட்சுமி போன்ற தெய்வங்கள் உறையும் லோகங்கள் இந்த நான்காம் நிலையில் உள்ளடங்கியது.

மனித மனத்திற்கு மேல் மௌனம் காத்து நிற்கும் முனிவர் மனம் உள்ளது. அதற்குமேல், உலகக் காட்சிகளை அகக்கண்களால் காணும் ரிஷியின் மனம் உடையது. அவற்றைக் கடந்து ஆத்ம ஞானத்தை நேரடியாக உணரக்கூடியது யோகியின் மனம். அதற்கும் மேலே உள்ளது தெய்வங்கள் உறையும் தெய்வ லோகம். அவற்றையும் கடந்து இருப்பது சத்திய ஜீவியம். சித் என்று சொல்லப்படும் ஜீவிய உலகம்தான் தெய்வீக அன்னையின் பிறப்பிடம். இவ்வுலகம் படைக்கும் திறனுடையது. எனவே அவ்வுலகத்தைச் சேர்ந்த அன்னையை நம் வாழ்வில் அழைப்பது மிகவும் சக்தி வாய்ந்தது. அது தவறுவதே இல்லை.





# 41. கர்மம்

நமது மரபு கொள்கை பிரகாரம், கர்மவினை தவிர்க்க முடியாதது. ஒரு தனவந்தர் தன்னுடைய இளம் பிராயத்திலேயே இரண்டு கண்களின் பார்வையை இழந்துவிட்டார். இழந்த பார்வையைத் திரும்பப் பெறுவதற்கு ஒரு மகானைப் போய் பார்க்கப் போனார். அங்கே அவரைப் பார்ப்பதற்கு ஏராளமானவர்கள் காத்திருந்தார்கள். அந்த மகான் தரிசனத்துக்கு ஒவ்வொருவரும் தங்கள் முறை வரும்வரை பொறுமையுடன் காத்திருக்க வேண்டியிருந்தது. பார்வை இழந்த தனவானின் முறையும் வந்தது. திடீரென்று அவர் மனதில் ஒரு எண்ணம் தோன்றிற்று. தன் விரலில் அணிந்திருந்த வைர மோதிரத்தை அந்த மகானுக்கு காணிக்கையாகக் கொடுக்க வேண்டியதாக இருக்குமே என்று எண்ணினார். உடனே அந்த மோதிரத்தை கழட்டி தன் துணியில் மறைவிடத்தில் வைத்துக் கொண்டார். அந்த மகான், தனவான் மறைத்ததை ஆன்மீக சக்தியால் அறிந்து கொண்டார். பார்வையிழந்தவரின் பிரார்த்தனையை கண்டு கொள்ளவில்லை. மகான் அவரிடம் சிரித்துக் கொண்டே இங்கே திருடர்கள் யாரும் இல்லை. உங்கள் மோதிரத்தை நீங்கள் தைரியமாக அணிந்து கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். உங்கள் பார்வையிழப்புக்குக் காரணம் உங்களது கர்மவினைதான். அதிலிருந்து மீள்வதற்கு ஒரு விமோசனமும் இல்லை என்று சொன்னார்.

நமது பாரம்பரிய வழிபாட்டு முறைகளில் கர்ம வினைக்கு தீர்வு இல்லை என்பது உண்மை. இதில் ஆன்மீக உண்மை என்னவென்றால் இந்த பிரபஞ்சம் ஜீவியத்திலிருந்து தோன்றிய சக்தியால் தோற்றுவிக்கப்பட்டது என்பதாகும். இந்த

சக்தியானது ஒருவருடைய கடந்த கால கர்ம வினைகளை சேகரித்து வைக்கிறது. அது சக்தி வெளிப்படுத்தும் ஜீவியத்தில் இல்லை. ஜீவியம் என்பது முழுமையானது. அதை பகுக்க முடியாது. அது கர்மத்தை சேகரம் செய்வதில்லை. ஜீவியம் ஆன்மாவிலிருந்து வெளிப்படுகிறது. கர்மம் ஆன்மாவைக் கட்டுப்படுத்தாது. ஏனெனில் அது காலத்தைக் கடந்து நிற்பது. காலத்திற்குள் காரண காரியம் செயல்படுவதால் கர்மா வளர்கிறது. காலத்தைக் கடந்த ஆன்மா தன் இச்சையால் செயல்படுவதால் இங்கு காரண காரியங்களுக்கு இடம் இல்லை. ராமருடைய திருவடி பட்டதால் அகல்யையின் சாபம் நீங்கிற்று. அவர் கடவுளின் அவதாரமானதால் காலத்தின் கடுமையான விதிகளுக்கு உட்பட்டவரல்ல.

ரிஷி தன் தியானத்தில் ஆழ்ந்து காலத்தைக் கடந்த நிலையை அடைகிறார். ஆன்மாவை நம்பும் ஒருவர் ஆன்மாவை அழைக்கும்போது, காலத்தைக் கடந்த நிலை காலத்தின் மேல் செயல்படுவதால் கர்மம் கரைகிறது.





# 42. ஆன்மாவை அழைக்கும் வழிகள் - I

தவம், தியானம், ஜபம் போன்றவைகள் ஆன்மாவை அழைப்பதற்கான வழிகளாகும். இது, தபஸ்வி, முனிவர், ரிஷி, யோகி ஆகியோர்களுக்கு உள்ள ஆன்மீக ஞானத்தை குறிப்பிடுவதாகும். இது வாழ்விற்கு அப்பாற்பட்டது. நான் ஆன்மா என்று இங்கு குறிப்பிடுவது, வாழ்வில் ஆன்மாவை வெளிப்படுத்துவதாகும். அதை பகவான் ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் சைத்திய புருஷன் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த சைத்திய புருஷன்தான் நம் வாழ்க்கையில் நேரடியான பலனைக் கொண்டு வருகிறான். ஆன்மாவை அழைப்பது கடினமானது. ஏனெனில் அது தூய்மையையும், உண்மையையும் எதிர்பார்க்கிறது. திறமையும் வாழ்வில் அதன் வெளிப்பாடும் வேறு வேறு என்பதைப் போல உண்மையும் வாழ்வில் அதன் வெளிப்பாடும் வேறு வேறாகும்.

**"வாழ்வில் உண்மையின் அழைப்பினை சைத்திய புருஷன் கேட்கிறான்".**

ஒரு வழக்கறிஞர் தன் கட்சிக்காரரின் வழக்கை எடுத்து அதை நல்ல முறையில் வழக்காடுவது முதற்கட்டம். ஆனால் அதையே அவர் தன் சொந்த நண்பரின் வழக்காகக் கருதி உண்மையான ஆர்வத்தோடு வாதாடும்போது, அவருடைய திறமை உயர்ந்ததாகிவிடுகிறது. அவர் கீழ் கோர்ட்டில் வக்கீலாக இருந்தாலும் அவர் வக்கீல் தொழிலில் திறமையாக இருக்கும்பட்சத்தில், மேல்கோர்ட்டில் எப்படி சட்டத்தின்

நுணுக்கத்தை வைத்து வாதாடுகிறார்களோ, அதே போல கீழ் கோர்ட்டிலும் இவர் திறமையுடன் வாதாடி வெற்றிபெற முடியும். அந்தத் திறமை, மேல் கோர்ட்டிற்கு அவரை கொண்டு செல்லும். நியாய உணர்வு மனிதனிடம் உள்ளது. ஒவ்வொரு மனிதனும் அந்த உணர்வால் உந்தப்படுவதுண்டு. உன் எதிரி கூட அத்தகைய உணர்வு உடையவன். கெட்ட குணம் உடையவனும் வெற்றிபெறும் போது நாம் அவனிடம் முறையிடுகிறோம். கொடுங்கோலனின் நியாய உணர்விற்கு கூட அதன் பயன் எவ்வாறு இருந்தாலும் நாம் முறையிடுகிறோம். திரௌபதி, மானபங்கப் படுத்தப்பட்டபோது அநீதிக்கு எதிராக, பீஷ்மர், துரோணர், கிருபர், விதுரர் இவர்களிடம் முறையிட்டும் பயனில்லை. இந்த பெரிய ஆன்மாக்கள் கூட தவறலாம். ஆனால் ஆண்டவன் தவறுவதில்லை. அவருடைய பதில் ஆபத்திற்கு உதவுவதாக மட்டுமிருக்காது. பெரிய நன்கொடையாக இருக்கும்.

கீழ்கோர்ட்டில் வழக்காடும் இந்த வழக்கறிஞர், நீதிபதியின் நீதி உணர்விற்கு முறையிட்டால் அவருக்கு கிடைக்கும் வெகுமதிக்கு அளவே இருக்காது. மேற்கண்டவை ஆன்மாவை அழைப்பதற்கான நான்கு வழிகளாகும். அவை சக்தி, வீரியம், தெய்வ பிரகிருதி மற்றும் சிரத்தையாகும். முதல் மூன்று நிலைகளைக் கடந்ததும் ஒருவன் சிரத்தை அடைகிறான். நம்பிக்கை ஆன்மாவை அழைக்க உதவுகிறது. வாழ்வில் சைத்திய புருஷன் வெளிப்பட்டு அளவற்ற பலன்களைக் கொடுப்பான்.





# 43. ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - II

ஒருவர் இப்படியும் நினைக்கலாம். "நான் திரௌபதி அல்ல; கிருஷ்ண பரமாத்மாவும் என் குரலுக்கு ஓடிவந்து காப்பாற்றவும் மாட்டார்''. சாதாரண மனிதர்களின் வாழ்விலிருந்து அனேக உதாரணங்களை எடுத்துக் கூறுவதற்கு முன்பாக, இந்தக் கருத்தைப் பற்றி காரணங்களுடன் விளக்கி நிரூபிக்க வேண்டியுள்ளது. ஒருவர் தன் வேலையில் ஈடுபட்டிருக்கும் போது, சக்தி, வீரியம், தெய்வ பக்தியைக் கடந்து சிரத்தையுடன் நம்பிக்கையோடு செயல்படும் பொழுது, அவரது குரல் இறைவனின் - சைத்திய புருஷனின் - செவியில் விழுந்து வெற்றியைக் கொடுக்கும் என்பது இதனுடைய சித்தாந்தம். சக்தி என்பது தெம்பு. சக்தியினால் வேலை செய்வது உடல் வலிமையினால் செய்வதாகும். வீர்யம் என்பது ஒரு வேலையை விருப்பத்துடன் தன் உணர்விலிருந்து எழும் சக்தியை எல்லாம் அதில் செலுத்தி வேலை செய்வதாகும். தெய்வ சக்தியின் மீது நம்பிக்கை வைத்து செயல்படுவது தெய்வப் பிரகிருதியாகும். இது எதைக் குறிக்கிறது என்றால் மனிதன் தன் சொந்த சக்தியினால் மட்டும் செயல்படாமல் தான் வணங்கும் தெய்வத்தின் மீது வைத்திருக்கும் ஆர்வத்தாலும், நம்பிக்கையாலும் செயல்படுகிறான் என்பதைக் காட்டுகிறது. இதனால் வேலையின் தரம் அதிகரித்துக் காணப்படுவதோடு, மனிதன் தன்னுடைய பர்சனாலிட்டியும் பின்னுக்குப் போவதைக் காண்கிறான். மேலும் உயர்நிலைக்குச் செல்ல விரும்பினால் மனிதன் தன் திறமைக்குப் பதிலாக அங்கு அன்னை பராசக்தியின் சக்தி செயல்படுகிறது என்பதைக் காண்கிறான். அவனுடைய பார்வையில் வேலையில் தான் கரைந்து தெய்வீக அன்னை மட்டும் இருப்பதை உணர்கிறான்.

இது கற்பனையோ கருத்தோ அல்ல. மத போதனையின் உணர்வும் அல்ல. அங்கே வேலையில் சாட்சாத் தெய்வீக அன்னையே இருக்கிறார். அன்னை மட்டும்தான் அந்த வேலையில் செயல்படுகிறார். நாம் எல்லோரும் தெய்வீக அன்னையின் கையில் செயல்படும் கருவிகள்தான். இது எப்படி இருக்கிறது என்றால், நாம் இரயிலில் போகும்போது நம்மை இரயில்தான் சுமந்து செல்கிறது. நம்முடைய மூட்டை முடிச்சு பொருள்களையெல்லாம் நாம் சுமக்கவில்லை. இரயில் பெட்டியின் பரண்தான் சுமக்கிறது. அதுபோல நம்மையும் நமது சுமைகளையும் அன்னைதான் தாங்குகிறார். இது ஒரு அறிவு சார்ந்த விவாதமில்லை. நம் அறிவிற்கு தெரிந்த உண்மையாகும். நாம் நம்பிக்கையால் செயல்பட்டால், ஆன்மாவை நம் வாழ்வில் அழைக்க முடியும். அப்படி அழைத்தால் ஆன்மா நம் வாழ்வில் செயல்படவும் துவங்குகிறது.

ஆன்மா செயல்படும்போது அதன் பலன்கள் பகுத்தறிவுக்கு சவாலாக இருக்கும். நம் வாழ்வின் செயல்பாடு ஒவ்வொன்றும் ஆன்மீக ரீதியில் உயர்ந்து, இறை சக்தியால் ஆசீர்வதிக்கப்பட்டு இன்ப வாழ்விற்கு உரியவராகிறோம்.





# 44. ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - III

போர்க் காலத்திற்கு முன்பு திருமண ஏற்பாடுகளை சில மாதங்களுக்கு முன்பாகவே செய்ய ஆரம்பித்து விடுவார்கள். ஏனெனில் நெல்லை உரலில் இட்டு, கையால் உலக்கையால் குத்தி அரிசியாக்கவும், அப்பளம் கடையில் வாங்கக் கூடாது என்று, வீட்டிலேயே செய்வதற்கும் காலம் தேவைப்பட்டது. உணவுப் பொருள்கள் யாவும் உள்ளூரிலேயே வாங்க வேண்டியிருந்தது. சிலவற்றை தன் விளை நிலத்திலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவற்றையெல்லாம் சேகரம் செய்வதற்கு உழைப்பும் காலமும் தேவைப்பட்டது. துர் அதிர்ஷ்டமுள்ளவர்கள் தங்களது ஏழ்மையாலும் சண்டையிடும் சுபாவத்தாலும் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தார்கள். அவர்கள் எந்தவிதமான உதவியும் இல்லாமல் மிகுந்த பொறுப்புக்களை ஏற்று எல்லா வேலைகளையும் தாங்களே கவனிக்க வேண்டியதாய் இருந்தது. பொதுவாக குடும்பங்கள் திருமண நிகழ்ச்சிகளின் போது வேலையில் பிரியமாக ஒன்று கூடி ஒற்றுமையாக செயல்படுவார்கள்.

திருமண விசேஷத்திற்கு உறவினர்கள் யாவரும் வந்து உதவிபுரிவார்கள். திருமண வேலைகள் மிகவும் கடினமானதாக இருப்பதால் தங்கள் பங்குக்கு வேலை செய்வார்கள். இதனால் வேலை பளு குறையும். போருக்குப் பிறகு குறிப்பாக 1970, 1980க்குப் பிறகு இந்நிலை மாறிவிட்டது. நூறாண்டு காலமாக இருந்துவந்த, ஒன்பது நாட்கள் மணவிழா ஒருநாள் நிகழ்ச்சியாக குறைந்துவிட்டது. திருமணம் நடக்குமிடங்கள் கிராமத்திலிருந்து நகரங்களில் உள்ள திருமண மண்டபங்களுக்கு மாறியது. திருமண

மண்டபங்கள் சினிமா தியேட்டர்கள் போல் அதிகரித்து விட்டன. திருமணப் பந்தல் அலங்காரம், ஒளி விளக்குகள் அமைத்தல், விருந்து, சமையல், நாதஸ்வரம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க, வர்த்தகம் மற்றும் வணிக அமைப்புகள், இது போன்ற சேவையை செய்ய முன்வந்து விட்டன. இதற்கு எல்லாம் நாம் செய்ய வேண்டியது, அவர்கள் சேவைக்கு பணம் மட்டும் செலுத்தி, வசதிகளை பெற்றுக் கொள்ள வேண்டியதுதான். திருமணம் நடத்துவதில் மலை போன்ற வேலை, ஒரு குழந்தை விளையாட்டு போல் ஆகிவிட்டது.

உயர்ந்த நிலையில் உள்ள செல்வந்தர்கள் சமூகத்தில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட செல்வந்தர் ஒருவரின் மகளுக்கு திருமணம் செய்ய வேண்டும் என்றால் அவருடைய குடும்பத்தில் சம்பந்தம் செய்து கொள்வதை ஒரு கௌரவம் எனக் கருதி பல குடும்பங்கள் அவருடைய சம்மதத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். பணம் என்பது ஒரு பொருட்டல்ல. அப்படி திருமணம் நிச்சயிக்கப்பட்டால், அவரது உறவினர்களும், நண்பர்களும், அவரது கம்பெனியில் பணிபுரிபவர்களும், இந்த திருமணத்திற்காக வேலை செய்வதை பெருமையாகக் கருதுவார்கள். அதில் அவருடைய பங்கு என்னவென்றால், அவர் தன் மகளின் திருமணத்திற்கு அனுமதி அளிக்க வேண்டியதுதான். சக்தி, வீரியம், தெய்வப் பிரகிருதி, நம்பிக்கை என்பனவற்றை தனி மனிதன் செய்யும் திருமணம், கிராமத்தில் செய்வது, நகரத்தில் கல்யாண மண்டபத்தில் செய்வது, செல்வந்தர் நடத்தும் திருமணம் என்பவற்றுடன் ஒப்பிடலாம். மேற்கண்ட சக்தி, வீரியம், தெய்வப் பிரகிருதி மற்றும் நம்பிக்கை என்ற அணுகுமுறைகளை எப்படி அன்றாட வாழ்க்கையில் நாம் கொண்டு வருவது?





# 45. ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - IV

சக்தி, வீரியம், தெய்வ சங்கல்பம் இவற்றிலிருந்து அடுத்த கட்டம் நம்பிக்கைக்குப் போவதானது ஆன்மாவை அழைக்கும் வழியாகும். சக்தி, கையில் உள்ள வேலையை செய்வதாகும். வீரியம் என்பது மிக்க ஈடுபாடுடன் செய்வது. தெய்வ சங்கல்பம் என்பது வேலையில் நமக்குள்ள சொந்த ஈடுபாட்டை அடுத்த உயர்நிலைக்கு உயர்த்துவதாகும். அந்த வேலையில் தொழில் திறனை வெளிப்படுத்துவது தெய்வத்தின் அருள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு வேலையை நம்முடைய நேர்மையான திறமைகளுடன், சாத்தியமான எல்லா வழிகளிலும் முயன்று செயல்படுத்த வேண்டும். இதில் ஒன்றுமே குறை இருக்கக்கூடாது. கடுமையான உழைப்பாலும், திறமையுடனும், புத்திசாலித்தனத்தோடும் யார் உழைக்கிறார்களோ, அவர்களுக்கு ஆன்மாவின் பலன் கிடைக்கிறது. இந்த முயற்சிகளுக்குப்பின் அடுத்த கட்டத்திற்குப் போவது நம்பிக்கை. நம்பிக்கையில் செயல்படுவதை இரண்டு மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை மனத்திற்கும் உடலுக்குரியதும், அல்லது மனம் உணர்வு மற்றும் உடலுக்குரியது என்பனவைகளாகும். முதலாவதான மனம், அறிவைக் கொடுக்கிறது. இரண்டாவதான உணர்வு, உற்சாகமான சக்தியை அளிக்கிறது. மூன்றாவதான உடலுக்குரியது, திறனை வெளிப்படுத்தி பலனைத் தருகிறது.

அறிவின் பகுதி மனம் - மனத்தின் திறன் அறிவு. வாழ்வில் நாம் ஆன்மா மீது நம்பிக்கை வைப்பதால், ஆன்மா நினைத்தற்கரிய நல்ல பலன்களைக் கொடுக்கும் என்பதைப்

புரிந்து கொள்ள வேண்டும். நம்பிக்கை உயர்ந்து மனம் இந்த உண்மையைத் தெரிந்து கொண்டதும் மனதில் உடனே அமைதி ஏற்பட்டு, நம்முள் சக்தி பெருகுவதை வெளிப்படையாக உணர முடிகிறது. இவ்வாறு உணரப்பட்ட சக்தி ஆன்மீக சக்தியாகும். இதைப் புரிந்து கொள்வது மிகவும் சிறந்தது. இந்தக் கருத்தின் மகிமையை, உணர்ச்சி புரிந்து கொள்கிறது. மனதில் உணரப்பட்ட சக்தி, வெள்ளப் பிரவாகமாக பெருகுகிறது. தெரிந்து கொள்வது சக்தி. ஈடுபாடு காட்டுவது சக்தி பெரு வெள்ளமாவது. ஆன்மாவின் திறனை நம்புவது மூன்றாம் கட்டம். அப்பட்சத்தில் பெருகும் சக்தி, அளவற்ற அனந்தமாய் பெருகி பலன்கள் அளிக்கவல்லது. பக்தர்களின் அனுபவத்தில் பலவகையில் பலன்கள் 24 மடங்காகவும், 365 மடங்காகவும் அதிகரித்துள்ளன. ஒருவருடைய அனுபவத்தில் மட்டும் பலன் 1500 மடங்காக அதிகரித்துள்ளது. மற்றும் ஒருவருடைய அனுபவத்தில், ஒரு குறிப்பிட்ட நிலையில் விவரிக்க முடியாத அளவிற்கு, எண்ணிலடங்கா பலன்களைக் கண்டார்.





# 46. ஆன்மாவை வாழ்வில் அழைக்கும் வழி, சைத்திய புருஷன் - V

ஓம் என்பது பிரணவ மந்திரம். ஓம் என்ற சப்தம் மாற்றமில்லாத பிரம்மம் மாற்றமுள்ள பிரம்மமாகிற, இடைவெளியில் உண்டாகிறது. பிரம்மம் எனக் கூறுவது அக்ஷரப்பிரம்மம், க்ஷரப்பிரம்மம் எனப்படுவது. அக்ஷரப்பிரம்மம் க்ஷரப்பிரம்மமாகவும், ஆன்மா பிரகிருதி என்ற இயற்கையாகவும் ஆகிறது. அந்த நிலை (Plane) கடவுள் உறையும் பிரபஞ்சத்தின் ஜீவியமாகும். 'ஓம்' என்ற ஒலியை திருப்பித் திருப்பி எழுப்பிக் கொண்டே இருப்பது, நம்மை பிரபஞ்சத்தின் ஜீவியத்திற்கு அழைத்துச் செல்லும் சரியான வழியாகும். ஆனால் உள்ளே உண்மையில்லாமல் வெறும் வாயால் மட்டுமோ அல்லது மனத்தால் மட்டுமோ உச்சரிப்பதால் பயன் ஒன்றும் இல்லை. உள்ளே நாம் தேடுவதில் உள்ள உண்மை தான் ஆன்மீகத்தில் வலிமையான உபகரணமாகும். உள்ளே ஆன்மீக முதிர்ச்சி உள்ளவர் ஓம் என்ற சொல்லை சில சமயம் உச்சரித்தாலே அவருடைய மேல் மனதிற்கு தெரியாமல் கூட, ஓம் அவரை உயர் நிலைக்கு கொண்டு செல்லும். இறைவனை நேருக்கு நேர் சந்திக்கலாம்.

ஆன்மீக முதிர்ச்சிப் பெற்றவர்கள், மென்மையான நல்ல குணம் உடையவர்களாக இருப்பார்கள். அவர்களை நாம் நல்லவர்கள் என்று கூறுகிறோம். அவர்கள் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அன்பாகவும் மரியாதையாகவும் இருப்பார்கள். அவர்கள் மற்றவர்களோடு

பேசும் பொழுதும், அளவோடும் மென்மையாகவும் பேசுவார்கள். அவர்கள் எப்போதும் பொறுமையாக இருப்பார்கள். தனக்கு என்ன நடந்தாலும் எரிச்சல்பட மாட்டார்கள். அவர்களுடைய வேலை, மற்றவர்களுடையதைக் காட்டிலும் திறனுள்ளதாகவும், சிறப்பாகவும் இருக்கும். வேலையில் சிறப்பு என்பது, வேலையில் ஆன்மா செயல்படுவதாகும். ஒருவருடைய வேலை ஒழுங்கற்றதாக இருந்தால் அதை உணர்ந்து கொண்டு, அதை முறைப்படுத்தி செயல்படுத்தத் தொடங்கலாம். இது ஆன்மீகத்தை நோக்கிச் செல்லும் வழியாகும். ஒருவர் உணர்ச்சிவயப்பட்டவராக இருந்தால், எதையும் சிந்திக்காதவராகவும் அல்லது சிந்திக்க திறனற்றவராகவும் இருந்தாலும், சிந்திக்க முயற்சி செய்தால் அவ்வகையில் ஆன்மாவை நோக்கிச் செல்லலாம். வாழ்வு அனைத்தும் ஆன்மீகம் என்பது தத்துவம். அழுக்கும், அசுத்தமும் நிறைந்த வீட்டைச் சுத்தப்படுத்தி, தொடர்ந்து சுத்தமாக வைத்துக் கொள்வது என்ற உறுதியான நிலை, ஆன்மீகத்தை நோக்கி ஒரு அடி எடுத்து வைப்பதாகும். எதிர்மறையான நிலையிலிருந்து உடன்பாடான நிலைக்குப் போவதும் ஆன்மாவை நோக்கிச் செல்வதாகும். வாழ்வு அந்த முயற்சிகளுக்கு ஏற்றாற்போல் பலன் கொண்டு வரும். சுத்தம், ஒழுங்கு, உண்மையான நிலை ஆகியவைகளில் சிறப்புடன் முழுமையடைந்தால் அதிக ஆன்மீக விழிப்பு உண்டாகும்.





# 47. வாழ்வில் ஆன்மாவை அழைக்கும் வழிகள், சைத்திய புருஷன் - VI

மனிதனின் உடல் உழைப்பு அவனுக்கு திறமையைக் கொடுக்கிறது. அவன் உணர்வால் செய்யும் வேலை அவனுக்கு சமூகத்தில் மனிதர்களிடையே பரஸ்பர உறவுக்கு வேண்டிய திறமையை அளிக்கிறது. மனத்தினால் செய்யும் வேலையானது, புரிந்து கொள்ளும் ஆற்றல், ஞாபக சக்தி, சிந்திக்கும் திறன், மதிப்பிடும் திறன் போன்ற திறமைகளைக் கொடுக்கிறது. பண்புகள் ஆன்மீக திறமைகளாகும். ஒரு வேலையில் பண்புகளை ஈடுபடுத்துவது அதில் ஆன்மாவை ஈடுபட செய்வதாகும். உலகில் எந்த ஒரு வேலைக்கும் அதற்கென ஒரு தனி பண்பு உண்டு. அவை நம்மால் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் இருக்கலாம். பொதுவாக நாம் அறிந்துள்ள பண்புகள் யாதெனின் விசுவாசம், நேர்மை, ஒழுக்கம், பாதுகாப்பு, மற்றவர் கருத்துக்கு மதிப்பு அளித்தல், போன்றவைகளாகும். வேலைகளில், காலம் தவறாமை, சுத்தம், ஒழுங்குமுறைப்படுத்துதல், போன்றவை முக்கியமான பண்புகளாகும். வாழ்வின் பண்புகள், இனிய சுபாவம், அன்புடைமை, கவனம், பாசம், சுறுசுறுப்பு மற்றும் மனத்திற்குண்டான பண்புகள் விசுவாசம், நேர்மை முதலானவைகளாகும். ஆன்மீகப் பண்புகள், மௌனம், சூட்சுமம், உள்நோக்குதல் மற்றும் முன்கூட்டியே அறியும் ஞானம் என்பதாகும்.

வேலையின் தரத்தை, உடல், மனம் என்ற நிலைகளிலிருந்து ஆன்மீக நிலைக்கு உயர்த்துவது என்பது,

அந்த வேலையில் ஆன்மாவை ஈடுபடுத்துவதாகும். ஆன்மீகப் பண்புகள் எந்த ஒரு வேலையையும் அதன் நிலையிலிருந்து ஆன்மீக நிலைக்கு உயர்த்தும் திறன் கொண்டவைகளாகும். இந்தியாவில் காலந்தவறாமை என்பது வழக்கமாக இல்லாமல் அது விதிவிலக்காக உள்ளது. ஒரு கம்பெனியில் நேரம் தவறாமை இல்லாத போது, அதை எல்லா நிலைகளிலும் நேரத்தோடு வேலை செய்ய வேண்டுமென்று உறுதியை எடுத்து அமுல்படுத்த முயன்றால், அங்கு ஆன்மாவானது அந்த கம்பெனியின் வேலைத் திறனை இரண்டு மடங்காக உயர்த்தும்.

ஒரு சிறிய முனிசிபல் நகரத்தில் அமைந்திருந்த இரண்டு பள்ளிக்கூடங்களில் ஒன்று நகரத்தின் மையப் பகுதியில் இருந்தது. அந்த பள்ளியில் சமூகத்தில் உயர்ந்தோர் குடும்பக் குழந்தைகளே சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இதில் திறமையான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். மற்றொரு பள்ளி, நகர எல்லைக்கு வெளியில் இருந்தது. இந்தப் பள்ளியில் சமூகத்தின் அடிமட்டத்திலிருந்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் குழந்தைகள் மட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இந்தப் பள்ளிக்கு ஆசிரியர்கள் நிரந்தரமாக இருப்பதில்லை. ஆனால் இந்தப் பள்ளி நேரந்தவறாமை என்ற உயர்ந்த ஒழுங்குக் கட்டுப்பாட்டை ஒவ்வொரு வேலையிலும் தவறாமல் கடைப்பிடித்து வந்தது. பிரிட்டிஷ் ராஜாங்கம் பிரபலமாக இருந்த காலத்தின் போது, ஒரு சமயம் மாவட்ட கல்வி அதிகாரி பள்ளியில் ஆய்வு செய்வதற்கு ஒரு மணி நேரங்கழித்து தாமதமாக வந்ததால், அவர் அந்த பள்ளியில் உள்ளே நுழைய அனுமதிக்கப்படவில்லை. நகரத்தின் மையப்பகுதியில் இருந்த மற்றொரு பள்ளிக்கூடமோ எந்த ஒரு வேலையையும் நேரத்தோடு செயல்படும் முறையைப்





பின்பற்றுவதில்லை. 1950ல் ஏழைக்குழந்தைகள் படிக்கும் பள்ளி 80% தேர்ச்சி பெற்றது. ஆனால் அடுத்த பள்ளியோ இரண்டு இலக்கமிட்ட தேர்ச்சி விகிதத்தை எட்டவே முடியவில்லை.

# 48. அற்புதங்கள் சர்வ சாதாரணமாக நடந்தன

நான் நாளேட்டில் அவ்வப்பொழுது எழுதிக் கொண்டு வரும் விஷயம் என்னவென்றால், ஒருவர் தன் வாழ்வில் ஆன்மாவை அழைத்து மௌனத்தைக் கடைப்பிடித்து இறைவனை பிரார்த்திக்கும் பொழுது தவறாமல் பலன் கிடைக்கிறது என்பதாகும். வாழ்வானது உள்ளிருக்கும் ஆன்மாவை அழைப்பதில், ஆன்மா அந்த அழைப்பை ஏற்று, இம்மைக்குரியவற்றைப் பெற்றுத் தருவது வாழ்க்கை ஆன்மாவிற்கு பதிலளிப்பதாகும்.

இவைகள் ஒவ்வொருவருடைய வாழ்விலும் அவ்வப்பொழுது நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். ஆனால் அதை நாம் கவனிப்பது இல்லை. இம்மாதிரியான விஷயங்களின் மீது நம்பிக்கையுடையவர்களுக்கு இத்தகைய நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணமாக அவர்கள் வாழ்வில் நடைபெறத் துவங்கி அதன் பின்னர் அவை குறைய ஆரம்பித்துவிடுகின்றன. நான் ஏற்கனவே எழுதியவைகளைப் பற்றியும் இன்னும் வருங்காலத்தில் எழுதப்போகும் அனேக விஷயங்களையும் கீழே பட்டியலிட்டுள்ளேன்.

ஒருவர் தன் கையில் எந்தவிதமான சேமிப்பும் இல்லாத நிலையில், ஒரு ஏக்கர் நிலத்தை துணிந்து வாங்க முற்பட்டார். அவர் பதின்மூன்று வருடங்களில் 365 ஏக்கர் நிலங்களை வாங்கும் நிலைக்கு உயர்ந்து விட்டார். மற்றொருவர் அகில இந்திய அமைப்பில் தன்னைவிட அனுபவத்தில் மூத்தவர்கள்





பதின்மூன்று பேர்கள் புறக்கணிக்கப்பட்டு, தன்னுடைய இளம் பிராயத்திலேயே பதவி உயர்வு பெற்றார். ஒரு வக்கிர குணம் படைத்த குரு, தன்னுடைய பிறந்த நாளுக்கு பணமுடிப்பு வசூல் செய்ய இயலாதவர். அவருடைய சிஷ்யர், குருவின் வக்கிரத்தை தன்னுடையதின் பிரதிபலிப்பாக பாவித்து தானே அந்த குருவுக்காக முயற்சி எடுத்து அதைவிட ஐந்து மடங்கு காணிக்கையை வசூலித்தார். பிறகு 24 மடங்கு அதிக காணிக்கையும் குருவுக்காக வசூலித்தார். மற்றொரு நிகழ்ச்சியில், அலுவலகத்தில் பணிபுரியும் சக ஊழியர்கள், ஒரு ஊழியருக்கு எதிராக ஆறு வருடங்கள் சதித்திட்டம் தீட்டி, அந்த ஊழியர் விவேகமில்லாமல் செய்த ஒரு சிறிய தவறுக்காக பணிநீக்கம் பெறுமாறு செய்தார்கள். அந்த ஊழியர் தன்னுடைய உயர் அதிகாரி மூலம் அந்த உத்திரவை நான்கே நாட்களில் திரும்பப் பெறுமாறு செய்தார். வேறு ஒன்றில், 1972இல் அரைக் கோடி ரூபாய்க்கு விற்பனை செய்து கொண்டிருந்த அமெரிக்க தொழில் அதிபருக்கு இந்திய அரசாங்கத்தால் 800 கோடி திட்டம் ஒன்று வந்தது. ஒருவருக்கு முதுகெலும்பில் ஏற்பட்ட கோளாறினால் 15 வருடங்களாக கடுமையான வலியினால் அவதிப்பட்டுக் கொண்டு இருந்தார். அவர் கனவில் ஒரு வரத்தைப் பெற்றவுடன் அந்த நோய் நீங்கிவிட்டது. சிறிய மற்றும் பெரிய வியாபாரம் இரண்டரை ஆண்டுகளில் 10 மடங்காகவும் பத்து வருடங்களில் 15 மடங்காகவும் அதிகரித்துள்ளன.

இந்திரா காந்திக்கு அரசியலில் நெருக்கடி ஏற்பட்டபோது ஆன்மாவை அழைப்பதை ஏற்றுக் கொண்டார். அவர் பார்லிமெண்டில் 250 இடங்களை விரும்பினார். ஆனால் அவருக்கு ஆன்மாவின் மேல் நம்பிக்கை இருந்ததால் 356 இடங்கள் கிடைத்தன. தொழிலாளர்கள் போராட்டம் நிகழ்த்திக்

கொண்டிருந்த காலத்தில் ஆன்மாவை அழைத்ததின் பலனாக, ஒரு கம்பெனியில் தொழிலாளிகள் வேலைக்கு சீக்கிரமே வந்து, அதிக நேரம் வேலை செய்துவிட்டு நேரங்கழித்தே திரும்பிச் சென்றனர்.

ஆன்மா என்பது ரிஷிகளுக்கு மட்டும் உரியதன்று. ஒவ்வொருவருக்கும், யார் உள்ளே தூய்மையாகவும் செல்வவளத்திற்கு கடினமாக உழைக்க விரும்புகிறார்களோ அவர்களுக்கும் ஆன்மா செயல்படும்.





# 49. சென்னை நகருக்கு தண்ணீர் என்பது ஒரு பிரச்சனை அல்ல

மெட்ராஸ் (மதராஸ்) என்பது சென்னை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. நாம் உணர்வு பூர்வமாகச் செயல்படும் பொழுது நமது உணர்ச்சிகள் பழைய பெயர்களிலேயே நிலைத்திருக்கும். பிரச்சினைகளுக்கு ஒன்றைவிட ஒன்று மேல் என்ற வகையில் பல நிலைகளில் தீர்வுகள் உள்ளன. ஆனால் எல்லாம் தற்காலிகமானவை என்பதால் ஒவ்வொரு முறை பிரச்சினை தலையெடுக்கும் பொழுதும் நாம் தீர்வு காண வேண்டும். பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு உள்ளது. அது நமக்கு தெரியாத வகையிலும் வரும். ஒரு பிரச்சினையைப் பற்றி நம்மறிவு சிந்தித்தால் அது வளரும் என்றொரு இடமுள்ளது.

பிரச்சனைகளை தீர்க்கும் வழிகளாவன: (1) பிரார்த்தனை, (2) கவனம், (3) பூஜை வழிபாடு, (4) அருளை வழங்கும் மழையை நிந்திக்காமல் இருப்பது. இவைகள் யாவும் ஒரு நேரத்தில் தீர்வு காண்பதாக அமையும். கிருஷ்ணா நதிநீர், அல்லது கடல் நீரை சுத்திகரிப்பு செய்து குடிநீராக்குவதன் மூலமாக தண்ணீர் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும் என்பது நம்முடைய இயல்பான நினைப்பாகும். அதில் தீர்வு கிடைத்தாலும் கிடைக்கலாம், அல்லது கிடைக்காமலும் போகலாம். தண்ணீர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஒரு வழி உள்ளது. அதை சென்னை மக்கள் தீவிரமாக அணுக வேண்டும்.

ராஜாஜியின் ஆட்சிகாலத்தில் 1952-1954ல் கோயில்களிலும், மசூதிகளிலும், மாதா கோயில்களிலும் மழைக்காக மக்கள் பிரார்த்தனை செய்ததின் பலனாக, அபரிமிதமான மழை பெய்தது. இப்படிப்பட்ட பிரார்த்தனைக்கு நாமொரு கூடுதல் பரிமாணம் கொடுக்கலாம். சென்னை நகர வாசிகள் ஒவ்வொருவரும் தண்ணீர் கஷ்டத்திலிருந்து விடுபடவேண்டி, தன் சொந்தத் தேவைக்காக பிரார்த்தனையில் ஈடுபடலாம். நகரவாசி சுயநலமற்ற எண்ணத்தோடு, தானும் சென்னை நகரவாசிகளில் ஒருவர் எனக்கருதி சென்னை மக்களுக்காக, சமூகத்தின் நன்மைக்காக, பிரார்த்தனை செய்தால், அதற்கு மழை வழங்கும் ரெஸ்பான்ஸ் மேலும் பரவலாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும். அவர் இந்த பிரச்சனையின் தீவிரத்தை உணர்ந்து தண்ணீரின் அருமையையும் புரிந்து கொண்டு, பிரார்த்தனையை தீவிரமாக்கினால், அது நிச்சயமாக அதிகப் பலனைக் கொண்டு வரும்.

தண்ணீர் நமக்கு பல நன்மைகளைக் கொடுக்கிறது. ஜீவனுக்க உயிர் கொடுக்கும் தண்ணீர் இல்லையேல் வாழ்வு இல்லை. தண்ணீர் நகர மக்களுக்கு மட்டுமின்றி, நகரத்தில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளுக்கும் பயன்படுகிறது. நகரத்தில் வளரும் தாவரங்களும் தண்ணீரை கணிசமாக பயன்படுத்திக் கொள்கின்றன. மழை பெய்யும் பொழுது மழைத்தண்ணீர் பூமிக்குள் இறங்கி அடியில் படிந்து விடுவதால், பூமி குளிர்ச்சி அடைகிறது. அதனால் மனிதர்கள், விலங்குகள், தாவர வகைகள் யாவற்றிற்கும் பலவிதமான





நோய்கள் வருவது தடைபடுகிறது. மழைநீர் பூமிக்கடியில் கடலை நோக்கி ஓடி, கடல் நீரின் மட்டத்திற்கு சமமாக பூமியில் தேங்குவதால், கடல்நீர் பூமிக்குள் புகுந்து வராமல் தடுக்கப்படுகிறது. மழை இறைவனின் கருணை. நாம் மழைக்காகப் பிரார்த்தனை செய்வோம். நாம் பெறுவது மழை என்று மட்டும் நினைக்காமல், இறைவனின் அருளே என்று உணர்வோமாக.

# 50. கவனம் ஆன்மீகமானது

ஒருவர் மீது, பற்றுதலாக இருப்பது உடலுக்குரிய பாங்காகும். கவனம் உணர்வைச் சார்ந்தது. பாசம் மனத்திற்குரியது. தெய்வீக அன்பு ஆன்மீகம். பாசம் மிகுந்த குடும்பங்கள், பாசப்பிணைப்பு இல்லாத குடும்பங்களைவிட உயர்கின்றன என்பதை நாம் பொதுவாக உணர்ந்துள்ளோம். மழைக்காகப் பிரார்த்தனை செய்வதால் அது அபரிமிதமான மழையைக் கொண்டு வரும். ஆனால் தண்ணீருக்கு கவனம் செலுத்துவது மழைக்காகப் பிரார்த்தனை செய்வதைவிட அதிக அளவில் தண்ணீரைக் கொண்டு வரும். இவ்வகையில் கவனம் பிரார்த்தனையைவிட சக்தி வாய்ந்தது. ஒரு அழகிய புதிய கம்பளம், தன் மீது நடப்பவர்கள் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்து, அவர்கள் சற்று நின்று அதை உற்றுப்பார்த்து அதன் அழகைப் புகழ்ந்துவிட்டு போகுமாறு அழைக்கிறது. தெய்வீக அன்னை ஒரு புதிய தரை விரிப்பின் மீது நடந்து சென்ற போது அதைப்பார்த்து அவ்வாறு புகழ்ந்துவிட்டுப் போனார். ஜடப்பொருள்களுக்கு ஜீவன் உண்டு. அவைகளுக்கு கவனம் செலுத்தினால் அவைகளின் ஜீவன் மேலே வந்து அபரிமிதமான செல்வ வளத்தைத் தருகின்றன. ஒருவர் தண்ணீருக்கு அப்படிப்பட்ட கவனம் செலுத்தும் பொழுது, கடுமையான வறட்சி காலத்திலும் தண்ணீருக்குத் தட்டுப்பாடு இருக்காது. ஜடப்பொருளான தண்ணீர் தனக்கு கவனம் செலுத்தப்பட்டதை, எப்பொழுதும் மறவாமல் பிரதிபலனாக அது நமக்கு பலனைக் கொடுக்கிறது. அது நம் நிலைக்கு ஏற்றவாறு செயல்படுகிறது.





தண்ணீரை சிக்கனமாக உபயோகிப்பதும் வீணாக்காமல் இருப்பதும் தண்ணீருக்கு அளிக்கப்படும் கவனமாகும். தண்ணீரை சேமிப்பதும், மழைநீரை ஏரி, குளம், குட்டை, போன்ற நீர்நிலைகளில் நிரப்பிக் கொள்வதும், தண்ணீரை கவனத்துடன் உபயோகிப்பதும் தண்ணீருக்கு நாம் வழங்கும் கவனமாகும். மகாராஷ்ட்ராவில் ஒரு ஓய்வு பெற்ற ராணுவ வீரர், நிலத்தடி நீரின் மட்டத்தை உயர்த்தி ஒரு கிராமத்தையே சுபிட்சமுள்ள கிராமமாக மாற்றினார். அப்படி செய்வதற்கு அவர் அந்த கிராமத்தின் மறுபுற எல்லையில், ஏரியை உண்டாக்கினார். மண் தடுப்புக்கரைகளை உயரமாக்கி, மண்சரிவை தடுப்பது பழங்காலத்து விவசாய பழக்கம். நகரத்தின் மேற்குப்புற எல்லையில் பத்து மைல் தொலைவிற்கு மண் தடுப்புக்கள் உயர்த்தி, நிலத்தடி நீரின் ஆதாரத்தைப் பெருக்க சட்டம் கொண்டு வந்தால், நகரின் எல்லா இடத்திலும் நிலத்தடி நீர் உயர்ந்து, சென்னை நகருக்குத் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது. அப்படி செய்வதால் வருடா வருடம் நல்ல மழை பெய்யும்.

நாம் வீடுகளில் தண்ணீரை முக்கியமான தேவைகளுக்கு பயன்படுத்திய பின்பு, மற்ற பல வகையான தேவைகளுக்கு எப்படி பயனுள்ள வகையில் உபயோகிக்க முடியுமென்று சிந்தித்து பார்க்க வேண்டும். அதுவும் தண்ணீருக்கு செலுத்தும் ஒருவகை கவனமாகும். நாம் தண்ணீரை ஒரு நாளில் அநேக தடவைகளில் உபயோகிக்கிறோம். தண்ணீரும் ஜீவனுள்ளது என்று, அதற்கு நாம் உரிய கவனம் செலுத்தும் பொழுது, நாம் தண்ணீருக்குள் இருக்கும் வருண பகவானை அழைப்பதாகும். மாநகராட்சி, ஒவ்வொரு வீட்டிலும் காம்பவுண்டு சுவற்றிற்கும், வீட்டிற்கும் இடையிலுள்ள தரைமட்டத்தை சிமெண்ட்டினால் பூசக்கூடாது என்று சட்டம் கொண்டு வந்தால் மழை நீர் வெளியே போகாமல், பூமிக்குள்

கசிந்து உள்ளே போகும். அதனால் நிலத்தடி நீர் ஆதாரம் பெருகும். தண்ணீருக்கு கவனம் செலுத்துவதில் தனிப்பட்ட அமைப்புகளைவிட, அரசாங்கத்தின் கவனிப்பு மிகவும் சக்தி வாய்ந்ததாக இருக்கும். ஏனென்றால் அரசாங்கம் ஒரு முறையான கூட்டமைப்பாகும்.





# 51. கவனம் செலுத்துவதைவிட வழிபாடு மேலானது

வழிபடுதல் என்பது பக்தி. ஒரு ஆன்மாவின் வழிபாடென்பது எல்லா ஆன்மாக்களையும் உள்ளடக்கிய இறைவனுக்கு போகிறது. கடவுள், அழைப்பவரின் குரலுக்கு விதி விலக்கில்லாமல் செவி சாய்க்கிறார். இறைவனை அழைப்பதின் மூலம் மனம் ஒரு வசீகரிப்பில் கவரப்பட்டு தன்னை இழக்கிறது. ஒரு வாலிபன் ஒரு பெண்ணின் மீது காதல் வயப்படும்பொழுது அவள் நடந்து போகும் பாதையை உணர்ச்சி மேலிட்டால் வணங்குகிறான். அவள் அவன் மேல் காதல் கொண்டோ அல்லது லட்சியரீதியாகவோ அவனுக்கு விசுவாசமாக இருக்கிறாளோ இல்லையோ, அவனுடைய போற்றுதலால் அவள் கவரப்படுகிறாள் என்பது நிச்சயம். தண்ணீரை வழிபட முடியுமா? ஆம், தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் பொழுது, மனத்தின் உள்ளேயிருந்து எழும் உணர்ச்சிகளால் தண்ணீரை வழிபடுவது அவசியம். ஒரு ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி குறுகிய கால கவர்னர் பதவி வகித்த பின், ஒரு பல்கலைகழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். அங்கு மாணவர்கள் அடங்காத மூர்கத்தன்மை உடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒரு பேராசிரியரை வேலை நீக்கம் செய்யும்படி கோரிக்கை எழுப்பினார்கள். தவறினால் அங்கு போடப்பட்டிருந்த ஒரு பெரிய பந்தலுக்கு தீ வைத்து விடுவதாக மிரட்டினார்கள். அவருடைய சமாதானத்தை மாணவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். அவர் சென்னைக்குச் சென்று பார்க்க வேண்டிய அதிகாரிகளைப் பார்த்து, பெறவேண்டிய ராஜினாமா

கடிதத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பும் பொழுது, ரயில்வே ஸ்டேஷனில் சந்தித்த பல்கலைகழக ஊழியர்களிடம் கடிதத்தை அவர் பத்திரமாக பாதுகாத்து கொண்டு வந்ததைப் பற்றிப் பேசும்பொழுது, அவர் வாழ் நாளிலே அப்படி வேறெதையும் பாதுகாப்பாக வைத்திருக்கவில்லை என்று கூறினார். அக்கரையுடன் தண்ணீரைப் பாதுகாத்து தண்ணீரைப் போற்றலாம். அதை வணங்கவும் செய்யலாம்.

சுயநலமின்றி, தண்ணீருக்கும் ஜீவன் உண்டு என்கிற மனோபாவத்துடன் தண்ணீரை உணர்வால் போற்றுவது நன்று. அப்படி தண்ணீரை உயிருள்ளதாகவும் அன்புக்குரியதாகவும் எண்ணி வழிப்பட்டால், நிச்சயமாக தண்ணீரின் பதில் கிடைக்கும். அந்த நிமிடத்திலிருந்து வீட்டில் தண்ணீர் தட்டுப்பாடு என்பது கேள்விப்படாததாக இருக்கும். தண்ணீர் உணர்ச்சிக்குரியது என்பது ஆன்மீக தத்துவம். மிகுந்த உணர்ச்சிக்குட்பட்டவர்கள் கனவில், அலைபுரளும் கடலைக் காண்பார்கள். அந்த அலைகளின் மீது மிதப்பது போன்றும் காண்பார்கள்.

**போற்றுதல் என்பது கவனிப்பை உள்ளடக்கியதாகும்.**

தண்ணீரை ஒருவர் வழிபடும் பொழுது வழிபடுகின்ற அந்த ஸ்தாபனத்திலும் வீட்டிலும் தண்ணீர் கஷ்டம் குறைவாகவே இருக்கும். தண்ணீருக்கு கவனம் செலுத்துவதால் தண்ணீர் பற்றாக்குறை தற்காலிகமாகத்தான் தீரும். ஆனால் அதைவிட தண்ணீரை வழிபடுவதால் நிரந்தரமான தீர்வு கிடைக்கும். நாம் தண்ணீரை வழிபடுவதால், இப்பொழுது நாம் உபயோகிக்கும் தண்ணீரின் தரத்தைவிட உயர்ந்ததான, சுத்தமான தண்ணீர் கிடைக்கும்.





கவனிப்பு எப்பொழுதும் பொய்ப்பதில்லை. தண்ணீருக்கு பக்தி செலுத்துவதால், அது அதிகப் பலன் தருவது எப்பொழுதும் பொய்ப்பதில்லை.

# 52. நகரத்தின் தண்ணீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணுதல்

மழை, அருள் என்பது ஆன்மீகம். தண்ணீர் உணர்ச்சிக்குரியது. மனம் உணர்ச்சிப் பெருக்கால் நிறைந்திருக்கும் பொழுது, தேவைக்கு மிஞ்சிய அளவில் தண்ணீர் அபரிமிதமாகக் கிடைக்கும். நீர்வளம் உள்ள இடங்களில் இருப்பவர்கள் குடும்பப் பாசத்துடன் இருப்பதைக் காணலாம். தண்ணீர் பற்றாக்குறைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான இரகசியம் இதிலுள்ளது. உணர்ச்சிகளை நாம் கட்டளையிட்டு வரவழைக்க முடியாது. அப்படி எனில் இவ்வுண்மையை நாமெப்படி நடைமுறையில் பயன்படுத்திக் கொள்வது?

உணர்வு என்பது உயர்வானது என்பது உண்மை. இதுவுமன்றி வேறு ஒரு உண்மையும் உள்ளது. நமக்கு முக்கியமானதொன்று தேவைப்படும் பொழுது, அதை அடைய தீவிரமாக முயற்சிக்கும் பொழுது, நமக்கு உணர்ச்சி பெருகுகிறது. மேலும் குடும்பத்திலுள்ளவர்கள் மீதும், மற்றவர்கள் மீதும் காட்டும் பாசம், தேசபக்தி, நேர்த்தியான வேலை செய்வதில் காட்டுமார்வம் மற்றும் எதன் மீதும் காட்டும் உணர்ச்சியாலும் தண்ணீர் பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியும். அந்த உணர்ச்சியை தண்ணீருக்காக செலுத்துவது மிகவும் சிறந்தது. நன்றியுடைமை என்பது, இறைவன் வாழ்வில் செயல்படுவதை உணர்ச்சிப் பூர்வமாக அறிந்து கொள்வதாகும். அப்படி இறைவனுக்கு நன்றி செலுத்தும் பொழுது, உடலில் அதிர்வுகள் ஏற்பட்டு சிலிர்க்கின்றது.





பல நூற்றாண்டுகளுக்கு முன், நூறு வருஷத்திற்கு ஒரு முறைதான் நாட்டில் வறட்சி ஏற்பட்டது. ஆனால் 20ம் நூற்றாண்டில்தான் அதிகபட்சமாக 60 முறைகள் வறட்சிகள் ஏற்பட்டன. வறட்சி அதிகரிப்பது என்பது ஆன்மீக நோக்கில் மனிதன், இறைவனிடமிருந்து விலகிப் போய்க் கொண்டிருக்கிறான் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. வெளியில் ஏற்படும் வறட்சி, மனிதனின் இதயத்தில் அன்பின் ஊற்று வறண்டு விட்டதின் பிரதிபலிப்பாகும்.

வறட்சிக்குப் பின்னால் உள்ள ஆன்மீகக் காரணத்தை உணர்ந்து, மக்கள் சிருஷ்டி கர்த்தாவான இறைவனின் கருணை மீது உள்ளம் நிறைந்த நினைவுடன் மனதை செலுத்தினால், பருவ காலம் இல்லாத போதும், தூய்மையான மனத்தோடு மக்கள் யாவரும் இடைவிடாது வருண ஜபம் செய்வது போன்று, அதிக மழை பெய்யும். ஐரோப்பாவில் பிரம்மத்தை அப்சல்யூட் (ABSOLUTE) என்றும் இந்தியர்கள் பரப்பிரம்மம் என்றும் கூறுகிறார்கள். சத்தியத்திற்கு நம் வாழ்க்கையை அர்ப்பணித்தால் மழை இப்படி பருவம் தவறியும் பெய்யும். அரிதானது தண்ணீரில்லை, மனிதனுடைய உணர்வுகள்தான்.

# 53. தமிழ் நாட்டில் வறட்சி

உலகில் எந்தப் பகுதியிலும் வறட்சி ஏற்படலாம். ஆனால் ஆன்மீகம் நிறைந்த இந்தியாவில் வறட்சி ஏற்படாது. இருந்தபோதிலும், இந்தியாவில் வெள்ளச் சேதமும் வறட்சியும் ஏற்படுகிறது. இக்கூற்றை விரிவுபடுத்தி வறட்சி எந்தப் பகுதியில் நேர்ந்தாலும், தமிழ் நாட்டுக்கு வரக்கூடாது என்று கூற விரும்புகிறேன். ஆன்மீகம் மிகுந்த இந்தியா ரிஷிகளும், தபஸ்விகளும், முனிவர்களும், யோகிகளும் வாழ்ந்த நாடு. தமிழ் நாட்டில் அவதரித்த 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் பகவான் ஸ்ரீ அரவிந்தர் வளரும் ஆன்மா என்று வர்ணிக்கும் சைத்திய புருஷனுக்குரிய யோகத்தை செய்தவர்களாவார்கள்.

ஸ்ரீ அரவிந்தரின் பூரணயோகம், வாழ்வனைத்தும் யோகம் என்று கூறுகிறது. மற்ற யோகம் யாவும் வாழ்வை புறக்கணிக்கிறது. இங்கு ஆன்மா என்று குறிப்பிடுவது ஜீவனின் சாட்சி புருஷன் அல்ல. அது சைத்திய புருஷன் என்பதாகும். வாழ்வில் பங்கு கொண்டு செயல்பட்டுக் கொண்டு வருவது, சைத்திய புருஷனாகும். ஸ்ரீ அரவிந்தர், தமிழ்நாட்டில் சைத்திய புருஷனின் வெளிப்பாடு மிகுந்து காணப்படுவதால் இங்கே வந்தாரோ என்று கருத வேண்டியுள்ளது. எந்த விதமான இடர் வந்துள்ள போதும் வறட்சி என்பது தமிழ் நாட்டுக்கு வராது, வரவும் கூடாது. அதற்கு நாம் செய்ய வேண்டியது யாதெனில் நாம், நம்மை ஆன்மீகப் பாரம்பரியத்தில் ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்ற வேண்டும்.

மேற்கூறிய 75 மகான்களைத்தவிர, பெரிய ஆன்மாக்களான ரமணமகரிஷி, திருவாரூர் தட்சிணாமூர்த்தி





சுவாமிகள், பட்டினத்தார், ராமலிங்க சுவாமி, போளூர் விட்டோபா, ராகவேந்திரர் மற்றும் பல மகான்கள் அவதரித்த நாடு, தமிழ் நாடாகும். இவர்களில் பலர் சூட்சும உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மற்றும் சிலர் பரப்பிரம்மத்துடன் ஐக்கியமாகி விட்டிருப்பார்கள்.

இந்த மகான்களுடன் லட்சக்கணக்கான மக்கள் பக்தியுடன் ஈடுபாடு கொண்டுள்ளார்கள். இதைத்தவிர இஸ்லாமிய கிருஸ்துவ மகான்களும் உள்ளனர். மக்கள், தாங்கள் வழிபடும் மகான்களின் மேலுள்ள பக்தியை தீவிரப்படுத்தி அவ்வகையில் பழைய தொடர்பை புதுப்பித்துக் கொண்டால் நாட்டிற்கு ஒரு புதிய முறையான வாழ்வு ஏற்பட்டு, இனி எந்த வருஷத்திலும் வறட்சி என்பதே வராத நிலைமை ஏற்படும். வறட்சி வராமல் தடுக்க மத சம்மந்தமான சடங்குகளும் பின்பற்றப்படுகின்றன. சடங்குகளை விலக்கி மழைக்காக தெய்வீக அன்னையை அழைக்கலாம். அப்படி ஒருமுறை அன்னையை அழைத்தபோது, மழை அதிகமாகப் பெய்தது. மழை, அளவு கடந்து பெய்த பொழுது அதை நிறுத்துவதற்காக வேறொரு பிரார்த்தனை செய்ய வேண்டியிருந்தது.

# 54. பணத்தை அதிகம் செலவழித்தால் பண வரவு பெருகும்

பணத்தை அதிகம் செலவழித்தால் பணவரவு அதிகரிக்கும் என்ற தலைப்பின் இந்தத் தத்துவம், பணத்தை சிக்கனமாக குறைந்த அளவில் செலவு செய்தால் பணம் அதிகரிக்கும் என்ற பரவலான நம்பிக்கைக்கு முரண்பாடானது. ஆனால் பணத்தை அதிகமாக செலவழிக்கும் முறையை கையாண்டவர்கள் பணத்தை அதிகமாக சேர்த்தார்கள் என்பது அனுபவபூர்வமான உண்மை. அதுவே நியாயமான ஆன்மீக உண்மையுமாகும்.

இதை நான் ஒரு மெக்கானிக்கல் விதிமுறை என்று கூட கூற விரும்புகிறேன். ஒரு குழாய் மூலமாகவோ, வாய்க்கால் மூலமாகவோ தண்ணீர் பாயும்போது, தண்ணீரின் வரத்து அதிகரிக்க தண்ணீரின் வெளியேற்றத்தை அதிகரிக்கிறோம். இது இயற்பியல் விஞ்ஞானம் என்று அறிகிறோம். அன்னை இப்படி ஒருமுறை பேசியதைக் கேட்டவர்கள் ஆச்சரியத்தால் திகைப்புற்றனர். இந்தப் புதிய கருத்தை ஒவ்வொருவரும் ஏற்றுக் கடைப்பிடித்து, அதன் உண்மையை அறிந்து கொண்ட பின் சிறிது காலத்திற்குள் பழைய முறைக்கே திரும்பினார்கள். பழங்காலத்து தொன்மையான தமிழ் இலக்கண நன்னூலில், நாம் நமது அறிவையும் புலமையையும் பலருக்கு போதிப்பதால், போதிப்பவர் மேலும் அதிக அறிவு பெறுவார் என்று சொல்லப்பட்டுள்ளது.





இசை, கலை, மொழி போன்றவற்றில் ஒருவரின் திறமை அதிகரிக்க அதை அவர் பயிற்சியை மேற்கொள்வதின் மூலம் அடையலாம் என்பது இதில் மறைந்துள்ள உண்மை.

எங்களிடம் வரும் வாடிக்கையாளர்களிடம் இந்த தத்துவத்தைப் பற்றி விளக்கிய போது, அதை அவர்கள் ஏற்றுக் கொண்டு செயல்பட்டதின் விளைவாக, அவர்களது பணவரவு ஆச்சரியம் தரும் வகையில் தொடர்ந்து அதிகரித்தது. பணத்தை தாராளமாகச் செலவு செய்வது என்பது பணவிஷயத்தில் பிஸிக்கலான அம்சமாகும். பணத்தை செலவு செய்வதில் நாம் காட்டும் ஆர்வம் மற்றும் இந்த உண்மையை நாம் ஆழமாக புரிந்து கொள்வது ஆகியவை பணவரவின் அதிகரிப்பை நிர்ணயிக்கும். செலவழிக்க வேண்டுமென்று சொல்வது, ஊதாரித்தனமாக வீண் செலவு செய்வதல்ல. நியாயமான செலவைத்தான் இங்கு செலவு என்று குறிக்கப்படுகிறது. வீட்டிலோ அல்லது உன்னுடைய வியாபாரத்திலோ நிர்பந்தம் இல்லாத இடத்தில் அவற்றிற்கு செலுத்த வேண்டிய பணத்தை உடனே செலுத்தாமல் தள்ளிப் போடுவதும், நிர்பந்தம் அதிகமாக இருக்குமிடத்தில் உடனடியாக செலுத்தி விடுவதும், சாதாரணமாக பழக்கத்தில் இருந்து வரும் நடைமுறைப் பழக்கமாகும். பணத்தை இவ்வாறு செலவிடுவது சரியான முறையன்று.

பண செலவிற்கு ஒரு முறையான வரிசை உள்ளது. இந்த வரிசையை மூன்று மாதங்கள் சரியாக பின்பற்றுங்கள். அது சம்பளம் கொடுப்பதிலாகட்டும் அல்லது வியாபாரத்தில் சரக்குகளை வழங்குபவர்களுக்கு பணம் கொடுப்பதிலாகட்டும், முன்னுரிமை கொடுத்து இந்த முறையைப் பின்பற்றுங்கள்.

இதை பின்பற்ற முடிவு செய்தால் இந்த வரிசை கிரமம் ஏன் முக்கியம் என்று உணர்ந்து செயல்படுங்கள்.

நம் செயல்பாடு சரியான விளக்கத்தின்படி இருக்க வேண்டும். அறிவு விளக்கத்தைத் தாண்டி ஆன்மீக நம்பிக்கையின் அடிப்படையில் செயல்படும் கட்டமும் உள்ளது. நாம் மேலும் ஒரு கட்டத்திற்குச் சென்று ஆன்மீக நம்பிக்கையை தெளிந்த ஆன்மீக அறிவாகவும் மாற்றிக் கொள்ளலாம்.





# 55. எப்பொழுதும் பெருகிக் கொண்டு வரும் வருமானம்

பொருள் ஈட்டுவது தங்கள் கொள்கைப்படி நேர்மையற்றது என்ற நம்பிக்கைக் கொண்ட உயர்ந்த ஆத்மாக்கள் உள்ளார்கள். நான் அவர்களுக்கு என் நிலையைப் பற்றியோ அல்லது அவர்கள் தொன்று தொட்டு கடைப்பிடித்து வந்த ஒழுக்க நெறி முறை தத்துவத்தின்படி வாழ்க்கைக்கு மிகக் குறைந்த பணமே போதுமென்ற நம்பிக்கையைப் பற்றியோ விளக்க முயற்சிக்கவில்லை. என்னுடைய முக்கியமான இரண்டு நம்பிக்கைகள்:

1. நவீன நாகரீக வாழ்க்கை செலவுக்கு அதிக பணம் தேவைப்படுகிறது.
2. வருடக்கணக்கில் தவத்தில் உட்கார்ந்து இருப்பதை விட நேர்மையாக பணம் சம்பாதிப்பது மிகவும் கடினமானது. தவம் என்பது தூய்மையான உயர்ந்த நிலையில் செய்வதாகும். ஆனால் பணம் சம்பாதிப்பது என்பது சிரமம் நிறைந்த நிஜ உலகில் செய்ய வேண்டியதாகும்.

எவரொருவர் தன் சூழ்நிலை அனுமதிக்கும் அளவிற்கு தன்னுடைய செலவுகளை முறையான வரிசைக்கு ஆட்படுத்துகின்றாரோ அவருடைய வருமானம் அந்த அளவிற்கு பெருகுவதைக் காணலாம். தவிர்க்க முடியாத செலவு என்று தற்பெருமைக்காக செலவிடுவதை தாராள செலவாகக் கருத முடியாது. கொடுக்க வேண்டிய சில கடினமான பாக்கிகளை தாமதப்படுத்துவதும், தனக்கு சேர வேண்டிய பணத்தைக் கேட்காமல் இருக்கும் தயாள குணம்

உடையவருக்கு கொடுக்காமல், தனக்கு அவசரமாகத் தெரியும் செலவுகளுக்கு முன்னுரிமை கொடுத்து செலவிடுவதும், ஏமாற்றும் மனப்போக்கை காட்டுகிறது. முறையான வழியில் தாராளமாக செலவழிப்பது, நம்மிடத்திலுள்ள ஏமாற்றுகிற குணத்தின் களங்கத்தைப் போக்குவதாகும். நம்முடைய தேவைதான் முக்கியமென்ற மனப்பான்மையை தவிர்ப்பது, நம்முள் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவரும். இந்த இரண்டு ஆன்மீகக் கோட்பாடுகளும் மிகவும் சக்தி வாய்ந்தவைகளாகும். உடலாலும், மனத்தாலும் பொருள் ஈட்டுவதைவிட ஆன்மா மூலம் அதிகமான பொருள் சம்பாதிக்கலாம்.

நியாயமாக கொடுக்க வேண்டிய பணத்தை நீ தாராளமாக மனமுவந்து கொடுக்கும் பொழுது, அதைப் பெறுபவர் பேரானந்தம் அடைவார். அதனால் அவருடைய ஆன்மாவின் சக்தி வெளிப்படுகிறது. பயனற்ற வகையில் ஆடம்பரமாக செலவழிக்கும் பொழுது அதைப் பெறுபவர், நம்மை ஒரு முட்டாளாக எண்ணுவார். சில சமயங்களில் நாம் கொடுப்பது நம் அகந்தையின் வெளிப்பாடாக கருதப்பட்டு அடுத்தவர் அப்பணத்தை வாங்க மறுக்கவும் செய்யலாம்.

வெற்றிகரமாக நடக்கும் வியாபாரத்தில் செலவிற்கு உரிய இடங்களில் நிறைய செலவாவதையும் காணலாம். அங்கு வியாபாரம் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கு அது ஒரு முக்கிய காரணம். தெய்வீக அன்னை இதை வாழ்வின் அடிப்படையான கொள்கை என்று அறிவித்துள்ளார். பணத்தைப்பற்றிய இந்நியதிக்கு ஆன்மீக நிருபணம் தேவை என்று நினைப்பவர்கள் அன்னையின் கூற்றை நிருபணமாக எடுத்துக் கொள்ளலாம்.





# 56. பணம் உழைத்து சம்பாதிப்பதற்கு பண்புகள் சக்தி முக்கியம்

பணம் உழைத்து சம்பாதிப்பது, என்பது தேர்தலில் வெற்றி பெறுவது, பரீட்சையில் பாஸ் செய்வது போன்ற நடவடிக்கையைப் போன்றது. ஒரு செயலில் எனர்ஜி, நோக்கம், ஆர்கனைஷேஷன் மற்றும் திறமை என்று நான்கு அம்சங்கள் உள்ளன. எனர்ஜி ஆர்வத்திலிருந்து வருகிறது. நோக்கம் எனர்ஜிக்கு செயல்படும் திசையைக் காட்டுகிறது. ஆர்கனைஷேஷன் எனர்ஜியை சக்தியாக மாற்றுகிறது. திறமை சக்தியை பலனாக மாற்றுகிறது.

பணம் ஈட்டப்படுவது ஒவ்வொரு அம்சத்தின் திறனைப் பொருத்தது. மேலே குறிப்பிட்ட திறன்களின் அம்சம் ஒருங்கிணைந்து செயல்படும் பொழுதுதான், ஈட்டப்படும் பணத்தின் அளவு தெரியும். இதில் ஏதோ ஒரு அம்சம் இல்லாவிட்டாலோ அல்லது அரைகுறையாக செயல்பட்டாலோ, பணம் ஈட்டுவதில், எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. எனவே பணத்தை நல்லமுறையில் ஈட்டுவதற்கு காரணமாக இருக்கும் எந்த அம்சத்தையும், தவறவிடக்கூடாது. ஈட்டப்படும் பணத்தின் அளவு, இந்த அம்சங்களின் பண்புகளால் நிர்ணயிக்கப்படுகிறது. இது ஏன் என்றால் பண்புகள் என்பது ஆன்மீகம் என்பதாகும்.

ஒருவர் மாதம் ரூ.10,000 அல்லது ஒரு லட்சம் சம்பாதிப்பவர் அந்த வருமானத்தை 5 மடங்காக உயர்த்திக் கொள்ள முடியும். அதற்கு அவர் செய்ய வேண்டியது என்னவென்றால் பண்புகளின் நிலையை கொஞ்சங் கொஞ்சமாக உயர்த்தி அதிகபட்ச நிலைக்கு உயர்த்திக் கொள்ள வேண்டும். இந்த முறையைப் பின்பற்றினால் ஒரு கம்பெனி மிகக் குறைந்த நஷ்டத்தில் இயங்கி வரும் பொழுது,

குறைந்த அளவு இலாபம் ஈட்டும் அளவிற்கு உயர்த்திக் கொள்ள முடியும். இலாபத்தை மேலும் உயர்த்திக் கொள்ள வேண்டுமானால், பண்புகளை உயர்த்திக்கொள்ள வேண்டும். அல்லது செயலை மேலும் சிறப்பாக முறைப்படுத்துவதாலும் கம்பெனியின் முக்கியக் குறிப்பிட்ட தேவைகளுக்கு தேவையான வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலமாகவும், அதிக லாபத்தை எட்டமுடியும்.

பண்புகள் சம்பந்தப்படாத வேலையே இல்லை. கவனம், செயலை முறைப்படுத்துதல், புரிந்து கொள்ளும் திறன், நேர்மை, உண்மையாக இருத்தல் போன்ற பண்புகள் நாம் அறிந்தவைகளாகும். இதைப்பற்றி அதிகமாக பட்டியலிடலாம்.

ஒரு குடும்பத்தின் தலைவரான தகப்பனாரோ அல்லது தாயாரோ தன்னுடைய சொந்தத் தேவைகளை நாடுவது சுயநலமாகும். அவர் தன் சொந்த தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குப் பதில் குடும்பத்தில் உள்ள அனைவரின் தேவைகளை பூர்த்தி செய்தால் சுயநலமற்றவராக இருப்பார். தனது கடமையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், மற்றவர்களின் தேவைகளுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்வதில் முயற்சிப்பார். அப்படி மற்றவர்களுக்கு கவனிப்பு செலுத்துவதால் குடும்பத்தில் வருமானம் திடீரென்று பெருகும். கம்பெனி முதலாளிகள் அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடும் பொழுது, இது வரையில் வைக்கோற்போரில் ஊசி தேடுவது போன்று, ஆர்டர்களைத் தேடிக் கொண்டு இருக்கும் நிலை மாறி ஆர்டர்கள் தானாகவே வந்து குவியும்.

பண்புகள் ஆன்மீகச் சிறப்புடையது. அவை அபரிமிதமான செல்வத்தைக் கொண்டு வரும் திறன் உடையவை.





# 57. பண்புகள் 100 மடங்கு சக்தி உடையவை

ஆயிரம் வருடங்களுக்கு முன்பு மனிதன் உடல் அளவில்தான் வாழ்ந்தான். அப்பொழுது அவன் வாழ்வு ஆரம்ப நிலையாக எளிமையாக இருந்தது. அந்த நிலையில்தான் அவன் வாழ்ந்து கொண்டிருந்தான். இப்பொழுது மனிதன் தன் வாழ்வில் வசதிகளைப் பன்மடங்கு அதிகரித்துக் கொண்டான். ஆனந்தம், சௌகரியங்கள், திறமை, வேண்டுபவற்றை அடைதல், போன்றவைகளில் 100 மடங்கு வளர்ச்சியை அடைந்து விட்டான். இந்த முன்னேற்றங்கள் ஆயிரம் ஆண்டுகளில் ஏற்பட்ட வியத்தகு நிகழ்ச்சிகளாகும். இதற்குக் காரணம் மனிதன் உடல் அளவிலிருந்து மனத்தின் நிலைக்கு உயர்ந்துவிட்டான் என்பதாகும். எனினும் அவன் தன் வாழ்வை முழுமையான மனத்தளவிலான வாழ்க்கையாக, முற்றிலுமாக அமைத்துக் கொள்ளவில்லை. பகுத்தறிவு வாழ்வாகவோ, மனதளவில் உயர்ந்த வாழ்வாகவோ, அமைத்துக் கொள்ள முடியாவிட்டாலும், அவன் உடலளவு நிலையிலிருந்து உணர்வு நிலைக்கு உயர்ந்துள்ளான், என்பது உண்மை. உடலை விட்டு விலகி மனிதன் உணர்வு நிலைக்கு வந்துள்ளான் என்பது உண்மை. அவனுடைய உடலும், உணர்வும் பிஸிக்கல் லெவலில் அறிவின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்கின்றன. ஆனால் உணர்வு சம்பந்தப்பட்ட விஷயங்களில் அறிவின் தலையீட்டை ஏற்பதில்லை. இருந்தாலும் மனிதன் அறிவால் செயல்படுகின்றவன் என்று சொல்வதில் தவறில்லை.

இத்தகைய வியத்தகு பெருக்கம் மனிதன் பிஸிக்கல் லெவலிலிருந்து அறிவு நிலைக்கு உயர்ந்ததால் வந்துள்ளது

என்றால், இதே மாதிரியான மற்றொரு பெருக்கம் அறிவு நிலையிலிருந்து ஆன்மநிலைக்கு உயரும் பொழுதும் வரும். அப்படி உயரும் பொழுது வாழ்வு வளமான நிலைக்கு உயர்வதிலும், உள்ளுரை அமைதி ஏற்படுவதிலும், வெளிப்புற பாதுகாப்புப் பெறுவதிலும், பேதமற்ற பூசல் இல்லாத நிலையிலும், மனிதனின் நிலை ஆயிரம் மடங்கு உயரும். குறிப்பாக செல்வ வளம் அதிகமாக பெருகும் என்று ஒருவர் உறுதியாகக் கூறமுடியும்.

ஒளிபொருந்திய ஆன்மாவை அடைவது நமது குறிக்கோளானால், நமக்குத் தெரிந்துள்ள பண்புகளான நேர்மை, விஸ்வாசம், உண்மையைக் கடைப்பிடித்தல், சுத்தம், மௌனம் இவற்றைப் பின்பற்ற வேண்டும். இந்த பண்புகளை ஒருவர் அதிக அளவில் உபயோகப்படுத்தினால், ஆன்மாவின் சக்தியை வாழ்வில் செயல்பட வைக்கமுடியும். இந்தப் பண்புகள் ஆன்மாவின் திறமையானதால், நம் வேலையின் பலன்கள் ஆயிரம் மடங்காக இல்லாவிடினும் நூறு மடங்காக உயர்த்தும்.

நாம், பணத்தை உபயோகப்படுத்தும் பொருளாகக் கருதுகிறோம். ஆன்மீகத்தின் படி, பணம் என்பது இறைவனின் சக்தியாகும். நாம் ஆன்மீகப் பண்புகளை முழு அளவில் உபயோகிக்கும் பொழுது, பண வரத்து இடையறாமல், தடையின்றி வரும். ஆன்மீகப்பண்புகளை உபயோகிப்பதில், சிறப்பாகவும், பூரணமாகவும், முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆன்மீகப் பண்புகளை பற்றிய நீண்டதொரு பட்டியலை கொடுக்க முடியும். நஷ்டத்தில் போய்க்கொண்டிருக்கும் ஒரு கம்பெனி ஆன்மீகப் பண்புகளின் தன்மையை தெரிந்து கொண்டு, தன் சொந்த தேவைகளைக் கருதாமல் மற்றவர்களின் தேவைக்கு முன்னுரிமைக் கொடுத்து





பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தினால், அடுத்த மாதமே கம்பெனி இலாபம் ஈட்டத் தொடங்கும். உள்உணர்வில் உண்மையிருந்தால் ஆன்மீகச்சக்தி வெளிப்பட்டு பலன்கள் அக்கணமே வெளிப்படும்.

# 58. மேதை என்பது ஆன்மாவின் சக்தி

பண்புகள் என்பது ஆன்மீகமானவை. ஆனால் அவை நமக்கு வியக்கத்தக்க அளவில் இவ்வுலக வாழ்க்கைக்குரிய பலன்களை உயர்த்துமா? நாம் ஏன் அவைகளை ஆன்மீகம் என்று அழைக்கிறோம்?

மேதைகள் பிறக்கிறார்கள். ஆனால் அவர்கள் உருவாக்கப்படுவதில்லை. மேதைகள் நூறு வருஷத்தில் சில நேரங்களில் தோன்றுகிறார்கள். மேதைகள் சிலர் இளம் பிராயத்திலேயே அறிந்து கொள்ளப்படுகிறார்கள். மற்றவர்கள் வாழ்நாளில் பிற்காலத்தில் தம்முள் உள்ள, மேதைத் தன்மை வெளிப்படுவதை உணர்கிறார்கள். அவர்களுக்குள் உள்ள திறமை, வெளிப்புற சூழல் உகந்ததாக அமையும் பொழுதுதான், அவர்களது மேதாவிலாசம் வெளிப்படுகிறது. மேலும், சாதகமான சூழ்நிலை உருவாகும் பொழுது மேதைத் தன்மை, தற்செயலாக, மனிதன், பொருள்கள், காலம், பிரபஞ்சம் இவைகளில் வெளிப்படுகிறது. ஆன்மீகப் பண்புகள் அத்தகைய சாதகமான சூழ்நிலையை எல்லோருக்கும் அளிக்கவல்லது.

ஒரு காலத்தில் இந்தியா மட்டுமின்றி உலகம் முழுவதிலும் ஒரு நிலைமை இருந்து வந்தது. அது எல்லோருக்கும் கல்வி இல்லாத நிலை, ஒவ்வொருவரும் போர் வீரராக ஆக முடியாத நிலை, நிர்வாகம் ஒரு சிலருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருந்த நிலை, நாட்டை ஆளும் உரிமை அரச குடும்பத்தினருக்கு மட்டும் உரியது என்ற நிலைமையாக இருந்து வந்தது. இப்பொழுது இவை அனைத்தும் அடியோடு மாறிவிட்டன. எனவே மேதாவிலாசம் பிறப்பால் வருவது என்ற கருத்தை மறு ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. ஒரு மேதை தன்னுடைய





மேதா விலாசத்தை உணராத நிலையில், திடீரென்று ஒரு நாள் அவருள் இருக்கும் சக்தி முழுமையாக மலர்ச்சியடைந்து வெளிப்படுகிறது. திறமையின் பண்புகள், நோக்கத்தின் பண்புகள், மனத்தின் பண்புகள், யாவும் வேலையிலுள்ள ஆன்மாவை வெளிப்படுத்தக் கூடியன. ஆன்மா அப்படி வெளிப்படும் பொழுது அளவற்ற பலன்களை சுபிட்சமாக அளிக்கிறது.

உடல் உழைப்பு, திறமையை வழங்குகிறது. உணர்வால் செய்யும் வேலை, அதாவது வாழ்க்கை அனுபவங்கள் இதமான, மனோபாவங்களைக் கொடுக்கிறது. மனத்தால் புரிந்து கொள்வது, நன்றாக புரிந்து கொள்ளும் ஆற்றலைத் தருகிறது. ஒருவர் தன்னை ஆன்மாவின் நிலைக்கு உயர்த்திக் கொண்டு வேலையை செய்யும் பொழுது அவர், அமைதி, மௌனம், சாந்தி, உண்மை, நேர்மை, விஸ்வாசம், கடமை உணர்வு ஆகிய பண்புகளை உணர்கிறார். இந்தப் பண்புகளை தெரிந்தே உடல், உணர்வு, மனம் சம்பந்தப்பட்ட வேலைகளில் செலுத்தி செய்யும் பொழுது, அது ஆன்மாவை வெளிப்படுத்த உதவுகிறது. ஆன்மாவின் சக்தி அபரிமிதமானது. எனவே எப்பொழுதும் சுபிட்சம் அதிகரித்த வண்ணமாகவே இருக்கும்.

# 59. பக்தியுள்ளவர்கள், வைதீகமானவர்கள், நல்லவர்கள் ஏன் ஏழ்மையில் இருக்கிறார்கள்?

பக்திமான்கள், வைதீகமானவர்கள், நல்லவர்கள், பெரும்பாலும் அடிக்கடி ஏழ்மையில் உள்ளார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமான மூன்று காரணங்களைக் கூறலாம். *(1)* பக்தி என்ற சொல்லுக்கேற்ப அவர்கள் உண்மையான பக்தி உடையவர்கள் அல்ல. *(2)* தானியத்தை உமி, பதர் இவற்றிலிருந்து சல்லடையிட்டு பிரிப்பதுபோல், அவர்கள் நல்லது, கெட்டது என்பதை வேறுபடுத்தி அறியக் கூடியவர்கள் அல்ல. *(3)* அவர்கள் பூஜிக்கத் தக்க சிவன், விஷ்ணு போன்ற கடவுளர்களின் பெயரில் உணர்வைத் தூண்டக்கூடிய கெடுதலான ஆவிகளை வணங்குகிறார்கள்.

ஆசாமென்பது சடங்குகளை கடைபிடிப்பதில்லை. வைதீகத்தன்மை என்பது பரிசுத்தமான மனத்துடன் பேருண்மை மீது நம்பிக்கை வைப்பதும், தூய்மையான தன்னடக்கமுள்ள நிலையாகும். மரபு, கோயில்களில் உள்ள விக்கிரகங்களை வணங்கச் சொல்லவில்லை. இருதயக் குகையில் கட்டை விரல் அளவில் உறைந்துள்ள பிரம்மத்தை வழிபட வேண்டும். ஒரு ரிஷி கோபத்தை வெளிப்படுத்தும் பொழுதும், சிற்றின்ப உணர்ச்சியில் தூண்டப்படும் பொழுதும், அவர் பல வருடங்களில் தவம் செய்து பெற்ற தவவலிமையை இழக்கிறார். அவர் ஒரு சிறிய பொய் சொன்னாலும் இவர் ஒரு வைதீகர் என்ற நிலையை இழக்கிறார். அவர்கள் ஜாதகத்தைப் பார்க்க வேண்டியதில்லை அல்லது சுபகரமான நல்ல நேரத்தையும் அனுசரிக்க வேண்டியதில்லை. இவையெல்லாம் பாமரமக்களுக்கு உரியது.





இறைவனின் ஆன்மா எல்லா நிலைகளிலும் உண்மையில்லாதவைகளிலும் கூட கலந்துள்ளது. ஒருவர் நல்லது, கெட்டது என்பதை சீர்தூக்கிப் பார்த்து நல்லதை மட்டும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று பாரம்பரியம் கூறுகிறது. அனேக பக்திமான்கள் அத்தகைய உயர்ந்த வேறுபாட்டை பகுத்தறிபவர்களாக இல்லை. அவர்கள் தங்களது சௌகரியத்திற்கு எது நல்லது என்று தோன்றுகிறதோ அதுவே வைதீகம் என்று எண்ணி அதைப் பின்பற்றி தீயசக்திகளுக்கு பலியாகிறார்கள்.

ஒரு சமயம் ஒரு காங்கிரஸ் தொண்டர் மகாத்மாகாந்தியின் சிறிய ஒள்பிரபையால் சூழப்பட்டவராகத் தோன்றினார். இப்பொழுது மகாத்மாகாந்தி இல்லை. அவரது ஆத்மாவின் தூண்டுதலும் இல்லை. இன்றைய அரசியல்வாதிகளை மகாத்மாகாந்தியைப் போன்ற புண்ணிய ஆன்மாவாக நினைப்பது அவர்கள் நம்மை ஏய்க்க உதவும். புகழ்பெற்ற பெரிய கோயில்கள், புண்ணிய புருஷர்களால் கட்டப்பட்டவைகளாகும். வழிபாடு தூய்மையாக இருக்கும் வரை கோயில்களில் இறைவனின் சாந்நித்யம் நிலைத்து இருக்கும். தூய்மை கெடும் பொழுது அந்த சூழல் கோயிலிலிருந்து விலகிவிடுகிறது. வழிபடுபவர்களும், நிர்வாகிகளும் அங்குள்ள சூழ்நிலையை தம் வசம் ஆக்கிக் கொண்டு, தங்களுடைய மனநிலைக்கு ஏற்ப செயல்படுவதால் கோயிலின் சூட்சும சூழல் மாறிவிடுகிறது. இரண்டு குறிப்புகளால் தூய்மையான இடத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். *(1)* மனத்தின் உள்ளே அமைதியும் சாந்தியும் நிலவுவது, ஆன்மீகத்தில் உயர்வடைந்ததைக் குறிக்கும்.

(2) நம்பூதிரிகள் குருவாயூரப்பன் கோயிலில் பரிசுத்தமான சுத்தத்தை பராமரிப்பது போன்ற சுத்தம் காணப்படுவது. ஆன்மா எப்பொழுதும் சுபிட்சம் அளிப்பதில் பொய்ப்பதில்லை. சுபிட்சம் கிடைக்கவில்லை என்றால் மனிதன் தவறான தெய்வத்தை வணங்குகிறான் என்று கருதலாம்.





# 60. சோதிடம், எண் கணித சாஸ்திரம், சகுனம், வாஸ்த்து, நல்ல நேரம்

சோதிடம் என்பது, அடுத்த வேளைக்கு என்ன சாப்பிடப்போகிறோம் என்பதை துல்லியமாக கணிக்கும் தன்மை உடையது. எண் கணித சாஸ்த்திரமும் எதிர்காலத்தைப் பற்றி தெரிவிப்பதில், திகைப்பையூட்டும் வகையில் உணர்த்தக் கூடியது. வாஸ்த்து சாஸ்திரமும் நல்ல நேரமும் அடுத்து என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிக்கக் கூடியவை. ஒரு விதத்தில் அவைகள் எல்லாமே சூட்சும அறிவுப்படி சக்தி வாய்ந்தவைகளே. நாம் இவற்றைப் பின்பற்றுவது போல் மேலை நாட்டார்கள் இவைகளை நம்பமாட்டார்கள்.

நீ ஒரு கிராமத்தில் செல்வம் மிகுந்த பாசமுள்ள வைதீக குடும்பத்தில் பிறந்து, அந்தக் குடும்பம் நெல், கேழ்வரகு பயிர்த் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தும் முறையை, சிறந்தது என்று கருதி நீ அதை ஏற்று நடத்துவதே உன்னுடைய இலட்சியமாகக் கருதினால், முடிவில் அன்பான வசதியான பழமைமிக்க குடும்பத்தின் உறுப்பினராய் இருப்பாய். ஆனால் உன் குடும்பம் நவீன குடும்ப வாழ்க்கையிலிருந்து விலகி இருக்கும். ஆனால் இந்த வாழ்வு முறையை ஏற்றுக் கொள்வது ஏன் என்று கேட்க முடியாது. ஏனெனில் இது ஒருவர் தெரிந்தே எடுக்கும் முடிவாகும். இப்படிப்பட்ட கிராமியக் குடும்பம், கிராமத்தை விட்டு விலகி நகரத்திற்குச் சென்று, வெளிநாட்டிற்கும் சென்று வந்துள்ள மற்றொரு குடும்பத்துடன் 30 வருடம் கழித்து தன்னை ஒப்பிட்டுப் பார்த்தால், எல்லா வகையிலும் வித்தியாசம் பிரத்யட்சமாகத் தெரியும்.

நடைமுறை வாழ்விலும் நம்முடைய உணர்விலும் பழமை மற்றும் புதுவை என்றிவ்விரண்டையும் நாம் கலந்துவிடுகிறோம். அப்படி செய்யும்பொழுது இரண்டினுடைய முழுப் பலனும் நமக்குக் கிடைக்காமல் போகிறது. ஏனெனில் இரண்டும் எதிர் எதிரானவைகளாக இருப்பதால் ஒன்றையொன்று முறியடிக்கிறது.

மேற்சொன்ன தெரிந்த காரணங்களைத் தவிர, பழங்கால ரிஷிகளும் இந்நாள் விஞ்ஞானிகளும் அறிந்திராத வேறொரு உண்மை உண்டு. அதையொரு உதாரணத்தின் மூலம் விளக்கலாம். முடியாட்சியில் வாழ்வு அரசனுக்குரியதாக இருந்தது. மக்கள் மிகவும் ஏழ்மையாக இருந்தார்கள். ஜனநாயகத்தில் முடி ஆட்சி போய் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியை ஆட்சி பீடத்தில் அமர்த்தினார்கள். பாரதியின் வாக்குப்படி எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். ஸ்ரீ அரவிந்தர், நேரம் வந்துவிட்டது, இது இறைவன் வரும் தருணம் என்று கூறினார். ஒவ்வொருவரும் ஆன்மாவை அழைக்கும் திறமை உடையவராக இருந்தால், அவர் அந்த நிலையில் ரிஷியாவார். சோதிடம், எண் கணித சாஸ்த்திரம் போன்றவை சாதாரண வாழ்விற்கு உரியன. அவை நம்மை இயற்கையின் நியதிக்கு கட்டுப்படுத்துகின்றன. மனிதன் ஆன்மாவுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டால், அந்தத் தளையிலிருந்து விடுதலைப் பெற்று, வாழ்வு அவன் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடுகிறது. சாதாரணமாக நமது மனப்பாங்கு என்னவென்றால், அவை இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து பார்க்கிறோம். அவை இரண்டும் வெவ்வேறு நிலைகளில் (planes) இருப்பதால் ஒன்று மற்றொன்றை பயனற்றதாக செய்து விடுகிறது என்பதை நாம் அறிவதில்லை.





மனிதன் இயற்கையினின்றும், சுயமாய் ஏற்படுத்திக் கொண்ட மூட நம்பிக்கையிலிருந்து விடுபட்டது போல தற்பொழுது வாழ்வின் அடிமைத்தனத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, வாழ்வை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள முடியும்.

# 61. பாரம்பரியமும் ஆன்மீகமும்

அந்தக்காலத்தில் மக்கள், இரயில் பயணம் எவ்வாறு நடைபயணத்தின் கஷ்டத்தைப் போக்கி, வழியில் திருடர்களின் வழிப்பறிக்கொள்ளை ஆபத்திலிருந்து நீங்கியதை உணர்ந்தார்களோ, அவ்வாறே ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சோதிடம் தோன்றியதை உணர்ந்தார்கள். அதை கவனித்துப் பார்க்கும் பொழுது அது ஒரு நல்ல முன்னேற்றமாகத் தெரிகிறது. இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் விமானப் பயணம் நடைமுறைக்கு வந்தது. இரண்டாம் உலகப்போருக்குப்பின் அது பிரபலமடைந்தது. தொலைபேசி கண்டுபிடிப்பும் அத்தகைய வளர்ச்சியைக் காட்டுகிறது. தொலைபேசி, காலத்தைச் சுருக்கி விட்டது. செல்போன் கூட ஒரு இடத்திற்குப் போகாமலேயே தூரத்தை வென்றுவிட்டது. செல்போன் எங்கு வேண்டுமானாலும் கூடவே எடுத்துச் செல்லலாம். அது ஒரு இடத்தில் நிலையாக பொருத்தி வைப்பது அல்ல.

சோதிடம் என்பது ஒரு பெரிய அறிவியற்கலை. புத்தர் பிறந்த பொழுது, அவர் இந்த உலகத்தை சக்தியாலோ அல்லது அன்பினாலோ ஆட்சிபுரிவார் என்று கணித்தது. ராஜாஜி பிறந்த பொழுது எழுதப்பட்ட ஜாதகத்தில், அவர் இந்தியாவின் வைஸ்ராய் ஆக வருவார் என்று கணிக்கப்பட்டது. வாஸ்த்து, சகுனம், மற்றும் சோதிடம் ஆகியவை நமக்கு கர்மவினை உள்ளது என்பதைப் பற்றித்தான் தெரிவிக்கும். ஆனால் என்ன நடக்கப் போகிறது என்பது பற்றி அவற்றிற்கு தெரியாது. கர்ம வினையை அழிக்கக்கூடிய சக்தியும் அவற்றிற்கு இல்லை. மனிதன் கர்ம வினையின் பிடியில் கட்டுப்பட்டிருப்பதால், அவன் இதுவரையில் தன் திறமையில் சிறிதளவும், சமூகத்தில் கிடைக்கும் வாய்ப்புக்களை குறைந்த அளவிலும்,





பயன்படுத்திக் கொண்டான். இவ்வுலகில் அவன் கர்ம வினையினால், அவ்வளவில் மட்டுமே பயன்களைப் பெற முடிகிறது. இறைவன் மீதுள்ள நம்பிக்கை, கர்மவினையின் தடைகளை விலக்குகிறது. அந்த நம்பிக்கை மனிதனுடைய முழுத்திறனையும், சமூகம் வழங்கும் வாய்ப்புகளையும் மனிதனுக்கு முழு அளவில் கொடுக்கவல்லது.

1956லிருந்து சத்திய ஜீவியம் பூமிக்கு இறங்கி வந்து, மனிதனின் அழைப்புக்காக காத்து இருக்கிறது. இந்த சத்திய ஜீவியத்தை அழைத்தால் அது ஒருவருடைய வாழ்வில் அவரது திறமையின் உதவி கூட இல்லாமல் அவருக்கு முடிவில் கிடைக்கக்கூடிய பலனை முதலிலேயே வழங்குகிறது. அந்த ஆன்மா கர்ம வினையை அழித்து, சமூக வாய்ப்புகளை, மனிதனின் திறமைக்கு ஏற்ப, உண்டாக்குகிறது. நான் ஏற்கனவே எழுதியது போல் ½ ரூபாய் கூட கடன் வாங்க முடியாத ஒருவருக்கு ரூ.10,000க்கு வங்கியின் காசோலை, அவர் வீட்டைத் தேடிவந்தது. ரூ.10,000 கடன் பெற முடியாத ஒருவர் 2 லட்சம் கடனுக்காக வங்கியை அணுகியபோது, வங்கி அவருக்கு 4 லட்சம் கடன் வழங்க முன்வந்தது. நீங்கள் உங்கள் கையிலுள்ள ஒரு திட்டத்தை செயல்படுத்த முடியாமல் ஒன்று அல்லது இரண்டு வருடகாலமாக தடங்கல்பட்டுப் போயிருந்தால், ஆன்மாவை அழைத்துப் பாருங்கள். உங்கள் வாழ்வில், அந்த திட்டம் நிறைவேற்றப்பட்ட உண்மையை அறிவீர்கள். ஒருவர் செல்வ வளம்பெற, ஆன்மாவை வெற்றிகரமாக அழைக்கும் தருணத்தில், குறை கூறும் மனைவி, கொடூரமான கணவன், கடுகடுப்பான மேலதிகாரி போன்றவர்களால் தொந்தரவுகள் நேர்ந்திருக்கக் கூடும். அப்படிப்பட்ட நேரங்களில் ஆன்மாவை அழைத்தால், இவைகள் அனைத்தும் ஆன்மாவினால் எதிர்மறை குணங்களாக திருவுருமாற்றம் அடையும்.

# 62. அன்றாட வாழ்க்கையில் ஆன்மீகப் பரிசோதனை

ஒருவருடைய வாழ்வில் பரிசோதனை செய்வதற்கு ஆன்மா அனுமதிக்கிறது. பரிசோதனையை நடத்துவதற்கு ஒருவருடைய சொந்த வாழ்வே ஏற்றது. இந்த ஆராய்ச்சி ஆன்மாவுடன் ஒப்பு நோக்குவதில் தடையேதும் இல்லையென்றாலும், இதை ஒரு முறைக்கு மேல் செய்ய முயற்சிக்கக் கூடாது. நம்பிக்கை மலைகளை நகர்த்தக் கூடியது. ஆனால் அது சாதாரண மனிதனால் அன்று. ஒருவருடைய வாழ்வில் மலைபோன்ற தீர்க்க முடியாத பிரச்சனைகள் உண்டு. ஆனால் பெரிய வாய்ப்புக்களும் வாழ்வில் உண்டு.

வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் தடைகளை விலக்கிக் கொள்வதற்கும், நாம் ஆன்மாவை அழைக்கலாம். கணவன் தீய பழக்கத்திற்கு அடிமையாகியிருந்தாலோ, ஒரு கம்பெனி சிறுகச் சிறுக நஷ்டத்தில் போய், அது தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போய்க்கொண்டிருந்தாலோ, அல்லது நீதிமன்ற வழக்கில் அரசியல், இலஞ்சம், போன்றவற்றால் அநீதி இழைக்கப்பட்ட பொழுதும், ஆன்மாவை அழைக்கலாம். வருமானம் எட்டுக் கோடியை தொடும் பொழுதுதான் ஒரு கம்பெனி லாபமோ, நஷ்டமோ இல்லாமல் நடுநிலையை எட்டுமென்னும் பொழுது அதனுடைய வருமானம் ஒரு ஏழு கோடியை தாண்ட முடியாத நிலையில் இருக்குமானால், இந்த ஆராய்ச்சியினால் வருமானம் 8 கோடியைத் தாண்டும். முரண்பாடான சுபாவத்தையும் எண்ணங்களையும் விலக்கி, முழு உண்மையுடன் வேலையில் ஈடுபட்டு செயல்படும் பொழுது, வருமானம் அடுத்த மாதமே 80 கோடிகள் வரும். இதை எவ்வாறு செய்வது?





1. ஒரு கம்பெனியின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) வேலையில் ஊக்கமுடையவராய், தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவராய், மதசார்பு அற்றவராய், பாரம்பரிய சடங்குகள் முதலான கொள்கைகளை விலக்கி செயல்பட வேண்டும். இந்தக் கொள்கைகள் யாவும் ஆன்மாவுக்கு தீங்கானவைகளாகும்.
2. இலக்கு தலைமை அதிகாரியினால் மட்டுமே அடைய முடியும். மற்றவர்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவும் பொன்னானது.
3. இதில் தலையாய முக்கியத் தேவை என்னவென்றால், ஆன்மா எதையும் சாதிக்கும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும்.
4. ஆன்மாவை தாராளமாக வேலையில் ஈடுபடுத்த, எல்லா தடைகளையும் விலக்கி ஆன்மாவை தொடர்ந்து அழைக்க வேண்டும்.
5. இலக்கு சம்மந்தப்பட்ட எல்லா எண்ணங்களையும் ஒருமுகப்படுத்தி, வேண்டாதவைகளை மெல்ல விலக்கி, அற்பத்தனமான விஷயத்தில் மனதை போகவிடாமல் தடுத்து, மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும்.
6. இது நிச்சயமாக அமைதியையும் மௌனத்தையும் கொடுப்பதால், மனத்தில் சக்தியின் அழுத்தத்தை உணர முடியும். இந்த அனுபவம் ஆன்மீக பாதை சரியானது என்பதைக் காட்டும்.
7. உன் உணர்ச்சிகளில் இலக்கை அடைவதில் நம்பிக்கை வைக்கவேண்டும். அப்பொழுது மனதைவிட்டு அகலாத தீவிர ஆர்வம் விலகி, அவ்வப்பொழுது சந்தோஷம் எழும்.
8. ஒரு நிலையில் இவ்வாறு எவ்வித காரணமுமின்றி தானாகவே சந்தோஷம் எழும்.

வழக்கமாக நூற்றுக்கணக்கான சிறியதும் பெரியதுமான தொடர்ந்து தொல்லைக் கொடுத்துக் கொண்டு வந்த சூழ்நிலைகள் யாவும் மறைந்து, இப்பொழுது இனிமையான சூழ்நிலையாக மாறுவதைக் காணலாம். எதிர்பார்ப்புக்களை அதிகமாக வளர்த்துக் கொள்ளாமல், இலக்கைப் பற்றிய நினைவை விலக்கினால், நீ 8 கோடிகளுக்கு மேல் வருமானம் வருவதைக் காண்பாய். அது 80 கோடிகளைக் கூட எட்டுமென்பதும் சாத்தியம்.





# 63. கடலின் ஆன்மா

ஆன்மீகத்தில் நாட்டமுடையவர்கள் சமூகத்தின் வீரர்கள். அவர்கள் ஆன்மீக வீரர்கள். குரு அல்லது ஆன்மாவால் ஈர்க்கப்பட்டவர்கள் அரிது. அதைவிட அரிது சந்தர்ப்பம் வரும் போது ஆன்மா மீதும் குருவின் மீதும் எழும் நம்பிக்கையாகும். ராமகிருஷ்ணரின் ஆன்மீக உயர்வு பற்றி விவேகானந்தருக்கு கடைசி வரையில் சந்தேகமாகவே இருந்தது.

மகாத்மாவின் சுதந்திர போராட்ட அழைப்பில், மன உறுதியுடனும் விசுவாசத்துடனும் கலந்து கொண்டவர்கள் தங்களுடைய எல்லா உரிமைகளையும் உடைமைகளையும் தியாகம் செய்தார்கள். இருந்தாலும் இந்தக் களத்தில் இறங்கியவர்கள் அனைவருக்கும் மனிதனுடைய குறைபாடுகளிலிருந்து மீளமுடியவில்லை.

1920ம் வருடங்களில் பாண்டிச்சேரியில் நிலக்கரி கிடங்கின் சுவர் ஒன்றை கடல் அலைகள் அடித்துச் சென்றுவிட்டன. அந்தக் கிடங்கு அந்த நகரத்தின் மேயருக்குச் சொந்தமானது. அவர் இது சம்மந்தமாக பிரெஞ்ச்சு கப்பல் பொறியாளர்களிடம் ஆலோசித்த பொழுது, அதைத் தடுக்க முயற்சிக்கும் பிரயத்தனம் பயனற்றது என்று தெரிவித்துவிட்டார்கள். எனவே அவர் அந்த இடத்தை விற்க முற்பட்டார். ஆனால் அதை வாங்குவதற்கு யாரும் முன்வரவில்லை. பிறகு அவர், ஆசிரமத்தில் இருந்த, சக்தி வாய்ந்த தெய்வீக அன்னையால் அந்த கஷ்டத்திலிருந்து விடுபட முடியும் என்ற நம்பிக்கையில், ஆசிரமத்தில் உள்ளவர்களை அணுகினார். அந்தக் கிடங்கின் சுவர் பலமுறை ஆர்ப்பரிக்கும் சமுத்திர அலைகளால் அடித்துச்

செல்லப்பட்டது. சாதகர் எவராலும், அந்தச் சுவரை அலைகளின் தாக்குதலினின்றும் காப்பாற்ற முடியும் என்று மனப்பூர்வமாக எண்ண முடியவில்லை.

அந்த இடம் ஆசிரமத்தால் வாங்கப்பட்டு, சுவற்றைக் கட்டுவதில் புதிய முயற்சிகள் எடுக்கப்பட்டும், மீண்டும் அந்த சுவற்றிற்கு பழைய கதியே ஏற்பட்டது. அலைகளிலிருந்து அதைக்காப்பாற்ற எடுக்கப்பட்ட பல முயற்சிகளும் தோல்வியுற்றன. இந்தத் தோல்விகளுக்குப்பின், தெய்வீக அன்னை அந்த இடத்தை பார்வையிட முன் வந்து, கடலின் ஆன்மாவை அழைத்தார். சமுத்திர ராஜன், அன்னை முன் தோன்றினான். அவன் அன்னையிடம், தான் கரைக்கு முன்னேற முடிவு செய்துள்ளதாக தெரிவித்தான். பொதுவாக எந்தத் தெய்வங்களும் அன்னையின் கட்டளைக்குப் பணிவார்கள். ஆனால் கடலரசன், பிடிவாதமாக இருந்தான். பிறகு அன்னை அவனிடம் தனக்கு அந்த இடம் வேண்டுமென்றும், அவன் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்வது நல்லது என்றும் தெரிவித்தார். சமுத்திர தெய்வம் அதற்கு சம்மதித்தது. அதன் பிறகு புதியதாக சுவர் எழுப்பப்பட்டது. அந்த சுவர் இன்றும் அப்படியே கம்பீரமாக நிலைத்து நிற்கிறது.

போகும் வழியில் யாரும் இல்லாத இடத்தில் உன்னுடைய கார் நின்றுவிட்டால், காரை ரிப்பேர் செய்வதற்கு இயலாத இக்கட்டான நேரத்தில், அன்னையை அழைத்தால் அது இயங்கும். அதில் தோல்வி ஏற்படாது. அப்படித் தோல்வி ஏற்பட்டால், காரின் ஆன்மாவை அழைத்தால் அது உடனே இயங்கும்.

ஆன்மா மிகப் பெரியது. அதைவிட மேன்மையானது, இன்னமும் மனிதர்களிடமும் பொருள்களிடமும் உள்ள ஆன்மாவாகும்.





# 64. சிறப்பானதைத் தேடுவது

புத்தக வெளியீட்டாளர்கள் எழுத்தாளர்களை விட புத்தகங்கள் விற்பனையைப் பற்றி அதிகமாக தெரிந்து வைத்திருப்பார்கள். ஹார்ப்பர் (Harper) மற்றும் ரோவ் (Row) என்பவர்கள் சிறந்த பதிப்பாளர்கள். ஒரு சமயம் டாம் பீட்டர்ஸ் (Tom Peters) மற்றும் வாட்டர்மேன் (Waterman) எழுதிய அறிக்கையைப் பார்த்து வியப்பு மேலிட்டவர்களாய் அதை பிரசுரம் செய்வதற்கு அனுமதி பெற அந்த எழுத்தாளர்களைப் போய்ப் பார்த்தார்கள். அதற்கு டாம் (Tom) அது ஒரு அறிக்கையே தவிர படிக்கக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். மேலும் அவர்களிடம், அவர்கள் இதில் போடும் மூலதனத்தைத் திரும்பப் பெற 10,000 பிரதிகள் கூட விற்க முடியாத என்று கூறினார். பதிப்பாளர்கள் விடவில்லை. எழுத்தாளரின் வாதத்தை ஏற்காமல், அவரின் சம்மதத்தைப் பெற்று, அனுமதியைப் பெற்றுக்கொண்டபின் அச்சடித்து, அடுத்து வரும் ஆண்டுகளில் 60 லட்சம் பிரதிகள் விற்பனை செய்தார்கள். அது ஒரு நாவலாக இல்லாத போதிலும், இந்த அறிக்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது, ஒரு வியப்புக்குரிய நிகழ்ச்சியாகும். தன்னுடைய விருப்பத்திற்காக மட்டும் எழுதும் எழுத்தாளர்களைவிட வாசகர்கள் எதை விரும்புவார்கள் என்று பதிப்பாளர்கள் நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

டாம் பீட்டர்ஸ் (Tom Peters) ஹிப்பியாக இருந்தவர். அவர் கட்டுப்பாடற்ற சுதந்திரம் வேண்டுமென்ற விருப்பத்தில், தீவிரமாக இருந்தார். ஹிப்பி இயக்கம் எந்தத் திசையில்

சென்றாலும், மனிதனின் சுதந்திரத்திற்கு தூண்டுதலாக இருந்தது. அந்த சூழ்நிலை சுதந்திர தாகத்தின் சின்னமாக டாம் உணர்விலும் எழுத்திலும் விளங்கினார். ஆனால் எந்த சக்தி அவரை இயக்குகிறது என்று அவரால் தெரிந்து கொள்ளமுடியவில்லை. அந்தப் பதிப்பாளர் அதைப் பற்றி தெரிந்திருந்தாரா அல்லது அவருடைய வியாபார புத்திக் கூர்மையால் செயல்பட்டாரா என்பது தெரியவில்லை. டாம் (Tom) தன்னுடைய சுதந்திர வேட்கை தன் ஜீவனுடைய ஒரு அதிர்வாகவே மாறிவிடும் அளவிற்கு சக்தி பெற்றிருந்ததை அறியாதவராகவே இருந்தார். இது சமீபகாலத்திய சரித்திரம்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும், ஆன்மா இருக்கிறது. ஆனால் மனிதன் அதை அறியவில்லை. ஜெர்மன் டாக்டர்கள், ஒரு சமயம் ஆன்மா உண்டா என்பதைக் கண்டறியும் பொருட்டு மனிதனின் உடலில் எல்லா உறுப்புகளையும் அறுவை செய்து பார்த்த பிறகு, அவர்களால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆயிரக்கணக்கான ரிஷிகள், நூற்றாண்டு காலமாக தவம் செய்து பிரம்மத்தை உணர்ந்தவர்கள், இந்தியர்களின் உடலில், தவத்தின் பயனாய் தாங்கள் பெற்ற ஒளியினை தந்துவிட்டுச் சென்றார்கள். டாம் (Tom) பிறகு ஒருமுறை தாம் எழுதிய புத்தகங்களை பிரசுரிப்பதற்கு ஒரு மில்லியன் டாலர் முன்பணமாகக் கேட்டார் என்று சொல்லப்படுகிறது. நாம் நம்முள் ஆன்மாவை அறிந்து, அதை நம்வாழ்வில் செயல்பட அழைப்பதற்குத் தெரிந்து கொண்டால், நாம் இவ்வாழ்வில் பெரும் பலன்களை அடைய முடியும்.





# 65. இந்தியாவில் எந்தத் தொழிலுக்கும் தோல்வி என்பதே இராது

இந்தியா, வியாபாரச் சந்தையில் பெருகி வரும் நாடாக உள்ளது. இங்கு மக்கள் அதிக சௌகரியங்களை விரும்புகிறார்கள். குறைந்தபட்ச வாழ்க்கைத் தரத்தை கேட்கிறார்கள். எவரொருவர் தனக்கு அதிக சௌகரியம் வேண்டுமென்று கேட்கிறாரோ அவர் அதிகமாக உழைக்கவும் விருப்பங்கொள்கிறார். வேலையை முறைப்படுத்துவதன் மூலம் அது அதிகப் பலனைக் கொடுக்கும். முறைப்படுத்தப்பட்ட வேலை நேர்மையானதாக இருக்க வேண்டும். இன்றேல் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. இந்தியாவில் எந்த ஒரு கம்பெனியும் அதனுடைய வேலையில் பண்புகளை வெளிப்படுத்தி, முறைப்படுத்தலில் கவனம் செலுத்தினால், தோல்வியைச் சந்திக்க வேண்டியிராது.

திட்டக்கமிஷனின் 2020 தொலை நோக்குத் திட்டத்தில், இந்தியா தற்பொழுது 153வது இடத்திலிருந்து 100வது இடத்திற்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கிறது. இந்திய இளைஞர்கள் யாவரும் துடிப்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இந்தியா காலனியாக இருந்தபொழுது இருந்த ஏழ்மையை நிராகரிக்கிறார்கள். அரசியல் அமைப்புப்படி கல்வி கட்டாயம் ஆக்கப்பட்டது போன்று இளைஞர்களுக்கு அரசியல் சட்ட அமைப்பில் வேலைவாய்ப்புக்கு உத்திரவாதம் அளிக்கப்பட வேண்டும். இந்தியாவின் சுபிட்சத்திற்காக ஒரு இயக்கம் நடத்தப்படுமானால், 2020 தொலை நோக்குத் திட்டத்தின் இலக்கு அடையக்கூடியதாகி விடும். இந்திய வியாபாரச் சந்தை துடிப்பாக உள்ளது. முறைப்படுத்தப்பட்ட நேர்மையான வேலை உயர்ந்த பரிசை வழங்கும்.

- சுயத் தொழில்தான் இன்றைய தேசப்பற்று.
- வணிக விவசாயப் பொருள் உற்பத்தி பசுமைப் புரட்சியாகும்.
- அதிகமாக கேட்பதுவும், அதிகமாக விரும்புவதும் சுபிட்சமாகும்.
- அதிகமான சௌகரியத்திற்கு உன்னையே கேட்பது, நீ சுபிட்சத்தை அதிகமாகப் பெறுவாய் என்பதாகும்.
- அதிக சௌகரியத்தை விரும்புவது, வியாபாரச் சந்தையின் வளர்ச்சியாகும்.
- வியாபாரச் சந்தையின் வளர்ச்சி இந்தியாவின் சுபிட்சம்.
- அதிகப் பிரயாசைப்பட்டால் அதிகமான சுபிட்சத்திற்கு வழியுண்டு.
- நாடு சுறுசுறுப்பாக உள்ளது.
- கல்வி நாட்டுக்கு ஒரு வெகுமதி.
- கல்வியுள்ள நாடு வளமான நாடு.
- வேலை செய்வதற்கு தகுதியாக்கிக் கொள்.
- வேலைக்கு உத்திரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

சுயதொழிலில் விருப்பங்கொள். வேலையை முறைப்படுத்தி, பண்புகளை வெளிப்படுத்தி தொடர்ந்து சிறப்புத் திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும். குறிக்கோளை அடைவதற்கு முன்பாகவே, 2020 தொலை நோக்கு எதிர்பார்ப்பை அடைய வேண்டும்.

விழித்திரு - எழுந்திரு - முறைப்படுத்து - அதுவே சுபிட்சம்.





# 66. சுபிட்சத்தின் இயக்கம்

இந்திய தேசிய காங்கிரஸ் 1947க்கு முன்பு ஒரு கட்சியாக இல்லாமல், நாட்டின் விடுதலை இயக்கமாக இருந்தது. தேசத்தின் வளர்ச்சிக்கு, அத்தகையதொரு மக்களால் விரும்பப்படுகிற இயக்கம் தேவைப்படுகிறது. திட்டக்கமிஷன் 2020, தன்குறிக்கோளை அடைவதற்கு இத்தகைய இயக்கத்தின் மூலமாகத்தான் இலக்குகளை அடைய முடியும். நமது ஜனாதிபதி அப்துல்கலாம், நமது நாட்டு இளைஞர்கள் உயர்தரக் கல்வியையும் எதிர்கால சுபிட்சத்தைப் பெறுவதிலும் எழுச்சியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை அறிகிறார். இத்தகையதொரு எழுச்சிக்கு செயல்வடிவம் தருவதற்கு அரசாங்கமோ அல்லது கட்சியோ இல்லாமல், ஒரு இயக்கம் தேவைப்படுகிறது.

நல்ல அரசாங்கம் வேண்டுமென்று கொடுத்த மனுக்களால் சுதந்திரம் கிட்டவில்லை. ஆனால் அது பூரண சுதந்திரம் அடைய வேண்டுமென்ற உயர்ந்த திடமான உறுதிப்பாட்டால் பெறப்பட்டது. நிர்வாகத்தின் திறமையால் மட்டுமே இந்தியாவின் சக்தியை வெளிக்குக் கொண்டு வரமுடியாது. சுபிட்சத்தின் இரகசியம், அதிக சௌகரியங்களை நாடுவதிலும் அதற்காக அவன் அதிகமாக உழைப்பதிலும் உள்ளது. விவசாயத்தால் மட்டுமோ அல்லது உற்பத்தி அதிகரிப்பால் மட்டிலுமோ அந்த அற்புதம் நிகழாது. இலட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும் தங்களுக்குத் தேவையான வசதிகளை அதிகரித்துக் கொள்வதிலும், உயர்கல்வி பெறுவதிலுமே வியாபார சந்தையை, சர்வீஸ் துறையின் மூலம் அதிகமாக விஸ்தரித்துக் கொள்ள முடியும். அந்த வளர்ச்சி, ஓர் அளவுக்கு நாட்டின் தலைநகரங்களிலும் பெரிய நகரங்களிலும் காணப்படுகிறது.

இந்தியாவின் கிராமப்புறத்தில் அதிக உற்பத்தியை பெருக்க முடியும். விவசாயத்தை வணிகப்பயிரிடும் முறைக்கு மாற்றி பின்பற்றினால், இலாபகரமாக இருக்கும். ஆனால் கிராமவாசி, தன்னுடைய சொந்த முயற்சியால் நகர வாழ்வின் வசதிகளைப் பெற விரும்பினால் அத்தகைய முயற்சிகள் அதற்கு முன் கண்டிராத வியாபாரச் சந்தையை உருவாக்குகிறது. அது தேசத்தின் சுபிட்சமாகும். எல்லாவற்றையும் அரசாங்கம் நிறைவேற்றுவதற்கு, உள் கட்டமைப்புகள் தேவைப்படுகின்றன. அவை ரோடு வசதி, சேமிப்புக் கிடங்குகள், குளிர்சாதன வாகனங்கள், தகவல்கள் சேகரித்தல், போன்றவைகளாகும். அப்படி செய்வதின் மூலம் மக்களின் சக்தி வெளிப்படுத்தப்பட்டு, அவை முறைப்படுத்தப்படுவதின் மூலம் வாழ்வில் குறிப்பிடத்தக்க பலன்களைப் பெறமுடியும்.





# 67. நிம்மதியான தூக்கம்

முன்னாள் ஆங்கிலேயருக்குச் சொந்தமான ஒரு கம்பெனியின் அதிகாரி ஒருவர் ஒரு கிராமத்து சிறிய பண்ணைக்கு வந்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த பொழுது, உடலின் சோர்வு நீங்கியதை உணர்ந்தார். அன்றிரவு அங்கேயே ஒரு சிறிய அறையில் தங்குவதற்கு விரும்பினார். மறுநாள் காலை தூங்கி எழுந்தவுடன், அந்த இடம் அவருக்கு பூலோக சொர்க்கமாகத் தெரிந்தது. அந்த சிறிய அறை, அவருக்கு இதற்குமுன் பதினைந்து வருடங்களாக அனுபவத்தறிந்திராத, புத்துணர்ச்சி வழங்கும் தூக்கத்தைக் கொடுத்தது. மனிதனுக்கு எல்லா செல்வத்தையும் அளித்த கடவுள், அந்த மனிதன் தன்னை மறந்துவிடுவான் என்று வேண்டுமென்றே, அத்தகைய நிம்மதியான தூக்கத்தைக் கொடுக்கவில்லை என்று ஒரு நம்பிக்கை உண்டு.

அநேக மனிதர்கள் நன்றாக உறங்குவார்கள். நல்ல புத்துணர்ச்சியை வழங்கும் ஆழ்ந்த தூக்கத்தையும் அனுபவிப்பார்கள். தூக்கத்தில் அச்சுறுத்தும் பயங்கர கனவுகள் காண்பவர்கள், ஒரு மணி நேரம் கூட தூங்க முடியாதவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு நன்றாக தூங்குபவர்கள் வியப்பிற்குரியவர்களாவார்கள். அவர்களுடைய பொறாமைக்கு இவர்கள் இலக்கானவர்களாக இருக்கக் கூடும். எல்லோரும் அத்தகைய பிரச்சனைகளை ஆன்மாவிடம் சமர்ப்பித்துவிட்டால், நிம்மதியான தூக்கத்தை அனுபவிக்கலாம். அவர்களில் பெரும்பாலோர் பக்திமான்களாகவும் மதப்பற்று உடையவர்களாகவும் இருக்கலாம். அவர்கள் கடவுள் ஏன் தங்களுக்கு நல்ல தூக்கத்தைக் கொடுக்கவில்லை என்று ஆச்சரியப்படுவார்கள். சில நேரங்களில் அவர்கள் கடவுளை பழிப்பதும் உண்டு.

அவர்கள், தாழ்ந்த உணர்வுள்ள குட்டி தேவதைகளை தெய்வம் என்று கருதி வழிபடுவதால், அது அவ்வாறு அடிக்கடி நிகழ்கிறது. காரணம் எதுவானாலும் அவைகளை வெற்றி கொள்ள முடியும்.

ஆன்மாவை அழைத்து உறக்கத்தை ஆட்கொள்ளச் செய்தால், இரவில் தூக்கமின்மை என்ற பிரச்சனையிலிருந்து அவர்கள் விடுபடமுடியும். படுக்கப் போகுமுன் சிறிது நேரம் தியானத்தை மேற்கொள்வதாலும், தூக்கம், கனவு, அச்சுறுத்தும் பயங்கரச் சொப்பனம் ஆகிய எல்லாவற்றையும் ஆன்மாவின் பொறுப்பில் விட்டு விடுவதால், தூக்கமின்மை மறைந்துபோகும். ''போகன் வில்லா'' என்று அழைக்கப்படும் ஆன்மீக குணமுள்ள பாதுகாப்பு மலரை தன்னுடன் வைத்துக் கொண்டு உறங்கினால், தீய பயங்கர சொப்பனத்திலிருந்து விடுபடுவார்கள்.

ஒரு உத்தியோகஸ்தர் வரம்பில்லாமல் கடன் வாங்கும் ஆர்வம் உடையவராக இருந்தார். அந்த கடன் சுமை அவரது சம்பளத்தைப் போல் 30 மடங்கு அதிகரித்துவிட்டதால் அவருக்கு தூக்கம் கெடுவது ஒரு பிரச்சனையாக ஆகிவிட்டது. அவர் ஆன்மாவை அழைத்து செயல்படும் நண்பர்களில் ஒருவருடைய வீட்டிற்கு போய் தங்கும் வாய்ப்பு பெற்றார். அன்று இரவு அங்கு தூங்கி, மறுநாள் எழுந்தவுடன், இப்படிக் கூறினார். ''நான் இரவில் விடியற்காலை 2 மணி வரை தீய பயங்கர கனவுகளால் தூக்கமில்லாமல் அவதிப்படுவேன். அதன் பிறகு தூக்கம் வராமல் தவிப்பேன். அந்த பிரச்சனை எழுந்ததிலிருந்து, முதன் முறையாக இங்கு விடியற்காலை 2 மணி வரையில் நன்றாக ஆழ்ந்து தூங்கினேன். அதன் பிறகு விழித்துக் கொண்டிருந்த போதும் முன்பு இருந்த அச்சம் இல்லாமல் இருந்தேன்'' என்று கூறினார்.





# 68. எழுத்தர் பதவி உயர்வு

அட்டெண்டர் (Attender) கீழ் நிலை எழுத்தர், என்ற வார்த்தை சாதாரணமாக கேள்விப்பட்டதும் உபயோகத்தில் இருந்து வரும் வார்த்தையாகும். ஆங்கிலத்தில் அப்படிப்பட்ட வார்த்தை இல்லை. அந்த வார்த்தை அட்டெண்டெண்ட் (Attendant) வேலைக்காரன் என்பதுதான் உண்மையான பொருள். நம்முடைய சிறந்த தமிழ் மொழியானது, இந்தப் புதிய வார்த்தையை வழக்கத்தில் சேர்த்து, தமிழ்நாட்டில் இந்த ஆங்கில வார்த்தை அட்டெண்டர் (Attender), நடைமுறைக்கு வந்துவிட்டது. ஒருவர் அத்தகைய கீழ்நிலை எழுத்தராக (Attender) பத்து வருடம் பணி புரிந்து, எழுத்தர் (Clerk) பதவி உயர்வு பெற்றார்.

அந்த நாட்களில் பலவகை தரப்புகளிலும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. மாவட்ட தலைநகரில் மாவட்ட சங்கம் அமைக்கப்படவிருந்தது. இந்த எழுத்தர் தன்னுடைய புதிய அனுபவ நிலையில், சங்கம் அமைக்கும் கூட்டத்திற்குப் போக விரும்பினார். அந்தக் கூட்டத்திற்குப் போகுமுன், தன்னுடைய உறவினர் ஒருவரை அவர் ஆன்மீக மையத்துக்குப் போகும் தருணத்தில் போய்ப்பார்த்தார். அவர் போகுமிடத்தின் விசேஷத்தை அறியாமலே உறவினருடன் அந்த இடத்திற்குச் சென்றார். அங்கே அந்த இடம் அவருக்கு மங்களகரமாகத் தோன்றிற்று. மகிழ்ச்சியால் தன்னைத் தானே, அந்த இடத்திற்கு வந்ததை பெருமிதமாக எண்ணினார். எல்லாமே ஒரு நன்மை என்று மகிழ்ந்தார். அவர் வாழ்நாளில் அப்படிப்பட்ட நல்லவைகளை அதிகமாகக் கண்டதில்லை.

அடுத்த மாதம் அவர் உறவினர் வீட்டுக்கு முக மலர்ச்சியுடன் சென்றார். அங்கு தன்னுடைய அபூர்வமான

அனுபவத்தைப் பற்றி இவ்வாறு கூறினார். "நான் சென்ற மாதம் சங்கம் அமைக்கும் கூட்டத்திற்குச் சென்றேன். தாலுக்கா அளவில் அதிகமான பிரதிநிதிகள் வரவில்லை. அங்கு வந்திருந்தவர்கள் எல்லோரும் ஓய்வு பெறும் தறுவாயில் வயது முதிர்ந்தவர்களாக இருந்தார்கள். கூட்டத்தில் கூட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாயின. மாவட்ட அளவில் மாவட்டக் குழுக்கள் அமைக்க தீர்மானிக்கப்பட்டது. எதிர்பாராத வகையில் என்னுடைய பெயர் முன் மொழியப்பட்டு ஆமோதிக்கப்பட்டது, என்னை வியப்புக்குள் ஆழ்த்தியது. என்னுடைய வயதிற்கும், புதிய பதவிக்கு வந்த குறுகிய காலத்திற்கும் அது எனக்கு கிடைத்த ஒரு கௌரவம் என்றே கருதினேன். நான் மிகவும் உணர்ச்சிவயப்பட்டேன். பிறகு மற்றொருவர், என் பெயரை மாவட்ட சங்கத்தின் தலைவர் பதவிக்கு, முன் மொழிந்தார். இதை என் காதுகளால் நம்பவே முடியவில்லை. வியப்பின் மேலீட்டால் என்ன நடக்கிறது என்றுத் தெரியவில்லை. என்னை மாவட்ட சங்கத் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்து ஒவ்வொருவரும் வந்து எனக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள்".

அவர் தன் உறவினர் வீட்டுக்கு மறுபடியும் வந்து, தன்னுடைய வாழ்வில் ஏற்பட்ட அபூர்வமான நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிவிப்பதற்காக வந்தது வெளிப்படையான விஷயம். அதைவிட வெளிப்படையானது, அவருடைய உறவினர் இவருடைய வாழ்வில் ஏற்பட்ட திடீர் மாற்றத்திற்கு, இவர் ஆன்மீக மையத்திற்கு வந்ததற்கும், தலைவர் பதவிக்கு தேர்தல் நடந்த நிகழ்ச்சியின் தொடர்பினையும் உணர்ந்தது என்பதுதான். பயன் அடைந்தவர் அதைப்பற்றி அறியாமல் இருந்த போதும், அவர் ஆன்மீக மையத்திற்குச் சென்று வந்ததால்தான் அந்நன்மை ஏற்பட்டது என்பதே உண்மை.





# 69. பரிதாபம், அனுதாபம், கருணை, அருள், பேரருள்

பலவீனமானவர்கள் கொடூரக்காட்சியைப் பார்க்க-மாட்டார்கள். அதைக் கண்டால் மனத்தால் பாதிக்கப்-படுவார்கள். அவரது நிலை பரிதாபத்திற்குரியது. நண்பருக்காக வருத்தப்படுவது அனுதாபமாகும். அனுதாபம் மற்றவருடைய துன்பத்தைப் போக்காது, ஆனால் ஆறுதல் அளிக்கும். கருணை என்பது தெய்வத்தின் செயல். அது தான் துன்பப்படாமல் மற்றவருடைய துன்பத்தைப் போக்கும். அருள் துன்பத்தின் காரணத்தின் வேரை அறுக்கும் தன்மையுடையது. அது கடந்தகால கர்மவினைப் பயனால், இப்பொழுது அனுபவிக்கும் கஷ்டங்களை அழித்துவிடும்.

இறைவன் மீது வைக்கும் நம்பிக்கை, அருளை வரவழைக்கிறது. அனுதாபம் நல்லெண்ணத்திலிருந்து எழுவது. பரிதாபம் என்பது ஒருவருடைய பலவீனமான மன நிலையிலிருந்து எழுவது. ஒருவர் பலவீனமாக இருப்பதால், துன்பத்தினால் பாதிக்கப்படுகிறார். இவருடைய பலவீனமான உணர்வுகளால், துன்பப்படுபவரை மேலும் கஷ்டத்திற்-குள்ளாக்குகிறார். கடவுள் மீது வைக்கும் நம்பிக்கை மறைமுகமாக கர்மத்தின் மீதுள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கிறது. மனிதன் கர்மவினையின் மீதுள்ள நம்பிக்கையை மாற்றி இறைவனின் அருள் மீது நம்பிக்கை வைத்தால், பழைய கர்மவினை கரைந்துவிடும். இதில் இந்திய பாரம்பரியம் திடமான நம்பிக்கை வைத்துள்ளது. ரிஷி தவத்தை மேற்கொண்டு, இறைவன் மீது வைக்கும் திடமான நம்பிக்கையினால், அவர் தன்னுடைய பழைய கர்மவினைக்கு

கட்டுண்டவராக ஆகமாட்டார். ரிஷி தவத்தால் பெற்றதை, தெய்வீக அன்னை நமக்கு அருளாக வழங்குகிறார். அன்னையின் மீதுள்ள நம்பிக்கை அருள். அது ஒருவருக்கு பழைய கர்ம வினைகளிலிருந்தும் விடுதலை அளிக்கிறது.

ஒருவர் தன்னுடைய திறமையை நம்பாமல் அன்னையை மட்டும் நம்பினால், அன்னை அவருக்கு எல்லை கடந்த பேரருளை வழங்குவார். அருள் பேரருளாக செயல்பட்டு, முடிவில் கிடைக்கக்கூடிய பலனை முதலிலேயே வழங்குகிறார்.

1. அன்னையை அறிவது அருள்.
2. அன்னையை நம்புவது பேரருள்.





# 70. சிந்திக்காமல் புரிந்துகொள்வது

நாம் புரிந்து கொள்வதற்கு மிகவும் கடினமாக சிந்திக்கிறோம். நினைக்க முடியாதவருக்கு புரிந்து கொள்வது கஷ்டம். அவர் விஷயங்களை மனப்பாடம் செய்து ஞாபகத்தில் வைத்திருப்பாரேயன்றி, புரிந்து கொண்டிருக்க மாட்டார். வக்கீல் குமாஸ்த்தாக்கள், நர்சுகள், மருந்தாளுனர்கள் தங்களின் தொழிலின் தன்மைப் பற்றி அறிவார்கள். ஆனால் அதன் விதிமுறைகளைப் பற்றியோ, மருந்தைப் பற்றியோ புரிந்து கொண்டிருக்க மாட்டார்கள். அந்தத் தொழிலைப் பற்றிய அறிவு, முறையான கல்வி அறிவினால் ஏற்பட்டதல்ல. அது நீண்ட கால அனுபவத்திலிருந்து வந்ததாகும். சில சமயங்களில் அவர்கள் தங்களுடைய தொழில் மேலதிகாரிகளைவிட திறமையாக இருப்பார்கள். இது ஒரு விதிவிலக்கேயன்றி, விதிமுறை அல்ல.

ஒரு பிரச்சனை புரிந்து கொள்ள முடியாமல் சவாலாக இருந்தால், அதை நாம் கைவிட்டு விடுகிறோம். சில நாட்களுக்குப் பிறகு திடீரென்று நம் மனதில் அது தெளிவாக விளங்குகிறது. சிந்திக்கும் திறன், தோல்வியுறும் பொழுது, புரிந்து கொள்ளும் சக்தி மனதில் உதயமாகிறது. புரிந்து கொள்ளும் திறன், மௌனத்தின் மூலம் அதிகம் வரும். அதிக அளவில் புரிந்து கொள்வதற்கு, சிந்திக்கும் திறனைவிட, மௌனம் ஒரு சிறந்த சாதனம் என்று நீண்ட கால விவேகம் நமக்குத் தெரிவிக்கிறது.

வெளியுலக அனுபவத்திலிருந்து நாம் அறிவை பெறுகிறோம். அது மனத்தின் அறிவு. அதே அறிவு, நம் மனத்தின் உள்ளே உயர்ந்த நிலையில் உள்ளது. அந்த சிறந்த அறிவைப் பற்றி நாம் உணராமல் உள்ளோம். ஒருவர்

மௌனத்தை நாடி உள்ளே சென்றால், அங்குள்ள உயர்ந்த அறிவை அதிகமான அளவில் பெறமுடியும். அது சிந்தனை செய்யாமலே புரிந்து கொள்ளக் கூடியது. மௌனத்தை தினமும் பயிற்சியின் மூலம் கடைப்பிடிக்கும் பொழுது, குறிப்பாக ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பழக்கத்தில் கொண்டு வந்தால், உள்மனதில் மௌனம் கூடும். மௌனம் என்று நான் குறிப்பிடுவது பேச்சற்ற நிலை அல்ல, அது மனதில் எண்ணமற்ற மௌன நிலையில் இருப்பதாகும். மௌனத்தைப் பெறுவதற்கு எடுக்கும் முயற்சியை, எண்ணம் தடுக்கும். அப்படிப்பட்ட நேரத்தில் தியானம் செய்வது உகந்தது. அந்தப் பிரார்த்தனை, மௌனமான தியானமாக இருக்க வேண்டும்.





# 71. தனி மனிதனிடத்துள்ள உண்மை நிலை, இந்தியனை ஆன்மீக பெருமகனாக உயர்த்தும்

சில நூற்றாண்டுகளுக்கு முன், ஒரு நேரத்தில் இந்தியா செல்வ வளமிக்க நாடாக இருந்தது. சமீபகாலத்தில் சுமார் 1800ஆம் ஆண்டு அளவில் இந்தியர்கள், மெக்காலேவின் (McCauley) வார்த்தைகளுக்கு ஒப்ப, பூரண உண்மைக்கும் பெயர் போனவர்களாக இருந்தார்கள். காலப்போக்கில் இந்தியா ஏழ்மைக்கும் பொய்மை நிலைக்கும் இறங்கிவிட்ட நேரத்தில் மேற்கத்திய நாடுகள் உண்மையை தனி மனிதன் அளவில் வலுவாக நிலைநாட்டியது. உண்மை, நேர்மை, ஒழுக்கம் போன்ற நற்பண்புகள் மேலைநாட்டோரின் மேதாவித்தனத்தைவிட அவர்களின் விஞ்ஞானத்தை வலுப்படுத்த உதவியுள்ளன.

ஆன்மீக ஒளி இந்தியர்களின் உடலில் பரவியுள்ளதையும், ஆன்மீக அமைதி இந்திய சூழலில் நிரம்பியுள்ளதையும், இந்த இரு நாடுகளில் வாழ்ந்தவர்களுக்கு பிரத்யட்சமாகத் தெரியும்.

வேத வாக்கின்படி உண்மை மீது உண்மையான ஆர்வப் பற்றுடையவர்கள் அறிவின் உச்சநிலைக்கு அல்லது சுபிட்சத்தின் மேன்மையான நிலைக்கு உயர்வடைவார்கள்.

சில உதாரணங்கள் மூலம் இந்த உண்மை தெரியவந்துள்ளது. உண்மை என்ற உயர்ந்த பண்பு வேலையில் முறையான செயல்பாடாக வெளிப்படும் பொழுது பெரிய பலன்களை கொடுக்கின்றது என்பது கணினித் துறையிலும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் பெறும் நோபல் பரிசிலும்

தெரியவருகிறது. அமர்த்தியாசென் வாங்கிய நோபல் பரிசு இதற்கு நிரூபணமாகும்.

1. திட்டக்கமிஷன் தீட்டியப் பார்வை 2020 என்ற திட்டம் இந்த உண்மையை ஒரு அளவிற்கு அங்கீகரிக்கிறது.
2. இந்தியா தன்னிடமுள்ள ஆன்மீக சக்தியை ஒரு தனிமனிதனின் உண்மையின் மூலமாக வெளிப்படுத்தினால், சீனிவாசராமானுஜம் போன்ற மேதைகள் தோன்றும் நிலை, விதிவிலக்காக இல்லாமல் சகஜமாகிவிடும்.
3. வறுமையை போக்குவதற்கு முயற்சி எடுப்பதற்குப் பதிலாக, கோடிஸ்வரர்கள் எங்கும் இல்லாதவாறு கூட்டங்கூட்டமாகத் தோன்றுவார்கள்.
4. சுவாமி விவேகானந்தர் நமக்குக் கொடுத்த குரல், விழித்தெழு, எழுமின், முறைப்படுத்துவீர் என்பதாகும். அதை நாம் முழுவதுமாக நடைமுறைப்படுத்துவோமாக.





# 72. காலந்தவறாமை அபரிமிதமான சுபிட்சம்

ஆன்மா என்பது எல்லாவற்றிலும் உள்ளது. ஆத்மா மனிதனின் ஆன்மா. புத்தி கூர்மை, மனத்தின் ஆன்மா. உண்மை என்பது பேச்சு வெளிப்படுத்தும் ஆன்மா. திறமை என்பது வேலையின் ஆன்மா. இனிமை என்பது மனித உறவின் ஆன்மா. ஆன்மா இல்லாத வேலை இல்லை, மனிதனும் இல்லை. எந்தப் பொருளிலும் ஆன்மா இல்லாதது இல்லை. ஆன்மா தன்னை பலநிலைகளில் வெளிப்படுத்துகிறது.

திறமை என்பது வேலையின் ஆன்மாவின் ஆரம்பநிலை வெளிப்பாடாகும். இனிமையாக பழக உதவும் திறமை என்பது வேலையின் ஆன்மாவினுடைய அடுத்த உயர்ந்த வெளிப்பாடாகும். பிஸிக்கல் லெவலில் நடக்கும் வேலை ஒரு கருத்தை வெளிப்படுத்தும் பொழுது, ஆன்மாவின் உயர்ந்த நிலை வெளிப்படுகிறது. அறிவின் கருத்தை பிஸிக்கல் லெவலில் வெளிப்படுத்தும் வேலை அதே சமயத்தில் இனிமையையும் வெளிப்படுத்தினால் அது மேலும் உயர்ந்த ஆன்மீக வெளிப்பாடாகும். நேர்மை போன்ற பண்புகள் வேலையில் வெளிப்பட்டால் இன்னும் சிறப்பாகும். பண்புகள் ஆன்மீக திறமைகளாகும்.

காலம் என்பது “காலா” என்ற தெய்வமாகும். காலத்திற்கு கவனம் செலுத்தும் பொழுது, காலத்திற்குப் பின் மறைந்துள்ள ஆன்மா வெளிப்படுகிறது. வேலையில் நேரத்தை முறைப்படுத்துவது, காலத்தின் உயர்ந்த ஆன்மாவை வெளிப்படுத்துகிறது. ஒரு வேலையின் நேரம், மற்ற வேலையின் நேரத்தை மதிக்கும்போது, இணைந்து செயல்படுவதாகும்.

கம்பெனியில் ஒருங்கிணைந்து செயல்படும் பொழுது உன்னுடைய கம்பெனியில், காலத்தின் ஆன்மாவை வெளிப்படுத்துகிறது. ஒரு கம்பெனியில் காலந்தவறாமை எல்லா நிலைகளிலும் ஒருங்கிணைந்து செயல்படும் பொழுது, அது கம்பெனியின் காலத்தின் மிக உயர்ந்த ஆன்மா வெளிப்படுதலாகும். ஒரு கம்பெனியில் சராசரியாக 6½ நாட்களில் செய்யும் வேலை காலந்தவறாமையை கடைபிடிக்கும் பொழுது அரை நாள் வேலையாக சுருங்குகிறது. இது காலத்தையும், பணத்தையும் சேமிப்பதாகும். இதனால் இங்கு 13 மடங்கு சேமிப்பு கிடைக்கிறது. எந்தக் கம்பெனியும் நேரந்தவறாமையை நன்றாகப் புரிந்து கொண்டு பொறுப்பை ஏற்று செயல்பட்டால், இலாபம் ஐந்து அல்லது ஆறு மடங்கு அதிகரிக்கும். ஏனெனில் நேரம் அந்த அளவிற்கு மிச்சப்படுத்தப்படுகிறது.

1. காலந்தவறாமை என்பது இலாபத்துடன் நேரடி தொடர்புடையது.
2. காலந்தவறாமை ஒரு நலிந்த நிறுவனத்தை நஷ்டத்திலிருந்து இலாபத்திற்கு மாற்றும்.
3. காலந்தவறாமை ஒரு சிறந்த ஒழுங்குமுறைப்படுத்தும் தன்மையுடையது.
4. காலந்தவறாமை பழங்காலத்து மேல்நாட்டு அரசர்களின் பழக்கமாக இருந்தது என்று சொல்லப்பட்டது.
5. நாம் இப்பொழுது காலந்தவறாமையை, தோல்வியற்ற வெற்றியின் சின்னமாகச் சொல்லலாம்.
6. எதுவும் தோல்வியுறக்கூடியது. ஆனால் காலந்தவறாமை தோல்வியுறாது.





# 73. மனச்சோர்வு

சிலர் இயற்கையாகவே உற்சாகமின்றி மனச்சோர்வு உடையவர்களாக இருக்கிறார்கள். மற்றும் பலர் மனச்சோர்வை வளர்க்கும் சுபாவம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். வாழ்வில் தோல்வியை சந்திக்கும் போதும், அல்லது தாங்கள் புறக்கணிக்கப்பட்டபோதும், மனச்சோர்வு ஏற்படுகிறது. வேறு சிலர், உற்சாகமுள்ளவர்களாக இருந்தாலும் வாழ்வில், திருப்புமுனை ஏற்படும்பொழுது மன சோர்விலிருந்து மீளமுடியாத நிலையை அடைகிறார்கள். வழக்கமாக அப்படிப்பட்டவர்கள் எல்லோரும், இது தவிர்க்க முடியாது என்று மனச்சோர்வுக்கு அடிமையாகி விடுகிறார்கள். சிலர் மருந்தை நாடுகிறார்கள். அது தற்காலிக நிவாரணமாக இருந்தாலும், மேலும் அது தீவிரமாகி மறுபடியும் வருவதைத் தவிர்க்க முடியாததாக மாற்றிவிடுகிறது.

ஒரு பொறியாளர் 31வது வயதில் மனச் சோர்வு உடையவராக இருந்ததை அவர் நண்பர் ஒருவர் கண்டார். அந்த மனச்சோர்வு அவருக்குப் பல வருடங்களாக இருந்து வந்தது. அவருடைய நண்பர், மனச்சோர்வை போக்குவதற்கு, அன்னையிடம் பிரார்த்தனை செய்து ஆன்மாவை அழைக்கும்படி யோசனை கூறினார். அவ்வாறு அந்த முறையை பின்பற்றியதும் மறுநாள், மனச்சோர்விலிருந்து விரைவில் மீளமுடியும் என்று உணர்ந்தார். அவருடைய நண்பர், மனச்சோர்வின் மூலக்காரணத்தையும் அதனுடைய பல நிலைகளைப்பற்றி அறிவுபூர்வமாக தெளிவாக விளக்கக் கூடியவரிடம் அழைத்துச் சென்றார்.

அந்தப் பொறியாளர், மனச்சோர்வின் பலதரப்பட்ட நிலைகளைப் பற்றிய விபரங்களை ஆர்வமுடன் கேட்டார். அவர் கூறிய அனைத்தும் தன்னுடைய உள் சிரமத்திற்கு பொருத்தமாக இருந்ததைக் கண்டு ஆச்சரியத்துடன் மகிழ்ச்சி அடைந்தார். மனச்சோர்வின் தன்மையைப்பற்றி புரிந்து கொண்டார். அவர் மனச்சோர்விலிருந்து மீள்வதற்கு, ஒரு திடமான தீர்மானத்துடன் அங்கிருந்து கிளம்பிப் போய்விட்டார். இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அவரது நண்பர் இவரைப் பார்த்த போது இவருடைய முகம் பிரகாசமாக இருந்ததைக் கண்டு ஆச்சரியத்துடன் விசாரித்தார். பொறியாளரிடம் ‘‘எப்படி இருக்கிறீர்கள்? மனச்சோர்வு எந்த அளவில் உள்ளது?’’ என்று வினவினார். அதற்குப் பொறியாளர் ‘‘அது அன்றைய மறுநாளே விழித்தவுடன் என்னை விட்டு அகன்றுவிட்டது’’ என்றார். அந்த மனச்சோர்வு அடுத்த முப்பது வருஷங்களில் திரும்பவும் வரவே இல்லை.

மனச்சோர்வினால் பீடிக்கப்பட்டிருந்த அவருக்கு ஆன்மாவை அழைக்கும் கருத்து ஒன்றை தெரிவித்ததோடு, அவருக்கு எளிதில் புரியும்படியாக பலவிதமான விளக்கங்கள் சொல்லப்பட்டன. ஆன்மீக நோக்கில் மனச் சோர்வு, நம்மை பீடிப்பது இல்லை. அதை நாம்தான் பற்றிக் கொள்கிறோம் என்பதாகும். பொறியாளர் எடுத்த திடமான முடிவினால், அது மீண்டும் வந்து நிலைத்து நிற்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.





# 74. மௌனம் எதிரிகளையும் அவர்களது சதி திட்டங்களையும் முறியடிக்கும்

எதிரிகளை தாக்குவதில் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று தன்னுடைய முழுபலத்தையும் ஒன்று சேர்த்து எதிரிகளிடமிருந்து வரும் அடிக்கு திருப்பி பலமான பதிலடி கொடுத்தல். இது மனிதன், பிஸிக்கலாகவும், அறிவு ரீதியாகவும் செயல்படும் முறையாகும். மற்றொரு வழி, மனிதன் எந்த அஸ்திரங்களையும் நாடாமல், மௌனத்தைக் கடைப்பிடிப்பதாகும். மௌனத்தை அனுஷ்டிப்பது, அதிக கடினமானது என்றாலும், அது மிகவும் சக்தி வாய்ந்தது. நெருக்கடியான நேரத்தில், தன்மீது குறிவைக்கும் ஒவ்வொரு அடியும், தாக்கியவர் மீதே திரும்பிச் சென்று தாக்கும். அது மௌனத்தின் சக்தியாகும்.

அலுவலகங்கள் அநேக நேரங்களில் குடும்பங்கள் போலவும், நட்புரிமையுடையதாகவும், சகோதரத்தன்மை உள்ளதாகவும் இருக்கும். அது போட்டி, பொறாமை, கோள் சொல்லுதல், சதி செய்தல் போன்றவைகள் நிறைவாக நிகழும் இடமாகவும் இருக்கும். சில நேரங்களில் நல்லவரையும், களங்கமில்லாதவரையும், அப்பாவியையும், பாதிப்புக்குள்ளாக்கி அவருக்கு கேடுவிளைவிப்பார்கள். இப்படிப்பட்ட சதித்திட்டத்தின் சுழலில் சிக்கிக் கொண்டவர் கடவுள்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்கிறார். அவர் நல்ல வழியிலிருந்து பரஸ்பரம் நாசம் உண்டாக்கும் சண்டையிடும் தீய மனோபாவத்திற்கு ஆளாகிறார்.

அப்படிப்பட்ட நிறுவனம் ஒன்றில், புதியதாக வேலைக்கு வந்த இளைஞர் ஒருவர், தன்னுடைய வேலைத் திறமையாலும், உலக விவகாரங்களைப் பற்றிய அறிவு முதிர்ச்சிப் பெற்றவராகவும் விளங்கியதால் அவர் திடீரென்று பிரபலமடைந்தார். இரண்டு மூத்த அலுவலர்கள், இவரோடு நண்பர்களாக இருப்பதுபோல் வெளியில் போலியாக நடித்துக் கொண்டு, அவருக்கு தீங்கிழைப்பதில் மறைமுகமாக, விரோதமான செயல்களில் ஈடுபட்டு, அவர் மீது 29 புகார் மனுக்களை ஜோடித்து, அதிகாரிக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த அதிகாரி தன்னிச்சையாக முடிவு எடுக்க முடியாத பலவீனமானவர்.

அந்த அதிகாரி புகார் மனுவைப்பற்றி விசாரிக்க, கூட்டத்தைக் கூட்டினார். பாதிக்கப்பட்டவர் தன் மனதுக்குள்ளே சென்று மௌனமாக இருக்கத் தீர்மானித்தார். அந்த அதிகாரி விவரிக்க முடியாத காரணத்தால் எளிதில் அமைதி இழந்தார். புகார் மனுவை அனுப்பியவர்கள், தாங்கள் எதிர்பார்த்ததை அடைய முடியாமல் தோல்வி கண்டு, அது அவர்களுக்கே கெடுதலாக திருப்பித் தாக்கியது. சூழ்நிலை கடுமையாயிற்று. அதிகாரி கோபமுற்று புகார் கூறியவர்கள் மீது வெளிப்படையாகவே சீறி விழுந்தார். “இங்கு நான்தான் அதிகாரி. நான் என்ன செய்ய வேண்டுமென்று எனக்கு யாரும் சொல்ல வேண்டியதில்லை. உங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்யுங்கள். என்னிடம் இது போன்ற புகார்களைக் கொண்டு வராதீர்கள்” என்று கூறினார். அந்த இரண்டு மூத்த அலுவலர்களும் அதன் பிறகு எந்த புகாரையும் அதிகாரியிடம் எடுத்துச் செல்ல முடியவில்லை.





# 75. மனிதனின் பர்சனாலிட்டி

சாதாரணமாக அன்றாட உரையாடலின் போது, பொதுவாக ஒருவரின் உடல் அமைப்பையும் அழகையும் குறிப்பிடும் வகையில், உயரமானவர், அழகானவர், வசீகரமானவர் என்ற சொல்லை உபயோகிக்கிறோம். பர்சனாலிட்டி என்ற சொல் ஒருவருடைய மனவலிமை, குணநலன்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிற உள்ளே உள்ள இயற்கையான பண்புகள், மற்றும் திறனைப் பற்றித்தான் குறிக்குமேயன்றி, வெளித்தோற்றமல்ல. வெளித் தோற்றத்தை விவரிக்க விரும்பினால் “இவர் நல்ல உடற்கட்டு கொண்டவர்” என்று சொல்லலாம். உடற்கட்டு என்பது வெளித்தோற்றத்தை மட்டும் குறிக்கிறது. ஆன்மா மனிதனுக்குள்ளே ஆழ்ந்த மையத்தில் உறைகிறது. அங்கிருந்து வரும் அழைப்பு அதிக சக்தி வாய்ந்தது.

பழக்கங்கள் என்பது வெளியில் தெரியும் நடத்தையைக் குறிக்கும். அது ஒருவர் தன் மனதில் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிவிக்காது. வெளிப்புற பழக்கங்கள் உள்ளே உள்ள உண்மையான குணங்களை பிரதிபலிப்பதே நடத்தையாகும். பழக்கங்கள் வெளியில் தெரியும். நல்ல நடத்தை உள்ளே தெரியும். இரண்டுமே மனிதனின் ஜீவனின் மேல்மட்டத்திலிருந்து வரக்கூடியவை. முக்கியமான பிரச்சனைகளைச் சந்திக்கும் பொழுது இவை இரண்டுமே உதவிக்கு வராது. பழக்கங்கள், மற்றும் நடத்தைகளுக்குக் கீழே முறைப்படுத்தப்பட்ட சுபாவம் உள்ளது. சுபாவமானது, வலிமை, திறமை, ஞாபக சக்தி, விடாமுயற்சி இவைகளை வெளிப்படுத்துகிறது. இவைகள் யாவும் பலநிலைகளில் பலவித

தீவிரத்துடன் முறைப்படுத்தப்பட்டுள்ளன. சுபாவத்தைக் கடந்து மனிதனின் முறைப்படுத்தப்படாத சக்தி உள்ளது. அந்த சக்தி, சுபாவம் கைகொடுக்காதபோது, புதிய பிரச்சனைகளைச் சந்திக்கத் தயாராகுகிறது.

ஆன்மாவை அழைத்தல் என்பது மேற்கண்ட நிலைகளில் ஏதாவது ஒன்றிலிருந்து அழைப்பதாகும். ஆழத்திலிருந்து வரும் அழைப்பு அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கும். நமது கட்டுப்பாட்டுக்குள் அடங்காத எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கும் பழக்கம், முதல்நிலையாகும். சிந்திப்பது, அடுத்த நிலையான நடத்தையாகும். நமது பண்புகளைக் குறிக்கும் எண்ணங்களின் ஆழத்திலிருப்பது சுபாவமாகும். நாம் நமது எண்ணங்களை ஒருமுகப்படுத்தினால், சுபாவத்தின் நிலைக்குச் சென்று ஆன்மாவை அழைக்க முடியும். அது அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கும். ஆன்மாவை அழைப்பதற்கு மனித இயல்பைக் கடந்து, எண்ணங்களை ஒருமுகப்படுத்த வேண்டும். மனிதன் தன்னால் புரிந்து கொள்ள முடியாத பிரச்சனையை எதிர்கொள்ளும் பொழுது, சுபாவமும் கைவிட்ட நேரத்தில், அங்கே ஆன்மாவை அழைத்தால் நமக்குத் தெரிந்ததும் தெரியாததுமான பிரச்சனைகள் எல்லாம் தீரும்.

1. நம்முள் இறங்கும் அமைதியின் சக்தி அழைப்பின் ஆழத்தைத் தெரிவிக்கிறது.
2. யோகத்தில் அழைப்பை விடுப்பது மனிதன் இல்லை. விழித்துக் கொள்ளும் ஆன்மாதான் அழைப்பு விடுக்கிறது.





# 76. ஒரு பரிசோதனை - ஒரு உரையாடல்

இப்பரிசோதனைக்கான நிபந்தனைகள் நம்பிக்கையை ஆன்மாவிற்கு மாற்றுவது, அதிகபட்ச வேலைத்திறன் மற்றும் மௌன சக்தி என்று புரிந்து கொள்கிறேன்.

நம்பிக்கையை ஆன்மாவிற்கு மாற்றுவது என்றால் என்ன என்பதைப் பற்றி புரிந்து கொள்வது மிகவும் முக்கியம். நாம் மனதாலும் உணர்வாலும் செயல்படும் வழிகளில் நம் நம்பிக்கையை வைத்துள்ளோம். இந்த வழிகளின் மீது வைத்துள்ள நம்பிக்கை முழுவதுமாக ஆன்மாமீது திரும்ப வேண்டும். உதாரணமாக, உங்கள் உற்பத்திப் பொருளுக்குள்ள நற்பெயர்மீது நம்பிக்கை வைத்திருப்பீர்கள். உங்கள் பொருள் தரம் குறைந்ததாக இருந்தாலும், ஆன்மா அதையும் மீறி செயல்பட முடியும் என்று நம்ப வேண்டும்.

இது உண்மை என்பதை நான் பலமுறை என்னுடைய பொருட்களிலும் மற்றவர்களுடைய பொருட்களிலும் பார்த்திருக்கின்றேன். எப்பொழுதும் சிறந்த பொருளுக்கே பரிசு கிடைப்பது இல்லை. சில நேரங்களில் இரண்டாவது மூன்றாம் தரமுள்ள பொருள்கூட பரிசுகளை தட்டிச் செல்கின்றது. அது ஒரு அனுபவம் என்பதை நான் அறிவேன்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் ஆன்மாவின் செயல்பாட்டின் மீது, உங்கள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். நான் உங்களைக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், எந்தவிதமான ஆராய்ச்சியையும்

உதாரணமாக எடுத்துக் கொள்ளாமல், ஆன்மாமீது நம்பிக்கை வைக்க வேண்டுமென்பதாகும். அதுவே சிறந்தது. அது ஆன்மாமீது ஆன்மாவுக்காகவே வைத்திருக்கும் உண்மையான நம்பிக்கையாகும்.

அந்த மாற்றம் நிகழும். ஆனால் நிலையானதாக இருக்காது. அந்த மாற்றம் விட்டு விட்டு நிகழும்.

நம்பிக்கை உள்ள போதுதான், நீங்கள் செயல்பட வேண்டும் என்பதை முக்கியமாகக் கருதவேண்டும். நிலையான நம்பிக்கையிருந்தால் அதிகபட்சப் பலன் கிடைக்கும்.

மாற்றம் விட்டு விட்டு நிகழ்ந்தாலும் நம்பிக்கையால் செயல்படும் பொழுது, குறைந்த பலனாக இருந்தாலும், அது இப்பொழுது கிடைக்கும் பலனைவிட, அதிகமாகக் கிடைக்கும் என்று நம்பலாம்.

உங்கள் விஷயத்தில் தற்பொழுது விற்பனை ஆறு முதல் ஏழு கோடிகளுக்கு இடையில் உள்ளது. கம்பெனிக்கு சமநிலை எட்டு கோடியில் வரும். பிறகு குறைந்தபட்ச எட்டு கோடி அதிகபட்சமாக 80 கோடியாகவும் இருக்கும்.

நீங்கள் நல்ல நேரம், எண் கணித சாஸ்திரம், வாஸ்த்து போன்றவைகளை மறுக்கிறீர்கள்.

இவைகள் எல்லாம் கர்மத்தின் பயனால் ஏற்பட்ட பலன்களே, என்பதால் ஜாதகத்தில் கண்டுள்ளபடி அப்பலன்களை அளிக்கும். ஆன்மா இவற்றையெல்லாம் கடந்து நிற்கும். விருப்பம் உங்களுடையது. இவைகளில் ஏதாவது ஒன்றின் மீது நம்பிக்கை இருக்கும் வரையில், நீங்கள் ஆன்மாவை அழைக்க முடியாது. இந்த ஆராய்ச்சி உங்களுக்குப் பயன்படாது.





# 77. ஒரு ஆராய்ச்சி - முழுமையான முன்னேற்பாடுகள்

இப்பொழுது நீ உன் நிலையைக் கடந்து ஆன்மா மீது மாற்றம் நாடுபவராக உயர்ந்த நிலைக்கு வரத் தயாராகிவிட்டாய். அடுத்த கட்டம், வேலையில் பலதரப்பட்ட ஆராய்ச்சியை மேற்கொள்ள முன்னேற்ப்பாடுகள் செய்வதாகும்.

நான் என் உள் அமைதியின் மூலம், என் நிலையைக் கடந்து ஆன்மாவை அழைக்கும் நிலைக்கும் மாறிவிட்டேன் என்பதை அறிவேன்.

மனம் பழைய சந்தேகங்களை நாடாமலும், கேள்விகளை எழுப்பாமல் இருப்பதும், எதிர்பார்ப்புகள் இல்லாமல் இருத்தலும், ஆன்மாவை அழைக்கும் அறிகுறிகளாகும்.

நான் ஏற்கனவே கூறியது போல் அமைதி வந்தும் போவதுமாக உள்ளது. அமைதி இருக்கும் பொழுது இந்த ஆராய்ச்சியைத் தொடங்க வேண்டுமென்று கூறுகிறீர்கள். அமைதி ஏன் விலகுகிறது?

நல்ல நேரம், உங்கள் பொருளுக்கு மார்க்கெட்டில் உள்ள பெயர் என்று இவற்றை நாடும் பொழுது, அமைதி விலகுகிறது. நீ அதிலிருந்து விலகி வரவேண்டும்.

நீங்கள் ஒருமுறை, முழுமையான ஏற்பாடு என்பது, நான் பழைய தவறுகளை செய்யாமல் இருத்தலும், காலந்தவறாமை, சுத்தம், மௌன உறுதி, முறைப்படுத்துதல் போன்றவற்றை கடைப்பிடிப்பதாகும் என்று கூறினீர்கள்.

ஒரு வேலையை சிறப்பாக முழுமையானதாக நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்று கூறுகிறேன். அதுவே மிகச் சிறந்தது. குறைந்தபட்சமாக, உன்னுடைய உச்சகட்டத் திறமையை சிறிதளவும் விட்டுவிடாமல், வேலையில் வெளிப்படுத்த வேண்டும். இது இன்றியமையாததாகும்.

நான் என் வேலையை சிறு சிறு பகுதிகளாக, ஐந்து அல்லது பத்து பிரிவுகளாக பிரித்து, இந்த செயல்திறன் பரிசோதனைக்கு உட்படுத்துகிறேன்.

அது சிறந்த இலட்சியம். இதைவிட சிறப்பாகச் செய்ய முடியும் என்று யாராலும் கூற முடியாது.

என்னுடைய முந்தைய முயற்சிகளைவிட, அது சிறப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

நான் மீண்டும் கூறுகிறேன். இது நல்லது. ஆனால் உங்களுடைய சக்திகள் எல்லாம், செலவழிக்கப்பட வேண்டும். இந்த மனமாற்றத்தினாலும், முழுமையான முன்னேற்பாடு-களாலும், உன்னுடைய சூழலில் மாறுதல் ஏற்பட்டுள்ளதைக் காண்பீர்கள். வேண்டாத முரண்பாடான அறிகுறிகள் மறைந்து, உறுதியான நிச்சயமான பாஸிட்டிவ் சகுனங்கள் எழும். வேலையை நிறைவேற்றுமுன், அது முழுமையான உறுதியான உடன்பாடாக மாறவேண்டும். இப்பொழுது எஞ்சியிருப்பது வேலையை நிறைவேற்றுவது மட்டுமே.





# 78. ஒரு ஆராய்ச்சி - மௌனமான செயல்பாடு

உன் மனநிலையை ஆன்மாவுக்கு மாற்றிக் கொண்ட பிறகு, விற்பனைக்காக எடுக்கும் முயற்சியில் ஆராய்ச்சியில் இறங்கிவிட்ட நீ, இப்பொழுது மௌன சக்தியின் மூலமாக செயல்படத் தயாராகிவிட்டாய்.

விற்பனை நடக்கும் இடத்தில் நான் பேசக்கூடாது என்கிறீர்களா?

அப்படி இல்லை. பேசும் பொழுது, விலை, பேரம் பேசுதல், விலையில் தள்ளுபடி போன்ற விஷயங்களில், நீ முதலிலேயே அதைப் பற்றி பேசக்கூடாது என்கிறேன். ஏனெனில், அது உன்னுடைய முன்கூட்டிய எதிர்பார்ப்பைத் தெரிவித்துவிடும்.

அப்படியானால் நான் தகுதிக்கு மீறிய சலுகைகளை கேட்கக்கூடாது என்கிறீர்களா?

ஆம். அது மட்டுமல்ல. உன் மனம் அமைதி அடைந்து, தேவையானதற்கு மட்டும் பதில் சொல்வதாகவும், சந்தர்ப்பத்திற்கு தகுந்த பதில் மட்டும், சொல்லக்கூடியதாகவும், இருக்க வேண்டும்.

சில நேரங்களில் நியாயமற்ற முறையில் பேரம் நடக்கும் போது, அனுகூலமாக இல்லாத சூழ்நிலையில், நான் என் தேவையின் அவசியத்தை முன்னிட்டு, அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

அப்படிப்பட்ட நிலைகளில் பலன் அதிகமாகவே ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆம், மிகவும் மெச்சத்தகுந்ததே. அதை நான் கவனிக்கவில்லை.

எல்லாம் நல்லபடியாகவே போகும். நல்லபடியாக, திறமையாக செயல்பட்ட பின்பு, எழுத்து மூலமாக உத்திரவுகள் வரும் வரை, மனம் அமைதியாக இருக்காது.

அது மிகவும் கடினமானதுதான்.

நம் விஷயம் கூடி வருவதற்கு முன்னால், நம் மனம் அதைப்பற்றிய சிந்தனையும், எதிர்பார்ப்பும் இல்லாமல், மன உறுதியுடன் இருக்க வேண்டும். நமது இந்த முடிவு நமக்கு வேறு பல வேலைகளை கொண்டு வந்து அதில் மூழ்கச் செய்து நாம் சாதித்த நல்ல விற்பனையை மறக்க வைக்கும்.

ஆகவே மாற்றம், முழுமையான முன் ஏற்பாடுகள், மௌனத்தின் மூலம் செயல்படுவது ஆகியவை எல்லாம் எனக்கு நல்ல பலனை அளிக்குமல்லவா?

நான் ஏற்கனவே உனக்கு கூறியது போல், இந்த மூன்று நிலைகளையும் முழுமையாகக் கடைப்பிடித்தால், உன்னுடைய மாற்றம் நிலையற்றதாக விட்டு விட்டு நிகழ்ந்தாலும், குறைந்தபட்சப் பலன் நிச்சயமாகக் கிடைக்கும்.

நாம் அதிகபட்ச பலன்களை குறிவைத்து நாடுவோம். அதே சமயம் பொறுமையாகவும் இருப்போம்.

அதிகபட்ச பலன், ஒருவருடைய பர்சனாலிட்டியால் நிர்ணயிக்கப்படுகிறது.





# 79. ஒரு அடையாளமாக எடுத்துக் கொண்ட பரிசோதனையின் மூன்று நிலைகள்

ஒருவர் தன் வாழ்வில் ஆன்மாவை அழைக்கும் வழியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் பொழுது, வாழ்க்கை அதிர்ஷ்டமாக மாறுகிறது. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும் நிலை மாறி, தோல்வியற்ற வெற்றியைக் காணமுடியும். இந்த உயர்ந்த உண்மையைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு, நான் ஒரு பரிசோதனையை அடையாளமாக செய்து பார்க்கும்படி, கருத்துத் தெரிவித்தேன். இது நம்முடைய சாதாரண மனத்திற்கு ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும், நம்பும்படியாகவும் இருக்காது. நான் ஏற்கனவே கூறியபடி, இந்தியாவில் ஒரு தொழிலும் நசிந்து போகாது. அரசாங்கம் வேலைக்கு உத்திரவாதம் கொடுக்கும் பட்சத்தில், இந்தியா நடுத்தர வருமானம் உள்ள நாடாக மாறும். 2020-திட்டத்தின் குறிக்கோள், வெறும் கனவாக இருக்காது. அது குறிக்கோளைத் திட்டமிட்ட காலத்திற்குள்ளே சீக்கிரமாக அடைந்துவிடும். காலந்தவறாமை, அபரிமிதமான சுபிட்சத்தைத் தரும். ஆன்மா வெளிவரும் பொழுது, ஆன்மாவின் முன்னால் கர்மம் கரைந்துவிடும். இம்மாதம் நஷ்டத்தில் இருக்கும் கம்பெனி, அடுத்த மாதம் இலாபத்தை ஈட்டும். சுருங்கச் சொன்னால் முடியாதது என்பது எதுவும் முடியும் என்ற நிலை ஏற்படும்.

இந்தியன் மற்றவரைக்காட்டிலும், இதை அதிக திறமையுடன் செயலாற்றக் கூடியவன். ஏனென்றால் அவனது உடலில் ரிஷிகளின் ஒளி பரவியுள்ளது. ஒரு காலத்தில் அவன் முழுமையான மெய்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கினான். இந்திய நாட்டில் ஜனநாயகப் பண்பின் வேர் ஊன்றியிருந்தது.

(1) இந்த ஆராய்ச்சியின் சக்தி, வாழ்விலிருந்து ஆன்மாவுக்கு மாறுவதிலும் இயற்கையிலிருந்து ஜீவியத்திற்கு மாறுவதிலும், மனத்திலிருந்து நம்பிக்கைக்கு மாறுவதிலும் அடங்கும்.

(2) இந்த சக்தியின் மகத்துவம், ஒருவருடைய திறமையின் சக்தியெல்லாம் தீர்ந்தவுடன் தெரியும்.

(3) பலனின் அளவு மௌனமாக எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், அமைதி கலந்த பொறுமையுடன் காத்திருப்பதில் உள்ளது.

மேலே விவரிக்கப்பட்ட ஆன்மீகக் கருத்துக்களை, சாதாரண மொழியில் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளும்படியாக சொல்லலாம். மற்றவர் அதிர்ஷ்டம் பெறவேண்டுமென்று ஒருவர் நெஞ்சம் நல்லெண்ணத்தால் நிரம்பி அவருக்கு அதிர்ஷ்டம் கிட்டும் பொழுது தானும் சந்தோஷப்படுகிறார் என்றால், அப்படிப்பட்டவரின் ஆன்மா உள்ளிருந்து விழித்துக் கொள்ளும். அவரை விட்டு அகலாது.





# 80. ஆன்மாவுக்கு மாறுவதின் பல பரிமாணங்கள்

ஒரு வாசகர் தன்னுடைய விற்பனைத் தொழிலில் ஆன்மாவை அழைத்ததினால் அன்றே அவருக்கு விற்பனையில் நல்ல பலனைக் கொடுத்தது என்று எழுதியிருந்தார். இன்னொருவர் ஆன்மாவை அழைத்ததால், உள்ளுறை அமைதியையும், இனிமையையும் கொடுத்தது என்று தெரிவித்தார். இவைகள் லௌகீகத்திலும், ஆன்மீகத்திலும் ஆன்மாவை வெற்றிக்கரமாக அழைத்ததைக் குறிப்பதாகும். இன்னொரு வாசகர், ஆன்மாவை அழைக்கும் முறை தெரியாததால், இதை தன்னால் செய்ய முடியவில்லை என்று தெரிவித்தார். ஆன்ம அழைப்பு என்பது, நாம ஸ்மரணையா என்று கேட்டிருந்தார். நல்லதே நடக்கும் என்பவர்களால் அதை சுலபமாக பின்பற்ற முடியும். நம்பிக்கையற்றவருக்கு, தோல்வி மனப்பான்மையே குறுக்கே நிற்கும்.

சோதிடம் முதலானவைகள் போற்றத்தக்கது என்ற பரம்பரை பழக்கத்தை விடாமல் பற்றி நிற்பது, ஆன்மாவை அழைப்பதற்குத் தடையாகும். ஒருவர் சடங்குகளை விட்டுவிட பிரியப்பட்டாலும், அவர் வீட்டை ஒழுங்கற்றதாகவும் ஒட்டடை முதலானவை படிந்து அழுக்காவும் அசுத்தமாகவும் வைத்திருப்பார். ஒழுங்கீனமும் அழுக்கும் ஆன்மாவுக்கு தடைகளாகும். வீடு சுத்தமாக இருக்க வேண்டும். சுத்தம் என்றால் உயர்ந்த நிலையில் பரிசுத்தமாக வைத்திருப்பதாகும். ஒழுங்கு மிக மிக முக்கியம். வீட்டில் கூச்சலிடுவதும், சத்தமாக பேசுவதும் அறவே விலக்கப்பட வேண்டும். ஒருவர் மெதுவாக பேச வேண்டும்.

மனம் நல்ல நேரத்தை நினைக்காமல் இருக்க சம்மதித்தாலும், அது மனத்தின் ஆழத்தில் தவிர்க்கமுடியாத நிலையில் அதிலே நிலைத்து நிற்கும். ஆன்மா, சோதிடத்தை விட சக்தி வாய்ந்தது என்று அறிவது, மனம் ஆன்மாவுக்கு மாறுவதற்கு உதவிடும். மாற்றம், எந்தவிதமான சமரசத்தையும் ஏற்காது. ஏனெனில் அது சிறியதிலிருந்து பெரியது வெளிப்படுவதாகும். அடிக்கடி என்ன நிகழ்கிறது என்றால், மனம் மாற்றத்தை நாடுவதில் ஊசலாடிக் கொண்டே இருக்கும். நிலையாக நிலைத்து இருக்காது. ஆனால் தற்காலிக மாற்றத்திற்குக் கூட, ஆன்மா மனத்தின் தூய்மையை வேண்டுகிறது. உணர்ச்சிபூர்வமாகவும், மனதாலும் எல்லாவிதமான மூடநம்பிக்கையிலிருந்து விடுபட வேண்டுமென்று ஆன்மா எதிர்பார்க்கிறது.

ஆன்மா வாழ்க்கையைவிட பெரியது என்று ஏற்றுக் கொள்வது நமக்கு ஆன்மாவிற்கு மாறுவதற்கு உதவும். அந்த அறிவு நம்மை உயர்த்தவும் செய்யும்.





# 81. ஆன்மா நம் அழைப்புக்காகக் காத்திருக்கிறது - மனிதன் ஆன்மாவை அழைப்பானா?

ஆன்மாவை அழைப்பது கடினம் என்று பலர் கூறியுள்ளார்கள். இதில் பெரிய இரகசியம் என்னவென்றால், ஆன்மா மனிதனிடத்தில் அதிக அளவில் அன்பு வைத்து, அவன் தன்னை அழைக்கமாட்டானா என்று, ஆர்வமுடன் காத்திருக்கிறது. உண்மையில் அது தன் உயர்ந்த அடிப்பீடத்திலிருந்து எழுந்து வந்து, மனிதனின் வீட்டுக்கதவு அருகில் நின்று கொண்டிருக்கிறது. மனிதன் தன் கவனத்தை ஆன்மா மீது செலுத்துவானா? ஆன்மா மனிதனிடத்தில் வசீகரமாக இருப்பதுபோல், மனிதனும் ஆன்மாவிடம் வசீகரமாக இருப்பானா? ஒருவர், ஏன் ஆன்மா இவ்வளவு தூரம் கீழே இறங்கி வந்து அவனுள் பிரவேசிக்காமல், அவனுடைய அழைப்புக்காகக் காத்திருக்கிறது என்று, கேள்வி எழுப்பலாம்.

ஒரு காலத்தில், ஒருவர் ஆன்மாவின் கடைக்கண் பார்வைக்கு, வருடக்கணக்கில் தியானத்தில் அமர்ந்து இருக்க வேண்டியதாக இருந்தது. இப்பொழுதோ, ஆன்மாவின் சக்தி பூமியின் சூழலுக்கு இறங்கி வந்து, தன்னை மனிதன் அணுகுவதற்கு சுலபமாக்கிக் கொண்டுவிட்டது. மனித குலத்தில் ஏற்புத்திறன் அதிகரித்து வருவதால், மனிதன் ஆன்மாவை அழைக்காமலேயே, ஆன்மாவே அவன் வாழ்வில் வந்து செயல்படும் நேரம் வரும். இதுவரையில் அப்படிப்பட்ட நேரம் இன்னும் வரவில்லை. ஆன்மா இறங்கி வரும் பொழுது,

ஏற்புத்திறனை வெளிப்படுத்தக்கூடிய மக்களை அதிக அளவில் உருவாக்கக்கூடிய ஒருவர் அந்த நேரத்தை வரும்படி செய்வார்.

ஆன்மாவை உள்ளே அழைப்பதில், உண்மையில் மனிதனுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை. எது கடினம் என்றால், மனிதன் இதுவரையில் தன் மனத்தால் போற்றி வளர்த்து வந்த வாழ்வின் வழிமுறைகளான, தேசத்தைவிட குடும்பம் முக்கியம், மக்களிடம் விசுவாசத்தை விட சொத்தின் மீது விடாமுயற்சியுடன் இருப்பது, போன்றவற்றை விட முடியாது என்பதுதான். நாம் இன்றைய நாளில் சமூகத்தின் பண்புகளுக்கு கீழ்ப்படிதலாக இருக்க விரும்புகின்றோம். 38 வயதான நல்ல சம்பாத்தியமுள்ள ஒருவருடைய மகள், தன்னுடைய பெற்றோர்கள் அவள் திருமணத்தில் சிறிதும் அக்கரை காட்டாமல் இருக்கும் போதும், அவள் பெற்றோர்கள் மீது அதிக பாசம் வைத்திருந்தாள். நன்றியில்லாத, கடமை உணர்வு இல்லாத பெற்றோர்கள் மீது பாசம் இருக்கும் வரை, அவளால் ஆன்மாவை அழைக்க முடியாது. உலகத்தின் தாக்கம் நம்மேல் மிக அதிகமாகவுள்ளது. பல ரூபங்களிலும் வருகிறது. மனிதன் தன் வாழ்வை விட ஆன்மாவை அதிகமாக வசீகரிக்கக் கூடியவனாக இருப்பானா?





# 82. வாழ்வில் ஆன்மா செயல்படுவது

அநேக வாசகர்கள் ஆன்மாவை எப்படி அழைப்பது என்று கேள்வி கேட்டுள்ளார்கள். இந்தக் கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. இதன் வழிமுறைகள் புரிந்துகொள்ள முடியாதது அல்ல. அது ஒருவருடைய ஜீவியத்தை உயர்த்த வேண்டுமென்பதேயாகும். நாம் கேட்பதால் மட்டும் கிடைக்கக்கூடியது அல்ல. ஒவ்வொருவரும் அதை அடைய வேண்டுமென்று, தீவிரமாக முயன்றால், மிகச் சிறந்த முறையில் அடைய முடியும். ஆன்மாவை அழைப்பதற்கு ஒரு நாள் முழுவதையும் ஒதுக்கி இந்த முறையில் உள்ள சக்தி மற்றும் கஷ்டங்களை எல்லா நிலையிலும் ஆராய்ந்து, ஜீவியத்தின் நிலையை உயர்த்திக் கொள்ளும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள, 24 மணி நேரமும் அமர்ந்திருக்க வேண்டுமென்பதே நான் சொல்ல விரும்பும் யோசனையாகும்.

ஒரு நாளுக்கு மேல் ஒதுக்குவதற்கு முன்னால், அந்த வழியில் உள்ள ஒவ்வொரு தடைகளையும் அறிந்து அதை அகற்றுவதற்கு மனதை தயார்படுத்திக் கொள்வது முக்கியம். ஆன்மாவுக்கு மாறுவதற்கு வழிமுறைகள் என்னவென்றால், நம்புவது, புரிந்து கொள்ளுதல், மற்றும் மாறுவது என்பதாகும். ஆன்மா மனதைவிட சக்தி வாய்ந்தது என்று நீ ஏற்றுக் கொள்கிறாயா என்று நீ உன்னையே கேள். அப்படி நம்பமுடியவில்லையென்றால், ஆன்மாவிற்கும் மனதிற்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து, நம்பிக்கை உண்டாக்கும் வரை அதை புரிந்து கொள்ள முயற்சி செய். எவ்வாறு உடலைவிட மனம் சக்தி வாய்ந்ததோ, அதுபோல் மனத்தைவிட ஆன்மா சக்தி வாய்ந்ததாகும். ஒரு முறை நம்பிக்கை

ஏற்பட்டதும் அந்த நம்பிக்கையை தீவிரப்படுத்தினால், ஆன்மாவின் உயர்ந்த தன்மையை உன்னுடைய வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளின் மூலம் காணமுடியும்.

சரியாகப் புரிந்து கொள்ளுதல், நம்பிக்கையை வலுப்படுத்தும். அமைதியும் மௌனமும் உள்ளே ஏற்படுவதற்கு, ஏற்கனவே தயாராகிவிட்டது என்பதை அறியலாம். தற்செயலாய் நடக்கக்கூடியது என்று எண்ணாமல், உள்ளே வேலையை ஒரு மனதாய் தீவிரமாக திடமான முயற்சியுடன் ஒவ்வொரு எண்ணத்தையும் அதன் அடுத்த கட்டமான உள்ளுரை உயர்ந்த அமைதிக்கு மாற்றவேண்டும். உள்ளே ஏற்பட்ட அமைதி, நீ உன்னுடைய எண்ணத்தை உயர்நிலைக்கு மாற்ற தயார் நிலைக்கு வந்து விட்டாய் என்பதைக் குறிக்கும்.

வெறுமனே சும்மா உட்கார்ந்திருக்காதே. ஏதாவது ஒன்றில் உன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அதை முழுமையாக செயல்படுத்து. அப்படி செயல்படும் பொழுது ஒவ்வொரு நிமிடமும் எண்ணத்தை மௌனத்திற்கு மாற்றம் செய். அது நகரும். வாழ்வு உன்னுடைய விருப்பத்திற்கு ஏற்ப இனிமையாக வளைந்து கொடுக்கும். பொறுமையுடன் காத்திரு. ஒரே நாளில் சூழல் முற்றிலும் மாறி உனக்கு சாதகமாகவும் இனிமையானதாகவும் அமையும். இப்பொழுது உனக்கு எப்படி செயல்பட வேண்டுமென்று புரியும்.





# 83. ஒருவருடைய ஆன்மாவில் நம்பிக்கை

நம்மில் பெரும்பாலானோர் உண்மையின் மீது நம்பிக்கையிருப்பது போல் ஆன்மாவிடமும் பொதுவாக நம்பிக்கை வைத்துள்ளார்கள். இக்கட்டான நிலையில் பொய்மையைவிட வாய்மைதான் நம்மைக் காப்பாற்றும் என்று எத்தனை பேர் நம்புகிறார்கள்? நாம் உண்மை மீது வைத்திருக்கும் மதிப்பு வெறும் உதட்டளவுதான். ஆன்மா மீது நம்பிக்கையும் அத்தகையதே. நாம் ஆன்மாவின் மீது நம்பிக்கையில்லை என்பதல்ல. ஆனால் அது நம் வாழ்வில் சாதனைகளை புரியும் அளவிற்கு தூய்மையான நம்பிக்கைக்கு உயரவில்லை.

முதலாவதாக ஒருவர், தன்னைத் தானே உண்மையில் மனதைவிட ஆன்மாவின் சக்தி உயர்ந்தது என்பதில் நம்பிக்கை வைத்துள்ளாரா என்று கேட்டுக்கொள்ள வேண்டும். ஆன்மாவை நம்புபவராக இருந்தால் அவர் அந்த நிலையிலிருந்து முழுமையான நம்பிக்கையை உயர்த்த வேண்டும். நம்பிக்கையில்லாத பட்சத்தில் அவர் பூரணமான நம்பிக்கைக்கு உயர்த்திக்கொள்ள முயற்சிக்க வேண்டும். நம்பிக்கையை உயர்த்திக்கொள்ள முடியாதவர்களுக்கு அதை உயர்த்திக் கொள்வதற்கான வேறு வழிமுறைகள் உண்டா? அது கடினமானதுதான். ஆனால் கடின உழைப்புக்கு முடியாதது அல்ல. மனம் சக்தி வாய்ந்தது என்றும் அதைவிட ஆன்மா அதிக சக்தி வாய்ந்தது என்றும் அறிவார். ஆன்மா நம்மில் எல்லோரிடமும் உறங்கும் நிலையில் உள்ளதால், இதை புரிந்து கொள்வதற்கான முயற்சி ஆன்மாவை தூண்டுகிறது. அவர் தனக்குள்ளே தொடர்ந்து சிந்தித்த பின், மனதை விட ஆன்மா

அதிக சக்தி வாய்ந்தது என்று உணர்ந்து கொண்டதும், மனம் அதை புரிந்து கொண்டு ஏற்றுக் கொள்கிறது. ஒரு முறை மனம் இதை புரிந்து கொண்டால், நம்பிக்கை ஏற்படுவது சாத்தியமே. இந்த புதிய அறிவின் தெளிவில் உள்ளே சென்று ஒருமுகப்படுத்த வேண்டும். அது நம்பிக்கை ஏற்படுவதற்கு வாய்ப்பாகும்.

நம்பிக்கையின்மையை விட நம்பிக்கை உயர்ந்தது, ஆனால் நம்பிக்கை காரியங்களை நடத்தாது. அவர் மேலும் நம்பிக்கையை சிரத்தையின் நிலைக்கு உயர்த்த முயற்சிக்க வேண்டும். இப்படிப்பட்ட நேரத்தில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டுமென்ற ஒரு சிறு விருப்பமும் நிறைவேறுவதைக் காண்பார். இதுவே அவருக்கு சிரத்தை ஏற்பட்டதற்கு அறிகுறி. ஆன்மாவின் சக்தியைப்பற்றி மேலும் மேலும் அதிக அளவில் தெரிந்துகொள்வது, நம்பிக்கை ஏற்படுவதற்கு சாத்தியமாகிறது. நம்பிக்கை என்பது ஒரு துருப்புச்சீட்டு. அது அங்கு இருக்க வேண்டும் அல்லது உருவாக்கப்பட வேண்டும். அது அங்கு இருந்தால் அதை அதன் உயர்ந்த வெற்றி நிலைக்கு உயர்த்த வேண்டும். விடாமுயற்சி நம்பிக்கையை உருவாக்குகிறது என்று அன்னை கூறுகிறார். நம்பிக்கை பிறக்கும்வரை ஒருவர் விடாமுயற்சியுடன் முயன்று, அதை அதனுடைய முழுசக்திக்கு உயர்த்த வேண்டும். வாழ்வில் சாதனை படைப்பதற்கு, மேலும் வழிகள் உள்ளன. ஆனால் நம்பிக்கை மட்டும் திருப்பு முனையாக வாழ்வின் முக்கிய ஆதாரமாக விளங்கக்கூடியது.





# 84. பகுத்தறிவை விட ஆன்மா சக்தி வாய்ந்தது

இது வெளிப்படையான உண்மை. இதைப்பற்றி அறிவிக்க வேண்டியது ஒன்றுமில்லை. நாம் செயல்படும்போது அது தெள்ளத் தெளிவாகத் தெரிவதில்லை. நாம் பகுத்தறிவைக் கொண்டு செயல்படுவதாக நினைக்கிறோம். பகுத்தறிவை விட ஆன்மா அதிக சக்தி வாய்ந்தது என்று நமக்குத் தெரியும். ஆனால் செயலில் இறங்கும் பொழுது பகுத்தறிவைத்தான் நாம் சார்ந்திருக்கிறோம். வேறு வழியின்றி அதை நாடுவதையே நினைக்கிறோம்.

நம்முடைய வாழ்வில் சிறந்த சாதனை ஒன்று இருக்குமானால், அதை எண்ணிப் பார்த்தால் பத்து நிகழ்வுகளில், ஒன்பது வகைகள் தன்னாலேயே நிகழ்ந்திருக்க கூடுமேயன்றி, நம்முடைய முயற்சியாலோ அல்லது திட்டமிட்டதின் பலனாகவோ நிகழ்ந்திருக்காது. அந்த ஒரு நிகழ்வும் கூட நமது முயற்சியினால் கிடைத்த பலனாகத் தோன்றினாலும், அது எப்படி நிகழ்ந்தது என்று ஆழ்ந்து ஆராய்ந்துப் பார்த்தால், நெருக்கடியான நேரத்தில் அது தானாகவே நிகழ்ந்தது என்றும், நம்முடைய முயற்சியால் ஏற்பட்டதல்ல என்றும் தெரியவரும்.

இவை உன்னுடைய அனுபவமானால் அதை நீ நம்ப முன்வரவேண்டும். மேலும் ஒவ்வொரு முறையும் நம் மனம் செயல்படும் போது அதை ஆராய்ந்தால், நம் அனுபவ அறிவில், அந்த வேலை சிதறிப் போய்விட்டது என்றும் அல்லது அதன் பலன்கள் தாமதமானது என்றும் தெரியவரும். ஒவ்வொரு

முறையும் நாம் நமது மனதை நம்பாமலும், பகுத்தறிவை நம்பாமலும் இருக்கும் போது பலன்கள் ஏற்படுகின்றன. நம் வாழ்வில் இது ஒரு சிறிய உண்மை. ஆனாலும் நாம் அதைக் காணத் தவறுகிறோம். சாதனைகள், பகுத்தறிவால் ஏற்படுவதன்று. அது உள்ளுரை மௌனத்தினால் ஏற்பட்டது என்று தெளிவாகத் தெரிகிறது. உண்மை என்னவென்றால், மௌனசக்தி பலனைக் கொண்டு வருகிறது என்பதாகும். அது பகுத்தறிவினால் அல்ல. மௌனம் என்பது ஆன்மா. ஆன்மா எப்பொழுதும் சாதிக்க வல்லது. மனம் சாதிப்பதைக் கெடுக்கும்.

ஆனால் மனம் என்பது நமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட மிகப்பெரிய தலைசிறந்த கருவியாகும். மனம் தானாகச் செயல்படும்பொழுது, அது அழிக்கும் தன்மையைப் பெறுகிறது. அது ஆதியான ஆன்மாவுக்கு சரணம் அடைந்தால், பெரிய சிருஷ்டிக்கு உரிய கருவியாகிறது. மனத்தை நம்புவதோ, நமது கருத்துக்களை வலியுறுத்துவதோ, திட்டமிடுவதில் நம் திறமையை நம்புவதோ, நம் காரியத்தைக் கெடுப்பதாகும். நம் உள்ளுரை ஆன்மா ஒப்புதல் அளித்து, மனத்தின் முறையான முடிவுகளுக்கு ஆன்மா சம்மதித்தால், நம்முடைய கருத்துக்கள் சக்தி வாய்ந்ததாகவும், திட்டமிடுவதில் செயல் ஊக்கமுடையதாகவும் இருக்கும்.

1. பகுத்தறிவை கைவிட்டால் நீ ஆன்மாவை அடைவாய்.
2. பகுத்தறிவை விடும்போது, நீ மௌனத்தை அடைகிறாய். அது ஆன்மாவின் சூழலாகும்.
3. அழியாத உண்மையான சக்தி ஆன்மாவின் இருப்பிடம். ஆன்மா என்பது எப்பொழுதும் நிலைத்து நிற்கும்.





# 85. உள்ளுரை நிறைவு

திருப்தி என்பது ஏமாற்றத்தின் எதிர்மறை என்றும், சந்தோஷம் கவலையின் எதிர்மறை என்றும், நாம் அறிவோம். சந்தோஷம் என்பது, நாம் எதிர்பார்ப்பதை அடையும் பொழுது வரும் மகிழ்ச்சியாகும். சந்தோஷம் வெற்றியினால் ஏற்படுவது. இவை யாவும் உடன்பாடானதாகவும், எதிர்மறையாகவும், நம் வாழ்வில் ஏற்படும் உணர்வுகளாகும். இது ஆன்மாவின் பார்வையில் வாழ்வின் அடிமட்டத்தில் ஏற்படுபவையாகும். ஆன்மா வெளிப்படும் பொழுது நிறைவைத் தருகிறது. அது உள்ளே எழும் முழுமையாகும். உள்ளிருந்து நிறைவு ஏற்படும் பொழுது, மனம் நினைக்க முடியாது. உணர்வு, கவலையையும் தொந்தரவையும் அறிய முடியாது. நம்மைச் சுற்றிலும் தோல்வி என்பதற்கே இடமில்லை என்பதைக் காணலாம். நாம் வெற்றி அடையும் போது, சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் காண்கிறோம். ஆனந்தம் என்பது உணர்வின் சிறந்த முழுமையாகும். ஆனந்தத்தின் முன்னால் சந்தோஷம் மங்கி மறைகிறது.

மனிதப் பிறவி என்பது, ஆன்மா உடம்பு என்ற வடிவத்திற்குள் வருவதாகும். ஆன்மா மட்டுந்தான் உலகில் உள்ள உண்மையாகும். அது அனந்தமானது, காலங்கடந்தது. அது ஆரம்பத்திலிருந்து உள்ளது. நாம் சத்தியம் என்பதை கடவுளைப்போல் வணங்குகிறோம். சத்தியத்தின் முந்தைய நிலை ஆன்மா. இது ஒரு தத்துவ விளக்கம். சத்தியம், மனம் உணர்ச்சிக்கு அப்பாற்பட்டது. சாதாரண வழக்கில் இதைக் கூற வேண்டுமானால், ஆன்மா நம் வாழ்வில் சத்தியம் என்ற தோற்றத்தில் வெளிப்படுகிறது. எனவே நமக்கு சத்தியம் என்பது ஆன்மா. சத்தியம் நமது கடவுள்.

ஆன்மா பூமியில் பிறவி எடுப்பதற்கு விரும்பி, ஒரு உடலைத் தேர்ந்தெடுத்தது. அதை நாம் ஆன்மா உறையும் உடல் என்று கூறுகிறோம். அது மனம் உணர்வைப் பெற்றது. ஆன்மா உறையும் உடலை நாம் நமது சரீரம் என்கிறோம். நமது உடலும், ஆன்மாவின் ஒரு வடிவம் என்பது உண்மைதான். அது மனம் வாழ்வு என்ற வேறு இரண்டையும் உடையது. அதற்கு மேலாக உடம்பிற்குள் ஆன்மாவும் உறைகிறது.

நமது ஜீவனின் எல்லா பாகங்களும், ஆன்மா, மனம், வாழ்வு, உடல் என்று ஆகிய அனைத்துமே ஆன்மாதான். ஏனென்றால் இந்த பிரபஞ்சமே ஆன்மாவால் உண்டாக்கப்பட்டது. அது ஆதியும் அந்தமும், இடைவெளியும் உள்ளடக்கி உள்ளது. அந்த ஆன்மா, மனம், வாழ்வு, உடல் என்றவற்றை வெளிப்படுத்துகிறது. ஆன்மா நம்மில் எழுகிறது என்று நாம் கூறும் பொழுது, ஆதியான ஆன்மா உடல், மனம், வாழ்வு என்ற மேல்மட்டத்திற்கு எழுகிறது என்பதைக் குறிக்கும். அப்படியெழும் பொழுது அது நிறைவு பெறுகிறது. உள்ளே நிறைவு வரும் பொழுது வாழ்வு முழுமையான சுபிட்சத்தை உடையதாக உள்ளது. அந்த முழுமை வெளிப்படும் பொழுது வாழ்வு யோகமாக மாறுகிறது.





# 86. பாராட்டும் குணம்

ஒவ்வொரு முறையும் முகஸ்துதி இல்லாமல் உண்மையாக பாராட்டும்போது அதற்கு பிரதிபலிப்பு, ஏமாற்றம் தருவதாக இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். பாராட்டும் ஆர்வம், அதை வெளிப்படுத்துவதில் இல்லை. அதை சரியாக வெளிப்படுத்தப்படாமல் இருப்பதிலேயே உள்ளது. இந்தக் கருத்தை ஆராய்ந்து பார்த்து அதில் திருப்தி ஏற்பட்டால், அதை நடைமுறைக்குக் கொண்டுவரலாம். நாம் எதிர்பார்க்கும் பலன் அதன் செயலின் சக்தியால் தீர்மானிக்கப்படுகிறது. அந்த கருத்தை வெளிப்படுத்தும் பொழுது, அந்தக் கருத்தின் சக்தி சிதறடிக்கப்படுகிறது, அதாவது அது பலவீனப்படுகிறது. நிலைமைக்குகந்தவாறு, திறமையைக் காட்டும் நேரம் வரும்பொழுது, அதைப் பயன்படுத்தி பேசுவதில் சக்தியை வெளியில் சிதறடிக்காமல் உள்ளே செலுத்தினால், செயலின் கருத்தும் சக்தியும் வீணாகாமல் பாதுகாக்கப்பட்டு, உள்ளே சக்தி அதிகரிக்கும்.

இந்த சக்தியின் செயல் நிறைவுறுவதை கவனித்துப் பார்க்கும்போது, உன்னுடைய சக்தி அதிகரிப்பதைக் காண்பாய். இந்த உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு இது போதுமானது. ஒருவர் தன்னைவிட இளையவரான நண்பரை உண்மையில் நேசித்ததால் அவருடைய நல்ல குணங்களால் கவரப்பட்டு, அவருடைய நல்ல குணங்களைப் பற்றி பாராட்டி பேசுவார். ஆனால் அந்த நண்பரிடமிருந்து இவருடைய பாராட்டுதலுக்கு எந்தவிதமான மறுமொழியும் கிடைக்கவில்லை. ஏனென்றால் அந்த நண்பர் யார் எந்த விஷயத்தைக் கூறினாலும்,

ஏற்றுக்கொள்ளத் தக்கவராக இல்லாமல், எதிர்மறையான உணர்வுகளைக் கொண்டவராக இருந்தார். இந்த இரண்டு நண்பர்களும் வருடக்கணக்காக ஒருவரை ஒருவர் அறிந்தவர்களாக இருந்தார்கள். பாராட்டை தெரிவித்தவரால், அந்த நண்பரிடமிருந்து எந்தவிதமான பிரதிபலிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை.

இந்த எண்ணம், வயதில் மூத்த நண்பரின் நினைவுக்கு வந்தது. அடுத்த முறை அந்த இளைய நண்பரை சந்திக்கும் சந்தர்ப்பம் வந்தது. அந்த நண்பரை பாராட்ட நினைத்தபோது, அதை வெளியில் தெரிவிக்காமல் அதை தன் உள்ளுக்குள்ளேயே நிறுத்தினார். அவருக்குள் ஒரு மென்மையான மௌனம் நிலைத்ததை உணர்ந்தார். எதிரில் அமர்ந்திருந்த அந்த இளைஞர், மனதிற்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் புன்முறுவலுடன் இவ்வாறு கூறினார். ‘‘நீங்கள் உண்மையிலேயே மற்றவர்களுடைய சக்தியை அறிந்து கொள்வதிலும், அவர்களை உற்சாகமூட்டுவதிலும் வல்லமை படைத்தவராக இருக்கிறீர்கள்’’ என்று கூறினார். இந்த முழுமையான முறையினால் கிடைத்த வெற்றி, அவருக்கு திகைப்பூட்டுவதாக இருந்தது.





# 87. இசைக்கச்சேரியில் உச்ச கட்டம்

நேரு ஆகஸ்டு 15, 1947ல் பேசும் பொழுது, நாம் விதியுடன் செய்து கொண்ட முன்னேற்பாட்டின்படி, இந்தியா விடுதலைப்பெற்றது என்று குறிப்பிட்டார். வாழ்வில் நிகழும் ஒவ்வொரு வெற்றிகரமான செயலும், அது எளிமையானதாக இருந்தாலும் அல்லது இம்மைக்கு வேண்டியதாயினும் சரி, அது அந்த நபரைப் பொறுத்தவரை விதியோடு நிகழுமொரு சந்திப்பாகும். ஒரு வேலையின் ஒவ்வொரு பகுதியையும் வெற்றிகரமாக எந்தச் செயலிலும் வெற்றியை அடைய முடியாது. ஒரு வேலையை வெற்றிகரமாக முடிப்பதற்கும், அதன் உச்ச நிலையை அடைவதற்கும் வெகுதூரம் போக வேண்டியிருக்கும். அதாவது சிறப்பாக அதிகமாக உழைக்க வேண்டியதாக இருக்கும்.

ஒரு பாடகருக்கு எல்லா இசைக்கச்சேரியும் வெற்றிகரமாக அமைவதில்லை. ஒரு பாட்டுக்கச்சேரியில் உச்சகட்டத்தை நோக்கிப் போகும்பொழுது, ஒரு வினாடிக்கு முன் நிறுத்தினால் பாராட்டுக் கிடைப்பது இல்லை. முழுவதும் பூர்த்தியடைந்த நுண்மைமிக்க, உணர்ச்சிப்பூர்வமான நேரம்தான், உச்சக்கட்டத்திற்கு வருவதற்கு சாத்தியமாகும். அப்படிப்பட்ட நேரத்தில், ரசிகர்கள் ஆரவார கைதட்டல் ஒலி எழுப்புவார்கள். இது ஒரு சிறந்த பாடகருடைய தனி உரிமையன்று. எல்லாப் பாடகர்களும் தன்னுடைய கச்சேரியில் அத்தகைய உச்சகட்டத்தை அடையமுடியும்.

எளிமையான சமையல்காரர், கௌரவமான வழக்கறிஞர், வணக்கத்திற்குரிய ஆசிரியர், இவர்கள் யாவரும் தங்கள்

தொழிலில் அப்படிப்பட்ட நேரத்தைக் காண்பார்கள். நாம் எல்லோரும் வாழ்க்கையோடு எந்நேரமும் உறவாடிக் கொண்டுள்ளோம். அடிக்கடி சாதிக்கிறோம். பலமுறை வழக்கமான வேலை முறைகளிலும் உச்சகட்டத்தைத் தொடுகிறோம். வேலையில் சிறப்பான திறமையை வெளிப்படுத்தும் தருணத்தில், வேலையின் ஆன்மா விழிப்புற்று, முன்னுக்கு வந்து நிற்கிறது. முக்கியமாக அந்த நேரங்கள்தான் மனித உறவில் முக்கியம் வாய்ந்தது. மேலும் அத்தகைய நேரங்கள் ஆன்மீக சிறப்பு வாய்ந்தவை. அத்தகைய அனுபவங்களை பெற்றவர்கள் இவ்வான்மீக உண்மையை உணர்ந்து ஏற்றால் இப்பொழுது ஆன்மாவை அழைப்பதில் பெரும் வெற்றியைக் காண்பார்கள்.

என்னுடைய வாசகர் ஒருவர் தன்னுடைய தொழிலில் இந்த முறையை வெற்றிகரமாகப் பின்பற்றி வாழ்வில் பெரும் பலனையும் மாற்றத்தையும் கண்டதாக எழுதியுள்ளார்.





# 88. பரீட்சை ஜுரம்

லண்டனில் ஒரு அனுபவமிக்க டாக்டர், பல தேர்வுகளை நடத்தியவர், தன்னுடைய 50வது வயதில் பதவி உயர்வுக்கு, விதிமுறைகளின்படி பரீட்சை எழுத வேண்டிய கட்டாயத்திற்கு, உட்பட்டார். திகைப்பூட்டும் வகையில் அவருக்கு ஜுரம் வந்துவிட்டது. அது பரம்பரைப் பழக்கம், சூழ்நிலை, சமூக நம்பிக்கைகளால் ஏற்பட்ட நம்பிக்கையாகும். மனோதத்துவ நிபுணர்கள், இயற்கையாக வரும் பயத்திற்கும், செயற்கையாக சமூகம் உண்டு பண்ணும் பயங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிவார்கள். தனி நபருடைய நம்பிக்கை மற்றும் சமூகத்தின் கூட்டு நம்பிக்கை என்றவற்றின் காரணமாக பயம் விளைவதுண்டு. சமூகத்திற்குக் கட்டுப்படும் மனிதனுக்கு சமூகம் கடவுளாகிறது.

மாணவனுக்கு பரிட்சை, வழக்கறிஞருக்கு வழக்கில் தீர்ப்பு, அலுவலகத்தில் வருடாந்திர ஆய்வு, தொழில் ஒப்பந்தத்தில் பேச்சுவார்த்தை நடப்பது, தேர்தல் கூட்டுக்கு உடன்பாடு ஏற்படுவது, சர்வாதிகாரி, போன்ற சக்தியுள்ளவர்களுடன், பலவீனமான இளைய கூட்டாளி இலாபத்தில் கணக்கைத் தீர்த்துக் கொள்வது, சுயநலவாதிகள், தந்திரமாக தலைமறைவாகியுள்ள கடத்தல்காரர்கள், போன்றவர்களுக்கு அநேக நேரங்களில் இதுபோன்ற பரீட்சை ஜுரம் வருவதுண்டு. லட்சியமான காதல் வயப்பட்டவர் தன் பிரியத்திற்கு உரியவர் அதே லட்சியக் காதலை கொண்டிருக்காவிட்டாலும் தன் எண்ணத்தை வெளியிடும் வேலையில் இப்படியொரு ஜுரத்தை அனுபவிப்பார். இருப்பக்கமும் லட்சியம் இருந்தபோதிலும்,

உண்மையான காதலுக்கு பல இடையூறுகள் ஏற்பட்டு, காதலை சுமூகமாக இருக்கவிடாது. காதலர்கள் முடிவு எடுக்க சந்திக்கும் பொழுது, அவர்களுக்கு காதல் ஜுரம் வருவதுண்டு.

சுருங்கக் கூறின் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஏற்படும் நிகழ்ச்சியும், இந்த ஜுரத்தை ஏற்படுத்தும். வாழ்விலோ வழிபாட்டிலோ, நமக்குத் தெரிந்த வரையில் தீர்வு இல்லை. அதனுடன் வாழ்வதிலேயே பழகிவிடுகிறார்கள். நமக்கு சோதனை வருகின்ற நாளுக்கு பல நாட்கள் முன்னாலிருந்து தினமும் இரவில் படுக்கப்போகும் முன் மனத்தின் ஆழத்திலிருந்து அன்னையை அழைக்க வேண்டும். உன்னுடைய தூக்கம் சுகமாக இருக்கும். மறுநாள் விழித்தெழும் பொழுது, அந்த சோதனைப் பற்றிய எண்ணம் முதலெண்ணமாக வந்து பிரார்த்தனை செய்யலாம். அந்த ஜுரம் இனி இருக்காது. அதனுடைய இடத்தில் ஆன்மாவின் அமைதி ஆட்சி செய்யும். அந்த அமைதி எல்லோரிடத்திலும் பரவும்.





# 89. சமர்ப்பணம் ஆன்மாவை அழைத்தலாகும்

நாம் நமக்காகவும் நமது குடும்பத்திற்காகவும் வாழ்கிறோம். உயர்ந்த ஆத்மாக்கள் பிறருக்காக வாழ்கிறார்கள். நாட்டுப்பற்று உடையவர் தேசத்திற்காக வாழ்கிறார். ரிஷி கடவுளுக்காக வாழ்கிறார். சமர்ப்பணம் இறைவனுக்காக செய்யப்படுவது. அவர் இறைவனின் இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காகவே பூமியில் வாழ்கிறார். நம்முடைய வாழ்வு தானாக இயங்கக் கூடியது. நடப்பதிலும் தும்முவதிலும் உடல், நம்முடைய விருப்பம் இல்லாமலே, அனுமதியில்லாமலே தானாகவே இயங்குகிறது.

ஒரு உரையாடலில் ஒரு குறிப்பிட்ட கேள்விக்கு பதிலளிக்க வேண்டாமென்று, நீ தீர்மானித்தாலும் உன்னை அறியாமலேயே அதற்கு பதில் அளிப்பாய். அது தும்முவது போல், ஆழ்மனத்திலிருந்து தன்னிச்சையாக செயல்படுவதால் அதை நீ தடுக்க முடியாது.

நமது செயல்கள் உடலால் செய்யப்படுபவை. நம்முடைய மனவெழுச்சிகள் உணர்ச்சியைச் சார்ந்தவை. நமது எண்ணங்கள் மனதைச் சார்ந்தவை. இவை யாவுமே நமது ஜீவியத்தினுடையது அல்ல. ஒரு ஆன்மீகவாதி இறைவனுக்காகவோ அல்லது ஆன்மாவுக்காகவோ வாழ்கிறார். அதற்காகவே செயல்படுகிறார். இறைவனுக்காக செயல்படுவது சமர்ப்பணம். அவ்வாறு செயல்படுவதில் ஒருவர், ஆன்மாவை நிச்சயமாக அழைப்பவராகிறார்.

பேச வேண்டுமென்ற எண்ணமிருந்தால் பேசாமலிருக்க முயற்சி செய்யவும். வெற்றி கிடைப்பதரிது. கட்டுப்பாட்டை மீறி பேச்சு வருவதைப் பார்க்கலாம். நீ உன் மகளின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் பொழுதோ, அல்லது ஒரு பெரிய ஆர்டர் இதுவரை கிடைக்காததற்கு ஒப்பந்தம் செய்ய, பேச்சுவார்த்தை நடத்தும் பொழுதும் நீ உன் ஒவ்வொரு செயலையும் எண்ணத்தையும் சமர்ப்பணம் செய்தால் நீ எதிர்பார்த்த பலன் கிடைக்கும். உன் கற்பனையைவிட அதிகமாக பலன் வருவதைக் காண்பாய்.

சமர்ப்பணம் செய்வது இறைவனை, நம்முள் செயல்படச் செய்வதாகும். அவர் நம்மைவிட திறமைசாலியானதால், பலன் அபரிமிதமாக வரும். நம் திறமையில் அதிகமாக நம்பிக்கை வைத்திருப்பதால், நாம் கடவுளை நம்புவதில்லை. கடவுளை நம்புவது ஆன்மாவை நம்புவதாகும். நம்முடைய செயல்களை அவரிடம் ஒப்படைப்பது ஆன்மாவை அழைப்பதாகும். யோகத்தில் அது சமர்ப்பணம் எனப்படும். யோகம் செய்யும் சாதகருக்கு, சரணாகதி என்பது உயர்ந்த நோக்கமாகும். சமர்ப்பணத்தின் ஆரம்பம் சரணாகதியில் முடிகிறது. அது பூரணமாக முடிவு பெறுகிறது.





# 90. நன்றியறிதல்

மனித வாழ்வில் இறைவன் செயல்படுவதை மனப்பூர்வமாக உணர்வதே நன்றியறிதலாகும். அப்படி புரிந்து கொள்வது ஒருவருடைய ஜீவியத்தை ஊடுருவி, அவர் ஏற்புடையவராக இருக்கும்பட்சத்தில் அவரை மெய்சிலிர்க்க வைக்கும். கண்ணில் விழுந்த தூசி அது அகற்றப்படும் வரை கண்ணை உறுத்திக் கொண்டே இருக்கும். ஒரு வருடமாக என் கண்ணில் தூசு விழுந்ததே இல்லை. அது எப்படி நிகழ்ந்தது என்று நான் அதைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை. கண் எப்பொழுதும் பாதுகாக்கப்படுகிறது என்றும், அது இறைவன் செயல் என்றும் நமக்கு எப்பொழுதாவதுதான் நினைவுக்கு வருகிறது. நமக்கு பல நேரங்களில் நல்லவை நடக்கின்றன. அப்பொழுது ‘‘இறைவனுக்கு நன்றி’’ என்று ஆச்சரியத்தால் கூறுகிறோம்.

சூட்சுமப் பார்வை உள்ள ஒருவருக்கு, தன்னைக் கடவுள் வழிநடத்திச் செல்வது தெரியும். ஒரு சாலையில் ஜீப் போய்க் கொண்டிருந்த பொழுது, குறுக்கே விழுந்து கிடந்த மரத்தை தவிர்க்க முயலும்போது, ஜீப் வயலில் இறங்கிவிட்டது. அந்த வளைவில் ஜீப்பின் இரண்டு சக்கரங்கள் பள்ளத்திற்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தன. அதிர்ச்சியடைந்த ஓட்டுநர் வண்டியை நிறுத்திவிட்டு கீழே குதித்துவிட்டார். வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு பெண்மணி, ‘‘நான் அந்த ஜீப்பை அம்மா தன் சேலையின் நுனியில் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்’’ என்று அலறினார். நாம் ஆபத்திலிருந்து தெய்வாதீனமாக பிழைத்தோம் என்று சொல்லுவோம். ஆனால் நாம் எப்பொழுதும் இறைவனின் பாதுகாப்பில் இருக்கிறோம் என்று நினைப்பது இல்லை.

மனம் உள்ளே முழுமையாக நிறைந்திருக்கும் பொழுது, உன்னுடைய இதயத்தில் நல்லெண்ணம் பொங்கி வரும் நேரத்தில், நீ பிரியமாக நேசிக்கும் சகோதரர், நண்பர், புதல்வர், ஆகியோருக்கு நிரம்பி வழியும் உன் நல்லெண்ணத்தை, உன் இதயத்தில் உள்ளதை மனதால் அனுப்பு. விரைவில் அவர் உன்னை சந்தித்து, நல்லெண்ணத்தை அவருக்கு அனுப்பிய ஏறக்குறைய அதே நேரத்தில், அவருக்கு நல்லது நடந்ததைக் கூறுவார். தான் சந்தித்து சண்டை போடுவதாக இருந்த விற்பனை வரி அதிகாரி எப்படி பழைய நண்பராக இருந்தார் என்பது போன்ற ஏதாவது ஒரு நல்ல செய்தியையும் கூறுவார்கள். இப்படிப்பட்ட நல்லெண்ணம் தவறாமல் பெறுபவர்க்கு அதிர்ஷ்டத்தை உண்டு பண்ணும்.

கடவுள், ஆன்மா, தெய்வீக அன்னை என்று இறைவனை நாம் பலவாறாகப் பெயரிட்டு அழைக்கும் அவர், நம் வாழ்வின் சுமையை அன்புடன் தாங்கிக்கொள்கிறார். இதை உணர்வுபூர்வமாக அறிவதே இறைவனுக்கு தெரிவிக்கும் மனத்தின் நன்றியறிதலாகும்.

நாம் நம் உணர்வில் அதை அறியும் பொழுது, நமது சக்தி கரைபுரண்டு வழிவதை, மனத்திற்கு மகிழ்ச்சி அளிப்பதை உணர்கிறோம். நாம் இந்த அறிவைப் பெறும் பொழுது நமது உடல் சிலிர்க்கிறது. பகவான் ஸ்ரீ அரவிந்தர் இதைத் தாங்கமுடியாத ஆனந்தப் பரவசம் என்று கூறுகிறார். அன்னை இதை இடையறா பேரானந்தம் என்று கூறுகிறார்.





# 91. "நான்" யார்?

இது ஞானயோகத்தின் அடிப்படைத் தத்துவம். ‘‘நான்’’ என்பது உடலோ, மனமோ, உணர்ச்சிகளோ அல்ல. யோக சித்தி அடைந்தவர் அதை ஆன்மா என்றே அறிவார்.

சமூகத்தில் மனிதன் தான் யார், தன்னுடைய உரிமை என்ன என்று அறியாமல் இருக்கிறான். ஒரு நல்ல விழிப்புணர்வு உள்ள முன்னேறிய நாட்டில் அந்த நாட்டு மக்கள் தங்களது சட்ட உரிமை, மனித உரிமை, சமூக உரிமை பற்றி நன்கு அறிந்தவர்களாக இருப்பார்கள். குடிமக்களின் வழிப்புணர்வு ஒரு நாட்டின் சமூக நிலைக்கு சின்னமாகவும் அடையாளமாகவும் விளங்குகிறது. தன்னைப் பற்றி தெரிந்து கொண்டுள்ளவன், ஆன்மாவை, உடனே அதிக பயனுள்ள வகையில் அழைக்கும் சக்தியுள்ளவனாக இருப்பான். ‘‘நான்’’ என்பது உடலோ, மனமோ, அல்ல. அது ஆன்மா என்று புரிந்து கொள்வதில் பலருக்கு கஷ்டம் இருக்காது. நெருக்கடியான சந்தர்ப்பங்களில் முடிவு எடுப்பதற்கு வாழ்வு நமக்கு அரை நிமிஷம் கொடுக்கும் போது, நாம் உடனே முடிவு எடுத்து செயல்படுகிறோம். அப்படிப்பட்ட வாய்ப்பு திரு.நரசிம்மராவுக்கு பிரதம மந்திரியாவதற்கு வந்த வாய்ப்பாக இருக்கலாம். அல்லது ஒரு திருடன் உன்னை துப்பாக்கி முனையில் உன்னுடைய பணப்பெட்டியின் சாவியைக் கொடுக்கும்படி மிரட்டியதாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட நேரத்தில், முடிவு உடனே எடுக்கப்பட்டது என்று நாம் அறிவோம். உண்மையில் இந்த முடிவு பகுத்தறிவால் ஏற்பட்டதல்ல. நல்லது, கெட்டது என்று சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவு அல்ல. இந்த முடிவு நாம் விழிப்புணர்வுடன் எடுப்பதல்ல. ஆபத்தான கட்டத்தில் அந்தக் கணமே உடனே தானாக எடுக்கப்பட்டதாகும்.

இந்த முடிவு உன் ஆன்மாவால் எடுக்கப்பட்டது. அது ஆன்மீகத்தில் சொல்லப்படும் ஆத்மா அல்ல. அது நம் எண்ணங்களையும் உணர்வுகளையும் கடந்ததாகவும், நம்மால் விரும்பப்படும் உணர்ச்சிகளையும் கடந்த ஆன்மாவாகும். ஒருவர் சாதாரணமாக புறச்சூழலின் தீவிர நிர்பந்தத்தாலும், பெரும்பாலும் ஆபத்து ஏற்படும்பொழுதும், எப்பொழுதாவது ஒரு அதிர்ஷ்டம் வரும் போதும் ஆன்மாவை அழைக்கும் நிலைக்குப் போவார். எண்ணத்தின் ஆழத்திலும், தியானத்தின் ஆழத்திலும் சென்று, ஆன்மாவை அழைத்தால், மிகுந்த நற்பயனை அளிக்கக் கூடியதாக இருக்கும். ஏனென்றால் அதுதான் உண்மையான "நான்" என்ற ஆன்மாவாகும். பிரார்த்தனையின் தீவிரம், எவ்வளவு உண்மையாக இருக்கிறதோ, அந்த அளவிற்கு ஆன்மா நிச்சயமாக நம் வாழ்வின் மேலே வருவது உண்மை.





# 92. விற்பனையாகாத சரக்கு

20 வயது வாலிபன் ஒருவன், 110 வருடங்களாக நடந்து வந்த தன்னுடைய கடையை 1974ல் மூடும் நிலைக்கு வந்துவிட்டான். எந்தத் துறையிலும் புதிய முறையை புகுத்துவது, குறிப்பாக தரமில்லாத பொருள்களை அறிமுகப்படுத்துவது அவ்வளவு சுலபமான காரியம் அன்று. அப்படிப்பட்ட தரமற்ற சரக்குகளைச் சந்தையில் விற்க முடியாத விற்பனையாளர்கள், அலங்காரமான கண்ணாடி டம்பளர்களை பரிசாக எடுத்துக்கொண்டு, கிண்கிணி ஓசையை எழுப்பிய வண்ணம் இந்தப் பையனுடைய கடைக்கு வந்தார்கள். பையனுடைய தகப்பனார் அதனால் மனம் கவரப்பட்டு 50 நாட்கள் விற்பனைக்கு ஈடான சரக்கிற்கு ஆர்டர் கொடுத்தார். ஆறு மாதங்கள் கழிந்தன. சரக்கு ஒரு சிறிதும் கூட விற்பனையாகவில்லை. அதுவே அந்த கடையை மூடுவதற்கு காரணமாய் அமைந்தது. அந்தப் பையன் ஒரு பெரியவரிடம் போய் வருவது பழக்கம். அந்தப் பெரியவர் அந்த வாலிபனின் வருத்தந்தோய்ந்த முகத்தைக் கண்டு, விசாரித்து நிலைமையை உணர்ந்து கொண்டார்.

அவர் அந்த பையனிடம் சரக்கை விற்கமுடியும் என்று கூறினார். அவர், ஆன்மாவை அழைத்தால் சரக்கு விற்றுவிடும் என்று கூறினார். அவர் கூறியதில் பையனுக்கு ஏதோ ஒன்று பளிச்சென்று தோன்றியது. அதில் தீவிரமாக கவனம் செலுத்தினான். பெரியவர் அந்த பையனிடம் சரக்கு வைத்துள்ள இடம் சுத்தமில்லாமல் இருந்ததை சுட்டிக்காட்டி, அந்த இடத்தை மாசற்ற தூய்மையாக சுத்தம் செய்யும்படிக் கூறினார். மேலும் அந்த இடத்திற்குச் சென்று மணிக்கு ஒரு முறை அன்னையை அழைக்கும்படி அறிவுறுத்தினார்.

அந்தப் பையன் பெரியவரிடம் தினமும் போய் வந்தான். பிறகு ஒரு வாரம் அவர் வீட்டுக்கு வரவில்லை. கடைசியாக ஒரு நாள் பெரியவர் வீட்டுக்கு வந்து, தான் இவ்வளவு நாட்களாக வராததற்குக் காரணம், தன் கடையில் வியாபாரம் மும்முரமாக நடந்து வந்தது என்று கூறினான். மேலும் கடந்த 7 முதல் 10 நாட்களில் மொத்த சரக்கில் பாதி அளவு விற்றுத் தீர்ந்துவிட்டது என்றும், மீதி பாதியை, மொத்தமாக ஒரு வியாபாரி வாங்கிக் கொண்டார் என்றும் கூறினான். அவனால் அழைக்கப்பட்ட ஆன்மா, விற்க முடியாத சரக்கை விற்றுவிட்டது.

அவன் ஆன்மாவை மட்டும் அழைத்தானே தவிர, பொருளின் ஜீவனை அழைக்கவில்லை. அப்படி அழைத்திருந்தால் பலன் இன்னும் சக்தி வாய்ந்ததாக இருந்திருக்கும். அவன் தன் தகப்பனார் முட்டாள்த்தனமாக, ஒரு புத்திசாலியான விற்பனையாளரின், வலையில் வீழ்ந்துவிட்டதிலிருந்து மீட்கப்பட்டதை ஒரு வெற்றியென எண்ணி மகிழ்ந்திருந்தான். அவனுடைய தகப்பனாரோ கடையில் மும்முரமாக வியாபாரம் நடந்து கொண்டிருந்த போதும், தன்னைப் பற்றியே பெருமை பேசிக் கொண்டிருந்தார். விற்பனை அதிகமாக இருந்ததால் இந்த சரக்கை தான் வாங்கியதற்கு பையன் வருத்தப்பட்டதுதான் முட்டாள்த்தன-மென்று சொல்லி அதே சரக்கை இரு மடங்கு ஆர்டர் செய்தார்.





# 93. அகமும் புறமும்

‘‘ஒருவருடைய’’ புறவாழ்க்கை அவரது அகவாழ்வில் உள்ளதின் உண்மையான பிரதிபலிப்பு என்பது நம்முடைய பழங்கால மரபுகளால் கூறப்பட்டவையாகும். சங்க இலக்கியம் நல்லதும் கெட்டதும் வெளியிலிருந்து வருவதில்லை என்று கூறுகிறது. ஒருவர் தன் வாழ்க்கையை ஆன்மா ஆளவேண்டுமென்று விரும்பினால், இந்த விதி அவருக்கு முக்கியமானது.

ஒரு சாமார்த்தியமான ஏழை, செல்வந்தர் குடும்பத்தில் திருமணம் செய்து கொள்ளும் அதிர்ஷ்டக்காரராக இருந்தார். அவர் வெட்கமில்லாமல் மாமனார் வீட்டில் தஞ்சம் புகுந்து, மாமனாரின் வீடுகளில் ஒன்றில் குடியேறிவிட்டார். ஐந்து குழந்தைகள் பிறந்த பிறகு, மனைவியை மாமனார் வீட்டிலேயே விட்டுவிட்டு, நகரத்தில் பணக்கார வீட்டு மருமகப்பிள்ளை என்று கர்வமாகக் கூறிக்கொண்டு ஊரை சுற்றிக்கொண்டு இருந்தார். வாழ்வின் சட்டம் என்னவென்றால், ஒரு சிறிய உதவி பெறுபவர், உதவி செய்தவர் மீது, அதிக ஆதிக்கம் செலுத்துவார் என்பதாகும். அவரால் பழிவாங்கப்பட்டவர், அவருடைய மைத்துனரான அந்த செல்வந்தரின் சொத்துக்கு ஒரே இளைய வாரிசு ஆவார்.

அங்கே கடையில் சுவையான விளையாட்டுப் பேச்சுக்களாக ஆரம்பித்து அவையெல்லாம் பரிகாசமான கேலிப்பேச்சாக தரம்குறைந்து, பையன் கடையில் இருக்கும்பொழுதே ஒருநாள் அது உச்சக்கட்டத்திற்கு வந்தது. கேலி செய்து கொண்டிருந்த ஐந்து நண்பர்களும் மருமகனும் சேர்ந்து கொண்டு, பையனை அழவைக்கும் அளவிற்கு துன்புறுத்தினார்கள். பையன் தன் கண்ணீரை அடக்கிக் கொண்டான்.

பையன் தனக்கு தீர்வுகாண்பதைவிட, ஆறுதலைநாடி பாதுகாப்புக்காக ஒருவரிடம் ஓடினான். மனித விவகாரங்களில், மனிதனின் கஷ்ட நேரத்தில் தீர்வு காண்பது பலருக்கு சுலபமாக இருக்காது. அவன் ஆறுதல் தேடி வந்ததற்கு, முழு அளவில் பலன் கிடைத்தது. அதன் பிறகு அவனால் சந்தோஷத்தில் சிரிக்கவும் முடிந்தது. ஆறுதல் கூறியவர் சொன்னார். ‘‘கேலியினால் துன்பப்படுவது உள்ளத்தில் இருந்தால்தான் வரும். அது வெளியிலிருந்து வருவது அல்ல’’ என்று கூறினார். இதைக் கேட்டதும் பையன் தனக்கு இத்தகைய சுபாவம் இருந்தது என்று ஒப்புக் கொண்டான். தானே சிறுவயதில் ஒரு மாணவனை இப்படி கேலி செய்து துன்புறுத்தியதின் பலனாக, அந்த மாணவன் பள்ளியை விட்டு நின்று விட்டான் என்று கூறினான். அவன் தன்னைத்தானே ஆழ்ந்து பரிசோதனை செய்து பார்த்ததில், பழைய மனப்பான்மையை மாற்றிக் கொள்ள முடிந்தது.

இருபது நாட்களுக்குப் பிறகு பையன், ஆறுதல் கூறியவரிடம் வந்தான். அவன் தன்னுடைய மாமா எங்கேயோ அடிவாங்கிக் கொண்டு கடைக்கு வந்து, அடக்கத்துடன் கை கூப்பிக் கொண்டு, தன் முன்னே நின்று, இனிமேல் நான் உனக்கு கீழ்ப்படிந்து நடந்து கொள்வேன் என்று என்னிடம் கூறினார் என்று சொன்னான். இதை என் காதுகளால் நம்பமுடியவில்லை என்று கூறினான். பதினைந்து நாட்களுக்கு முன் என் தகப்பனார் காலமாகிவிட்டார். ஒருவேளை இதுவே அவரது மனமாற்றத்திற்கு காரணமாக இருக்குமோ என்றான்.

அகம் புறத்தைக் கட்டுப்படுத்தும் போது, ஆன்மா வாழ்வை கட்டுப்படுத்துகிறது.





# 94. அபிப்பிராயங்களும் மனப்போக்கும்

சூட்சுமப் பார்வையில் அபிப்பிராயங்கள் ஊசிகள் போன்றவை. மனிதனின் அன்றாட வாழ்வை நிர்ணயிக்கும் சூழலில் அது போன்று லட்சக்கணக்கான ஊசிகள் உள்ளன என்று தெய்வீக அன்னை கூறுகிறார். நீ திறந்த மனத்துடன் உன்னால் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கருத்தை உதறித் தள்ளிவிட முயன்றால், அபிப்பிராயங்களிலிருந்து விடுபடுவது சிரமம் என்று புரியும். உன்னுடைய அனைத்து முயற்சிகளுக்குப் பின்னும் அபிப்பிராயம் இருப்பதைக் காண்பாய். அதுவே நிலைபெற்று இருக்கும்.

மனத்தின் போக்கு அபிப்பிராயங்களைவிட சக்தி வாய்ந்தது. அபிப்பிராயம் உணர்ச்சிகளால் அங்கீகரிக்கப்படும் பொழுது மனத்தின் போக்கு எழுகிறது. மனோபாவத்திற்கு சில உதாரணங்கள், *(1)* நான் சொந்தக் காலில் நிற்க வேண்டும் *(2)* என்னுடைய தொழிலின் உயர்வை நான் மதிக்க வேண்டும் *(3)* என்னைப்பற்றி யாரும் தவறாக பேசக்கூடாது, என்பன போன்றவைகள். இந்த மாதிரியான மனப்போக்குகள் ஒருவருடைய சாதனையை நிர்ணயிக்கும் தீவிர சக்தி வாய்ந்ததாகும்.

ஆன்மா, அபிப்பிராயம், மனப்போக்கு, இவற்றிற்கு அப்பாற்ப்பட்ட நிலையில் *(Plane)* உள்ளது. நோக்கம் என்பது, முழு ஜீவனைச் சார்ந்தது. அது அபிப்பிராயங்களையும் மனப்போக்கையும் உள்ளடக்கியுள்ளது. திடமான அபிப்பிராயங்கள் உள்ளவர் மற்றும் அபிப்பிராயங்களை உண்டு பண்ணிக் கொள்ள முடியாதவர் என்றிருவரிடையே தீவிர

அபிப்பிராயமுடையவர் நினைத்ததை சாதிப்பவராக இருக்கிறார். தன் சொந்தக்காலில் நிற்க வேண்டுமென்ற மனோபாவம் உடையவர், பிறர் ஆதரவின்றி வாழ முடியாதவர்களை விட மேலானவராக, சாதனை படைப்பவராக இருப்பார்.

ஆன்மா, அதனுடைய நிலையில் அபிப்பிராயம், மனப்போக்கு, நோக்கம், இவற்றைக் கடந்த இடத்தில் உள்ளது. யோகியின் ஒரே நோக்கம் மோட்சத்தை அடைவது. ஒருவருடைய தனிப்பட்ட வெற்றிக்கும், அல்லது குடும்பத்தின் முன்னேற்றத்திற்கும் உழைப்பது, சகஜமானது. வாழ்வில் வெளிப்படும் ஆன்மாவின் மூலம் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தை நாம் ஏற்றுக் கொள்ளலாம். அது நோக்கமாகவும் அல்லது மனத்தின் போக்காகவும் இருக்கட்டும். குறைந்தபட்சம், ஆன்மாவைப் பற்றிய அபிப்பிராயம் ஒன்று ஏற்றுக் கொள்வோம். அதாவது நம் ஆன்மா நம் அன்றாட வாழ்வில், வீட்டிலும் சரி, தொழில் புரியும் இடத்திலும் சரி, நம்மை வழிநடத்தினால் அநேக முன்னேற்றங்கள் வரும் என்ற அபிப்பிராயத்தை நாம் பெற வேண்டும்.

மனிதன் செய்வதைவிட ஆன்மா அதிக பயனுள்ள சாதனை படைக்கும் என்பதைப் புரிந்து கொள்வோம்.





# 95. கடன் சுமை

மனிதன், கடன் உதவி வழங்கும் ஸ்தாபனத்தைக் கண்டுபிடித்ததும், தன்னுடைய சுயநலமாகிய குறுகிய மனப்பான்மை கூட்டிலிருந்து வெளிப்பட்டு, மற்றவருடைய வாழ்விலும் பங்கேற்க ஆரம்பித்தான். இன்றைய நவீன நாகரீக உலகில், பொருளாதாரம், கடன் என்ற உறுதியான தோளின் மீது நிற்கிறது. கல்வி என்ற ஸ்தாபனம் உலகில் செய்த சேவைக்கு ஈடாக நிதியுதவி செய்வதில் கடன் சிறப்பான சேவை புரிந்துள்ளது. கடன் கொடுப்பவரின் முதலீடு, கடன் வாங்குபவருக்கு சுமையாகிவிடுகிறது. மனிதன் தனக்காக உருவாக்கிய ஒவ்வொரு கருவிக்கும் தான் அடிமையாகிவிடுகிறான்.

இப்படி கடன், கடன் பெற்றவருக்கு, சுமையாகிவிடுகிறது. ஒரு காலத்தில், நகரத்தில் வாழும் இரண்டு நடுத்தர வர்கத்தினர் தங்களுடைய கடன் பத்திரங்களை ஒப்பிட்டுப் பார்த்த நேரம் உண்டு. இப்பொழுது புதிய முறைகள் தோன்றிவிட்டதால், அத்தகையவர்கள் கடனைப்பற்றி பேசுவதை தவிர்த்து, சேமிப்பைப் பற்றி ஆலோசிக்கலா-னார்கள். நம்முடைய கவலையெல்லாம் கடன் சுமையின் பிடியில் உள்ளவர்களை, எப்படி அவர்களை அதிலிருந்து விடுபடச் செய்வது என்பது தான். ஆன்மா அதற்கு ஓர் வழிகாட்டுகிறது. ஆன்மா, அதனுடைய நிபந்தனைக்கு உட்பட விரும்பியவருக்கு, தீர்வு அளிக்க முன் வருகிறது.

மனிதனுடைய அனுபவம் என்னவென்றால், ஒரு பொருள் தொலைந்துவிட்டால் அது தொலைந்தது தொலைந்ததுதான், அதை மீண்டும் பெறமுடியாது என்பதுதான். ஒரு தவறு நடந்துவிட்டால், அதை மீண்டும் சரியாக்க முடியாது. ஒருவர்

தன்னுடைய முட்டாள்த்தனத்தினால் கடன் பொறியில் வீழ்ந்துவிட்டால், அதற்காக வருந்தினாலும், திரும்பவும் அதிலிருந்து மீளமுடியாது. அந்தச் செயலின் பலனை அவர் அனுபவித்துத்தான் ஆக வேண்டும். ஆனால் இதற்கு ஆன்மா என்ன கூறுகிறது என்றால், ஒரு முறை செய்துவிட்ட தவறுக்கு, உணர்ச்சிபூர்வமாக மனம் வருந்தினால், பழைய தவற்றிற்காக இன்று மனநிலையை மாற்றிக் கொள்ள விரும்பினால் உன்னுடைய கடன்கள் யாவும் கரைந்து, நீ எப்பொழுதும் போல் அதன் தலையிலிருந்து நிரந்தரமாக விடுதலைப் பெறுவாய் என்பதாகும்.

- ♦ வாழ்வில் முட்டாள்த்தனமாக செய்த செயல்களை மாற்ற முடியாது.
- ♦ ஆனால் ஆன்மா கடந்தகால முட்டாள்த்தனமாக செய்த செயல்களுக்கு, உணர்ச்சிபூர்வமாக இன்று வருத்தம் தெரிவித்தால் நிலைமையை மாற்றித் தரும்.
- ♦ உண்மையாக, உணர்வுகளில் மாற்றத்தை ஆழத்தில் கொண்டு வரும்பொழுது, ஆன்மாவால் இருப்பதை மாற்ற முடியும்.
- ♦ மலையளவுள்ள கடன், அதே மலையளவுள்ள உணர்ச்சிப் பெருக்கால் மனம் வருந்தும் போது, கடன் கரைந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிடும்.





# 96. மனம், இதயம் மற்றும் ஆன்மா

மனம் சக்தி வாய்ந்தது. நாம் அதை ஒருமுகப்படுத்தும் போது, அது மேலும் சக்திவாய்ந்ததாக உள்ளது. இதயம் மனத்தைவிட சக்திவாய்ந்தது. ஆன்மா இவற்றையெல்லாம் விட அதிகமான சக்தி உடையது. நாம் சிந்தனையை ஒரு நிலைப்படுத்தும் பொழுது அது மனத்திலும் அல்லது இதயத்திலும் பூர்த்தியாவதைக் காண்கிறோம். நாம் ஆன்மாவை எப்பொழுதாவது ஒரு நிலைப்படுத்துகிறோம். ஆன்மா இதயத்திற்குப் பின்னாலும் தலைக்கு மேலே சஹஸ்ரதளத்திலும் இருக்கிறது. சஹஸ்ரதளம் தலையின் உச்சியில் இருக்கிறது. வேதங்கள் சஹஸ்ரதளத்திற்கு மேலுள்ள மையத்திலிருந்து எழுதப்பட்டன. ஷேக்ஸ்பியர் மனத்திற்கு மேலேயும் சஹஸ்ரதளத்திற்கும் கீழேயுள்ள நிலையிலிருந்து எழுதினார்.

ஒருவருக்கு தான் ரூ.55,000/-க்கு வாங்கிய தன் சொத்தின் மீது கடன் தேவைப்பட்டது. அந்த சொத்தின் மதிப்பின் பாதி அளவுதான் கடன் வாங்கமுடியும் என்பதை, அவர் நன்கு அறிந்திருந்தார். அந்த நாட்கள் வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதற்கு முந்தைய காலம். விவசாயத்திற்கு வங்கிகளின் ஆதரவு இல்லாத நேரம். அவருக்கு மொத்தத்தில் ரூ.1,75,000/- கடன் தேவைப்பட்டது. அதில் முதல் தவணையாக ரூ.75,000 தேவைப்பட்டது. அதை அவர் மனதில் தீவிரமாக ஒருமுகப்படுத்திய போது, அது சக்தி வாய்ந்ததாக அமைந்ததால், தனக்குக் கடன் கிடைத்து விடும் என்று நம்பிக்கைக் பெற்றார்.

அந்த நிலத்தின் மீது அவர் எடுத்துச் செய்யும் வேலையானது, அந்த நாட்களில் திட்ட அளவில் புரட்சிகரமாக இருந்தது. அவர் அந்த வேலையின் மீது உண்மையான நம்பிக்கை வைத்து வங்கியை அணுகினார். வங்கியில் இருக்கும் பொழுது, அமைதியாக இருந்தார். அமைதி மட்டுமன்றி, அவர் இதயத்தில் அது வரையில் கண்டிராத அதிக அளவிலான அமைதியான மகிழ்ச்சி நிரம்பியிருந்ததை உணர்ந்தார்.

வங்கி அவருக்கு ரூ.4,25,000 கடன் வழங்க முன் வந்தது. அவர், கிடங்கு, சாலை வசதி, டிராக்டர் முதலானவற்றிற்கு கேட்காததால், அவற்றின் உபயோகத்திற்கும் சேர்த்து அதிகமாகவே கடன் வழங்கியது. வங்கி பரந்த மனப்பான்மை மட்டுமின்றி உதாரகுணமுள்ளதாகவும் நடந்து கொண்டது. அவருக்கு என்ன நடந்தது என்றே தெரியாமல் திகைப்புடன் திரும்பினார். அவருக்கு புரியாதது என்னவென்றால், அவர் தன் எண்ணத்தை ஒருமுகப்படுத்தியது முழுமையடைந்து, இதயத்திற்குப் பின்னால் அமர்ந்திருக்கும் ஆன்மாவின் மையத்திற்குச் சென்றதால்தான், அவ்வாறு நடந்தது. இது கேள்விப்படாத ஆன்மாவின் மறு மொழியாகும்.





# 97. சூறாவளி

நாம் இந்தியாவில் புயல் வீசுவதைப் பற்றி தெரிந்து வைத்துள்ளோம். இங்கு புயல் சாதாரணமாக மணிக்கு 120 மைல்கள் முதல் 150 மைல்கள் வரை வீசும். ஆனால் மணிக்கு 300 மைல்கள், அதற்கு மேலும் வீசும் சூறாவளியை, நம் அனுபவத்தில் கண்டதில்லை. அமெரிக்காவில் பல பகுதிகள் அத்தகைய சூறாவளியால் பாதிக்கப்படக் கூடியவைகளாக உள்ளன. சூறாவளி அதிக சேதம் விளைவிக்கக் கூடியது. அது சில நிமிஷங்கள் வீசி அடங்கிவிடும். சூறாவளியின் போது, கார்கள் காற்றில் பறக்கும். ரெயில்வே கோச்சுகள், இரயில் பாதையிலிருந்து 100 முதல் 200 கெஜம் தூரம் வரை தூக்கி எறியப்படும். சில நேரங்களில் அவைகளை காற்றில் உயரே தூக்கி வெகுதூரத்தில் போட்டுவிடும்.

ஒரு இந்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அமெரிக்காவில், சொற்பொழிவு ஆற்றும் பணிக்குச் சென்றபோது, தன்னுடைய நண்பர் வீட்டில் ஒரு இரவு தங்கினார். அங்கு மேஜையின்மீது அன்னையின் படத்தை வைத்து பிரார்த்தனை செய்துவிட்டு படத்தை அங்கேயே வைத்து விட்டார். மறுநாள் காலை, அவர் சொற்பொழிவு ஆற்ற வேறு ஊருக்குப் போனார். அங்கு, அவர் முதல் நாள் தங்கியிருந்த பகுதி சூறாவளியால் சேதம் அடைந்து விட்டது என்று அறிவித்தார்கள். பேராசிரியர் நண்பரை போனில் கூப்பிட்டு விசாரித்ததும், நண்பருக்கு ஆபத்தில்லை என்று கேள்விப்பட்டதும் நிம்மதி ஏற்பட்டது.

சொற்பொழிவு முடிந்ததும் பேராசிரியர், நண்பர் இருந்த இடத்திற்கு விரைந்தார். அங்கு அவர் கண்ட கோரக்காட்சி இரத்தத்தை உறைய வைத்தது. அதே சமயத்தில் அந்த

இயற்கையின் இடர்பாட்டில் தன்னுடைய நண்பர் உயிர் தப்பியதால் வியப்படைந்தவராய் அன்னைக்கு நன்றி செலுத்தினார்.

அங்கு 60 அல்லது 70 வீடுகள் இருந்த இடத்தில், எல்லா வீடுகளும் தரைமட்டமாகி விட்டிருந்தன. அது ஒரு பேரழிவு. வாயு பகவான் சீற்றத்திற்கு ஆளான இடத்தில் மரங்களைக் காணவில்லை. எலக்ட்ரிக் கம்பங்கள் வளைந்து முறுக்கிக் கொண்டிருந்தன. ஆனால் நண்பருடைய வீடுமட்டும் நிலைகுலையாமல், ஆடாமல் அசையாமல் இருந்தது. அவருடைய காரும் சேதப்படவில்லை. மரக்கிளை ஒன்று ஒடிந்து கார் மீது விழுந்து, கண்ணாடி மட்டும் சேதப்பட்டிருந்தது. நண்பர் வீட்டின் முன்னால் நின்ற மரம், ஒரு கிளை ஒடிந்திருந்ததைத் தவிர அப்படியே இருந்தது. பேராசிரியரை நண்பர் மீண்டும் மீண்டும் ‘‘நான் எப்படிக் காப்பாற்றப்பட்டேன்’’ என்றுக் கேட்டதற்கு பேராசிரியர் அச்சத்தால் வியப்படைந்தவராய் எதுவும் சொல்ல முடியவில்லை. நண்பருக்கு பதில் சொல்ல முடியாதது மட்டுமல்ல, அன்னையின் அற்புதங்களைப் பற்றி அவர் இதுவரையில் அறியாதவராகவே இருந்தார். அவர், அன்னையின் சக்தி அவர்களுடைய வீட்டை அரண்போல் சூழ்ந்து பாதுகாத்து இருக்க வேண்டும் என்று நினைத்தார். அன்னையின் படம், அவர்கள் வீட்டில் ஒரு இரவு இருந்ததால்தான் அவர்கள் காப்பாற்றப்பட்டார்கள் என்றுக் கூறி முடித்தார்.





# 98. இரயிலில் கொள்ளை

பீஹாரில் பணியில் முழுமையாக ஈடுபட்டிருந்த ஒருவர் அலுவலக வேலையாக பிரயாணம் மேற்கொண்டார். அவர் அந்த வேலையில் கடமையின் பங்காக 7 லட்சம் பணம் வசூல் செய்த தொகையை எடுத்துக் கொண்டு இரயிலில் பிரயாணம் செய்தார். அவர் அப்படி பல லட்சக்கணக்கான பணத்துடன் பிரயாணம் செய்வது வழக்கமான ஒன்று. அவர் எப்பொழுதும், தைரியசாலியாக இருந்ததாலும், அவருக்கு எப்பொழுதும் பணத்துடன் பிரயாணம் செய்யும் பொழுது பயம் ஏற்பட்டதில்லை.

ஓடும் இரயிலில் அபாய அறிவிப்பு ஒலி கேட்டதும் ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. அவர் அந்த இரயிலில் கொள்ளையர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உடனே புரிந்து கொண்டார். அவரிடத்தில் அவ்வளவு பெரியத் தொகை இருந்திராவிட்டால் அவர் பயப்படுவதற்கு அவசியம் இல்லை. அது அவருடைய பணம் அல்ல. பணம் தொலைந்துவிட்டால், அலுவலகத்திற்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர். அந்நிலையில் எண்ணங்கள் கட்டுக்கடங்காமல் ஓடின. ஆனால் பயம் ஏற்படவில்லை. அவர் வணங்கும் தெய்வத்தை அழைத்தார். அது பயனற்றதாக இருந்தது.

திடீரென்று அவர் மனதில், ஒரு வாரத்துக்கு முன் தொலைக்காட்சியில் பார்த்த நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வந்தது. அதில் சென்னையில் ஒரு பெண்மணி சூறாவளியைப் பற்றி பேசியதை நினைவு கூர்ந்தார். அன்னையின் படம் இருந்த வீடு சூறாவளியிலிருந்து காப்பாற்றப்பட்டது என்றும், அன்னையின் சக்தி மகத்தானது என்றும் அறிந்தார். உடனே அன்னையை அழைக்க எண்ணினார். அதற்குள்

கொள்ளையர்கள் அவர் இருந்த பெட்டிக்குள் புகுந்து, ஒவ்வொருவரிடமும் துருவித்துருவிக் கொள்ளையடித்துவிட்டு சேதப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அவர் மனதில் எந்த எண்ணமும் எழவில்லை. அவர் வைத்திருந்த பணத்தைப் பற்றியும் எண்ணவில்லை. சில வினாடிகளுக்குமுன் மெதுவாக அழைத்த அன்னையை கூட நினைக்க முடியவில்லை. அந்த நேரம், அவர் வாழ்வில் அது ஒரு ஆபத்தான நேரமாக இருந்தது. அவர் தன் உள்ளே ஆழ்ந்து சென்றார். அப்படிப்பட்ட நேரத்தில் ஆன்மா மேலே வெளியே வருகிறது. இப்படி ஒருவர், தன் உள்ளே ஆழ்ந்து போகும் தருணத்தைத்தான் அன்னை விரும்புகிறார். கொள்ளையர்கள் நாசப்படுத்திக் கொண்டிருக்கும்போது தன் உணர்வுக்கு வந்தார். அமைதியாக தெய்வீக அன்னையை அழைக்க முற்பட்டார்.

இரயில் நின்று விட்டது. ஆயுதம் ஏந்திய போலீசார் ரூபத்தில் உடனே உதவி வந்தது. கொள்ளையர்கள் ஓட்டம் பிடித்தார்கள். தன் சுயஉணர்வு வந்ததும், தன்னுடைய பணப்பையை பார்த்தார். அது பாதுகாப்பாக அப்படியே இருந்தது.





# 99. கனவுகள்

கனவுகளினால் நமது சக்தி பெருமளவு குறைகிறது. கனவுகள் இல்லாத உறக்கம், இளைப்பாறுவதாகும். ஆழ்மனத்திலிருந்து வரும் கனவுகள் பயங்கரமாக இருக்கும். அடிமனத்திலிருந்து வருபவை, எதிர் காலத்தைக் குறிக்கும். அக்கனவுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாக இருக்கலாம். கனவுகள் சூட்சும நிலைகளில் (Planes) இருந்து நீண்டகால நிகழ்ச்சிகளை மிகக்குறுகிய நேரத்தில் உணர்த்துவதாக இருக்கலாம். விடியற்காலையில் காணும் கனவு பலிக்கும் என்பது, நம் பாரம்பரியத்தின் நம்பிக்கை. சில கனவுகள் அர்த்தம் நேர்மாறானதாக இருக்கும்.

சிலர், ஒரு குறிப்பிட்ட மனிதர், தன்னை தாக்குவதாக கனவு காண்பார். அன்னை அதற்கு அர்த்தம் நேர்மாறானது என்கிறார். நான் ஒருவர் மீது கோபப்பட்டு, அவர்மீது கெட்ட எண்ணம் கொண்டிருந்தால், கனவில் அவர் என்னை தாக்குவதைக் காண்பேன். அது தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் வழி. அது உண்மையில், நான், எப்பொழுதும் என்னை கெட்டவன் என்று நினைப்பது இல்லை. மாறாக நான் என்னை நல்லவன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆகையால் நான், மற்றவர்கள் மீது கொண்டிருக்கும் கெட்ட எண்ணம், மற்றவர் என்மேல் கொண்ட கெட்ட எண்ணமாக மாற்றிப் பார்க்கிறேன். தன்னைப் பற்றி உணர்ந்தவர்களுக்கு, இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். தன்னை அறிதல், அன்னையை அழைப்பதற்கு அடிப்படை ஆதாரமாகும்.

ஒன்றை அறிகுறியாகக் கருதுவதும், கனவுகளும் வெவ்வேறாக இருந்தாலும் அவை இரண்டும் ஒன்றாகவே

வரும். கனவில் தண்ணீரைக் காண்பது உணர்ச்சியைக் குறிக்கும். மயில் வெற்றியைக் குறிக்கும். மழை அருளைக் குறிக்கும். சிங்கம் தைரியத்தையும், வானத்தில் பறப்பது வாழ்வின் உயரிய குறிக்கோளையும் குறிக்கும். அதையே ஆன்மீகத்தில் ஜீவியம் வேகமாக வளர்ச்சி அடைகிறது என்று கருதலாம். ரயில், பஸ்சில் போவதும் ஜீவியத்தின் வேகமான முன்னேற்றத்தைக் குறிக்கும். கனவுகளில் அடிக்கடி, தான் அதிகமாக தாக்கப்படுவதாகத் தோன்றினால், அது அவருடைய தவறான வளர்ப்பு முறையினால் அவருக்கு சமூகவிரோத மனப்பான்மை உள்ளதைக் காட்டுகிறது. கனவில் அன்னையைக் காண்பது சூட்சும உலகில் அன்னையை தரிசனம் செய்வதாகும்.

தூக்கத்தில் பயங்கரக் கனவுகளைக் காண்பவர்கள் அன்னையை அழைத்தால், உடனே அது மறைந்துவிடும். அது, அன்னை கனவிலும் பாதுகாப்பு அளிக்கிறார் என்பதாகும். எல்லோராலும் கனவில் அன்னையை அழைக்க இயலாது. அன்னையை அழைக்க வேண்டுமென்றும் நினைக்க இயலாது. அது ஆன்மீகத்தின் சிறப்புரிமை.





# 100. சட்டமும் நீதியும்

கடந்த நூற்றாண்டுகளுக்கு மேலாக நீதிமன்றங்கள் மக்களுக்கு சட்டரீதியான தீர்ப்புகள் வழங்கிக் கொண்டு வருகின்றன. இதற்கு முன்பு மக்கள், ஊரில் உள்ள பெரியவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட, உள்ளூர் ஆலோசனை மன்றங்கள் மூலமாக தீர்ப்பு பெற்று வந்தார்கள். நீதிமன்றங்கள் ஏற்பட்ட பிறகு, இப்பொழுது சட்டரீதியான தீர்ப்பு பெற்று வருகிறார்கள். சட்டரீதியான தீர்ப்பு சாட்சியங்களின் அடிப்படையாகக் கொண்டது. ஒருவர் உரிமை கொண்டாடுவதில் உண்மை இருக்கிறதோ இல்லையோ, நிரூபிப்பதற்கு சரியான சாட்சியங்கள் இல்லாதபோது நீதிமன்றம் உதவியற்றதாக ஆகிவிடுகிறது. ஆகவே நீதியின் உரிமை குறைக்கப்பட்டு பாதிக்கப்படுகிறது. சட்டம் உதவுவதற்கேற்ப, சட்டத்தின் நீதியாக அமைகிறது.

பரந்த சமூகத்தில் நீதிமுறை வழங்குவதில், ஒருவர் நியாயமாகவும் உரிமையை உடையவராக இருந்த போதிலும், அவருக்கு நீதி மறுக்கப்படுகிறது. அது அப்படி தவிர்க்க முடியாத காரணங்களால், நியாயமானதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், நீதி மறுக்கப்படுகிறது. அவர் ஆன்மாவின் நீதியின் முன்னே முழுமையான நீதியைப் பெறமுடியுமா? முடியும். அதற்கு அவர் ஆன்மாவை அழைக்க முன்வர வேண்டும். அல்லது அவருடைய உரிமையின் ஜீவியத்தை அழைக்க வேண்டும்.

அவருடைய வழக்கு பல காரணங்களினால் தோற்றுப் போய் இருக்கலாம். அது சரியான சாட்சியம் இல்லாததாலும், நீதிபதியின் சரியான கவனம் வழக்கில் செலுத்தப்படாததாலும், சமூகம், அரசியல், பணபலம் போன்ற நிர்ப்பந்தங்களாலும்

வழக்கு தோற்றுப்போய் இருக்கலாம். அவருடைய காரணங்கள் இங்கே நியாயமானதுதானா? அப்படியானால், அவர் உயர்ந்த சக்தியை அழைக்கத் தயாராக இருக்கிறாரா? எந்த உயர்ந்த நீதிமன்றத்திலும் அவருக்கு நியாயம் மறுக்கப்பட்டிருந்தாலும், ஆன்மாவின் உயர்ந்த சக்தியினால், அவருக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தீர்ப்புக் கிடைக்கும்.

ஒருவருக்கு தனக்குச் சேர வேண்டிய மூன்றில் ஒரு பங்கு சொத்துக்கு சரியான தஸ்தாவேஜுகள் இல்லாததால், அவரது உரிமையைக் குறிக்கும் ஒரு கிறுக்கப்பட்ட சிறிய காகிதம் கூட இல்லாதபோது, நீதிமன்றத்தில் அவரது வழக்கு தோற்றுப்போனது. நீதிமன்றம், அவர்மேல் அனுதாபம் காட்டினாலும் அவருக்குக் கிடைக்க வேண்டிய உரிமையை மறுத்தனர். அவர் தன் ஆன்மாவை அழைத்த பொழுது அடுத்த 15 நிமிடங்களில் சொத்து தன் கைக்கு வந்ததாக உணர்ந்தார். ஆனால் சட்டபூர்வமாக அதை உறுதி செய்ய 6 மாதங்களாயிற்று. சட்டம் கைவிடலாம், வழக்கறிஞர் திறமை போதியதாக இல்லாமல் இருக்கலாம், வாழ்வும் பாரபட்சமாகவும் இருக்கலாம், இயற்கை கூட அவருக்கு எதிராக இருக்கலாம், ஆனால் உன் பக்கத்தில் உண்மையும் நீதியும் இருக்கும் பட்சத்தில், தெய்வீக அன்னையின் பரிபூர்ண ஆசிகள் உனக்கு நிச்சயமாக உண்டு.





# அனுபந்தம் - I

## ஆன்மாவை அழைப்பது எப்படி?

இந்தியர்கள் காலந்தவறாமையை கடைபிடிக்கும் பொழுது அது அதிக சக்தி வாய்ந்ததாகவும், பலனுள்ளதாகவும் உள்ளது என்று அறிவார்கள். சிலர் தங்களது கம்பெனியில் உயர்ந்த பண்பாக, காலந்தவறாமையை நடைமுறைப்படுத்த முடியாமல், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். காலந்தவறாமையை எவ்வாறு கடைபிடிப்பது என்று கேட்கிறார்கள். அது அவர்களுக்கு தெரியாது என்று கூறமுடியாது. அதை அவர்கள் செயல்படுத்த இயலாததற்குக் காரணம், கம்பெனியின் சூழ்நிலை காலந்தவறாமைக்கு உகந்ததாக இல்லை என்பதுதான். அதற்கு தீர்வுதான் என்ன? அதைக் கடைப்பிடிப்பதில் பலரும் தவறுவார்கள் என்றாலும், மிகுந்த மனஉறுதியுடன் செயல்பட்டால், காலந்தவறாமை முறையை அமுல்படுத்த முடியும்.

காலந்தவறாமை என்பது முடியாததுதானா? முடியாதது என்றில்லை. நாம் விவரமான போதிய முயற்சி எடுப்பதில்லை என்றுதான் அர்த்தமாகிறது. காலந்தவறாமை என்பது ஒழுங்குமுறைக்கு முந்தைய நிலையாகும். அதற்கும் முந்தைய நிலை அதிக உற்பத்தி நிலை. உற்பத்திக்கு அதிக சக்தி தேவைப்படுகிறது. அது ஆர்வத்தால் எழுவது. அதை ஆரம்பத்திலிருந்தே அதிகரிக்க முயற்சிக்க வேண்டும். கம்பெனியில் உள்ள ஒவ்வொருவரும் கம்பெனியின் முன்னேற்றத்தில் ஆர்வம் உடையவர்களாக இருக்க வேண்டும். அங்கு ஆர்வம் இல்லையென்றால், நான் என்ன செய்ய வேண்டுமென்ற கேள்வி எழுகிறது. தொழிலாளர்களின் ஆர்வம்

என்பது, முதலாளியின் ஆர்வம். நீ கம்பெனியின் முன்னேற்றத்திற்காக, ஆர்வமுள்ளவராக இருக்கிறாயா, என்று ஆராய்ந்து பார். அங்கு ஒழுங்குமுறையை நிலைநிறுத்த அதில் படிப்படியாக முன்னேறு. ஒழுங்குமுறையை அடைந்ததும், காலந்தவறாமை இல்லாத போது, அதைக் கடைப்பிடிப்பதில் உன்னுடைய முயற்சியில் வெற்றிகிட்டும்.

ஆன்மாவை அழைப்பதில், பலரும் வெற்றி அடைய முடியும். அவர்களுக்கு, இதை மேலும் எப்படி வலுப்படுத்துவது என்பதுதான் கேள்வி. அதை செயல்படுத்த முடியாதவர்களுக்கு ஒரு வழி உண்டு. ஒருவர் அடிக்கடி கோபப்படும் பொழுது, மற்றவர்கள் அவரை அந்த இடத்தை விட்டு அகன்று, தனிமையில் அமர்ந்து சிந்திக்கும்படி அறிவுறுத்துவார்கள். அப்பொழுது அவருடைய கோபம் பெரும்பாலும் மறைந்து விடுகிறது. கோபம் போனவுடன், சிந்திக்க முடிகிறது. கோப உணர்வுக்கு அடுத்த உயர்ந்த நிலை மனம். ஆன்மா மனத்தைவிட உயர்ந்த நிலை. ஒருவர் ஆன்மாவை அழைக்கும் பொழுது, எண்ணங்கள் குறிக்கிட்டு அதைத் தடுக்கிறது. எண்ணங்கள் குறுக்கிடுவதற்குக் காரணம், மனிதன் எண்ணங்களோடு ஒன்றிப்போய் விடுகிறான். இதை உணர்ந்து கொண்ட ஒருவர், சிந்தனையிலிருந்து எண்ணங்களை விலக்கினால், ஆன்மாவை அழைப்பது சுலபமாகிவிடும். மீண்டும் ஒருவர் அது முடியாது என்று சொல்லக் கூடும்.

இப்படிப்பட்டவர்கள் தினந்தோறும் ஒரு நேரத்தை ஒதுக்கி அன்னையை அழைக்க வேண்டும். அதில் நேரம் போகப் போக எண்ணங்கள் குறைந்து அமைதி எழும். அன்னை, ஆன்மாவைவிட சக்திவாய்ந்தவர். இவ்வாறாக அன்னையை தினந்தோறும் சில நாட்கள் வரை தன்னுள் அழைத்த பிறகு,





ஒரு நாள் முழுவதும் 12 மணி நேரம் அழைக்க மாற்ற வேண்டும். பிறகு 12 மணி நேரம் முழு நாள் பிரார்த்தனையை, மூன்று நாட்கள் அழைப்பாக அன்னையை அழைக்கும் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்.

அன்னையையோ, அல்லது ஆன்மாவையோ, அழைக்கும் முயற்சியை மேற்கொண்டபின், மூன்று நாட்கள் பிரார்த்தனைக்குப் பின், அன்னை ஒருவரின் ஜீவனின் மேல்நிலையில் வந்து வெளிப்பட்டதும், உடனே சில மாற்றம் ஏற்பட்டு, சில நிகழ்ச்சிகள் மூலம் செயல்படுவதை அவர் காண்பார்.

1. அவருடைய அநேக சிறு, சிறு பிரச்சனைகள் உடனே மறைவதைக் காண்பார்.
2. வீட்டின் சூழல் நிச்சயமான உடன்பாடாக மாறிய நிலையில் இருக்கும்.
3. தீர்க்க முடியாத பிரச்சனை ஒன்று இருந்தால், அதில் தீர்வு காண்பதற்கு வழி பிறக்கும்.
4. அன்னையை அழைக்கும் பொழுது தோன்றும் இடையூறுகளும், கஷ்டங்களும் மறைந்து, ஆன்மா அல்லது அன்னை, அதிக அளவில் தன்னுடன் தொடர்ந்து இருப்பதை உணர்வார்.

அவர் ஆன்மாவை அழைப்பதை, தினமும் குறிப்பிட்ட நேரத்தில் காலையிலும், மாலையிலும் அரை மணி நேரம் பிரார்த்தனையாக செய்ய வேண்டும். அது அவரை உயர்ந்த ஜீவிய நிலைக்கு உயர்த்தும். பிறகு அவர் செய்ய வேண்டியது,

1. உண்மையை மட்டுமே பேச முயற்சிக்க வேண்டும்.
2. வீட்டை, சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அந்த சுத்தம் அவர் வேறு எங்கேயாவது பார்த்த அதிகமான சுத்தத்தைப் போல் இருக்க வேண்டும்.
3. கூச்சல் போடாமல் மெதுவாக பேச வேண்டும்.
4. எல்லா விஷயத்திலும், மற்றவருடைய கருத்தை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை வேண்டும்.
5. அமைதியாக இருப்பதில், அதிக அளவில் கவனம் செலுத்த வேண்டும்.
6. எந்த ஒரு வேலையையும் செய்ய ஆரம்பிக்கும் முன், அன்னையை நினைவு கூர வேண்டும்.
7. பழைய தவறுகளை அறிந்து, அவை எதிர்காலத்தில் நிகழா வண்ணம் நேர்மையுடன் விலக்க வேண்டும்.
8. தன்னை மற்றவருக்கு வழங்குவதை கடைபிடிக்க வேண்டும்.

ஒருவருடைய ஆன்மாவின் அழைப்பை, ஆன்மா ஏற்றுக்கொண்டது என்று தெரிந்ததும், அதை அவர் வாழ்வில் வளர்த்துக்கொள்ள பழகிக் கொள்ள வேண்டும். அதை முறைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்வதால் ஆன்மாவை அழைப்பதில், மேலும் முன்னேற்றம் ஏற்படும்.





# அனுபந்தம் - II

## ஆன்மாவை அழைத்தல்

ஆன்மாவை அழைப்பது சக்தி வாய்ந்தது. ஆன்மாவை "அன்னை" என்று அழைப்பதாலேயே அதில் எல்லாமே அடங்கி விடுகிறது. அது அதிக சக்தி வாய்ந்ததாகவும் இருக்கும்.

ஆன்மாவை அழைப்பதில் பல வழிகள் உள்ளன. அதன் சாராம்சம் எல்லாம் ஒன்றே தான்.

1. நமக்கு மேல்மனமும் ஆழ்மனமும் உள்ளது. நாம் நமது பிரச்சனைகளைப் பற்றி நினைத்துக் கொண்டே இருந்தால், நாம் மேல்மனதில் இருக்கிறோம் என்பதைக் குறிக்கும். மேல்மனதிலிருந்து விலகிப் போக வேண்டுமென்றால், நாம் அந்தப் பிரச்சனையை மறக்க வேண்டும். அல்லது அதைப் பற்றிய தீவிர நினைவு இல்லாமல் இருக்க வேண்டும். இப்பொழுது, பிரச்சனை நம் பர்சனாலிட்டியின் ஆழத்திற்குச் சென்று அங்கு ஒரு இனம்புரியாத கவலையை உண்டு பண்ணுகிறது. பிரச்சனையின் ஆழத்திலிருந்து உன்னால் விலக முடியவில்லையென்றால், அன்னையை அழைக்கவும். அன்னையை தினமும் சில நாட்களுக்கு, மணிக்கு ஒரு முறை அழைத்தால், பிரச்சனைகள் தீர்ந்துவிடும். அதிகபட்சமாக மூன்று நாட்கள் பிரார்த்தனையில், எந்த ஒரு பிரச்சனையும் தீர்க்கப்பட்டுவிடும்.
2. மனிதனின் முயற்சி தீர்ந்ததும், அன்னை (ஆன்மா) செயல்படுகிறார். ஒருவர் தன்னால் முடிந்த அத்தனை முயற்சிகளையும் எடுத்துத் தீர்க்க வேண்டும். ஆன்மா உடனே செயல்பட ஆரம்பிக்கும். கடைசி முயற்சியையும் எடுத்துத் தீர்க்க வேண்டும்.

3. நாம் இப்பொழுது செய்வதை விட, திறம்பட செயல்பட்டால், அது அன்னையை அழைப்பதற்குச் சமமாகும். உதாரணமாக, மெதுவாக நடைபெற்றுவரும் வேலையில் அக்கறை காட்டுவது, ஒழுங்குமுறையைப் பின்பற்றாத இடத்தில், வேலையில் ஒழுங்குமுறையைக் கடைப்பிடித்தல், சிந்தனையற்ற வேலையில், சிந்தனையைச் செலுத்தி செயல்படுவது, போன்றவைகளாகும்.

4. தினமும் மணிக்கு ஒரு முறை அன்னையை நினைவு கூர்வதை சில நாட்களுக்குத் தொடர வேண்டும்.

5. மணிக்கொருமுறை பிரார்த்தனை செய்வதை, சரியாக மணி அடிக்கும் நேரத்தில், அன்னையை நினைப்பதை ஓரிரண்டு நாட்கள் தவறாமல், கடைப்பிடிக்க வேண்டும்.

6. வீட்டை அதிக சுத்தமாக வைத்திருத்தல், தாழ்ந்த குரலில் பேசுவது, வீட்டிலோ அல்லது அலுவலகத்திலோ சண்டை போடுவதைத் தவிர்ப்பது, அன்றாடம் கணக்குகளை சரியாக எழுதுவது போன்றவைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

7. நாம் கையினால் செய்யும் வேலையை எண்ணத்தினால் செய்யலாம் என்பது போல் நம் வாழ்வின் மையத்தை வெளியிலிருந்து உள்ளுறை ஆன்மாவிற்கு மாற்ற வேண்டும்.

8. எந்த வேலையையும் செய்ய ஆரம்பிக்கும் முன் அன்னையை நினைவு கூர்தல் வேண்டும். சமர்ப்பணம் செய்ய வேண்டும்.

9. பிரார்த்தனையைத் தொடர வேண்டும்.